நடனமப்பா யிப்படியே மெய்ஞ்ஞானமூர்த்தி நாடினு ரெந்தனுக்கு யெப்படியேயாகில், இடனமுள்ள தோரையப்பா சிற்பரமுமாகும், இடதுசுழி நயனமப்பா தற்பரமுமாகும், படினமுள்ள வலதுசுழி நயனமப்பா பாங்கான முப்புரந்தான் பாருபாரு, கடினமப்பாயிது வறிந்து கொண்டுநிற்போர் காணுது கடினமெத்த கடினந்தானே. ()

தானுக்க் கடினமில்லா திருக்கக்கேளு சத்தியென்ற முத்தியப்பா புத்தியுண்டோ, கானகமா மிருள்காணும் பின் வெளியுங்காணுங் கருக்காணு முருக்காணுங் கமலங்காணும், நானவனே யவனுனே யென்றதெல்லாம் நாடதனி லொருவருமே யறியமாட்டார், ஊனவனு யப்பொதியில் யிருக்குமார்க்க மொருசொல்லால் மெய்மறந்து யொதுங்கினேனே. (௧௨௮)

ஒதுங்கினேனெப்படியோ வென்றுகேளு வுலகமோ சொர்க்கமோ வென்றார்நாதன், பதுங்கினே னுலகமென்றே சொல்லிப்போட்டேன் பாழான பூமியைத்தா னெனக்கே யீந்தார், அதம்பெறவே யிருளையெல்லாம் தெளிவதாக்கியப்பனே மானிடரா யவதரித்து, இதம்பெறவே பொதியையிலே யிருந்துகொண்டு எழுதினே னட்சரத்தை யெழுதினேனே. (௧௨௯)

## சாஸ்திரமெழுதின யெழுத்தாணியளவு மூலத்தில் கருவுபூசை நிமித்தியம்.

எழுதினே னெழுத்தாணி முழமோவேழு இயலாக விரல்ரண்டு மதன்மேலேமிச்சம்,களங்கமற விப்படியே மூன்றுஆறு கருவான வதன் கூறு குறுகிப்போச்சு, முழுகவே யிப்படியே யுலகமெல்லா மூன்று கத்துக் கப்புறமே முடிவுமாகும்,நளினமாய் முகமென்ன வென்று கேட்கில் நலமான முகமஞ்சே நாடினேனே. (கக0)

நாடினே னல்வேத மாறுசாஸ்திரம் நலமுடைய கருவையப்பா தொண்ணூற்ருறு, பாடினேன் மற்றுமுள்ள நூல்களெல்லாம் பலவித மாய்ப் பிச்செறிந்தேன் பாருபாரு, கூடினேன் சிவபதமே நன்றுநன்று கூப்பிட்டா லேனென்பா ளேதாலாகில், தேடினதோர் மூலமப்பா வுப தேசத்தாலே சிக்கிஞ ரவரருளால் றெளிந்திட்டேனே. (ககக)

தெளிவாகப் பாடினேன் நூலேதேயாகில் திறமடா மெய்ஞ்ஞா னந் தெளிந்துபாரு, பழியாதே சொர்க்கமடா முன்னேநிற்கும்பராபரி யாள் முன்னிற்பாள் ரகசியமேயீவாள், அழியாத பரியுண்டு வமுர்த முண்டு அறிந்தாக்கா லவன்சித்த னவனேவாமி, விழியாலே பாரடா யுலகமெல்லாம் வெளிச்சமடா சோதியைப்போல் விளங்குவாரே. ()

விளம்பவே பரியாவ தேதேயாகில் மேலான வாசியடா குதிரை யாகும், தளம்பெறவே ரதமாவ தேதேயாகில் தாயான மனோன்மணித் தாய் வாமமாகும், குளமப்பா யிதுவெல்லாம் வெளியதாகக் கூறு கிறேன் கருவையெல்லாஞ்சொல்லிவிட்டேன்,களம்பெறவே மாதாவை மறந்தாயாகில் கைகண்ட கருவெல்லாம் விழல்தான்பாரே. (ககங)

## குருவைவணங்கி மூலவுபதேசம் பெற.

கையப்பா தொழுகின்ற விவரங்கேளு கருதியே மனந்தேர்ந்து கருவைக்கேளு, கொய்யப்பா தும்பைமலர் சண்பகப்பூ கொடியான தாமரையுங் குங்குமந்தான், செய்யப்பா மதுவோடு பால்பழங்கள் திற மாக நெற்பொரி சர்க்கரை தேங்காயும்,நெய்யப்பா தூபமிடு தீபமேற்று நிலைத்துப்பார் கைம்முறையை நிசஞ்சொல்வேனே. (ககச)

சொன்னதோர் விதமறிந்து நடந்தாயாகில் சுறுக்காகப் பெலத்திடு ங்காண் விருதையெல்லாம், அன்னமடா யாத்தாளும் வந்துமேதான் ஆதரிப்பாள் வுந்தனையு மன்பதாக, பின்னமில்லா தெப்போதும் போற் றியேவாழ் புகலான பிரமசாதம் காட்சியாவாய், கன்னமடா வசைந் தாலு மிவனைவிட்டுக் கடுகளவு நாழிகைக்குங் கைவிடாதே. (ககரு)

கைவிட்டுப் போகாம லுபதேசமுண்டு கர்த்தனடா யெந்தனுக்கு வுபதேசம் வைத்தார், மெய்யடா மந்திரந்தான் கேளுகேளு விமலி விமலி ஹரிஹரி அடிஅடி சண்டாளி, தையலாள் சொன்னபடி நீயுங் கேளு தப்பாம லுன்னைவிட்டு அவளும்போகாள், சையுடனே ஞம்நம சிவா வாவென்ன சாற்றுகிறேன் மனமுறைச் சமாதிகாணே. (௧௩௬)

## தேவி கைவிடாமல் உபதேச சமாதி தினம் பூசையில் வாலை தரிசனம்.

சமாதியென்று லரையல்ல குகைதானல்ல தாயாரை நிறுத்து வதே சமாதியாகும், சமாதியென்று நாதவிந்தை நிறுத்திக்கொண் டால் தாயார்க்குக் குடியிருப்பு அங்கேயாகும், சமாதியிலே யிருந் தாலு மனம்விடாதே சர்க்குருவைக் காணவழி தடத்தைப்பாரு, சமா தியிலே மனந்தேறிக் கொண்டாயாகில் சாவதுதா னில்லையப்பா சாட்சிதானே. (௧௩௭)

சாட்சியவள் போலேதான் தெய்வமில்லை சர்க்குரு தான்வீழி யிதுதானப்பா, பேச்சியடா கோபித்தா லுலகமெல்லாம் பெருந் தீயாய்த் தானிருக்கு மலையாதப்பா, காச்சிடுவாள் தேகத்தை யழிவு செய்வாள் கபடமெத்த வண்டியடா கண்டுபாரு, பூச்சியே போகாமல் வாள்விசமோமெத்த பூட்டிவிடு தொழிலாடப் பொருந்திக்காணே. ()

பொருந்தவே சொல்லுகிறே னின்னங்கேளு பூசைபண்ணும் வேளையிலே பெண்போல்காணும், திருந்தவே சுடர்மெத்த வொளி யாய்க்காணுஞ் சிந்தித்தால் தேகமடா தீயாய்ப்போகும், அறிந்து கெட்டா ரனேகம்பேர் சித்தரப்பா அழகான வாலைசொரூப வகைதான் காணும், அறிந்துவிட்டே னேகமென்ற வெழுத்தினாலே அவர்களுக் கின்னூலை மறைத்திட்டேனே. (௧௩௯)

மறைத்திட்டே னேதாலே யென்றுகேட்கில் மதியார்கள் மானி டவர் மாடுமாடு, முறைத்திட்டேன் சுந்தரர்க்கு வுள்ளதெல்லா முத்த மனே யவர்களுக்கு வுதவியாகும், திறப்படுத்திக் கொண்டவனே சித் தன்சித்தன் செகத்திலே யெனைப்போலே யவனுமாகும், மிருக்கவே யின்னமுண்டு சொல்லுறேன்கேள் யீஸ்வரியாள் கற்பமுண்டு யிபம்பி டீரே. (௧௪0)

இபம்பினேன் குருபாதம் வணங்கிக்கேட்கில் எப்படியோ வென்றுசொல்லி யெண்ணவேண்டாம், மனமொன்று யிருக்கணுங் காண் வகையைப்பாரு மாறுமல் குருபதத்தைப் போற்றிநில்லு, நயம் பெறவே தொண்டுபண்ணு கேட்டதனங்கொடுத்து நாதனைத்தான் காணுமப்பா நத்திப்பாரு, வயம்படவே தீட்சைவிதி மூலங்கேளு மைந்தனே யுந்தனுக்கு வருங்காண்முத்தி. (௧௪௧)

முத்தியே வேணுமென்றாற் கருவைப்பேணு முதலான தீட்சையிலே யெல்லாமாகும், வித்தில்லா மாமுண்டோ மைந்தாகேளீர் விணுக் போகாதே யயர்ந்திடாதே, புத்தியடா வுந்தனுக்குச் சொல்லிவிட்டேன் பொருத்தினேன் மெய்ஞ்ஞானப் பூட்டையெல்லாம், அத்திமுகன் பாதமே தொழுதுபோற்ற அருளுண்டாம் பராபரத்தை யறியலாமே. (கசஉ)

அறியாமல் சிவஞானங் கண்டபேர்கள் அரியயனே குருபரனே ஐயாபோற்றி, தெரியவே வெளிகாணுஞ் சிவமுங்காணுந் திறமான மாண்பருக்கு யெல்லாஞ்சித்து, குறியடா வஷ்டசஜம் அஷ்டநாகம் கூகூ வென்றாலே குறிப்பாய்பாரு, மறைவில்லை மயக்கமில்லை வாமோவுண்டு வாழலா மெய்ஞ்ஞானங் கண்டபேரே. (கசங)

கண்டாக்கால் சொல்லாதே கோபியாதே கருவொன்றுங் காட்டாதே கசடருக்கும், பெண்டாள ஆசைவிடு தாயைப்பூசி பேசாதே மவுனமாய்ப் பேசுபேசு, விண்டாக்கா லனேகமப்பா தூஷிப்பார்கள் வீணருக்குக் கொடுத்தாலும் பலிப்பதில்லை, சண்டாள மானவர்க்கு வியாதியெல்லாஞ் சாருமடா குருவறியச் சாரும்பாரே. (கசச)

## பித்தசுரத்துக்குக் கியாழம்.

பாரப்பா முதலிலே போட்டதெல்லாம் பரிவாக விள்ளுகிறேன் பாருபாரு, நேரப்பா கியாழமொன்று யெப்படியோவென்றால் நிலையான நோய்கட்குப் பற்பமுண்டு, காரப்பா சூரணங்க ளிலேகியங்கள் கைகண்ட முறைபடா கண்டுபாரு, ஆரப்பா யெனைப்போலச் சொன்னாரில்லை யகங்தேற்றிச் சொல்லுகிறே னறிந்துகாணே. (கசரு)

## வாதசுரத்துக்குக் கியாழம்.

காணப்பா பித்தசுரங் காணுமாகில் கியாழமடா தும்பைவேர் பேய்ப்புடலிஞ்டும், தோணப்பா கொத்தமல்லி சுக்குகூட்டு குறையாமற் பணவிடைதா நிறுத்துப்போடு, ஊணப்பா சிறுபருப்பு தொட்டுக்கூட்டு உரையான வால்மிளகு திப்பிலியுங்கூட்டு, பேணப்பா வொருநிறையாய் நீர்படிமூன்றாக்கி பிரியமாய் மூன்றுநாள் கொடுக்கப்போமே. (கசசு)

போகுமப்பா நெஞ்செரிவு கண்முகமுங்காந்தல் புசழான நீரெரிவு வெல்லாம்போகும். பாகுமப்பா தேவாமிர்த மீறும்பாரு பரிவாகச் சொல்லிவிட்டேன் கண்டபேர்க்கு, போகமே யாகாது முழுகுபட்டும் புத்தியாய்ப் புரமெரித்த கியாழம்பூட்டு, தாசமே யுண்டாத வடங்கிப் போகுஞ் சற்குரு தனைப்பேணி மருந்துநல்கே. (கசஎ)

பேணுவாய் வாதசுரமானாற்சேளு பேரான மேனியடா சிற்று முட்டி, பூணுவாய் பனங்கிழங்கு வேலிவேரும் புசழான சிற்றரத்தை யவுரிவேரும், சேணுவாய் விதமெல்லா மொருநிறையாய்த்தூக்கி, சுக்கடா வதிற்கூட்டிக் கியாழம்போடு, ஆணுவாய் காயத்தைக் கிழி யுங்கட்டி யப்பனே யக்கினியிற் சுட்டுவாங்கே. (கசஅ)

வாங்கியே கியாழமடா புழக்கேவாங்கி மைந்தனே தேன்கூட்டிக் சாயங்கூட்டி, தாங்கியே கொடுத்துவிடு வாதசுரம்போகுஞ் சன்னிசலந் திருந்தாலுஞ்சாடிப்போகும், மாங்கிஷமே கூட்டாதே க்ஷயந்தானென் றுமகத்துவமாய்ப் புளியுப்புபுகை யிலையும்வேண்டாம், ஓங்குவாய் கியாழத்தி விஞ்சிகூட்ட யோடுமடா பித்தசன்னி யோடும்பாரே. ()

## சிலேத்தும சுரத்துக்குக் கியாழம்.

பாரடா சிலேத்தும சுரமானுக்கால் பரிவான செருப்படிதான் குப்பைமேனி, சோரடா நல்வேளை துளசிகஞ்சாங்கோரை சிறப்பான மிளகுசுக்கு திப்பிலிதான்கூட்டி, மாரடா திப்பிலியைப் பொடியே செய்து மைந்தனே மூலியெல்லா மொருநிறையாய்க்கொண்டு, தேரடா திப்பிலியைப் பொடியேபண்ணி தினஞ்சிறிது யிருநேரம் கொடுத் திடாயே. (கரு0)

## வாதபித்த சுரத்துக்குக் கியாழம்.

கொடுத்தாக்கால் சுரமடா மூன்றுநாளில் சொல்லாம லோடிவிடுஞ் சுருதிகேளும், மடுக்கவே சபடா அறுக்துப்போடு மகத்தான சன்னி யப்பா மாண்டுபோகும், முடித்துவிட்டேன் மெய்ஞ்ஞானச் சூத்திரத்தை முன்பின்னாய்ச் சொன்னதெல்லாம் வெளியதாக, கொடுக்கிலேன் குணங்களையு மறிந்துபாரு குணத்திலே குறைவுகண்டா லியா தென்றே. (கருக)

## வாத சிலேட்டுமேத்துக்குக் கியாழம்.

ஈபவே வாதபித்த சுரமேயாகில் இதமாகச் சொல்லுகிறேன் சேளுசேளு, சாயடா பேய்ப்புடலு முசுமுசுக்கை சையானின் வேரப்பா கஞ்சாங்கோரை, பேயடா பீர்க்கன்வேர் புற்பாடகம் பேரான நொச்சிவே ரரத்தைசுக்கு, தாயகமாய் விராகனிடை தூக்கிக்கொண்டு சரியாகப் படியைந்து சலந்தான்வார்ே. (கருஉ)

## முறைசுரத்துக்குக் கியாழம்.

வார்த்தபின்பு படியொன்றாய்க் குறுக்கிவாங்கி மைந்தனே யுழக்கடா வெடுத்துக்கொண்டு; மூத்ததொரு திப்பிலிதான் பொடியே செய்து முறையோடே தான்குடிக்க மூன்றுநாளும், சேர்த்திநின்ற வாதபித்த சுரமும்போகுஞ் செப்புகிறேன் வாய்நீரு மோடிப்போகும், மாத்திரையுஞ் சொல்லுகிறேன் கோடாகோடி மைந்தனே கொடுத்து விடச் சன்னிபோமே. (கருஙு)

## வாதசிலேத்துமத்துக்குக் கியாழம்.

சன்னிபோம் வாதசிலேத்ம சுரமேயாகில் தப்பாத கியாழமொன்று சேளுசேளுந், உன்னதமாய் வேளைவேர் கடுகின்வேரும் உத்தமனே சிற்றரத்தை நாடியோடும், கன்னிவேர் கருப்பனை கதிருங்கூட்டி கசகசா வால்மிளகு காயத்தோடும், வன்னியென்ற சுரத்துக்கு யீந்தாயாகில் மைந்தனே ரோகம்விட் டோடிப்போமே. (கருச)

## வேறுவகை முறைசுரத்துக்குக் கியாழம்.

ஓடுமப்பா வொருவகை சன்னிதானு மொழுகுகின்ற சலரோகம் வயிற்றுக்கெண்டை, நாடாது கண்புகைச்சல் காதுமந்தம் நளினமுள்ள முறைச்சுரந்தா னன்றாய்க்கேளு, ஓடான விளாவோடு வோமங்கூட்டி வுற்றதொரு நோய்களுக்குச் சொன்னேன் சொன்னேன், பாடான பாடில்லை யெந்தன்ஞானம் பார்த்தாக்கால் தேவருக்குப் பண்டிதந்தான் பாரே. (கருரு)

இதமாகப் பித்தசிலேத்தும சுரமேயாகில் எருக்கன்வே ராள்மிரட்டி கஞ்சாங்கோரை, நிதமான நல்மிளகு கடுக்காய்சுக்கு நீலிவேர் கொச்சிவேர் வில்வமோடு, அதமான வெள்ளுள்ளி சீரகந்தான் அப்பனே மாவிலிங்கு அரசினோடு, இதமான நீர்படிதான் யெட்டொன்றாய்க்காய்ச்சி யிறுத்துமே வடிகட்டி யளந்துகொள்ளே. (கருசு)

கொள்ளவே படியொன்றாய்க் குறுக்கிவாங்கி கோரோசனை சதகுப்பை யோமங்கூட்டி, முள்ளவே யிளவறுப்பாய் வாட்டிக்கொண்டு முறையாகத் தான்பொடித்து வஸ்திரகாயம்பண்ணி, மள்ளவே காய்ச்சியதில் பொடியைத்தூவி மைந்தனே மூன்றுநாள் கொடுத்தாயாகில், இள்ளவே பித்தசிலேத் துமசுரந்தான் எப்படிதா னோடுமென்று மியம்பினேனே. (கருஎ)

இயம்பவே சோகையடா நீர்க்கடுப்பு யிளைப்புவகை மூன்று மப்பா வோடிப்போகும், மயம்பெறவே நெஞ்சடைப்பு சலக்கழிச்சல் வாந்தியெப் குன்மமடா மாண்டுபோகும், உயர்பெறவே மாத்திரைதா னேதேயாகில் உத்தமனே குபேரனென்ற துறுதியாகும், சுயம்பெறவே முறையதுபோ லீந்தாயாகில் சுறுக்சடா நோய்கட்கு அறுதிதானே. (கஅ௲)

## பித்தசிலேத்தும சுரத்துக்குக் கியாழம் பித்த சிலேத்துமத்தில் வாதக்கதிப்புக்கு கியாழம்.

தானென்ற பித்தசிலேத் துமந்தான்கூடில் தனியான வாதமதில் கதிப்பேகண்டால், பேனென்ற பேதையப்பா விழுப்புசன்னி பேயடா குளிர்காய்ச்சல் மெத்தக்காணும், கானென்ற மருந்தடா பெரியதும்பை கவிழ்தும்பை சிறுதும்பை கலந்துகூட்டு, ஊனென்ற நவாச்சாரம் புடமே தீர்த்து உத்தமனே கியாழத்தைக் குறுக்கிக்கொள்ளே. (கஅகூ)

கொள்ளவே படிநீரைக் குறுக்கிக்கொள்ளு கூர்மையாய் யெட்டாகக் குறுக்கிக்கொள்ளு, உள்ளவே யிப்படியே குறுக்கிக்கொண்டால் உத்தமனே வெண்ணுக மதிலேயுற்று, சள்ளவே க்ஷயரோக மிருமல் உளமாந்தை கடுப்படா வுள்வறட்சி கபாலசூலை, பெள்ளவே யிப்படியே யறிந்துகொண்டு பேதனத்து கியாழமப்பா பொருந்திப்பாரே. (கசூ0)

## மேகமிருபதுக்குக் கியாழம் பத்தியமில்லை.

பாரப்பா வாதபித்த வாய்வேகூடில் பாங்கான குளிர்சுரமாம் பாரு பாரு, நேரப்பா மேகமது யிருபதுக்கும் நேரான கியாழமொன்று சொல்லக்கேளு, காரப்பா கொடிவேலி கடுக்சூய்சுட்டு கருங்கோவை கன்னியப்பா கலந்துசேர்த்து, காரப்பா வெண்காரம் விராகன்ரண்டு லீகமுறைதான் படியரையாய்க் காய்ச்சிக்கொள்ளே. (கசூக)

கொள்ளவே மேகமப்பா யிருபதுக்கும் குருவப்பா கியாழமிது வேறேகேளு, துள்ளவே யதனைத்தான் றயிலம்வாங்கு குருவான கெந்தகத்தின் சுன்னங்கூட்டி, கள்ளிலே போட்டிறக்கு மினிப்புகாணும் காலமே யெட்டுநாள் கொள்ளமேகம், தெள்ளவே யிம்முறைக்கும் பத்தியந்தானில்லை சித்தருக்கு நான்செய்யு முறைமை காணே. ()

### வாதகக்கதிப்புக்குக் கியாழம்.

காணப்பா மூவருக்குங் கியாழங்கேளு கருவிலேயன்ற வாதமே கதித்ததானல், தோணப்பா சிதசுரமென்பார்கேளு திடியாக மூலிகை தான் கண்டுசொல்வேன், தோணப்பா குப்பைமேனி மூலியோடு சொல்லரிய வேலியப்பா சிழ்க்காய்நெல்லி, பேணப்பா படியாண்டு நீரைவார்த்துப் பேராக வரைப்படியாய்க் குறுக்கிக்கொள்ளே. (கசுங)

### பித்தக்கதிப்புக்குக் கியாழம்.

குறுக்கடா பித்தமே கதித்ததானல் குறித்துகேள் சந்தனமும் வில்வவேரும், மருக்கமுள்ள சிற்றுமுட்டி பேராமுட்டி வரிசையுள்ள பேய்ப்புடலுஞ் சுக்குங்கூட்டு, திருக்கவே தணியப்பா யதிமதுரந் தானும் திறமாக விராகனெடை யிரண்டதாகும், உருக்கவே யிவையெல் லாங் கியாழமிட்டு உத்தமனே மூன்றுநாள் கொடுத்துக்கொள்ளே. ()

கொடுத்துவிடு பித்தசுரங் காமாலைக்கு கூரான நெஞ்செரிவு கூட் டோடேபோகும், மடுக்கவே கொல்லுமப்பா சிலேத்மசுரத்தின் வகை கேளு கியாழத்தில் மருந்துபாரு, தொடுத்திடவே வால்மிளகு சுக்கி னேடு துணையான வெட்பாலை வல்லாரைகூட்டு, படுக்கவேயிட்ட தொரு க்ஷயத்தைக்கொல்லும் பாங்கான கிரந்தியொடு பெருங்காயங் கூட்டே. (கசுரு)

### சிலேட்டுமக்கதிப்புக்குக் கியாழம்.

கூட்டவே சொல்லுகிறேன் வாய்வுக்கப்பா குமூறியேயங்சங்கே குத்துங்குத்தும், நேட்டமே தேகமெல்லா மிழுத்துக்காட்டும் நிலை யான வாய்வுக்குக் கியாழங்கேளு, மூட்டுவாய் தும்பைவேர் விராகன் ரண்டு முசுட்டையாஞ் சிறுகொழுந்து விராகன்ரண்டு, நீட்டுவா யப்படி யொன்று நீரைவார்த்து நிசமாகக் காற்படியாய்க் குறுக்கிக்கொள்ளே. ()

கொள்ளவே குறுகியது வருகும்போது கோவினுட வெண்ணெ யப்பா புன்னைக்காய்விதம், விள்ளுகிறேன் கியாழத்தை மூன்றுநேரம் விதமாகக் கொள்ளவே வாய்வுமீவாடும், துள்ளவே வயிறெரிவு நெஞ் செரிவு திடியான குடல்வாய்வுங் கூட்டோடேபோகும், உள்ளபடி சொல்லிவிட்டே னப்பாகேளு உத்தமர்க் கிவையெல்லா முறைக்குங் காணே. (கசுஎ)

## வாய்வுக்குக் கியாழம்.

உத்தமர்க் குரைக்கிறேன் கேளுகேளு உற்றதொரு வேரடா வாடாதோடை, சித்திரை தன் மூலமப்பா வெள்ளுள்ளியோடு திற மான மருதுாணிவேர் சங்கம்வேரும், பொற்றலையான் சுண்டைவேர் காயஞ்சூரை புகழான தும்பைவேர் யூஞ்சல்வேரும், மத்தியே யிறச்கி விடு படியொன்றாணல் மைந்தனே யிறக்கியதை யெடுத்துக் கொள்ளே. (கசுஅ)

## சளி யிருமலுக்குச் சூரணம்.

கொள்ளவே வால்மிளகு சீரகமுஞ்சுக்கு கூரான திப்பிலியு மேலங் கூட்டி, விள்ளுகிறே னிவையெல்லா மிளவறுப்பாய்வாட்டி மேன் மையாய்க் கியாழத்தி லுழக்குவாங்கி, துள்ளவே மேற்பொடியு மூவிரலாலிட்டுச் சுருதியாய் மூன்றுநாள் கொடுக்கத்தீரும், உள்ளபடி யான்சொன்னேன் குறைவோயில்லை யுருவறிந்து கருவறிந்து வுரைக் கிறேனே. (கசுகூ)

உரைக்கிறேன் சூரணந்தான் சேளுசேளு வுத்தமனே யதிமது ரங் கடுக்காய்சுக்கும், மறைப்பெல்லா நீக்கிவிட்டு மைந்தருக்கு வகை யொன்றுங் குறையாமல் வகுத்துச்சொல்வேன், அசைத்திட்டுப் பொடிபண்ணி வஸ்திரகாயங்கொண்டு அப்பனே தேனிலே கொடுத் துக்கொள்ள, சிரித்திட்ட சளியிருமல் கபத்தைப்போக்குந் திறமாக வெட்டுநாள் கொடுத்துப்பாரே. (கஎ0)

## க்ஷயமிருமலுக்குச் சூரணம்.

கொடுக்கவே யின்னமொரு சூரணங்கேளு கோஷ்டமடா சத குப்பை யரத்தைசுக்கு, மடுக்கவே சீரகந்தான் வசம்புபேய்ப்புடலும் வாகான சுண்டைவேர் வகையாய்த்தூக்கி, எடுத்துநீ விராகனெடை அஞ்சாய்த்தூக்கி யிளவறுப்பாய்த் தான்வறுத்துச் சூரணமேசெய்து, தொடுக்கவே சர்க்கரையிற் கொடுத்தாயாகில் சூடான பித்தசிலேத் துமந்தான் பாரே. (கஎக)

## குறைநோய் சுட்டம் வண்கேடி இதற்குச் சூரணம்.

போகுமே க்ஷயரோகமிருமலேங்கல்புகழான வாய்வுக்கு மிதுவே யாகும், ஆகுமே கிரந்தியப்பா சிலேத்துமத்தால்வந்தால் அஞ்சு வகைப் பிரமேக மற்றுப்போகும், பாகுபோல் வடிகின்ற வுதிரகாசம் பறக்குமடா வெள்ளாட்டுப் பாலிற்கொள்ள, தாகமுள்ள சுரத்துக்கு மிதுவேயாகுந் தப்பாமற் கொடுத்துவிடு சண்டிநோய்க்கே. (கஎஉ)

நோயான சண்டிகட்குச் சூரணந்தான்கேளு நொச்சிவேர் கள்ளி சுண்டைவேர்குறிஞ்சான், தாயான மாதளம்வேர் பருத்திவேரும் சதாவேலி கொம்மட்டிச் சாரணையின்வேரும், சாயான சாதிக்காய் மிளகு சுக்கு கடல்நுரை சிற்றரத்தை பேரரத்தைபோடும், நாயான வேளையடா வெட்டிவேரும்நாகதாளிவேருடனே கோரோசனையுங்கூட்டே.()

கூட்டியே மூன்று விராகனெடையெல்லாம் குறையாமற் சரிசமனு யெல்லாங்கூட்டி, நாட்டியே மூன்றுநா ளூரவிட்டு நலமாக யிவையெல்லாங் கல்லுரலிற்குத்தி, ஆட்டியே பொடியாக்கிச் சூரணித்துக் கொண்டு அப்படியே மூன்றுநா ளுலர்த்திவாங்கி, மூட்டியே யம்மியிலே பொடித்துக்கொண்டு முறையொன்றுந் தப்பாம லீந்து கொள்ளே. (௧௭௪)

## வண்டுகடி கரப்பானுக்குச் சூரணம்.

கொள்ளவே தேனிலே கொடுத்தாயாகில் குறைநோய்கள் வண்டுகடி கூட்டோடேபோம், தெள்ளவே நெய்யிலே கொடுத்தாயாகில் திறமான கெண்டையொடு பாண்டுபோகும், துள்ளவே சர்க்கரையிற் கொடுத்தாயாகில் சூலையொடு பதினெட்டு மேகம்போகும், மெள்ளவே யின்னமொன்று வனுபானங்கள் விவரமாய்ச் சொல்லுகிறேன் விரும்பிக்கேளே. (௧௭௫)

விரும்பவே விஷ்ணுகாந்தி மூலியிலீந்தால் விதமான சுரமடா விட்டுப் போகும், கரும்பான ரசத்திலே கொடுத்தாயானால் காமாலை சோகையுடன் கரப்பான்போகும், திரும்படா சூரணத்தைக் கண்ட நோய்கள் சூட்சமாய்ச் சொல்லிவிட்டேன் பாருபாரு, விரும்பியே செய்தவர்க்கு பெல்லாஞ்சித்தி விள்ளாதே யொருவருடன் விவரந்தானே. (௧௭௬)

தானான யின்னமொரு சூரணந்தான்கேளு சதகுப்பை விலாமிச்சம் சாதிக்காயும், ஊனான யதிமதுரம் வால்மிளகுதானும் உற்றதொரு கசகசா சாரப்பூவும், வானான முட்டையுட னண்டினோடும் வசையாகச் சீவபொருமி தும்பைவேரும், ஊணவே யில்லாம லெடுத்துக்கொண்டு வொன்றிரண்டு தரமப்பா வஸ்திரகாயம்பண்ணே. (௧௭௭)

பண்ணியே தேனிலே கொடுத்தாயாகில் பாங்கான வண்டுகெடி மாண்டுபோகும், உண்ணவே நெய்யிலே யுண்டாயானால் உள்மூலம் புறமூல மோடிப்போகும், நண்ணவே வெல்லத்தில் கொடுத்தாயாகில் நாசியிலே பீனசமும் நடுங்கியோடும், எண்ணெயிலே யிவையெல்லாம் விட்டுக்காய்ச்சி யிதமாகத் தானுண்ண வியாதிகேளே. (௧௭அ)

கேளப்பா நெஞ்சடைப்பு வாய்நீரோடல் கெடியான வுள்ளெரிவு கிராணியெல்லாம், நாளப்பா பனிரண்டி லுண்ணும்போது நாடாது நிசஞ்சொன்னேன் வியாதியெல்லாம், ஆளப்பா ரோகமறுந் தேயுங் தேறும் அறிந்து செய்வாராருமில்லை யறிந்தாராகில், தேளப்பா வியாதிக்குச் சூரணந்தான் செப்புகிறேன் மெய்ஞ்ஞானத் திடத்தைப் பாரே. (௧௭௯)

## மண்டையிடி பீனசம் நீரடைப்பு சதையடைப்பு விழிசூலை நீராம்பல் இதுகளுக்குச் சூரணம்.

திடமாக யின்னமொரு சூரணந்தான்கேளு செருப்படியின் வேரப்பா பலந்தானென்று, படமான மருக்காரை பலந்தானென்று பாங்கான நீர்முள்ளிவேர் பலந்தானென்று, மடமாத நீருப்பு பலந்தானென்று வாழையுடச் சாற்றாலே யரைத்துக்கொண்டு, கடமாக வுலர்ந்த பின்பு மருந்துகேளு கனமாக நாகதாளி வுலர்த்திக் கொள்ளே. (௧அ0)

உலர்த்திவிடு சீரகமுங் காயங்கூட்டு உற்றதொரு கடுகுரோணியுந் தான்சுக்கு, அலர்த்திடுவாய் கிராம்புடனே சாதிக்காயும் அதிமதுரம் வால்மிளகு அரத்தையோடும், பலத்திலே நிறை யொன்றாய்ப் பொடியும்பண்ணி பாங்காக வடிகொண்டு வாங்கியேதான், சலத்திலே கொடுத்துவிடு தேகமெல்லாம் தணிவான நாடியெல்லாஞ் சமனதாமே.()

ஆகுமே மண்டையின் பீனசங்கள் அரையாப்பு சூலைக்கு நெய்யிற் கொள்ளு, போகுமே வாய்வுக்குஞ் சூலைக்கப்பா புகழானவெல்லத்தில் கொடுத்துப்பாரு, சாகுமே கயரோகம் எலும்புருக்கி கடிதான வியாதியெல்லாந் தீருந்தீரும், வேகுகின்ற பித்தத்தா லெடுத்தகூர்மம் வேரோடே பிடுங்கிவிடும் வித்தைகாணே. (௧அ௨)

காணவே யின்னமொரு சூரணந்தான்கேளு காயான சாதிக்காய் கிராம்பு யேலம், தோணவே யதிமதுரங் கடுக்காய்சுக்கு சொல்லரிய வபினியொடு அரத்தைதானும், பேணுவாய் குங்குமப்பூ கோஷ்ட மோடுபேரான அண்டோடு ஆமையோடு, பூணுவாய் கோங்கிலவு முத்துங்கூட்டிப் பேராக வகைக்கொன்று பலந்தான்வாங்கே. (௧௮௩)

## நீரடைப்பு சதையடைப்பு சூலைக்குச் சூரணம்.

வாங்கியபின் வேரெல்லா மொன்றாய்க்கூட்டி வகையாகக் கடைசரக்கை யொன்றாய்ச்சேர்த்து, தாங்குவா யிருவகையும் பகிர்ந்துகொண்டு தனித்தனியே பொடிபண்ணி வடியேகொண்டு, ஊங்குவாய் பின்பதைதா னிளவறுப்பாய் வறுத்து உத்தமனே பின்னுமதைப் பொடியேபண்ணி, பாங்குடனே கடிகைதா னெய்யிற்கொள்ளு பாங்காக வியாதிபடும் பாட்டைக்கேளே. (௧௮௪)

கேளப்பா நீரடைப்பு சதையடைப்பு கெடியான மண்டையிடி வாதசூலை, தாளப்பா நீராம்பல் வாதக்கட்டு சடலத்தைத் தான்கெடுக்குங் குறுகுங் குட்டம், வாளப்பா குன்மத்தி லாறுகுன்மம் வாய்நீரு முள்மூலம் வாந்திபித்தம், நாளப்பா வனுபானம் நெய்யிற்கொள்ள நலமாகத் தேனுடனே சர்க்கரைதான் கூட்டே. (௧௮௫)

## விக்கலுக்குச் சூரணம்.

கூட்டவே யின்னமொரு சூரணந்தான்கேளு கொடிவேலி வேரடா பலந்தானென்று, மூட்டவே சிற்றாமுட்டி பேராமுட்டி முறையாகச் சாரணைவேர் பலந்தானென்று, நோட்டமாய்ப் பாலிலே மூன்று நாளும் நிதமாக வூறவைத் துலர்த்திக்கொண்டு, மாட்டுவாய் பால்வார்த்து விட்டரைத்து மைந்தனே பொடிபண்ணி வைத்துக்கொள்ளே. ()

## மேகம் சோகை யிருமல் பாண்டு இவைகளுக்குச் சூரணம்.

வைத்தபின்பு சாதிக்காய் கிராம்புமேலம் மதுரமொடு தாளிசமும் நெய்க்கொட்டான்பழமும், தித்திக்கு முந்திரியை பேரீந்தாகும் திறமாக வகைக்குப் பதினைந் திடையுமாகும், மைத்தனையா மகரந்தான் திராட்சந்தானும் வகையான பேரீச்சு சீந்தில்தானும், இத்தனையு மிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு இதமாகப் பட்டதுபோல் பொடித்துக் கொள்ளே. (௧௮௭)

பொடித்திடவே நெய்தனிலே கொடுத்தாயாகில் புகழான க்ஷய த்தையப்பா வாங்கும் வாங்கும், எடுத்துவிடுந் தேனிலே கொண்டாற் கேளு இப்லான வீக்கமடா கூட்டோடே போம், தொடுத்துநின்ற மேகத்தை யடக்கிப்போடுஞ் சூத்திரமாய் வாய்வைத்தா னடக்கிக் கொள்ளும், முடித்திடவே வெல்லத்தி லுண்ணநோய்கள் முறை கண்டு யீந்துவிடு முக்கியந்தானே. (௧அஅ)

## மேகத்துக்குச் சூரணம்.

முக்கியமா யின்னமொரு சூரணந்தான்கேளு முகிழான அரச னுட பட்டைவாங்கி, பக்குவமாய் முருங்கையுட பட்டைநொச்சி பாங் காக வுலர்த்தியதைச் சூரணம்பண்ணி, ஒக்கவே பாஷாணம் கடுக்காய் சுக்கு ஊட்டவே நெய்தனிலே மேகமாறும்போகும், பக்குவமாய்ப் பணவிடைதான் கொடுக்கவேணும் பாண்டுவகை யாறுமடா மாறிப் போமே. (௧அ௯)

போகவே யின்னமொரு சூரணந்தான்கேளு பொடியடா சாதிக் காய் கிராம்புமேலம், ஆகுமடா நன்னாரிக் கிழங்குபலமொன்று அப் பனே வால்மிளகு கடுக்காய்கூட்டு, சாகவே யிளவறுப்பாய் வறுத் துக்கொண்டு சட்டமுடன் வடிகட்டி எடுத்துக்கொண்டு, நேகது போல் நீபொடித்து வொன்றாய்க்கொண்டு நெய்யிலே கொண்டிடவே மேகம்போமே. (௧௯0)

## கண்புகைச்சலுக்குச் சூரணம்.

கொண்டிடவே யின்னமொரு சூரணந்தான்கேளு குருவான குறுந்தொட்டி சமூலம்வாங்கி, வண்டிடவே யத்தியுட பட்டைபல மொன்று விதமான சிறுகுறிஞ்சான்வேர் பலந்தானொன்று, பண்பான சிற்றரத்தைப் பலந்தானொன்று பாங்கான சாதிக்காய் பலந்தானொ ன்று, ஒன்றாகச் சமனிறையாய்த் தூக்கிவாங்கி யுத்தமனே திரிகடுகு கடுக்காய் கூட்டே. (௧௯௧)

## சலக்கழிச்சல் பிரமேகம் உள்ளுக்குச் சூரணம்.

கூட்டியே யிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு குமுறவே தான் பொடித்து வடிதான்கொண்டு, ஊட்டுவாய் மறுபடியு மேனிச்சாறு உவப்பாகத் தானரைத்து வுலர்ந்தபின்பு, நாட்டுவாய் வஸ்திரகாயம் நன் றாய்ச்செய்து நாயகனே கைபாகம் செய்பாகந்தான், மூட்டுவாய் மூவிர லாற் பொடியை நெய்யில் முக்கியமாய்க் கொண்டிடவே சோகை போமே. (௧௯௨)

போகுமப்பா யின்னமொரு சூரணந்தான்கேளு புகழான கொடிவேலிப் பருத்திவேரும், தாகுமப்பா சிறுசின்னி குறிஞ்சான்வேருஞ் சதாவேரிக் கிழங்குடனே யமுக்குறாவேரும், பாகுமப்பா சீதிக்காய் கிராம்புமேலம் பாங்காக வொருநிறையாய்த் தூக்கிக்கொண்டு, ரேகவே யரைத்ததனை வடியேகொண்டு நிசமாகத் தேனிலே கொடுத்துக் கொள்ளே. (கசுரு)

கொள்ளவே சலக்கழிச்சல் பிரமேகங்கள் கூரான வாதமுடன் குன்ம குடல்வாய்வு, அள்ளவே குன்மமுடன் பித்தவாதம் அழகான பித்தத்தா லெழுந்த மேகம், விள்ளுகிறேன் மண்டையிடி கறுத்ததேமல் மெய்யுள்ளே யுட்சுரங்கள் காமாலை யோடும், துள்ளவே யோடிவிடுஞ் சொன்னேன்பாரு சூரணத்தின் மகிமையப்பா சூட்சம்பாரே.()

## காசம் ஏங்கலிளைப்புக்குச் சூரணம்.

சூட்சமா யின்னமொரு சூரணந்தான்கேளு துரோகிகட்குச் செல்லாதே பலியாதென்பார், மாச்சப்பா கையானும் பலந்தானென்று மைந்தனே சஞ்சீவி பலந்தானென்று, பாச்சான பூச்சியப்பா பலந்தானென்று பாங்காக யிதுமூன்றும் நிழலுலர்த்தி, மூச்சான வியாதிக்கு நெய்யிற்கொள்ள வுத்தமனே நோயெல்லா மோடிப்போமே. (கசுரு)

ஓடுமப்பா காசத்தி லெட்டும்போகு முத்தமனே யேங்கலொடு யிளைப்புதீரும், வாடாத கிரிச்சிரங்கள் வாதம் வாய்வு வாய்நீருங் க்ஷயரோகம் வறட்சி பித்தம், நாடாது தேனிலே கொடுத்தாயாகில் நாசிப்புண் பீனசங்கள் நயனச்சூடு, கோடாது வுளமாந்தை சுரமாந்தையோடு குடிகெடுத்த க்ஷயரோக மற்றுப்போமே. (கசுசா)

அற்றுப்போ மின்னமொரு சூரணந்தான்கேளு அறுகினிட வேரப்பா பலந்தான் பத்து, முத்தான கிழங்கதுதான் பலந்தானென்று முதலான குறிஞ்சான்வேர் பலந்தானென்று, சித்தான கடுகின்வேர் பலந்தானென்று சித்திரமூலமப்பா பலந்தானென்று, இத்தனையு முலர்த்தியே பொடியாய்ப்பண்ணி யிதற்கு சமாக வால்மிளகு கடுக்காய் கூட்டே.()

கூட்டியே கிராம்புடனே யேலஞ்சுக்கு குறையாமல் நீயளாயாய்த் தூக்கிக்கொண்டு, வாட்டியே மறுபடியும் பொடியேபண்ணு வகை யாக நெய்பாலில் மோரிற்கொள்ள, ஊட்டியே கட்டுகின்ற நீர்க்கா மாலை யுள்வறட்சி யெலும்புருக்கி யோடிப்போகும், பாட்டிலே சொ ல்லுவது பலியாதென்றே பாவிகட் கியாதே பலந்தான்போமே. ()

பலமாக வேணுமென்றால் சொல்லக்கேளு பராபரியைப் பூசை பண்ணு பலிதமாகும், அலையாதே சொல்லுகிறேன் வாலைவந்து அப் பனே முன்னிற்பாள் மயங்கவேண்டாம், இலையான துதிர்ந்தாக்கால் மரத்தின்கீழே யொருவருக்கு மிருக்கவிடங் கிடையாதென்றே, தல மான பொதியையிலே யெல்லாமுண்டு தாடகைச் சுனையிலுண்டு பின் சாற்றுறேனே. (௧௯௯)

சாற்றுகிறேன் லேகியந்தான் சொல்லக்கேளு சட்டைமுனி மக னுக்குத் தெரியுமப்பா, போற்றுவான் சதாநித்தம் வாலைதன்னைப் பிடி த்த தெல்லா மாட்டி வைப்பாள் பூரணியாள்பாரு, காத்துநீ யப்படியே தியானம் பண்ணக் கையினால் தொட்ட கருவெல்லாமாடும், மூத்த தோர் வேங்கையுட பட்டையப்பா முத்தான கிழங்குபல மிரண்டு மாமே. (௨00)

நீர்க்காமாலை உள்வறட்சி எலும்புருக்கி இதற்குச் சூரணம்.

இரண்டுமப்பா சமனிரண்டாய்த் தூக்கிக்கொண்டு நிழலிலே தா னுலர்த்தி பொடியேபண்ணி, நன்றான மேனியுட சாற்றிற்கூட்டி நல் மிளகு கடுக்காய்சிற் றரத்தையோடும், ஒன்றாகப் பொடிபண்ணி யது வுங்கூட்டி யுத்தமனே மண்கலத்துக் குள்ளேயிட்டு, கிண்டியே வேக வைத்து நொச்சிக் கோலால் கிண்டடா துப்புரவாய் விட்டுத்தானே. ()

விட்டபின் னிறக்கியதை யாறவிட்டு வெள்ளாட்டு நெய்யிலே கொடுத்தாயாகில், எட்டுநாள் கொண்டிடவே வாதமேகம் இதமான கண்புகைச்சல் காதுமந்தம், ஒட்டாது தேகத்தி லுஷ்ணமப்பா வுள்ள படி சொல்லிவிட்டே னீயும்பாரு, கட்டான கட்டப்பா யெந்தன் ஞா னம் கண்டவனே சித்தனென்று கருதுங்காணே. (௨0௨)

## போதியையிலிருக்கத் தயிலம்.

காணவே யின்னமொரு லேகியந்தான்கேளு காரையுட வேர்ப் பட்டை பலந்தானென்று, தோணவே நெருஞ்சிவேர் பலந்தானென்று சுருதியுள்ளக் கடுக்காய்தான் பலந்தானென்று, ஊணவே சீரகந்தான் பலந்தானென்று வுறுதியுள்ள மிளகப்பா பலந்தானென்று, வேணு வாய் நிறையொன்றாய்த் தூக்கிவாங்கி நேராகப் பட்டதுபோல் பொடி தான் பண்ணே. (௨0௩)

## வாதம் மேகம் கண்புகைசசல் காதுமந்தத்துக்கு இலேகியம்.

பண்ணியே மண்கலத்தில் வண்டுகட்டி பரிவாகப் பருத்தியுட சாறுவிட்டு, நண்ணவே தானரைத்து மத்தித்தேதான் நயமாக வெந்த பின்பு தும்பைக்கோலால், கண்ணவே யிளவறுப்பாய் சூரணித்துக் கருவாக வொருநிறையாய் நிறுத்துக்கொண்டு, வெண்ணெய்போல் கிண்டியதை யிறக்கிக்கொண்டு விவரமாய்த் தான்கொடுக்கத் தேனிற் றுனே. (௨0௪)

தேனிலே கொடுத்திடவே சோகை வீக்கந் திறமான காமாலை சிரங்குபோகும், ஊனிலே கொண்டிடவே வாதசூலை யோடிவிடுஞ் சொல்லுகிறே னுரைத்துப்பாரு, தேனிலே யிம்மருந்தை கொண்டா யானல் தேறுமடா மகாவித நோய்கள்போகும், வானமென்ற முட் டையிலே யடையாய்க்கொள்ள வண்டுகெடி பொடித்தேமல் மாண்டு போமே. (௨0௫)

## சோகை வீக்கம் சிரங்கு காமாலைக்கு இலேகியம்.

போகுமே யின்னமொரு லேகியந்தான்கேளு புகழான குன்றி யிலை பலந்தானென்று, தாகுவாய் காத்தாடியிலை பலந்தானென்று தரு வான சுண்டையிலை பலந்தானென்று, பாகுவாய் முசுமுசுக்கை மூலி தானும் பண்பான சிறுகுறிஞ்சான் மூலிதானும், நாகுவா யெறுக்க னின் மொக்கு பலமொன்று நயமாக ரவிதனிலே யுலர்த்திக்கொள்ளே.()

கொள்ளப்பா வெண்ணெயைப்போல் பொடியேபண்ணி கூரான திப்பிலிநல் சுக்கிஞேடும், விள்ளுகிறே னரத்தைசத குப்பை யோமம் விதமொன்றுங் குறையாமல் தூக்கிவாங்கி, துள்ளப்பா பொடிபண்ணி யெல்லா மொன்றாய்ச் சுத்தியாய் மண்கலத்தில் வேடுகட்டி, எள்ளப்பா விர்ரகனெண்ட மேற்பொடியாய்த்தூவி யெலுமிச்சங் குச்சியால் கிண் டிப்போதே. (௨0௭)

கிண்டும்போ திலேகியந்தான் மெழுகுபோலாம் கிருபையா யனுபானஞ் சொல்லக்கேளு, பண்டான நவரைநெல் பொரித்திடித்து பரிவாகீநாவிரண்டுநாட் கொண்டாயாகில், உண்டான மூவரால் வந்த தாசி|யோடுமப்பா சொல்லுகிறே னுணிப்பாரு, உண்டானபடிசொன் னேன் பாகம்பார்த்து வுத்தமனே கொடுத்துவிடு வோடிப்போமே. ()

காசிகிரந்திக்கு குன்மத்திற்கு இலேகியம்.

ஓடுமப்பா யின்னமொரு லேகியந்தான்கேளு வுறுதியுள்ள குறிஞ் சான்வேர் பலந்தானென்று, நாடுவா யமுக்குரு பலந்தானென்று நல மான வேளைவேர் பலந்தானென்று, கூடுவாய் நிழலிலே யுலர்த்திக் கொண்டு கிருபையுடன் கல்லுரலிற் பொடியேபண்ணி, மூடுவாய் மூன்றுபலம் ரெட்டுக்குள்வைத்து மூட்டுவாய் புகைந்தபின்பு யிறக்கிக் கொள்ளே. (௨0௯)

இறக்கியபின் வால்மிளகு கடுக்காய்சுக்கு யிதமான நல்மிளகு வாய்விளங்கங்கூட்டி, மறக்காதே சாதிக்காய் கிராம்புமேலம் வகை யொன்றாய் விராகனெடை ரண்டுதூக்கி, குறையான பொடியப்பா பிட் டதுபோலானல் கூட்டிவிடு முன்மருந்தில் குச்சிகேளு, உரைக்கிறேன் நாவலுட கோலாற்கிண்டி யுத்தமனே சட்டியிலே வைத்துக் கொள்ளே. (௨௧0)

பெரும்பாடு உட்காய்ச்சல் வாய்வு சூலை பதினெட்டுக்கும்.
குறிஞ்சான்வேர் இலேகியம்.

வைத்தப்பா கிண்டியதை யிறக்கிக்கொண்டு மைந்தனே புன்னை க்கா யளவுகொள்ளு, பித்தனே யனுபானம் வெண்ணெய்கூட்ட பெ ரும்பாடு சோகைநீர் பாண்டுபோகும், உத்தமனே தேனிலே யுண்டா யாகில் மூலங்கள் சட்டெல்லா மற்றுப்போகும், சித்தித்த தேனைவிட் டெல்லாங்கூட்ட சித்தியாஞ் சொல்லுகிறேன் சூலைதானே. (௨௧௧)

சூலைக்கு யின்னமொரு லேகியந்தான்கேளு சுடலையிலே வளரு கின்ற கிழாநெல்லி, மாலைதனை யறுக்கின்ற கடுக்காயப்பா வகையான பறங்கியுட பட்டையொன்று, காலுற்ற சீரகமுங் கறுப்புங்கூட்டு கைம்முறையாய்ப் பலமொன்று நிறுத்துவாங்கி, சூலையத்தில் வைத் துலர்த்திப் பொடிதான்பண்ணி சுகுணனே சொல்லுகிறே னறிந்து கொள்ளே. (௨௧௨)

அறிந்திடவே யிடித்ததனைப் பொடியாய்ப்பண்ணி அழுக்குரு சாறுவிட்டு மத்தித்தே தான், செறிந்திடவே பானைக்கு வேடுகட்டித் திறமாக வேடுமேல் பொடியும்வைத்து, முறிந்திட்டுப் போகாமல் வெண்ணெய்கூட்டி மூதண்ட வடுப்பிலே கிண்டும்போது, கரிந்திடும் போல் புகைகாணு மிறக்கிக்கொள்ளு கடுகளவு வாயிலிடக் கசப்பு காணும். (உகங)

காணுநீ யிதுவெடுத்து வைத்துக்கொண்டு கடும்புன்னைக் காயளவு யெட்டுநாட்கொள்ள, மேனியிலே யுள்ளதொரு தடிப்புவீக்க மெய்யி லுள்ள காந்தலுஞ் சூலைபதினெட்டும், தோணுவாய் கண்டத்து மாலை யப்பா சொல்லரிய கல்லடைப்பு சுறுக்காய்த் தீரும், பேணுநீ பத்தி யத்தில் தவறுவந்தால் பிசாசுபோல் புத்தியடா மறிக்கும்பாரே. ()

## குறைநோய் வண்டுகேடி பித்தவாய்வு நீரருகலுக்கு வில்வாதி இலேகியம்.

பாரப்பா யின்னமொரு லேகியந்தான்கேளு பாங்காக வில்வமோ பலந்தானென்று, நேரப்பா விலாமிச்சம்வேர் பலந்தானென்று நித மான பேய்ப்புடல்வேர் பலந்தானென்று, நேரப்பா கல்லுரலிற் பொடி தான்பண்ணி நிலையாக வஸ்திரத்தால் காயங்கொண்டு, காரப்பா யரத் தைபொருபலமேதூக்கி கைம்முறையாய்த் தூள்பண்ணிக் கிழியாய்க் கட்டே. (உகரு)

கட்டியபின் வெண்கலத்தின் சட்டிகொண்டு கருதியே வேடுகட்டி மேல்மருந்து வைத்து, சட்டியொன்று மேல்மூடி யடுப்பிலேற்றி தய வாக வெந்தபின்பு புன்னைக்கோலால்கிண்டி, கட்டியா யிறுகியபின் மா தளஞ்சார் காற்படிதான் கூட்டியே மறுபடியும்வைத்து, திட்டமாய் மறுபடியு நொச்சிக்கோலால் சீராகக் கிண்டிறக்கிக் கழற்சிகொள்ளே.()

கொள்ளப்பா நெய்யிலே கொள்ளும்போது குறைநோயும் வண்டு கடி கூட்டோடேபோம், தள்ளப்பா வெல்லத்திற் கொள்ளும்போது சலமூறும் பித்தமெல்லாஞ் சாடிப்போகும், விள்ளப்பா தேனிலே கொள்ளும்போது மெய்யிலுள்ள சபத்தையெல்லா மறுத்துப்போடும், உள்ளதுதான் சொல்லிவிட்டே னென்னைப்போல வொருவருந்தா னிப் படிசொல்லார்கள்பாரே. (உகஎ)

## வயிற்றுக்கடுப்பு காமாலை வாதசூலை மேல்மூச்சு காந்தல் இதற்குச் செருப்படி இலேகியம்.

சொல்லுகிறே னின்னமொரு லேகியந்தான்சேளு சுருதியுள்ள செருப்படிதான் பலந்தானென்று, வெல்லுகிறே னுவாரைவேர் பலந் தானென்று வீதமா யிதுரண்டுஞ் சமனுப்த்தூக்கி, மல்லுகிறேன் கல்விற்ருன் பொடியேபண்ணி வகையொன்று விராகனெடை மருந்து வாங்கு, நல்லதொரு சாதிக்காய் மிளகுசுக்கு நலமான வால்மிளகு கடுக் காய் கூட்டே. (உகஅ)

கூட்டியே மருந்தை யெல்லா மொரு நிறையாய்த்தூக்கி குறை யாமற் பொடிபண்ணி ஆட்டிவாங்கு, மாட்டியே மண்கலத்தில் வேடு கட்டி மைந்தனே மருந்தையெல்லா மேல்வைத்துமூடி, நாட்டியே சட்டியொன்று மேலேமூடி நயம்பெறவே வேம்பினுட கோலாற் கிண்டி, வாட்டியே லேகியந்தான் மெழுகுபோலா மைந்தனே யிற க்கியதை வைத்துக் கொள்ளே. (உகசு)

வைத்தபின்பு பாலிலே கொள்ளும்போது வயிற்கடுப்பு காமாலை வாதசூலை, மெய்த்திடவே வெண்ணெயிலே கொள்ளும்போது மேன் மூச்சு காந்தலெல்லாம் விழலாய்ப்போகும், பத்தியமா யில்லாட்டால் வாயிற்புண்ணும் பல்லெல்லா மசைந்துவிடும் பாருபாரு, சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு சாற்றினேன் மெய்ஞ்ஞான நடனந் தானே. (உஉ0)

நடம்புரிவாய் யின்னமொரு லேகியந்தான்கேளு நாய்க்கடுகு வேரடா பலந்தானென்று, படமான தூதுளைவேர் பலந்தானென்று பாங்கான காரெள்ளு பலந்தானென்று, இடம் புரிந்தேன் காயமப்பா பலந்தானென்று இவையெல்லாந் தான்கூட்டி பொடியேபண்ணி, வட மான கல்லுரவிற் ருக்கியேதான் மைந்தனே யெடுத்து நன்றாய் வைத் துக் கொள்ளே. (உஉக)

வையப்பா சாதிக்காய் கிராம்பு யேலம் வால்மிளகு சிற்றரத்தை வெந்தயம் சுக்கு, பையவே யிவையெல்லா மையாய்ச்செய்து பரிவாக வஸ்திர காயமாக்கி, நெய்யிலே குழைத்து வைத்துக் கொள்ளும் போது நிசமாகச் சட்டிக்கு வேடுகட்டி, வையப்பா வேடுமேல் மரு ந்தை வைத்து மறுபடியுஞ் சட்டியொன்று மேலே மூடே. (உஉஉ)

மூடியே புகையொன்று வருகும்போது முசுட்டையுட கோலா லே கிண்டிக்கொள்ளு, நாடியே தானிறுகி மெழுகு போலாம் நல்ல தொரு சர்க்கரையில் கொடுத்துக் கொள்ளு, மூடியே தோஷமெல்லா மோடிப்போகும் முறையாக வெட்டுநா ளிருநேரங் கொள்ளு, காடிநீர் கூட்டியே யுண்ணவேணுங் கலந்திருந்த மேகமெல்லாங் கத்திப் போமே. (உஉங)

## பாலடை இலேகியம்.

கதறவே யின்னமொரு லேகியந்தான்கேளு கருவான பாலடைக் கிழங்கு பலமதொன்று, தவருமல் நன்னரிக் கிழங்கு பலமொன்று தருவான ஆத்திவேர் பலந்தானென்று, சிதருமல் இடித்து நன்ருய்த் தூளதாக்கிச் சித்திர மூலத்துடனே சாதிக்காயும், பதருமலதனுடன் கிராம்பு சுக்கு பலமொன்ருய்த் தானிறுத்து வுலர்த்திக் கொள்ளே. ()

உலர்த்தியதை மறுபடியுந் தூளதாக்கி யுத்தமனே வஸ்திரத்தில் வடிதான்கொண்டு, பிலக்கவே சட்டியொன்று வேடுசட்டிப் பெருமையுடன் தூளதனை மேலேவைத்து, மலைக்கவே தூதுவளைச் சாறுவிட்டு மைந்தனே மேலுமொரு சட்டிமூடி, எலிக்கவே புளியினுட விறகே யாகும் இதமான குச்சப்பா காரைதானே. (உஉரு)

## மேகத்துக்கு நாய்க்கடுகு இலேகியம்.

காரையுட குச்சியாற் கிண்டும்போது சல்லதுபோ லிறுகிவிடுங் கண்டுபாரு, ஆறவே யிறக்கிவிடு மெழுகுபோலாம் ஆவினுடபாலிலே புன்னைக்காய் விதம், மாறுவாம் வயிற்றெரிவு நெஞ்செரிவு வாகான வாய்நீரோட்டந்தானும், தேறுவாய் நெய்யிலே கொள்ளும்போது தித்தித்த பித்தமெல்லாந் திரண்டுபோமே. (உஉசு)

## வயிற்றெரிவு வாய்நீரோட்டம் நெஞ்சேரிவு இதுக்குப் பாலடை இலேகியம்.

போகுமப்பா யின்னமோர் லேகியந்தான்கேளு புண்ணுக்குப் பூடப்பா சமூலம் வாங்கு, ஆருமப்பா நெல்லியுட பட்டை பலமொன்று அப்பனே நொச்சிவேர் பலந்தானென்று, தாகுமப்பா தூளாக விடித்துக்கொண்டு சட்டியிலே யிளவறுப்பாய்த் தான்வறுத்து, பாகுபோலான பின்பு வேடுசட்டிப் பாகமாய் தான்கிளறக் குச்சிகேளே. ()

## புண் புரை காந்தல்
## மண்டைசூலைப்புண்ணுக்கு இலேகியம்.

கேளப்பா குச்சிதான் கீழாநெல்லி கெடியாகத் தானிறக்கி வைத்துக்கொண்டு, நாளப்பா யிருநேரந் தேனிற் கொள்ள நாளான புண் புரைகள் தேககாந்தல், மாளப்பா வரையாப்பு மண்டைச்சூலை வகையர்கப் பித்தத்தா லெடுத்தமேகம், வாளப்பா சர்க்கரையி லுண்ணும்போது மண்டையிடி பீனிசமு மாண்டுபோமே. (உஉஎ)

மாண்டுபோ மின்னமோர் லேகியந்தான்கேளு வல்லாரைப் பூட ப்பா சமூலம்வாங்கி, ஆண்டுகொள்வாய் கடுக்காய்தா னரத்தை சுக்கு அப்பனே யேலமுடன் கிராம்பு கூட்டு, மீண்டுகொள்வாய் சாதிக்காய் தேவதாரம் வெய்யிலிட்டுநன்றாகயுலர்த்திக்கொண்டு, மூன்றுநாளியல்பு தான் மூன்றுக்குள்ளே முனைபாகத் தான்பொடித்து வடிதான் கொள்ளே. (உ௨௯)

மேகம் கபம் நீரடைப்பு சதையடைப்பு பல்லசைவு.
இதற்கு வல்லாரை இலேகியம்.

கொள்ளவே வடிகொண்டு கிண்டுமேதான் கோலமாய் மூடியே யெரிக்கும்போது, கள்ளதுபோல் நுரையெழும்புங் கண்டுபாரு கையி லுள்ள கோலாலே கிளறிக்கொள்ளு, உள்ளபடி சூரணத்தைக் கொ ண்டேதானும் வுரைக்கிறேன் பாண்டத்தில் தன்னிற்சேர்த்து, மள் ளவே மையதுபோ லானபின்பு மைந்தனே புன்னைக்கா யளவு வுண்ணே. (உ௩0)

உண்ணவே தேகத்து மேகமெல்லாம் ஓடிவிடு மேகம் பத்துக்கு மிதுவேயாகும், பண்ணவே நீரடைப்பு சதையடைப்பு பல்லசைவு யிவையெல்லாம் பறந்துபோகும், நண்ணவே தேனிலே கொள்ளும் போது நாடாது வாய்வினிட கூத்தைப்பாரு, எண்ணெயிலே கொள் ளவே கடுப்புத்தீரு மிதுபோலே சித்தியப்பா சொல்லார் பாரே. ()

சித்தான முட்டியப்பா பலந்தா னென்று திறமான கருந்தொட் டிப் பலந்தானென்று, முத்தான சங்கம்வேர் பலந்தானென்று மூதண் டக்கிழங்கப்பா பலந்தானென்று, வித்தான தான்றிக்காய் பலந்தா னென்று விதமொன்றுந்தப்பாமல் தூக்கிவாங்கி, பத்துநாள் நிழலிலே யுலர்ந்தபின்பு பாங்காகத் தானிடித்துப் பொடிதான் பண்ணே. (உ௩௨)

நீர்ச்சேறிப்பு வண்டுகடி க்ஷயரோகம் இருமல் உளமாந்தை
குன்மம் இதுகளுக்குச் சிற்றாமுட்டி இலேகியம்.

பண்ணுநீ சாதிக்காய் கிராம்புயேலம் பரிவான வால்மிளகு கடுக்காய் சுக்கு, எண்ணுநீ யரத்தையொடு குப்பை யோமம் இதமான திப்பிலி யுஞ் சீரகமுங்கூட்டி, நண்ணுநீ யிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு நல மாசப் பொடிபண்ணி வடிதான்கொண்டு, மண்ணுநீ சட்டியிலே வேடு கட்டி மைந்தனே சூரணத்தை மேலேவையே. (உ௩௩)

வைத்தபின் பெரிக்கவே வேருகேளு மகத்தான யெட்டியப்பா வைத்துக்கொள்ளு, பொற்றலையான் குச்சியினுற் கிண்டும்போது புகையெல்லாந் தானடங்கு மெழுகுபோலாம், கைத்தபின் மண்டலந் தான் கொள்ளும்போது கடிதான வியாதியெல்லாம் மாண்டுபோகும், நித்தமப்பா யிருநேரங் கொள்ளும்போது நீர்ச்செறிப்பு வண்டுகடி நீறிப்போமே. (உ௬ச)

நீறிப்போம் க்ஷயரோக மிருமலுளமாந்தை நிலையான குணமெல்லா மோடிப்போகும், கூறினே னுள்வறட்சி காசத்துக்கப்பா கொடுத்துவிடு வனுபானந் தேனுமாகும், மாறிவிடுஞ் சலமேக ரத்தமேகம் மைந்தனே செய்யாகு மனுபானந்தான், ஊறின சர்க்கரைக்குப் பாண்டு ரோக முத்தமனே சொல்லுகிறேன் னுண்மைதானே. (உ௬ரு)

## கேர்ப்ப இளைப்புக்கு கோங்கிலவு இலேகியம்.

உண்மையா யின்னமொரு லேகியந்தான்கேளு வுறுதியாய்க் கோங்கிலவு பலந்தாஞென்று, வெண்மையுள்ள குருவிரியன் பலந்தாஞென்று வேங்கையுட பட்டையப்பா பலந்தாஞென்று, நன்மையாய் ரவியிலே யுலர்த்திககொண்டு நலமாகத் தானிடித்துத் தூளதாக்கி, பெண்மையாய்ச் சாதிக்காய் கிராம்பு பேலம் பேரான சீரகமு மிளகு கூட்டே. (உ௬௬)

கூட்டியே சகசகசா சாரப்பூவுங் குருவான கஸ்தூரி மஞ்சள் கூட்டு, வாட்டியே பொடிபண்ணி யெல்லாமொன்ருய் மைந்தனே கையானின் சாற்றில் மத்தி, மூட்டுவாய் வேடுமேல் சட்டிமூடி முதலான குச்சியப்பா நொச்சியாகும், நாட்டமாய் விரகப்பா புன்னை பாட்டை நாழிகைதா ஞென்றுடனே யெரித்து வாங்கே. (உ௬எ)

வாங்கப்பா குச்சியிலே கிளறிக்கொண்டு மைந்தனே விட்டு மத்தித் தேதான், பாங்கியென்ற பெண்களுக்குக் கொடுத்தாயாகில் பாசமெல்லா மறுத்துவிடும் கெர்ப்பமுண்டாம், தேங்குகின்ற விளைப்புக்கு நெய்யிற்கொள்ள திசைசெட்டு வோடிவிடுஞ் செப்பினேம்பார், தாங்குகின்ற ஆண்தண்டு தண்டுவாய்வுக்கப்பா சர்க்கரையிற் கொடுத்துவிடு சாடிப்போமே. (உ௬அ)

## மேகத்துக்கு அரசன்பட்டை இலேகியம்.

சாடவே யின்னமொரு லேகியந்தான் கேளு சதமான வரசன் பட்டை பலந்தாஞென்று, பாடுகிறேன் சுண்டைவேர் பலந்தாஞென்று பாங்கான வமுக்குரு பலந்தாஞென்று, கூடவே யாவாரைதான் சமூலம்வாங்கி கூட்டியே யுலர்த்தியதைப் பொடிதான்பண்ணு, வாடாதே சூரணத்தின் மகிமைகேளு மைந்தனே கடைமருந்தை வாங்கிச் சேர்த்தே. (உ௬௯)

சேர்த்தடா சீரகமு மிளகுசுக்கு திடமான வால்மிளகு கடுக்கா யோடு, மார்த்தடா யேலமொடு தேவதாரம் வகையான தான்றிக்காய் நெல்லிக்காயும், கார்த்தடா பொடித்து நன்றாய்க் காயமாக்கிக் கருவான விரும்பினிற்கு வேடுகட்டி, போர்த்தடா வாலைக்குப் பூசைசெய்து பொடியான நல்மருந்தை வேட்டினுள் வையே. (உச0)

வைத்தபின்பு குச்சியப்பா நெல்லியாகும் வளமான நல்விறகு துளசியாகும், சித்திக்கும் நெல்லியால் கிளறிக்கொண்டு திறமாக மெழுகுபத மானபோது, முத்திக்கு மூவிரலா லெடுத்துத்தின்னு மூப்பான மேகமெல்லா மோடிப்போகும், பத்திக்குந் தேசத்தில் வியாதி யெல்லாம் பறக்குமடா வனுபானந் தேனதாமே. (உசக)

தேனுக வின்னமொரு லேகியந்தான்சேளு சிறுசின்னி சமூலமப்பா பலந்தானென்று, மானன கல்நாறு பலந்தானென்று வால்மிளகு கடுக்காயுஞ் சீரகமுமிரண்டு, ஊனமில்லா தரைத்ததனைப் பொடியாய்ப் பண்ணி யுத்தமனே காயமொடு வெள்ளுள்ளிகூட, மானன மண்சட்டி வேடுசட்டி மறக்காமற் கிளறவொரு குச்சிகேளே. (உசஉ)

## குறைநோய் கண்டுகேட்டி மாவிலிங்க இலேகியம்.

கேளடா தகரையுட கோலாற்கிண்டி கிருபையுடன் மெழுகுபோ லுருளும்பாரு, மூளடா வடுப்பைவிட் டிறக்கும்போது முக்கியமா யிறுகியது கற்போலாகும், வாளடா யெண்ணுதே சழஞ்சிமட்டும் மாதமொன் றிருநேர முண்டுகொள்ளு, தாளடா ரோகமப்பா யெட்டும் போகும் தருவான செந்தூரந் தாளகமுமாமே. (உசங)

ஆகுமப்பா யின்னமொரு லேகியந்தான்கேளு அன்பான மாவிலிங்கு பலந்தானென்று, தாகுவாய் வேம்பின்வேர் பலந்தானென்று தனித்தனியாய்த் தூக்கியதைத் தூளதாக்கி, நேகதுபோற் பொடி பண்ணி வஸ்திர காயங்கொண்டு நிதமாக வால்மிளகு கடுக்காய் சுக்கு, பாகமாய்த் தான்றிக்காய் நெல்லிக்காயும் பரிவான குங்குமப்பூ கோரோசனையுங் கூட்டே. (உசச)

கூட்டுவா யதிமதுரந் தேவதாரங் குணமான சதகுப்பை விலாமிச்சோடு, நாட்டுவா யிவையெல்லாம் பொடியதாக்கி நலமான சட்டிக்கு வேடுகட்டி, மாட்டுவாய் விறகப்பா அழிஞ்சிலாகும் மைந்தனே குச்சியடா தும்பையாகும், நேட்டமாய் மெழுகுபத மாகும்போது நிசமாக விறக்கியதை வைத்துக்கொள்ளே. (உ௪௫)

சீரகாந்தல் துடிவாதம் சூலைநோய்
கண்டமாலை இதற்கு நிலவாகை இலேகியம்.

கொள்ளப்பா நெய்யிலே கொள்ளும்போது குறைநோய்கள் வண்டுகடி நீராம்பலோடு, தெள்ளவே தேனிலே சொள்ளும்போது திறமான கண்புகைச்சல் காதுபந்தம், துள்ளவே யிசிவுவலி யுவந்துதானும் துடியான சன்னிமுதல் ஜாடிப்போகும், விள்ளுறேன் வெல்லத்திற் கொள்ளும்போது மெலிவுள்ள ரோகமப்பா காந்தல்போமே.()

காந்தலென்ற தறுபதுக்கும் லேகியந்தான்கேளு கருவான வாகையுட பட்டைபலந்தான், சாந்தமாய்ச் சிறுபூளைப் பட்டைபலந்தான் சார்பாக மாவினுட பட்டைபலந்தான், பாந்தமாய்ச் சாதிக்காய் கிராம்புமேலம் பரிவான வால்மிளகு அரத்தை சுக்கு, சாந்தாகப் பொடித்துவிடு வடியேகொள்ளு தவறுதே சட்டியுட வேட்டில்வையே. ()

வைத்தபின்பு கிளறவொரு குச்சிகேளு வாகையுட கோலாலே கிளறிக்கொள்ளு, பொற்றலையின் சாறுவிட்டு மத்தித்தேதான் புகழாகக் கிளறிவிடு யிறுகிக்கொள்ளும், சத்தியமாய்ச் சொல்லிவிட்டேனனுபானங்கேளு சர்க்கரையில் கொண்டுவா சீரகாந்தல், பத்தியமாய் நில்லாட்டால் குற்றமுண்டு பாடுகிறேன் சூத்திரத்தைப் பாடுறேனே. (உ௪அ)

சூத்திரமாய் நெய்யிலே கொள்ளும்போது துடிவாதஞ் சூலைநோய் கண்டமாலை, நேத்திரமாய்த் தேனிலே கொள்ளும்போது நிலைகெட்ட பீனசங்க ளெல்லாம் போகும், பாத்திரமாய்க் கொண்டுவிடு புன்னைக்காயளவு பாங்கான வியாதிக்கு அரசனாகும், காத்திருந்து வாலைக்குப் பூசைபண்ணக் கையாலே தொட்டதெல்லாங் கருதான் பாரே. (உ௪௯)

## மேகநீர் கபாலபீனசம் இதற்கு அரத்தை இலேகியம்.

தொட்டிடவே யின்னமொரு லேகியந்தான்சேளு சொல்லரிய தூதுவளை பலமோ வொன்று, வட்டான பேய்ப்புடல்தான் பலமோ வொன்று வகையான கையான்ருன் சமூலமாகும், பட்டதுபோற் பொடிபண்ணிக் காயங்கொண்டு பரிவாக நன்மிளகு சீரகமுங்கூட்டு, திட்டமாய்ப் பொடிபண்ணி வேட்டின்மேல்வைத்து யிதமான நெல்லி யுட கோலாற்கிண்டே. (௨௫0)

கிண்டியே யிறக்கியதை யாறவிட்டுக் கிருபையாய் வெல்லத்தி லுண்ணும்போது, கண்டான காந்தலொடு வீக்கஞ்சோகை பளிச்செ ன்று வோடிவிடும் பாருபாரு, கொண்டான பாலிலே கொள்ளும் போது குட்டமென்ற வெண்மையப்பா கூட்டோடே போகும், வண் டருக்குச் சொல்லாதே செய்யமாட்டார் வகையறியா வயித்தியனென் றுரைப்பான்பாரே. (௨௫௧)

உரைக்கின்ற யின்னமொரு லேகியந்தான்கேளு உருவான கத் திரிவேர் பலந்தானென்று, விரைக்கிறேன் கிரந்திவேர் பலந்தானெ ன்று வேம்பினுட கொழுந்தப்பா பலந்தானென்று, மறைப்பெல்லா நீக்கி விட்டேன் றாளதாக்கி மைந்தனே வால்மிளகு கடுக்காய்கூட்டு, அரைக்கிறேன் காயமொடு பலாதிகூட்டு அப்பனே யிவையெல்லாம் பொடி பண்ணிப்போடே. (௨௫௨)

போட்டபின் சட்டிதனக் குள்ளேவைத்து புசழாக பேய்ப்புடலின் சாற்றுலாட்டி, ஆட்டியபின் வேர்க்கப்பா அரசேயாகில் அப்பனே குங்கியடா ஆவரையுமாகும், நாட்டிடுவாய் மேலுமொரு சட்டிமூடி நலமாக வூசிக்கோலாலேகிண்டி, தேட்டமாய் வடித்து மெழுகு பத மானபோது திறமாக யிறக்கிமைந்தா வைத்துக்கொள்ளே. (௨௫௩)

கொண்டபின்பு வெண்ணெயப்பா வனுபானத்தில் கொள்ளவே சலக்கழிச்சல் குட்டல்வாதம்போகும், தின்றுவிடு விளக்கெண்ணெ யனுபானத்திற் கொள்ள செகத்திலுள்ள வூஷ்ண மெல்லாந் தேறிப் போகும், நன்னயமாய் வாலைக்குப் பூசைசெய்து நலமாகத் தின்றுவிட நன்மையாகும், மன்னனே கால்குடைச்சல் வாய்நீரோட்ட மைந்தனே தேனப்பா வறிந்துபாரே. (௨௫௪)

## மேகம் பித்தநீர் கபாலபீனசம் இதற்கு அரத்தை இலேகியம்.

அறிந்திடவே யின்னமொரு லேகியந்தான்கேளு அரத்தை யப்பா யேலமொடு கிராம்புசுக்கு, தெரிந்திடுவா யேலமொடு லவங்கப் பட்டை சிறியநல் மூலமுட னென்றுய்க்கூட்டு, மறந்துவிடா தாடா தோர்டை வேருங்கூட்டி வல்லாரைப் பூண்டுடனே சமூலங்கூட்டு, பரிந் திடவே யிவையெல்லாம் பலமொன்றாக்கிப் பாங்காகத் தூள்பண்ணி வடித்துகொள்ளே. (உருரு)

கொள்ளவே யிரும்பினுட சட்டிக்கப்பா குறியாக வேடுகட்டித் தூளைவைத்து, மெள்ளவே சட்டியொன்று மேலேமூடி விளம்பவே நொச்சியுட கோலாற்கிண்டி, துள்ளவே மெழுகுபத மாகும்போது துடியான யிம்மருந்து துடிப்புமெத்த, அள்ளவே யெடுத்துப்பார் புட்டுபோலாம் ஆற்றியே யிறக்கியதை வைத்துக்கொள்ளே. (உருசு)

இறக்கியபின் வெண்ணெயிலே யுண்ணும்போது எட்டுவகை மேகமப்பா விட்டுப்போகும், உரைக்கிறேன் மோரிலே யுண்ணும் போது வுத்தமனே பித்தநீ ரற்றுப்போகும், கரைக்கிறே னெய்யிலே கொள்ளும்போது கபாலத்திற் பீனசத்தை வாங்கிப்போடும், மறைப் பென்ன வெந்தனுட நூல்கட்கெல்லாம் வகையறிய மாட்டார்கள் பொருண் மறைப்புதானே. (உருஎ)

## நீராம்பல் கெண்டை சூலை க்ஷயரோகத்துக்கு கல்நார் இலேகியம்.

கூட்டியே மருந்தை யெல்லாம் ஆட்டிவாங்கி குறையாமற் பட் டதுபோற் பொடியாய்ச்செய்து, நேட்டமாய் மண்கலசம் வேடுகட்டி நிசமாகத் தூளையப்பா யதன்மேற் கொட்டி, மூட்டுவாய் சட்டியொ ன்று அதன்மேல்மூடி முறையாகப் புன்னையுட கோலாற்கிண்டி, மாட் டியே யிரக்கிவைத்து ஆற்றிப்பின்னு மாண்பனே கழஞ்சதரை தே னிற் கொள்ளே. (உருஅ)

கொள்ளவே நீராம்பல் கெண்டைசூலை குறிப்பில்லா க்ஷயரோக மற்றுப்போகும், விள்ளுறேன் காதிற்சீய் நாசிப்புண்ணும் விளம்பி னேன் தயிர்மோரி லனுபானங்கள், தள்ளவே கண்ணிலுள்ள வெள்ளை மேகந் தப்பாம லோடிவிடுந் தாக்கிப்பாரு, எள்ளளவுங் கண்ணோயை யணுகொட்டாது யிதற்குமப்பா வனுபானம் வசம்புமாமே. (உருகூ)

## நீர்ப்பாண்டு சோகை வீக்கம் குன்மம் இதற்குப் பூவரசு இலேகியம்.

வசம்பெறவே யின்னமொரு லேகியந்தான்கேளு மகத்தான புரசின்வேர் பலமுமொன்று, சுயம்பெறவே சாரணைவேர் பலந்தானென்று சொகுசான சிந்தில்வேர் பலந்தானென்று, நயம்பெறவே துத்திவேர் பலந்தானென்று நலமாக நாவல்வேர் பலந்தானென்று, மயம்பெறவே யிவையெல்லாந் தூளதாக்கி மைந்தனே யபினியுடன் மருந்துகேளே.()

கேளப்பா வால்மிளகு கடுக்காயோடு கெடியான கசகசா சாரப் பூவும், நாளப்பா சாதிக்காய் திப்பிலியுங்கூட்டு நலமாக விவையெல் லாம் விராகனைந்து, வாளப்பா பொடிபண்ணி வஸ்திரகாயங்கொண்டு வளமாகச் சட்டியுட வேட்டில்வைத்து, மூளப்பா விறகடா வில்வமாகும் முறையான குச்சியப்பா விலாமிச்சாமே. (௨௬௧)

ஆமப்பா கிளறியதை யிரக்கிக்கொண்டு அப்பனே வெல்லத்திற் கொள்ளும்போது, தாமப்பா நீர்ப்பாண்டு சோகை வீக்கந் தளர்வில் லாக் குன்மமடா சாடிப்போகும், ஓமப்பா நெய்யிலே கொள்ளும் போது உத்தமனே வண்டுகடி மேகந்தீரும், போமப்பா தேகத்துக் காந்தலெல்லாம் பொடியதுபோற் பறந்துவிடும் பூட்டுறேனே. (௨௬௨)

## பாண்டு சலக்கழிச்சல் பிரமேகம் இதற்கு அமுக்குரு இலேகியம்.

பூட்டுகிறே னின்னமொரு லேகியந்தான்கேளு புகழான வமுக்குரு பலந்தானென்று, நாட்டுவாய் காட்டவரைப் பலந்தானென்று நலமான தூதுவளைப் பலந்தானென்று, ஊட்டுவா யிவையெல்லா மொருநிறையாய்த் தூக்கி யுத்தமனே ரவியில்வைத் துலர்த்திக்கொண்டு, ஆட்டுவாய் வேலியுட பருத்திச் சாற்றால் அப்பனே மெழுகது போ லரைத்து வாங்கே. (௨௬௩)

அரைத்துவிட்டுச் சாதிக்காய் கிராம்புயேலம் அப்பனே வால் மிளகு கடுக்காய் சுக்கு, உரைத்திட்டேன் தான்றிக்காய் நெல்லிக் காயும் உத்தமனே குங்குமங் கோரோசனையுங்கூட்டு, நிறைத்திட்ட யிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு நிதமாகப் பொடிபண்ணிக் காயங் கொண்டு, அரைத்துவிடு மருந்தையெல்லா மறுபடியுமப்பா அன்பாக நெய்ப்படிதா னரைதான்வாரே. (௨௬௪)

வாரப்பா யிவைவெல்லா மொன்றாய்ச் சேர்த்து மைந்தனே வெண்கலப்பாத் திரத்திலிட்டு, நேரப்பா குச்சிகே ளமுக்குறுதா னிச்சயமா யிவையெல்லாங் கிளறிக்கொண்டு, காரப்பா மெழுகுபதம்கண்டு நீயும் கணக்காக மண்டலந்தான் கொண்டுபாரு, மாரப்பா வாறலைவத் திறக்கிக்கொண்டு மைந்தனே வெள்ளாட்டு வூனிற்கொள்ளே. (உசரு)

கொள்ளவே மண்டலந் திரும்பாண்டு கொடிதான சலக்கழிச்சல் பிரமேசங்கள், தள்ளவே தண்டுநோய் நீரடைப்பு தனியான சதை யடைப்பு பிரமேகங்கள், விள்ளவே கல்லடைப்பு நீர்கட்டாவும் வுறுதி பெறும் மேகமெல்லாம் அகன்றுபோகும், உள்ளத்தில் வலித்தேறு மேகமெல்லாம் ஓடிவிடுஞ் சொல்லுகிறே னுண்மைதானே. (உசசு)

சூலை சன்னி மண்டையிடி இதற்கு சந்தனாதி இலேகியம்.

உண்மையா யின்னமொரு லேகியந்தான்கேளு உத்தமனே சந்தனம் பலந்தானொன்று, தண்மையாம் கிரந்தியப்பா பலந்தானொன்று சதாவேலிக் கிழங்கிதப்பா பலந்தானொன்று, கண்மையாம் சுக்குடனே வேலிதானும் கருவான சதகுப்பை குன்றிதானும், வெண்மையாய் மேனியப்பா பலந்தானொன்று வெவ்வேறா யிவையெல்லா முலர்த்திக்கொள்ளே. (உசஎ)

உலர்த்தியபின் னிவையெல்லாந் தூளதாக்கி யுத்தமனே வஸ்திரத்திற் சுத்திபண்ணி, பிலத்துவாய் நல்மிளகு பலந்தானொன்று பேரான வால்மிளகு பலந்தானொன்று, உலர்த்துவா யமுரிவிட்டுச் சுத்திபண்ணி யுத்தமனே சாதிக்காய் பலந்தான்கூட்டு, தலத்திலே யுள்ளிருக்கும் நாகமப்பா தவறாதே கடுக்காய் தான்றிக்காய் கூட்டே. (உசஅ)

கூட்டுவா யரத்தையப்பா பலந்தானொன்று குறையாமற் கசகசா பலந்தானொன்று, நாட்டமாய்க் குங்குமப்பூ பலந்தானொன்று நலமான பத்திரிதான் பலமுமொன்று, பூட்டுவாய் சதகுப்பை பலமோவொன்று புகழான சீரகந்தான் பலமுமொன்று, மாட்டுவாய் திப்பிலிதான் பலமுமொன்று மகத்தான கஸ்தூரி பலந்தான்பாரே. (உசகூ)

பாரடா யிவையெல்லா மிளவறுப்பாய் வறுத்து பரிவாகப் பொடிசெய்து பாகமாக, சேரடா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டித் திறமாகத் தேன்விட்டு மத்தித்தேதான், நேரப்பா சட்டிக்கு வேடு சட்டி நிலையாக வேட்டின்மேல் மருந்தைவைத்து, கூரப்பா மேலுமொரு சட்டிமூடி குறையாமற் புகைகாணும் போதுபாரே. (உஎ0)

போதுமப்பா கிளறவொரு குச்சிகேளு புதுமையுள்ள நாரத்தன் கோலாற்கிண்டி, பாருமப்பா யிறக்கியது மெழுகுபோலாம் பதங்காணு மப்பொழுது நெய்தான்குத்து, காதுமப்பா கவிழ்தும்பைச்சார் கொஞ்சங் குத்து கையினாற் கிண்டாதே சசந்துபோகும், மோதுகட்டுஞ் சூலைக்கு தேனிற்கொள்ளு மூட்டிவிடுஞ் சொல்லுகிறேன் முனிந்துகாணே. (௨௭௧)

முனிந்திட்ட சன்னிக்குச் சூரணமுமாகு முதலான மண்டையிடி கெண்டைசூலை, அணிந்திட்ட பித்தத்தால் வந்தரோகம் அப்பனே பல்லசைவு வாய்நீரோட்டம், கனிந்திட்ட காமாலை நீரடைப்பு சபடற்றுச் சொல்லிவிட்டேன் கண்டுபாரு, இனிந்திட்ட பாண்டுக்கு மிதுவேயாகும் இவையெல்லா நிசஞ்சொன்னே னறிந்துபாரே. (௨௭௨)

அறியவே யின்னமொரு லேகியந்தான்கேளு அகத்தியுட பட்டையப்பா பலந்தானொன்று, பெரியதொரு வேங்கையது பலந்தானொன்று பேரான தூதுவளை பலந்தானொன்று, உரியதொரு நெல்லிக்காய் பலமுமொன்று உருவான கற்பூரம் பலந்தா னொன்று, கரியதொரு சங்கம்வேர் பலந்தானொன்று கனமாக விவையெல்லாம் பொடிதான்பண்ணே. (௨௭௩)

பொடிபண்ணி வடிகட்டி யெடுத்துக் கொண்டு புகழான சாதிக்காய் கிராம்பு யேலம், படிகமென்ற சங்குதான் பொடித்துக்கொண்டு பாங்கான சீரகமும் பலமுமொன்று, அடியிலே மேனியுட சாறுவிட்டு அப்பனே நொச்சியுட கோலாற்கிண்டி, வடிகொண்டு துணியிலே கொட்டிக்கொண்டு மைந்தனே யனுபானந் தேனிற்கொள்ளே. (௨௭௪)

கொள்ளவே வாய்வோடு நீர்க்காமாலை குறையான பித்தத்தாலெழுந்தமேகம், தள்ளவே விப்புருதி யரையாப்பெல்லாந் தங்காது தேகம்விட் டோடிப்போகும், விள்ளுறே னனுபானம் நெய்யுமாகும் விதமொன்றுங் குறையாதே நாள் பத்துக்குள்ளே, கள்ளதுபோல் நுரைக்கின்ற மேகமப்பா காணுதுதேகம்விட் டகன்றுபோமே. ()

வாய்வு நீர்க்காமாலை பித்தம் விப்புருதி
இதற்கு அகத்தி இலேகியம்.

அகன்றுபோ மின்னமோர் லேகியந்தான்கேளு அப்பனே குறிஞ்சாவேர் பலந்தானொன்று, விகன்றுநீ யிவையெல்லா மொன்றாய்த் தூக்கி விதமொன்றும் குறையாமற் பொடிதான்பண்ணி, மிகுந்திடவே சாதிக்காய் கிராம்பு யேலம் மேன்மையாய் வால்மிளகு கடுக்காய் சுக்கு, அகம்பெறவே யிவையெல்லாஞ் சமனாய்த்தூக்கி அப்பனே பொடிபண்ணி வைத்துக்கொள்ளே. (௨௭௬)

வைத்தபின்பு வேட்டின்மேல் மருந்தைவைத்து மைந்தனே சட்டியொன்று மேலேமூடி, பொற்றலையான் கோலாலே கிளறிக்கொண்டு புனிதமாய் நெய்யப்பா கொஞ்சங்குத்தி, தைத்திடவே யாறவிட்டெடுத்துக்கொண்டு சர்க்கரையிற் கொடுத்திடவே கேளுகேளு, சித்தித்த குன்மமுடன் வாய்நீரோட்டம் சிதறிப்போந் தேனிலே கொடுத்துப்பாரே. (உஎஎ)

கிராணி பெருநோய் வண்டுகேடி இதற்கு இலேகியம்.

பாரப்பா கற்றூழம்வேர் பலந்தானென்று பரிவான நொச்சிவேர் பலந்தானென்று, நேரப்பா கழற்சிவேர் பலந்தானென்று நேரான குன்றிவேர் பலந்தானென்று, காரப்பா தூதுளைவேர் பலந்தானென்று கருகாமல் வறுத்துமே எடுத்துக்கொண்டு, ஆரப்பா மிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு அப்பனே பொடிபண்ணி வஸ்திர காயங்கொள்ளே. (உஎஅ)

கொண்டபின்பு சிரகந்தான் பலமுமொன்று குருவான சாதிக்காய் விராகனெடை ஐந்து, விண்டேனுன் வால்மிளகு பலந்தானென்று விதமான கருப்படா விராகனஞ்சு, கண்டுபா ரோமம் சதகுப்பை பலந்தான் கடிதான கடுக்காய் விளாவோடு பலந்தான், தண்டான தோடைப்பூ பலமுமொன்று சத்தியுள்ள நல்மிளகு பலந்தான்கூட்டே. (உஎகூ)

கூட்டியபின் னிவையெல்லா மிளவறுப்பாய்த் தாக்கி கோரோசனை விராகனெடை அஞ்சுகூட்டி, ஆட்டுவாய் பொடிபண்ணி வஸ்திரகாயங்கொண்டு அப்படியே பொடியெல்லா மொன்றாய்ச் சேர்த்து, நாட்டமாய்ச் சட்டியிலே வேடுகட்டி நலமான வேட்டின்மேல் மருந்தைவைத்து, நாட்டுவா யமுக்குறு கோலாற்கிண்டு நலமாக வெள்ளெண்ணெய் கரண்டிகுத்தே. (உஅ0)

குத்தியபின் மெழுகுபோ லாகும்பாரு குறைவில்லை லேகியத்தின் குணத்தைக்கேளு, முத்தியுண்டாஞ் சூலையொடு நாலும்போகு முசியாத நெய்யிலே கொள்ளும்போது, சித்திக்கும் வியாதிகளைத் தள்ளிப்போடு தேனிலே நாற்பதுநாள் கொள்ளும்போது, பத்தியத்திற் பிசகொன்றுஞ் செய்யவேண்டாம் பராபரமே கெதியென்று பரிந்துகேளே. (உஅக)

கேளப்பா பின்னமொரு லேகியந்தான்கேளு கெடியான சிறுதும்பை பலந்தானென்று, நாளப்பா கவிழ்தும்பை பலந்தானென்று நலமான கோதும்பை பலந்தானென்று, வாளப்பா கடுகின்வேர் பலந்தானென்று வல்லாரைப் பூடப்பா பலந்தானென்று, தாளப்பா சிற்றரத்தை திப்பிலியுங்கூட்டு தண்மையாய்ப் பொடிபண்ணிச் சந்தனம்போலாக்கே. (உஅஉ)

ஆக்கியபின் சட்டிக்கு வேடுகட்டி அப்பனே யோட்டின்மேல் சட்டிமூடி, வாக்கிநீ தேன்விட்டு துள்சிக்கோலாற்கிண்டி மைந்தனே மெழுகுபத மானபோது, தூக்கியே மண்டலந்தான் கொள்ளும்போது துடியான வாதமுதல் அகன்றுபோகும், பாக்கியே மேகமென்ப திரு பதும்போம் பல்லசைவு வண்டுகெடி பறந்துபோமே. (உஅங)

பறந்துவிடும் வெல்லத்திற் கொள்ளும்போது பாசமறக் காமாலை பாண்டுபோகும், துறந்துவிடு மிருமலென்ற கபமும்போகும் துடியான புழுவெட்டு சிரங்குதீரும், மறந்துவிட்டே னென்று சொல்லி யெண்ண வேண்டாம் மைந்தனே லேகியத்தின் சுருக்குப்பாரு, இறந்துவிட்டே னென்றெண்ணி காணவேண்டாம் என்ஞானங் கண்டறிந்தோ ரிவர்தான்பாரே. (உஅச)

இறக்காம லென்னுடைய லேகியந்தான் கேளு யீசானிய மூலையிலே யிருக்கும்பூடு, மறையாதே வல்லாரை பலந்தானென்று மைந்தனே கையானை பலந்தானென்று, திறக்காதே பொன்னுங்காணி பலந்தானென்று செப்புகிறேன் மேனியப்பா பலந்தானென்று, அறையான செருப்படிதான் பலந்தானென்று அப்பனே கடுக்காய்தான் பலந்தானென்றே. (உஅரு)

ஒன்றாக யிவையெல்லாங் காடிநீரில் ஊறவைத் தேழுதர முலர்த்திக்கொண்டு, ஒன்றாகப் பொடிபண்ணி வஸ்திரகாயங் கொண்டு நல்மிளகு வால்மிளகு திப்பிலி யரத்தையோடு, ஒன்றாக வமுரியிலே யூறவைத்து உத்தமனே மூன்றுதர முலர்த்திக் கொண்டு, விண்டேனென் மேற்பொங்க வூதித்தாழி விருப்பமாய்ப் பொடிபண்ணி யெடுத்துக் கொள்ளே. (உஅசு)

கொள்ளவே நெய்யப்பா படியரைதான் கூட்டிக் குமுரவே யோட்டின்மேல் சட்டிவைத்து, மெள்ளவே மருந்தெல்லாஞ் சட்டிக்குள் வைத்து மேலுமொரு சட்டியப்பா மூடிக்கொண்டு, தள்ளுவாய் விறகப்பா அரசுமாகுந் தணக்கின்ற குச்சியடா மாதளையுமாகும், விள்ளப்பா மெழுகதுபோ லாகும்போது விவரமாய்த் தேன்கரண்டி யதிலே குத்தே. (உஅஎ)

மெள்ளவே யாறியபின் புதுப்பானையிலே வைத்து வேடுகட்டிப் பதனமதாய் வைத்துக்கொள்ளு, கொள்ளவே தேகத்தில் வியாதி யெல்லாங் குடிபோறே னென்றுசொல்லிக் கூட்டோடேபோம், தள்ளாதே யிம்மருந்து தண்மைமெத்த தாரணியி லிதன்பெருமை யார் தான்காண்பார், உள்ளபடி சொல்லிவிட்டேன் சித்தர்க்கப்பா உத்தமனே கற்பமதாய் வருஷங்கொள்ளே. (உஅஅ)

## சிவம்-உரு-உகூ௯.

வருஷமொன்று மாதமைந்து கொள்ளும்போது மகத்தான நரை யெல்லாங் கருப்பு காணும், உருவான மந்திரந்தான் சிவமுமுண்டு ஓம் ஆம் ஹ்ரீம் இறீம் சிவ்வென்றோது, உருவப்பா யிருநூற்றுத் தொண் ணூற்றெட்டுக் குருக்காணும் வுருக்காணு மொளியுங்காணுங், தெருக் காணும் பயமில்லை யஞ்சவேண்டாம் செப்புகிறேன் சித்துக்குக் கற்ப மாமே. (உஅகூ)

## பத்தியம்.

ஆகாது பத்தியந்தான் சொல்லக்கேளு அப்பனே புளிபுகையிலை யுப்புந்தள்ளு, ஆகாது கடுகுள்ளி யெண்ணெய் சுன்னம் அப்பனே பொ ய்யான வுறக்கமாகா, ஆகாது காற்றுடனே வெயிலுமாகா அப்படிக்கே மூலிகைதான் சற்றுமாகா, ஆகாது யிவை யெல்லாந் தள்ளிக் கொள்ளு அவரவர்கள் சித்தனென்று அறியலாமே. (உகூ0)

அறியவே யெப்படிதா னென்றுகேளு அப்பனே பனிரண்டு கற்பமாச்சு, தெரியவே தசவாய்வு பத்துபேருஞ் சிக்குகின்ற கற்பகத் திற் கால்தானப்பா, முறியவே பனிரண்டு சமயத்தோர்க்கு முதற் கற்ப மிதுவாகு முனிந்துபாரு, உரியதோர் கல்விலே நீரைவார்த்தால் உரைக்குமோ வதுபோலே யெண்ணுதென்னே. (உகூக)

எண்ணியப்பா ஞாலத்தில் கள்ளருண்டு இவர்களுக்கிந்நூலை யீய வேண்டாம், கண்ணிலே காணாது அவர்கட்குஞ் சொன்னேன் கபடத் தைதள்ளிவிடு காயசித்தி, மண்ணிலே யிருந்துகொண்டு அனேககாலம் வாழ்ந்திருப்பார் ஞானிமார் வகுத்துச் சொன்னேன், பொன்னருக் தேகமெல்லாம் பொருந்திப்பார்க்கப் பூட்டுவாய் வெகுசுறுக்குப் பூட்டுவாயே. (உகூஉ)

## கரிகாமன் குளிகை.

பூட்டுகிறே னென்னுடைய குளிகைகேளு புகழான நன்னரி காட் டுத்தும்பை, நாட்டுகிறேன் பனியொடுவெள் ளுள்ளிகாயம் நலமாக விதையெல்லாம் கொண்டுவந்து, கூட்டியே யரைத்ததனை மேலே வை த்துக் குமுறவே கொஞ்சமது வுண்ணும்போது, ஊட்டியே மூலைப்பா வில் விட்டரைத்துக் கொண்டு உத்தமனே மிளகுபோ லுருட்டிக் கொள்ளே. (உகூ௩)

உருட்டியே நிழலிலே யுலர்ந்தபின்பு உத்தமனே கருஞ்சீரக மோமங்கூட்டி, வரட்டியே நீர்படிதான் விட்டுக்காய்ச்சி மைந்தனே குளிகை யொன்றுவகையாய்க்கொள்ள, திரட்டான க்ஷயமுதல் ரோகம்போகும் திரட்டப்பா நோய்களெல்லா மகன்றுபோகும், முரட்டான வாத முடன் வாய்வுபோகு முத்தமனே கரிகாமன் குளிகையாமே. (உ௱௪)

## குளிர் காய்ச்சலுக்குக் குளிகை.

குளிகையிலே யின்னமொரு முறையைக்கேளு குறிஞ்சாவேர் சாரணைவேர் அமுக்குருவும், தெளியவே கவிழ்தும்பை வெள்ளுள்ளி காயந் திப்பிலியுஞ் சீரகமுந் தானுங்கூட்டி, நளியவே யிருசாம மரைத்துக்கொண்டு நயமாகப் பயறுபோ லுருட்டிக்கொள்ளு, ஒளிவான வெய்யிலிலே யுலர்த்தி வைத்து வுத்தமனே பதனமாய் வைத்துக் கொள்ளே. (உ௱௫)

கொள்ளவே வேம்பினுடபட்டை பலமதொன்று கூரான சுக்குடனே திப்பிலியுங் கூட்டி, நல்லதோ ரரத்தையுடன் கியாழமிட்டு நலமாகக் குளிகையொன்று கொடுக்கும்போது, துள்ளுகின்ற குளிர்காய்ச்சல் பலகடுப்பு சுரத்திலே சீதசுரமோடிப்போகும், விள்ளுவேன் வாலையுட தியானமப்பா விதங்குறைந்து போகாமல் துதித்துக்கொள்ளே.()

துதிக்கவே யிருமல்சுர நாவரட்சி துடியான கணமுமற்று விடுதியாகும், கதிக்கவே யின்னமொரு குளிகை சொல்வேன் கருவான தூதுவளை பேய்ப்புடல் வேளைவேரும், மதிக்கிறேன் திப்பிலியு மோமஞ்சுக்கு வாகான வால்மிளகு காயங்கூட்டி, கதிக்கவே யிருசாமசுரம் நாவரட்சி கணைசுரமு மற்றுவிடுங் கருதிப்பாரே. (உ௱௭)

கருவான யின்னமொரு குளிகைகேளு கருவாழைவேர் நொச்சிவேர் விங்கன் வேரும், தருவாக நல்மிளகு வெள்ளுள்ளி சுக்கு தனியான காயமோ டோமங்கூட்டி, மருவாக நீர்முள்ளிச்சா றிரண்டுசாமம் மகிழ்வாக வரைத்துருட்டி மஞ்சாடிபோல, நருவாசச் சிலேட்டுமத்தால் வந்தசுரமப்பா நாளெட்டு நாட்குள்ளே சாடிப்போமே. (உ௱௮)

சாடிவிடுங் கபத்தையுந்தா னிறக்கிக்கொண்டு தயவாக நோக்கத்தைச் சிரமதாகும், ஓடிவிடுந் துளசியுட சாற்றிற்கொள்ள உண்டான வாதசுர முருண்டுபோகும், நாடதனி லில்லையாதே சொன்னேன் சொன்னேன் நம்மைப்போ லொருசித்தர் நாட்டுவாரோ, காடியிலே கொடுத்துவிடப் பித்தம்போகுங் கைகண்ட முறைசொன்னேன் கண்டு கொள்ளே. (உ௱௯)

## விநாயகர் குளிகை.

சண்டுபா ரின்னமொரு குளிகைகேளு கருவான வூமத்தன் வேருங்கூட, நன்றான தும்பைவேர் துளசிவேரும் நலமான பெருஞ் சங்கு வுள்ளிப்பூவும், விண்டேனு னரத்தைசத குப்பையோம்ம் மேலான வசம்புடனே காயங்கூட்டி, நன்றாக வித்தனையு நிறையொன்றாக நாட்டுவாய் தூள்மேனிச் சாற்றாலாட்டே. (௬00)

ஆட்டுவா யிருசாம மரைத்துவாங்கி அப்பனே குன்றிபோ லுருட்டிக்கொண்டு, மூட்டுவாய் நிழலிலே யுலர்த்திப்பின்பு முறையாகப் பதனமாய் வைத்துக்கொண்டு, கூட்டுவாய் தேனிலே கொண்டாயானல் குடிகெட்டுப் போகுமடா சன்னிதானும், மூட்டுவா யிஞ்சியுடச் சாற்றிற்கொள்ள முகசன்னி யற்றுவிடு முக்கியந்தானே. (௬0க)

## சன்னி காந்தலுக்குக் குளிகை.

முக்கியமா மதமீறுஞ் சாற்றிற்கொள்ள முறிந்துவிடும் வாதசன்னி முருக்கியோடும், பக்குவமாய் வாந்திசுரம் விக்கல்சன்னி வேம்பு பட்டையுட கியாழத்திற் பறந்துபோகும், மைக்குழலாள் நந்தியுட பூசைவேணும் வாந்திசுரம் நீர்ப்பாண்டு வரண்ட பித்தம், முக்கண்ணர் திருவுளத்தா லிக்குளிகைதாமும் முதன்மையாய் விநாயகன் குளிகையாமே. (௬0உ)

குளிகையிலே யின்னமொரு முறையைக்சேளு கொடிவேலி வேருடனே குப்பைமேனி, நளினமுள்ள குடரிவேர் அமுக்குராவும் நலமான செங்கத்தாரி பட்டையோடு, பளியாகும் வெள்ளிக்கி குடரியப்பா பயம்வேண்டாம் பருத்தியுட வேருங்கூட்டு, விளியள்தாள் பாவிலே கொடுத்தாயாகில் விதங்கெட்ட சுகசன்னி மிரண்டுபோமே. (௬0௩)

## சுப்பிரமணியர் குளிகை.

மிரண்டுவிடு மிருசாம மரைத்துக்கொண்டு விதமாகத் திப்பிலிபோல் குளிகைபண்ணி, மிரண்டுவிடும் நிழலிலே யுலர்ந்தபின்பு விகாரமென்ற சன்னிக்கு நொச்சிச்சாறு, மிரண்டுவிடுங் காந்தலுக்குப் புன்னைதான் கூட்டு மேலான சன்னியடா மெல்லாமோடும், அரண்டுவிடும் புற்றுத்தேனிற் கூட்டு அந்தந்த சன்னியெல்லாம் மாய்ந்துபோமே. ()

அமர்ந்துவிடு மின்னமொரு குளிகைகேளு அறுகம்வேர் தூதுளை வேர் அமுக்குருவும், சமர்ந்துவிடுந் தழுதாழை வேருங்கூடச் சரிசம ளுப்த் தானிறுத்து வைத்துக்கொண்டு, மமர்ந்திடவே பாஷாணஞ் சுத்திபண்ணி மைந்தனே விராகனெடை தூக்கிவாங்கி, சமர்ந்திடவே வேளையுடச் சாற்றலாட்டித் தப்பாதே குன்றிமட்டுங் குளிகை யாக்கே. (கூ0௫)

ஆக்கியபின் குளிகைக்குப் பேரைக்கேளு அப்பனே யிதுரண் டுஞ் சுப்பிரமணியர், பாக்கியமாய்க் கபமடைத்து யிழுக்கும்போது பணவிடைதான் றேனிலே கொள்ளும்போது, நாக்கிலே சுழன்றுநிற் குங் கபத்தையெல்லாம் நாடவே யொட்டாது நல்கிப்பாரு, பாக்கியே பதினெட்டு சன்னிக்குந்தான் பரிவான வனுபானம் பார்த்துச் செய்யே. (கூ0௬)

## சுகசன்னிக்குக் குளிகை.

செய்குவாய் பத்தியந்தான் புகையிலையுப்பு திறமான புளியுந்தான் கடுகுமாகா, செய்குவா யிருள்ளிக் காசுமாகாச் செப்புகிறேன் மாங்கி ஷங்க ளொன்றுமாகா, செய்குவா யவரையுடன் றுவரையாகா சீரகமு மாகாது தெளிந்துபாரு, செய்குவா யிதுபோலே யிருந்துகொண்டால் தெறித்துவிடும் வியாதியெல்லாந் திறந்திட்டேனே. (கூ0௭)

திறமாக யின்னமொரு குளிகைகேளு செப்புகிறேன் செம் முள்ளி வேரினோடு, இறமான ரசமப்பா பற்பமாக்கி யிப்படியே காசி டைதா னதிலேகூட்டி, உறமான காவாழைவேர் குன்றிவேரும் உத் தமனே யொருநிறையாய்த் தூக்கிவாங்கி, மறக்காமற் றுமரையின் சாற்றலாட்டி மைந்தனே திப்பிலிபோற் குளிகைமாட்டே. (கூ0அ)

## இந்திராணிக் குளிகை.

மாடதுபோல் வாதமங்கே புரண்டுதானல் வாய்வாலே வந்தமொரு மேகமென்று, நாடுவாய் குளிகையொன்று யெடுத்துக்கொண்டு நாட் டுவா யிஞ்சியுடச் சாற்றுற்கூட்டி, தேடிவரும் வாதசன்னி மேகசன்னி திடங்காணு தோடிவிடுஞ் செப்பினேனன், ஆடுசுரம் பாடுசுரம் சூலைக் கட்டு அப்பனே யனுபானந் தேனுமாமே. (கூ0௯)

ஆமப்பா யின்னமொரு குளிகைகேளு அத்திஇத்தி நொச்சிவேர் ஆதண்டைவேலி, தாமப்பா சங்கன்வேர் துளசிதும்பை சரியாக நிறை யிடையாய்த் தூக்கிக்கொண்டு, ஊமப்பா வெண்காரஞ் சீனக்காரம் உத்தமனே சுத்தியொன்று பாலிற்செய்து, நாமப்பா யிருசாமமரை த்துவாங்கி நல்மிளகு போலவே குளிகைபண்ணே. (கூ௧0)

## விநாயகர் குளிகை.

சண்டுபா ரின்னமொரு குளிகைகேளு கருவான வூமத்தன் வேருங்கூட, நன்றான தும்பைவேர் துளசிவேரும் நலமான பெருஞ் சங்கு வுள்ளிப்பூவும், விண்டேனு னரத்தைசத குப்பையோம்ம் மே லான வசம்புடனே காயங்கூட்டி, நன்றாக வித்தனையு நிறையொன்றாக நாட்டுவாய் தூள்மேனிச் சாற்றாலாட்டே. (கூ00)

ஆட்டுவா யிருசாம மரைத்துவாங்கி அப்பனே குன்றிபோ லுரு ட்டிக்கொண்டு, மூட்டுவாய் நிழலிலே யுலர்த்திப்பின்பு முறையாகப் பதனமாய் வைத்துக்கொண்டு, கூட்டுவாய் தேனிலே கொண்டாயா னால் குடிகெட்டுப் போகுமடா சன்னிதானும், மூட்டுவா யிஞ்சியுடச் சாற்றிற்கொள்ள முகசன்னி யற்றுவிடு முக்கியந்தானே. (கூ0க)

## சன்னி காந்தலுக்குக் குளிகை.

முக்கியமா மதமீறுஞ் சாற்றிற்கொள்ள முறிந்துவிடும் வாத சன்னி முருக்கியோடும், பக்குவமாய் வாந்திசுரம் விக்கல்சன்னி வே ம்பு பட்டையுட கியாழத்திற் பறந்துபோகும், மைக்குழலாள் நந்தி யுட பூசைவேணும் வாந்திசுரம் நீர்ப்பாண்டு வரண்ட பித்தம், முக் கண்ணர் திருவுளத்தா லிக்குளிகைதாமும் முதன்மையாய் விநாய கன் குளிகையாமே. (கூ0உ)

குளிகையிலே யின்னமொரு முறையைக்கேளு கொடிவேலி வே ருடனே குப்பைமேனி, நளினமுள்ள குயரிவேர் அமுக்குருவும் நல மான செங்கத்தாரி பட்டையோடு, பளியாகும் வெள்ளிக்கி குமரி யப்பா பயம்வேண்டாம் பருத்தியுட வேருங்கூட்டு, விளியள்தாள் பாவிலே கொடுத்தாயாகில் விதங்கெட்ட சுகசன்னி மிரண்டு போமே. (கூ0கூ)

## சுப்பிரமணியர் குளிகை.

மிரண்டுவிடு மிருசாம மரைத்துக்கொண்டு விதமாகத் திப்பிலி போல் குளிகைபண்ணி, மிரண்டுவிடும் நிழலிலே யுலர்ந்தபின்பு விகார மென்ற சன்னிக்கு நொச்சிச்சாறு, மிரண்டுவிடுங் காந்தலுக்குப் புன்னை தான் கூட்டு மேலான சன்னியடா யெல்லாமோடும், அரண்டுவிடும் புற்றுத்தேனிற் கூட்டு அந்தந்த சன்னியெல்லாம் மாய்ந்துபோமே. ()

அமர்ந்துவிடு மின்னமொரு குளிகைகேளு அறுகம்வேர் தூதுளை வேர் அமுக்குறவும், சமர்ந்துவிடுந் தழுதாழை வேருங்கூடச் சரிசம னுய்த் தானிறுத்து வைத்துக்கொண்டு, மமர்ந்திடவே பாஷாணஞ் சுத்திபண்ணி மைந்தனே விராகனெடை தூக்கிவாங்கி, சமர்ந்திடவே வேளையுடச் சாற்றுலாட்டித் தப்பாதே குன்றிமட்டுங் குளிகை யாக்கே. (கூ0ரு)

ஆக்கியபின் குளிகைக்குப் பேரைக்கேளு அப்பனே யிதுரண் டுஞ் சுப்பிரமணியர், பாக்கியமாய்க் கபமடைத்து யிழுக்கும்போது பணவிடைதான் றேனிலே கொள்ளும்போது, நாக்கிலே சுழன்றுநிற் குங் கபத்தையெல்லாம் நாடவே யொட்டாது நல்கிப்பாரு, பாக்கியே பதினெட்டு சன்னிக்குந்தான் பரிவான வனுபானம் பார்த்துச் செய்யே. (கூ0சா)

சுகசன்னிக்குக் குளிகை.

செய்குவாய் பத்தியந்தான் புகையிலையுப்பு திறமான புளியுந்தான் கடுகுமாகா, செய்குவா யிருள்ளிக் காசுமாகாச் செப்புகிறேன் மாங்கி ஷங்க ளொன்றுமாகா, செய்குவா யவரையுடன் றுவரையாகா சீரகமு மாகாது தெளிந்துபாரு, செய்குவா யிதுபோலே யிருந்துகொண்டால் தெறித்துவிடும் வியாதியெல்லாந் திறந்திட்டேனே. (கூ0எ)

திறமாக யின்னமொரு குளிகைகேளு செப்புகிறேன் செம் முள்ளி வேரினேடு, இறமான ரசமப்பா பற்பமாக்கி யிப்படியே காசி டைதா னதிலேகூட்டி, உறமான காவாழைவேர் குன்றிவேரும் உத் தமனே யொருநிறையாய்த் தூக்கிவாங்கி, மறக்காமற் றுமரையின் சாற்றுலாட்டி மைந்தனே திப்பிலிபோற் குளிகைமாட்டே. (கூ0அ)

இந்திராணிக் குளிகை.

மாடதுபோல் வாதமங்கே புரண்டுதானல் வாய்வாலே வந்ததொரு மேகமென்று, நாடுவாய் குளிகையொன்று யெடுத்துக்கொண்டு நாட் டுவா யிஞ்சியுடச் சாற்றுற்கூட்டி, தேடிவரும் வாதசன்னி மேகசன்னி திடங்காணு தோடிவிடுஞ் செப்பினேனுன், ஆடுசுரம் பாடுசுரம் சூலைக் கட்டு அப்பனே யனுபானந் தேனுமாமே. (கூ0கூ)

ஆமப்பா யின்னமொரு குளிகைகேளு அத்திஇத்தி நொச்சிவேர் ஆதண்டைவேலி, தாமப்பா சங்கன்வேர் துளசிதும்பை சரியாக நிறை யிடையாய்த் தூக்கிக்கொண்டு, ஊமப்பா வெண்காரஞ் சீனக்காரம் உத்தமனே சுத்தியொன்று பாலிற்செய்து, நாமப்பா யிருசாமமரை த்துவாங்கி நல்மிளகு போலவே குளிகைபண்ணே. (கூச0)

பண்ணியே நிழலிலே யுலர்த்திப்பின்பு பரிவான குளிகையுட பேருகேளு, நண்ணவே வீரபத்திர னென்பதெல்லாம் நலமான குளிகையடா பேருமாகும், எண்ணவே யனுபானஞ் சொல்லக்கேளு யிஞ்சிசுக்கு தேனப்பா யிதமாய்ப்பாரு, உண்ணவே நாலுநா ளிரண்டுநேரமோடிவிடும் வியாதிகளை யோட்டும்பாரே. (௩௧௧)

## வைரவன் குளிகை.

ஓடுமப்பா மும்மாறல் சுரமுந்தானு முத்தமனே கபயிரும லோடிப்போகும், நாட்டுவாய் நீர்ப்பாண்டு கெண்டையெல்லாம் நாடாது யென்னுடைய குளிகைகண்டால், கூட்டுவா யின்னமொரு குளிகைமார்க்கங் குப்பியென்னு நுண்ணறிவா லறிந்துபாரு, வாட்டுவாய் குறையென்ன வறிவுள்ளோரே வயிரவன்ருன் குளிகையுட மகிமைகேளே.()

கேளப்பா நாயுருவி மாவிலிங்கு கெடியான ஆரொட்டி வேலிவேரும், தாளப்பா நொச்சிச்சா றிலிங்கஞ் சரியெடையாய்த் தூக்கியே தானுங்கேளு, நாளப்பா யிவையெல்லாம் நாய்நீர்விட்டு நலமாக விருசாம மரைத்துக்கொள்ளு, மூளப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு முக்கியமாய்ப் பயரதுபோ லுருட்டிக்கொள்ளே. (௩௧௩)

உருட்டியபின் குளிகையப்பா கொஞ்சமாக வுத்தமனே யிளவெய்யி லுலர்த்திக்கொண்டு, இருட்டான செப்பிலே வைத்துக்கொண்டு இஞ்சியுட சார்முறித்துக் குளிகையொன்று, உருட்டான சாக்குளிகையப்பா ஒன்ருறு நாழிகையில் விட்டுப்போகும், திருட்டான குடல்வாய்வு வாதசூலை செப்பாம லோடிவிடுந் திறஞ்சொன்னேனே.()

## குடல்வாய்வு உடல்குத்து காமாலை வாதசூலை இதற்கு காளிகாதேவி குளிகை.

சொல்லுகிறே னின்னமொரு குளிகைகேளு துடியான நீலிவேர் சாரணையின்வேரும், வெல்லுவார் கிழ்க்காயி னெல்லிவேரும் வெள்ளறுகு வேருடனே துளசிகூட்டி, நல்லதோர் பாலையுடச் சாற்றிலேதான் நலமாக வரைத்தபின்பு மருந்துகேளு, எல்லையற மாறவப்பா வரைத்துக்கொண்டு யிருசாம மாகவிட் டெடுத்துக்கொள்ளே. (௩௧௫)

கொண்டபின்பு சாதிக்காய் கிராம்புயேலம் கூரான வால்மிளகு அரத்தைசுக்கு, விண்டேனுன் காயமுடன் திப்பிலியுங்கூட்டி விதமாக முன்மருந்தை யதிலேசேர்த்து, குன்ருது யிருவேளை கொண்டாயானல் குடியோடே வியாதியெல்லா மகன்றுபோகும், நன்ருக விருசாமமரைத்துவாங்கி நலமாகக் காய்போலே யுருட்டிக்கொள்ளே. (௩௧௬)

கொண்டபின்பு காடிபிலே கொடுத்தாயாகில் குடல்வாய்வு வுடற் குத்து குருக்குநோவு, பண்டான காமாலை வாதசூலை பரிவான பித்த சன்னி பறந்துபோகும், எண்டிசைக்குங் கண்டத்து மாலையப்பா யிதமான மகோதரமுங் கெண்டைபோகும், வண்டாலே லேகியத்தி லதுவுஞ் சொன்னேன் மைந்தனே யிதுவறிந்து வகையாய்ப்பண்ணே. ()

உள்மூலம் புறமூலம் பித்தசுரம் கனவாய்வு இதற்கு இந்திராணிக் குளிகை.

பண்ணவே குளிகையப்பா பேரேதென்றால் பரிவான காளியுட பேருமாகும், எண்ணுவா யின்னமொரு குளிகைகேளு யிதமாகப்புரசன்வேர் மிளகுகள்ளிவேரும், நண்ணுவாய் கரித்தூவை கழற்சிவேரும் நலமாகக் கடுகுடனே நவாச்சாரங்கூட்டி, தண்மையாய்ப் பெருங்காயம் விராகன்ரண்டு சஞ்சீவி சூரணமாய்ச் சேர்த்திடாயே. (கூகஅ)

ஆட்டியபின் கருங்காலி நீரைவார்த்து அப்பனே மறுபடிதா னரைத்துக்கொள்ளு, கூட்டியே மெழுகுபோ லானபின்பு குறுக்கிடவே வரையைப்போல் குளிகைபண்ணு, ஊட்டியே பேரப்பா யேதேயாகில் உத்தமனே யிந்திரன்றன் வாக்குப்பேரு, மூட்டுவாய் தேனிலே கொள்ளும்போது வுள்மூலம் புறமூல மோடிப்போமே. (கூகக)

போகுமப்பா துளசியுட சாற்றிற்கொள்ள புகழான பித்தசுர மோடிப்போகும், ஆகுமடா குன்மமென்ற வாய்வுக்கெல்லாம் அவரையிலை கல்லுப்பு அனுபானமாகும், ஆகுமப்பா பற்குத்துநீரடைப்புபறக்கும் அகடான தூலமெல்லாம் பாருபாரு, தாகுமப்பா வனுபானஞ் சர்க்கரையுமாகுந் தப்பாதே சொல்லிவிட்டேன் சார்ந்துபாரே. (கூஉ0)

அக்கினிக் குளிகை.

பாரப்பா யின்னமொரு குளிகைகேளு பாவட்டை முசுமுசுக்கை நரிபாகல்வேரும், நேரப்பா சிறுகிரை யவுரியோடு நிலையாக வாமணக்கின் வேருங்கூட்டு, காரப்பா நல்மிளகு அரத்தைசுக்கு கனமான பசுவினீர் விட்டுஆட்டி, சேரப்பா குளிகையது குன்றிதானுஞ் சேர்த்திடுவரய் ரவிதனிலே யுலர்த்திக்கொள்ளே. (கூஉக)

கொள்ளவே யனுபானஞ் சொல்லக்கேளு கூரான தேனிலே கொடுத்தாயானல், தெள்ளுவாய் மேகமென்ற சுரமும்போகுந் தெளிவான முகசன்னி செப்பக்கேளு, துள்ளுவாய் வாய்நீருஞ் சலக்கழிச்சல் சுக்கான கியாழத்தால் சுருண்டுவோடும், உள்ளபடி சொல்லிவிட்டேன் குளிகையின்பேர் உத்தமனே யக்கினியென் றுரைக்கலாமே. (கூஉஉ)

### நமன் குளிகை.

உரைப்பாக யின்னமொரு குளிகைசேளு உத்தமனே சிறுசின்னி கொழிஞ்சிவேரும், மறைப்பான சிணுங்கியின்வேர் நிலாவாரையின் வேரும் வால்மிளகு கடுக்கா யரத்தைசுங்கு, சிறப்பாகப் பெருங்காயம் வெள்ளுள்ளியோடுந் திறமான நவாச்சாரங் கொஞ்சங்கூட்டு, அரைய ப்பா காராட்டுக் கோமயத்தில் அஞ்சுநா ழிகைவரைக்கு மாட்டி வாங்கே. (௩௨௩)

### கபம் இருமல் வாதசன்னி பித்தப்பாண்டு இதற்குக் குளிகை.

வாங்கியபின் அவரையைப்போற் குளிகைபண்ணி மைந்தனே ரவி யில்வைத் துலர்த்திக்கொண்டு, பாங்கான கியாழமப்பா துளசி யாகும் பரிவாக பேய்ப்புடலு மாகும்பாரு, தீங்கில்லா மேகமென்ற இருபதுக்கும் திறமான விலுக்கிநீர் தீர்ந்துபோகும், ஓங்குவாய் வியாதி யென்ற பாண்டுசோகை யுத்தமனே நீரடைப்பு வோடிப்போமே. ()

ஓடிப்போம் பித்தத்தா லெடுத்தகூறு உத்தமனே யுட்சுரங்கள் குளிர்ந்தகாய்ச்சல், நாடாது யென்னுடைய குளிகைகண்டால் நமனு டைய குளிகையென்ற பேரேயாகும், பாடான பாடில்லை யின்னூ க்கு பரிவாகச் சொல்லுகிறேன் பாருபாரு, தேடாமற் றேடியே யலைய வேண்டாம் சிவசூட்ச மிதிலீடு செப்புறேனே. (௩௨௫)

செப்புகிறே னின்னமொரு குளிகைசேளு திறமாகக் கொழிஞ்சி வேர் குப்பைமேனி, ஒப்புகிறேன் கருங்குன்றி நன்னாரிவேரு முற வான சவர்க்கார மிவைகளைந்தும், அப்புகிறே னிவையெல்லா மொன் றுய்க்கூட்டி அப்பனே வடிகொண்டு சூரணித்துத், தப்பாதே கருங் காலி னீரைவார்த்து சாமமொன்று தானரைத்து வைத்துக்கொள்ளே. ()

### வாய் குளிர்காய்ச்சல் நீரடைப்பு சதையடைப்பு இதற்குக் குளிகை.

வைத்தபின்பு சாதிக்காய் விராகன்ரண்டு வாகான கடுக்காய்தான் விராகனொன்று, முத்தான படிகமணி விராகனொன்று முதலான வசம் புதுவும் விராகனஞ்சு, சித்தான வெள்ளுள்ளி விராகன்ரண்டு திறமான காயமப்பர் விராகன்ரண்டு, பொற்றலையின் சாற்றாலே யாட்டிவாங்கி பூட்டுவாய் முன்மருந்தில் பூட்டுவாயே. (௩௨௭)

பூட்டுவா யரத்தையொடு திப்பிலியுங்கூட்டி புகழாக மெழுகது போலரைத்துவாங்கி, கூட்டுவாய் குளிகையப்பா குன்றிமட்டும் குணமாக மண்டலந்தான் கொள்ளும்போது, நாட்டுவா யனுபானந் தேனுமாகும் நல்முருங்கைப் பட்டையுட் சாறுமாகும், மூட்டுவாய் கியாழமடா சுக்குமாகு முறையான குளிகையின்பேர் நிருதிதானே. (கூ௨அ)

தானன தேனிலே கொள்ளும்போது க்ஷயமான சன்னியப்பா முறிந்துபோகும், மானன முருங்கையிலே கொள்ளும்போது வாதத்தா லெடுத்தசன்னி மாண்டுபோகும், ஊனன சுக்கிலே கொள்ளும்போது வுத்தமனே பித்தசன்னி யோடிப்போகும், நானன நாங்கள் செய்த முறைகட்கெல்லாம் நாட்டிலுள்ள வுத்தமர்கள் நன்றாய்க் கேளே. (கூ௨௯)

கேளப்பா யின்னமொரு குளிகைகேளு கெடியான யாவாரைவேர் பாலைவேரும், வாளப்பா கருநொச்சி தும்பைவேரும் வால்மிளகு சுக்குடனே மாதளைவேரும், தாளப்பா செந்தகமுங் சற்பூரங்கூட்டு சரிசமனாய்க் குறையாமற் றூக்கிக்கொண்டு, நாளப்பா யிருசாம மரைத்து வாங்கி நல்வேளைப் பயறுபோற் குளிகைபண்ணே. (கூ௩௦)

பண்ணவே நிழலிலே யுலர்த்திக்கொண்டு பக்குவமா யுலர்ந்த பின்பு பதனம்பண்ணி, எண்ணவே துளசியுட சாற்றிலீய யிருமலென்ற கபமுமெல்லா மறுத்துப்போடும், உண்ணவே குளிகையொன்று வெண்ணெயிலீய வுற்றதொரு சலச்சுழிச்சல் பித்தப்பாண்டும், எண்ணெயிலே தான்கொடுக்க கடுப்புத்தீரும் இதமான வாதசன்னி யிறங்கிப்போமே. (கூ௩க)

போகுமப்பா யின்னமொரு குளிகைகேளு புகழான செம்முள்ளி யாடாதோடை, ஆகுமப்பா கடல்நுரையும் வாதங்கொல்லி அப்பனே நீர்ப்பூலா அரத்தையோடு, தாகுமப்பா கருநொச்சி யிவைகளெல்லாஞ் சமனாகத் தூக்கிவிடு யிதுவுமல்லால், நேகதுபோ லரைத்துவிடு சாமமிரண்டு நிசமாக மெழுகதுபோ லாகும்பாரே. (கூ௩௨)

## விஷத்துக்கு வருணன் குளிகை.

பாரப்பா குளிகையது திப்பிலிபோற்பண்ணி பாங்கான நிழலிலே யுலர்ந்தபின்பு, சேரப்பா சீரகக் கியாழத்திற்கொள்ள திறமான வாயுவெல்லா மோடிப்போகும், காரப்பா முசுமுசுக்கை கியாழத்திற்கொள்ள கனமான குளிர்காய்ச்சல் காணுதோடும், நேரப்பா காராட்டுப்பாலிற் கொள்ள நிலையான நீரடைப்பு சதையடைப்புபோமே. ()

அடைப்புபோ மின்னமொரு குளிகைகேளு அப்பனே மதுகாரை தேற்றான்தேறும், உடைத்துவிட்டேன் கருமத்தி யமுக்குருவும் உத்தமனே யிவையெல்லா மொருநிறையாய்த்தூக்கி, திடக்கவே யரைத்ததனை வளைத்துக்கொண்டு, திறமான சாதிலிங்க மிளகுகூட்டு. படைத்துவிட்டு வாலைக்குப் பூசைபண்ணிப் பாங்கான சரக்குமுறை பரிந்து வாங்கே. (௩௩௪)

வாங்குவாய் சாதிக்காய் கிராம்புயேலம் வால்மிளகு சிற்றரத்தை வெள்ளுள்ளி காயம், தாங்குவாய் விளாவோடு நண்டிரேனுடு சதமான வண்டத்தி னேடுங்கூட்டி, பாங்கான அத்தியுட நீரைவார்த்து பாகமாயிருசாம மரைத்துக்கொண்டு, தேங்கவே நீரெல்லாம் வரண்டபின்பு திப்பிலிபோ லெடுத்ததனைக் குளிகையாக்கே. (௩௩௫)

ஆக்கப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு அப்பனே யனுபானங் கேளு கேளு, தாக்குவாய் தேனிலே கொள்ளும்போது க்ஷயரோக மிருமலுள மாந்தைதீரும், பாக்கியடா வசம்பினுட கியாழத்திற்கொள்ள பாங்கான பித்தசுரம் பயித்தியமுந்தீரும், மூங்கிலுட கியாழத்திற் கொள்ளும்போது மூன்றுநாள் நின்றவிஷ முறிந்துபோமே. (௩௩௬)

## படர்தாமரை சத்திகுன்மம் இதற்குக் குளிகை.

முறியவே யின்னமொரு குளிகைகேளு முதலான மலைதாங்கி தாளகமுங்கூட்டி, அறியவே சீரகத்தில் கருப்புங்கூட்டி அப்பனே யபினியுட னுகதாளி, குறியாக விவையெல்லா மரைத்துவாங்கி குறையாமல் நிறையொன்றுங் குறைந்திடாமல், உறியவே குன்றியைப்போல் குளிகைபண்ணி யுத்தமனே ரவியில்வைத் துலர்த்திக் கொள்ளே. (௩௩௭)

கொள்ளவே யனுபானஞ் சொல்லக்கேளு குகையொன்று சிறுநீரிற் கொடுக்கும்போது, உள்ளத்தி லுண்டான விஷங்களெல்லா மோடிவிடுஞ் சொல்லுகிறேன் குளிகைரண்டும், தெள்ளவே வருணனென்று மிவர்க்குப்பேராம் செப்புகிறேன் கிரந்தியுள் மூலம்போகும், நல்லதோ ரனுபானம் வெண்ணெயாகும் நாட்டிலுள்ள வயித்தியர்க்கு மீயாதென்றே. (௩௩௮)

## சன்னி பித்தசுரத்துக் குளிகை.

ஈயமே யின்னமொரு குளிகைகேளு யிதமான நெருஞ்சியின்வேர் கடுக்காயோடும், உய்யவே மூளையின்வேர் தும்பையோடு முறுதியா யிவையெல்லாஞ் சமனாய்த்தூக்கி, பையவே கருங்காலி நீரைவார்த்து பாங்காக வரையப்பா சாமமிரண்டு, வையப்பா ரவியிலே யுலரவைத்து மைந்தனே சொல்லுகிறேன் மருந்துகேளே. (௩௩௯)

மருந்தப்பா சொல்லுகிறேன் கேளுகேளு வகையான சுக்குதிப் பிலியிஞேடு, திருந்தவே வால்மிளகு அரத்தை நல்மிளகு திறமான கோரோசனையுஞ் செப்பக்கேளு, கொருந்தவே சமுற்சியுட கொழுந்து கூட்டு குறையாமற் சிறுநீரா லரைத்துவாங்கி, அருந்தவே முன்மரு ந்து மிதுவுங்கூட்டு அரையடா யிருசாமங் குளிகையாக்கே. (௩௪0)

ஆக்கியபின் ரவியிலே யுலர்ந்தபின்பு அப்பனே யனுபானஞ் சொல்லக்கேளு, பாக்கியமாய்த் தேனிலே கொள்ளும்போது படர் தாமரைகளெல்லாம் பறந்துபோகும், தாக்குவாய் நெய்யிலே கொள் ளும்போது சத்திகுன்மம் பித்தசுரஞ் சாடிப்போகும், வாக்கிஞ லிவை யெல்லாஞ் சொன்னேனப்பா மைந்தனே பறந்துவிடும் வகையைப் பாரே. (௩௪௧)

## சன்னி பித்தசுரம் குட்டங் கிரந்தி பிரமேகம் சதைரோகம் இதற்குக் குளிகை.

பாருநீ யின்னமொரு குளிகைகேளு பாங்கான கிரந்தியுடன் வே ளைவேரும், காருநீ நிலப்பனைக் கிழங்குவேரும் கருநொச்சி வேரு டனே குமரிவேரும், கூருநீ சுக்குடனே திப்பிலியுங்கூட்டி கூரான வால்மிளகு அரத்தைகாயம், சேருநீ யிவையெல்லாம் நிறையொன்ருக சேர்த்துநீ யறைத்துவிடு செப்புறேனே. (௩௪௨)

செப்புகிறேன் காராட்டுக் கோமயத்தில் திறமாக வரைத்ததனை மெழுகுபோலாம், ஒப்புகிறேன் குளிகைமஞ் சாடிபோலே யுருட்டி விடு நிழலிலே யுலர்ந்தபின்பு, தப்பாதே குளிகையொன்று யிஞ்சிச் சாற்றில் தான்கொடுக்கக் குளிர்சுரமுஞ் சன்னிபோகும், கைப்பான புளிபுகையிலே யுப்பும்வேண்டாம் கைகண்ட முறைசொன்னேன் கண்டு கொள்ளே. (௩௪௩)

கொள்ளுநீ தேனிலே கொள்ளும்போது குட்டமுடன் கிரந்தி பிரமேகந்தீரும், விள்ளுறே னிதற்கப்பா மண்டலந்தான் வேணும் விவாமாய்ச் சொல்லிவிட்டேன் விரும்பிக்கேளு, தள்ளுநீ பாலிலே கொள்ளும்போது சுதையிலுள்ள ரோகமெல்லாஞ் சாடிப்போகும், உள்ளபடி யான்சொன்னே னீயும்பாரு உத்தமனே தேவருக்கும் வயித்தீசனுமே. (௩௪௪)

## வயித்தீசன் பேயர்.

ஈசனுமவருடைய பேரேதென்றால் இதமான வாய்வின்வேர் குளிகையாகும், வாசமா யின்னமொரு குளிகைகேளு மகத்தான சிறியாநங்கை யவுரிவேரும், பாசமறுஞ் செருப்படியுங் கஞ்சாங்கோரை பாங்கான செங்குன்றி வேருங்கூட்டி, வாசமாஞ் சாதிக்காய் கிராம்பு யேலம் வால்மிளகு சுக்குடனே யரத்தைகூட்டே. (௩௪௫)

## குபேரன் குளிகை.

கூட்டியபின் பேய்ச்சுரையின் சாற்றாலாட்டிக் கூறவே யிருசாம மரைத்துக்கொண்டு, நாட்டமாய்க் குளிகைதனை யெடுத்துக்கொண்டு நல்மிளகு போலவே குளிகைபண்ணி, கூட்டியே தானெடுத்துக் கொண்டுவந்து கூசாமற் சொல்லுகிறே னின்னங்கேளு, மூட்டுவாய் ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு மூர்க்கமுள்ள செப்பதனி லடைத்துக் கொள்ளே. (௩௪௬)

கொள்ளுவாய் நொச்சியுட சாற்றிற்கொள்ள குறுகுட்டங் குளிர் காய்ச்சல் கூட்டோடேபோம், தெள்ளவே பனிநீரிற் கொள்ளும்போது திறமான மேகமெல்லாஞ் சேராதோடும், கொள்ளான நீரிலே கொள்ளும்போது குறைநோயு மேங்கலுடன் கூட்டோடேபோம், எள்ளளவு பயமில்லை குளிகையின்பேர் யிதமான குபேரனென் றெண்ணலாமே. ()

## முகக்காந்தல் கண்ணெரிவு தடிப்பு விக்கல் விப்புருதி கடைவாய்ப்புண் இதற்கு ஈசானியக் குளிகை.

எண்ணுவா யின்னமொரு குளிகைகேளு யிஞ்சியின்வேர் செருப்படியுஞ் சிற்றாமுட்டி, நண்ணுவாய் பேய்ப்பீர்க்குக் குப்பைமேனி நலமாகக் கானகத்து அவரைவேரும், தண்மையுள்ள நாய்வேளை குறுந்தொட்டிவேரும் தவறாமற் றூன்றாக்கிப் பலமதாக, வண்ணமாய்க் கியாழமிட்டுப் படிநீர்பத்து வளமாகப் பாதியாய்க் குறுகக்கேளே. ()

கேளப்பா அட்டுப்பு சிற்றரத்தைகெடியான நல்மிளகு வால்மிளகுங் கூட்டி, தாளப்பாபேரரத்தை சிற்றரத்தைதானும் தகுமான வால்மிளகு நல்மிளகுங் கூட்டி, நாளப்பா பேரரத்தை வசம்பு சுக்கு சாதகமாய்த். திப்பிலியுஞ் சாரப்பூவும், வேளப்பா பாகுவிட் டரைத்துக்கொள்ளு விதமாக மெழுகுபோ லாகும்பாரே. (௩௪௯)

பாரடா குளிகைபண்ணு மஞ்சாடிபோலே பாங்கான ரவிதனிலே யுலர்த்திக் கொள்ளு, மோரடா வனுபானங் குளிகையி லீந்தால் முகக்காந்தல் கண்ணெரிவு சலத்தடிப்பு விக்கல், சேரடா நெய்யிலே கொள்ளும்போது திரண்டுவரும் விப்புருதி தெறித்துவோடும், காரடா பாலிலே கொள்ளும்போது கடைவாயிற் புண்ணெல்லாம் மாண்டுபோமே. (௩௫௦)

## சன்னி நாவறட்சி பித்தம் உடல்நோய் கிரிச்சிரம் இதற்கு விஷ்ணு குளிகை.

போகுமப்பா யிக்குளிகை பேரேதென்றால் புகழான யீசானியனென்பதாகும், ஆகுமப்பா யின்னமொரு குளிகைகேளு அழகான அரிநெல்லி கிழாநெல்லி, தாகுமப்பா சிறுதும்மை தேறுதும்பை தனியானக் கவிழ்தும்பை நொச்சியோடும், மேவப்பா சதகுப்பை யோமஞ் சுக்கு விதமாக வொருநிறையாய் நிறுத்து வாங்கே. (௩௫௧)

வாங்கியபின் பாகுவிட் டரைத்துக்கொண்டு வகையாக மெழுகதுபோ லாகும்போது, பாங்காகக் குளிகையடா நவ்வறகாய்போல் பரிவாக வுருட்டியதை ரவியில்வைத்து, தாங்காத் துளசியுட கியாழத்திற் கொள்ள க்ஷயசுரமு மற்றுவிடுக் தாக்கிப்பாரு, தேங்கு சுக்கு கியாழத்திற் கொடுக்கும்போது சிறப்பான வலிகுன்மங் திரண்டோடும்மே. (௩௫௨)

## சன்னிக்குக் குளிகை.

ஓடுமப்பா யின்னமொரு குளிகைகேளு வுறுதியுள்ள வேங்கைபட்டை பலந்தானென்று, நாடுவாய் வேம்பின்பட்டை பலந்தானென்று நலமான சிறுகுறிஞ்சாவேர் பலந்தானென்று, தேடுவாய் மாவிலிங்கம்வேர் பலந்தானென்று திறமான கையானை பலந்தானென்று, கூடுவா யிவையெல்லாங் கியாழமிட்டுக் கூட்டுகின்ற சரக்குவகை கூறுவேனே. (௩௫௩)

கூறுவேன் சாதிக்கா யரத்தை சுக்கு கூரான கடுக்காயுந் தானுஞ் சேர்த்து, மாறுகிறேன் சுக்குடனே திப்பிலி சீரகமும் வண்மையுள்ள வெள்ளுள்ளி காயங்கூட்டி, சேருநீ யிவையெல்லாங் கிழியாய்க்கட்டி திறமான முச்சாம மரைத்துவாங்கு, தேருநீ யிம்மருந்தை பாகிற் போட்டு திடமாகக் குறுக்கிவிடு மெழுகுபோலாம். (௩௫௪)

போலாகு மெழுகுபத மானலப்பா புகழாகப் பயறுபோல் குளிகையாக்கும், மாலான விஷ்ணுவுக்கும் வாலைக்குந்தான் வாகாகப் பூசைபண்ணு மைந்தாகேளு, காலான காலன்வந் தணுகினாலுங் கைம்முறைக்கு நாழிகைதான் மூன்றுமட்டும், ஏலவெல்லாம் பாடமடா யிக்குளிகைவேகம் எவருக்குஞ் சொல்லாதே யெண்ணிப்பாரே. (௩௫௫)

எண்ணுவா யனுபானஞ் சொல்லக்கேளு யிஞ்சியுட சாற்றிவிடு சன்னிக்கப்பா, நண்ணுவாய் தேனிலே கொள்ளும்போது நாவறட்சி கபரோகம் நயன்றபித்தம், உண்ணுவாய் நெய்யிலே கொள்ளும்போது உடல்நோயு குடல்வாய்வு கிரிச்சிரங்கள், கண்ணிலே காணும லோடிப்போகுங் கைகண்ட முறைசொன்னேன் கண்டுபாரே. (௩௫௬)

வாதசன்னி பித்தசன்னி சிலேட்மேசன்னி இதற்குக் குளிகை.

கண்டுகொள்ளு மின்னமொரு குளிகைகேளு கருவான வேலினுட பட்டை பலந்தானொன்று, விண்டேனுன் முருங்கைப்பட்டை பலந்தானொன்று விதமான செங்கத் தாரிபட்டை பலந்தானொன்று, பண்டான அத்திபட்டைப் பலந்தானொன்று பாங்கான நெல்லிவேர் பலந்தானொன்று நலமாக யிவையெல்லாம் நறுக்கிக்கொள்ளே. (௩௫௭)

நறுக்கியபின் னிவையெல்லாம் பானையிலிட்டு நலமாக நீரப்பா படியிநருக்கி, குறுக்கிவிடு படுபாதி யானபின்பு கூட்டப்பா கடைமருந்து கூறக்கேளு, மருக்கமுள்ள வசம்புடனே வால்மிளகு தானும் வாகான திப்பிலியுஞ் சுக்குகூட்டு, உருக்கிவிடு கிழிகட்டிக் கியாழத்தி விட்டு உத்தமனே பாகுபோல் குறுக்கிவாங்கே. (௩௫௮)

வாங்கியே படிகாலாய்க் குறுகிற்றானால் மைந்தனே கிழியெடுத்து ஆறவிட்டு, பாங்காகக் குத்தியே யரைத்துக்கொள்ளு பரிவாக யிருசாம மாகும்போது, வாங்குவாய் மருந்தையப்பா யெடுத்துக்கொண்டு மஞ்சாடிபோலவே குளிகைபண்ணு, ஓங்குநீ ரவியிலே யுலர்ந்தபின்பு வுத்தமனே யனுபான முரைக்கிறேனே. (௩௫௯)

உரைக்கிறே னனுபான மேதேயாகில் உத்தமனே கியாழமுண் டேதேயாகில், திரைக்கமுடன் வேம்பினுட கியாழமாகில் சிலேட்டு மத்தால் வந்த சன்னி தீர்ந்துபோகும், உரைக்கிறே னிஞ்சியுட சாறே யாகில் உத்தமனே வாதசன்னி யோடிப்போகும், மறைப்பெல்லா நீக்கிவிட்டு வெளியாய்ச் சொன்னேன் வகையறிந்து கண்டவனே வயித்திசன்றனே. (கூசுா0)

## கண்ணழிவு காதழிவுக்குக் குளிகை.

தானாக யின்னமொரு குளிகைகேளு சதாவேரிக் கிழங்கூடா பலந்தானென்று, ஊனான நன்னாரிவேர் பலந்தானென்று வுத்தமனே தாழைவேர் பலந்தானென்று, வானான கடுகின்வேர் பலமோவொன்று மலைதாங்கி வேரடா பலமோவொன்று, கானான திப்பிலிவேர் பலமோ வொன்று கைம்முறையாய்த் தூக்கியே கியாழம்போடே. (கூசுாக)

போட்டபின்பு வால்மிளகு கடுக்காய் சுக்கு புகழாகச் சதகுப்பை யோமங்கூட்டி, கூட்டியபின் னரத்தையிஞ்சி தானுமாகக் குறையாம லோர்நிறையாய்த் தூக்கிவாங்கி, ஆட்டியே யிவையெல்லாங் கிழியாய்க் கட்டி அப்பனே கியாழத்திற் குறுக்கிப்பாகாய்,ஊட்டியே யரைத்த தனை மெழுகதாக வுருட்டிவிடு குன்றியைப்போல் குளிகைதானே. ()

குளிகையிது கிரந்தியுட கியாழத்திற்கொள்ளக் குளிர்சுரமும் வாய்நோயுங் கூட்டோடேபோம், வளியாக மண்டைதனிற் கரப்பான் போகும் மகத்தான கண்ணழிவு காதழிவுபோகும், பளியாகும் பனி நீரிற் கொடுத்தாயாகில் பாண்டுவகை சூலையெல்லாம் பறந்துபோகும், தெளிவாகுந் தேகமப்பா சொல்லக்கேளு தேனிலே கொடுத்துவிடு தேகசித்தே. (கூசுாங)

## பேதனக் குளிகை சகலபித்தம் பிரமை பேதனத்துக்கு.

சித்தாக யின்னமொரு குளிகைகேளு சிறிதான நங்கையப்பா பலமோவொன்று, முத்தான வவுரிவேர் பலமோவொன்று முதலான சிறுசின்னி பலமோவொன்று, அத்தான வகத்திவேர் பலமோவொன்று அப்பனே யிவையெல்லா மொன்றாய்கூட்டிக், பித்தருக்குச் சொல்லுகிறேன் குளிகையப்பா பிலத்துவா யிதனுடைய சுருக்குபாரே. (கூசுாச)

சுருக்காக யிவையெல்லாம் நறுக்கிக்கொண்டு சொல்லுகிறேன் பானையிலே யிட்டுநன்றாய், குறுக்கடா படிபத்து நீரைவிட்டு குறுகி யது வரும்போது கூர்ந்துகேளு, திருக்கான கள்ளிவேர் பலமோ வொன்று திறமான கல்லுப்பு பலமோவொன்று, உருக்கான கிட்ட மப்பா விராகனறு வுத்தமனே வெள்ளுள்ளிக் காயங்கூட்டே. (௬௫௫)

கூட்டியே கியாழமடா படிகாலானல் கோளகையா மருந்தை யெல்லா மெடுத்துப்போடு, ஆட்டுவா யிரும்பதனைத் தள்ளிப்போட்டு அப்பனே கிழிமருந்தை யரைத்துப் பாகுவிட்டு, தீட்டியே கைபாகஞ் செய்பாகம்பார் திடமாகச் சீஷனுக்கு செப்பினேன்பார், மூட்டியே யிருசாம மரைத்துக்கொண்டு மெழுகுபதமானபின் பெடுத்துக் கொள்ளே. (௬௫௬)

எடுத்துக்கொள் ளின்னமப்பா குளிகைமாட்டி இதமான திப்பிலி போ லுருட்டிக்கொண்டு, தொடுத்துவிடு ரவியிலே யுலர்த்திக் கொண்டு சொல்லுகிறேன் குழம்பொன்று சூட்சமாக, மடுத்திடவே சம்பீர்க்கு முசுமுசுக்கைகூட்டு மகத்தான பேய்ப்புடலு வாழை நீரில், எடுத்துவிடு கியாழமிட்டுத் தயிலமாக்கி யூட்டியே நித்தமொரு குளி கைகூட்டே. (௬௫௭)

குளிகையொன் றதிற்கூட்டிக் குழம்பதாக்கிக் கொற்றவனே சிர சிலே தடைதான்கட்டி, விளியிலே நால்மிளகு வுரைத்துப்போடு வித மாகக் குழம்பைவாக் கணத்தல்வார்த்து, அளியவே யடுப்பில் வைத் துத் தெளியும்போது அப்பனே சிரசிலே விட்டாயாகில், களியாத மசையெல்லா மோடிப்போகுங் கடுக்காயின் சாற்றிலேயோர் குளிகை யீயே. (௬௫அ)

ஈந்தபின்பு யெதிராளி பேதனமும்போகு மிதமான பித்த பேதனமும் போகும், மாந்தரால்வந்த பேதனமும் போகும் மகத்தான சன்னி பேதனமும்போகும், நாந்தமாய் நாங்கள் செய்த முறைகளெல் லாம் நலமாகச் சொல்லிவிட்டே னன்றாய்க்கேளு, சாந்தமாம் நாளேட் டிற் சொன்னேன் சொன்னேன் தப்பாமற் செய்துவிடு தாயைப்பூசி. ()

பூசையிலே யவளைவிட்டால் செதியுமில்லை புசழான வாதிசட்கு மிவளே தெய்வம், வாசமுள்ள மலர்க்காட்டித் தடமுங்காட்டி வயித்தி யர்க் குதவிசெய்யு மாதாவாகும், நேசமாய் நில்லாவிட்டால் சாபமீவாள் நிலையாகத் தியானமிடு நிட்டைபாரு, ஆசையிலே நாதம்போல் விளங்கி நிற்பாள் அப்பனே யவள்சொரூப மறிந்துபாரே. (௬௭0)

## சகலபித்தம் பேதனம் தாயைப்பூசிக்கும் விவரம் பீனிசம் கபாலசூலே இதற்குக் குளிகை.

பாரப்பா யின்னமொரு குளிகைகேளு பாங்கான முகச்சுர பசலை வேரும், நேரப்பா கருங்குன்றி சங்கங்குப்பி நிலேயான கருநொச்சி நாகதாளி, கூரப்பா படிபத்து நீரைவார்த்துக் குறையாமல் தீமூட்டி வடிக்கும்போது, சேரப்பா யதிமதுரந் தேவதாருஞ் சிறப்பாக யிவை யெல்லாஞ் சேர்த்துக்கொள்ளே. (௬௭௧)

சேர்த்துவிடு சாதிக்காய் கிராம்புயேலந் திறமான வால்மிளகு கடுக்காய் சுக்கு, மார்த்திவிடு வாலைக்குப் பூசைபண்ணு மைந்தனே கிழிகட்டிக் கியாழத்திலிட்டு, சேர்த்துவிடு கியாழயங்கே குறுகும் போது திறமாகக் கிழியெடுத்து வைத்துக்கொண்டு, ஆர்த்துவிடு கியா ழத்தைப் பாகமாய்க்காய்ச்சி அரைத்துவிடு மருந்ததனை மெழுக தாக்கே. (௬௭௨)

ஆக்கிவிடு குளிகைபண்ணு யிதுமூன்றுக்கும் அப்பனே கேளு மனவேகியாகும், தாக்கிவிடு வனுபான மேதேயாகில் தனியான பாலிலே கொள்ளும்போது, மூக்கிலுள்ள பீனிசங்கள் கபாலசூலே முதலான செவியடைப்பு சாற்றுற்கொள்ளு; நோக்கியே பக்குவமாய்க் கொள்வாயானல் நொடிக்குமுன்னே சன்னியெல்லா மோடிப்போமே. ()

## குழந்தைகட்கு வாய்வேகிக் குளிகை.

போகுமே யின்னமொரு குளிகைகேளு புகழான தும்பையும் விராகனிடை ஐந்து, தாகுவாய் கழற்சி விராகனஞ்சு தனியான பாகல் விராகனிடை அஞ்சு, மேகுவாய் வெண்குவளைவேர் விராகனிடை அஞ்சு விதமான சிறுசின்னி விராகனஞ்சு, பாகுவாய் வெள்ளுள்ளி தூயமோமம் பாங்கான வசம்புடனே திப்பிலியுமிளகே. (௬௭௪)

மிளகுடனே யிவையெல்லா மொன்ருய்க்கூட்டி மூன்றுநாழிகை மட்டு மரைத்துவாங்கி; குளிகையடா குன்றிமட்டில் கொண்டுமே தான் கூராக நிழலிலே யுலர்த்திக்கொள்ளு, களினமுள்ள மதலைக்கு யிது குளிகையாகும் நலமான வாலையுட கிருபையோடும், எழுதி விட்டே னிதற்செல்லாஞ் சாபமுண்டு யிதஞ்சொன்னேன். னனுபான மின்னங்கேளே. (௬௭௫)

கேளப்பா மூலையுண்ணு மதலையானால் கெடியான பாலிலே குளிகைமாட்டு, தாளப்பா பாலுண்ணுக் குழந்தைகட்கு தண்ணீரப்பா முன்சொன்ன கியாழம்பாரு, நாளப்பா மூன்றிலே சாந்தமாகும் நந்தமக்கு வாய்வெல்லா மடிந்துப்போகும், வாளப்பா குளிகையின்பே ரென்னவென்றால் வாய்வேகிக் குளிகையென வகுத்திட்டேனே. ()

## வாய்கேசிக்குளிகை பித்தங்கறுத்துவீழும் பித்தத்துக்குக் குளிகை.

வகுத்திட்டே னின்னமொரு குளிகைகேளு மகத்தான மரவிட்டை சிறுதேக்கப்பா, தொகுத்திட்டேன் சிறுபூளை கிழ்க்காய்நெல்லி திடமான வேளையப்பா ரண்டுங்கூட்டு, நிசழ்த்திட்டேன் கடுகுள்ளி யோமஞ்சுக்கு நிலையான சுள்ளியுட கொழுந்துகூட்டு, செகத்திலே யொருவருக்குஞ் சொல்லவேண்டாஞ் செப்புகிறே னிதனுடைய திறத்தைப் பாரே. (௬எஎ)

திறமாகப் பெருங்காயங் காசிடையுங்கூட்டு செப்புகிறே னுப்பாகல் சாற்றைவிட்டு, உருவாக யிருசாம மரைத்துக்கொண்டு வுத்தமனே மெழுகுபத மாகும்போது, இரவியிலே குளிகைமஞ்சாடி போலே யிதமாக ரவியிலே யுலர்ந்தபின்பு, கருவான கியாழமுண்டு சொல்லக்கேளு கையானைச் சமூலமப்பா கண்டுபாரே. (௬எஅ)

பாரப்பா கியாழத்திற் குளிகையொன்று பாங்காகத் தான்கொடுக்கப் பித்தமப்பா, கூரான பஞ்சனைபோல் கறுத்துவீழுங் கொடியான கரும்பித்தம் கூட்டோடேபோம், நேரப்பா பொன்னாங்கண்ணிக் கியாழமானல் நில்லாது மேகமப்பா வோடிப்போகும், சேரப்பா யிம்முறைபோல் செய்துபாரு தேகத்துக் கபடமெல்லாந் தீருந்தானே. (௬எகூ)

தீருமே யின்னமொரு குளிகைகேளு திருவாத்திப் பட்டையப்பா பலமோவொன்று, காருநீ சீந்தில்வேர் பலமோவொன்று கடுக்காயுந் தான்றிக்காய் பலமோவொன்று, நீருமே போஸ்தாக்காய் சுக்குதானும் நெடிதான விழுக்குறு நிலப்பனையின்வேரும், ஆருமே சொல்லார்கள் யானுஞ்சொன்னேன் அப்பனே யிவையெல்லாங் கியாழமாக்கே. (௬அ0)

ஆக்குவாய் சாதிக்காய் கிராம்புயேலம் அன்பான நல்மிளகு வால்மிளகுங்கூட்டி, போக்குநீ யீருள்ளி வசம்புதானும் புகழான சீரகமும் நிறையொன்றாக, வாக்கியமாய் வஸ்திரத்தில் முடிந்துயிட்டு மைந்தனே படிபத்து நீரும்வார்த்து, தாக்குவாய் படிபாதி குறுகும்போது தண்மையாய்க் கிழியெடுத்து அரைத்துக்கொள்ளே. (௬அக)

கொண்டபின்பு பட்டையெல்லாம் பிசைந்தெறிந்து குறுக்கடா படிபரைக்கா லாகும்போது, விண்டேனுன் குறுங்கியதில் மருந்தை யிட்டு விதமாக யிரும்பிலே கிண்டும்போது, நன்ருன தயிரிலே கொள்ளும்போது நாகமென்ற வயிற்கடுப்பு சோரைசீதம், உண்டான பத்தியமோ யிருள்ளியாகும் உத்தமனே யின்னமுண்டு உரைக் கிறேனே. (கூ௮௨)

இன்னமுண்டு வனுபான மேதேயாகில் இதமான வெள்ளாட்டுப் பாலிலுண்ண, முன்னுள்ள மேகமேற் சதைபடைப்பு முறிந்துவிடும் வெள்ளையென்ற மேகமெல்லாம், சொன்னேமே யிம்மருந்தால் வியாதி தீரும் சுருக்காகப் பத்தியமோ காருகாரு, அன்னமென்ற புன்னையுட கியாழத்திற்கொள்ள ஆகாத வறட்சி களை யற்றுப்போமே. (கூ௮௩)

வாதசன்னிக்குக் குளிகை.

அற்றுப்போ மின்னமொரு குளிகைகேளு அன்பான முட் சுண்டை கொழிஞ்சிவேரும், முத்தான சிறுதும்பை சிறியாநங்கை முதலான முருங்கை மெல்லி யத்திக்கண்ணி, கொத்தான கசகசா வெள்ளுள்ளிகாயங் குறையாமற் சரிசமனுய் நிறுத்துக்கொண்டு, அத் தனையு மமுக்குருச் சாற்ருலாட்டி அன்பான மெழுகுபத மரைத்து வாங்கே. (கூ௮௪)

வாங்கியபின் குளிகையப்பா சுண்டைக் காய்போல் மைந்தனே யுருட்டியதை ரவியில்வைத்து, தாங்கியே யுலர்ந்தபின்பு யிஞ்சிச் சாற் ருல் தான்கொடுக்க வாதசன்னி சாடிப்போகும், பாங்கான வெந்நீரிற் கொடுக்கும்போது பரிவாக நாவுதிரம் பேதியாகும், ஊங்ருவாம் பாலிலே கொள்ளும்போது உத்தமனே நீரிழிவு காமாலைபோமே. ()

குளிகைமிளகுக் கியாழம்.

போகுமப்பா யின்னமொரு குளிகைகேளு புகழான வாடு தொடா மூலிவேரும், தாகுமப்பா செம்முள்ளி சங்கங்குப்பி தனி யான அரசுமேல் விழுதினேடும், வாகுமப்பா சாதிலிங்க மரத்தை சுக்கு வால்மிளகு கடுக்காயுந் தான்றிக்காயும், நேகதுபோ லரைத்து விடு காயங்கூட்டு நிலையாக மிளகதுபோல் குளிகைபண்ணே. (கூ௮௬)

பண்ணினபின் னிதனுடைய வனுபானங்கேளு பரிவான மிள குடனே யியாழத்திற்கொள்ள, எண்ணிவிட்ட தசவாய்வு அற்றுப் போகும் இருக்குமந்த நிலையிலே யிருக்கும்பாரு, கண்டான் முலைப் பாலிற் கொடுத்தாயாகில் கரப்பானும் வண்டுகடி காணாதோடும், வண் டான கருங்காலி னீரிற்கொள்ள வண்டுகடி கருங்குட்ட மாண்டு போமே. (௩௮எ)

## சாகாமலிருக்க கேவுனமணி.

மாளாம லிருக்கவொரு குளிகைகேளு மைந்தனே பருத்ததா மூடும்பை வாங்கி, நாளான பூசநாள் சூதம்வாங்கி நலமாக வதனுடைய வாயிலிட்டு, நீளவே நூலாலே வாயைத்தைத்து நிசமாகப் புதுக்கலத் தில் நிறுத்திவைத்து, தாளப்பா லவணத்தை நிறையக்கொட்டி சட்டி யொன்று மேல்மூடிச் சீலைசெய்யே. (௩௮௮)

சீலைமண் மூன்றுசெய்து யேழுநாளுந் திருவிளக்குத் தானேற்றி வாலைபூசை, மாலையென்ற பொழுதிலே புடத்தைப்போட மணியாகு மதன்பிறகு தமரேயிட்டு, காலமே பூவரசு வெள்ளைமுள்ளி கசக்கியே தட்டியதைச் சாறுவாங்கி, வேலையோ மெத்தயில்லை சொல்லக்கேளு விவரமாய்ச் செப்புகிறேன் விரும்பிப்பாரே. (௩௮௯)

பாரப்பா கடுக்காயும் அட்டுப்புத்தான் பாங்காகத் தானரைத்துக் குகைதான் பண்ணி, நாரப்பா மணியதனைக் குகைக்குள்வைத்து நல மாக வெட்டெருவிற் புடந்தானேற, தீரப்பா மணிநிறந்தான் வெள்ளி மீன்போல் தோன்றுமடா வதையெடுத்துக் கொண்டுமேதான், கூரப்பா வாலைதனைப் பூசைபண்ணிக் குளிகை யென்றுநான்சொல்லிக் குறித்திட்டேனே. (௩௯0)

குறித்திட்டேன் பிணியதனை யெடுத்துக்கொண்டு குருவான யிரெழுத்தைத் தியானம்பண்ணு, அறித்திட்ட வெடிக்கலா முலக மெல்லா மண்டரண்ட பாதாள மெல்லாங்காணு, மறித்திட்ட வாயி விட்டு நீரையுண்ணு வயிர்தனக்குத் தம்பனமாம் வரிசைகேளு, உரைத்திட்டே னிதற்கெல்லாம் வாலையன்றி யொருவராற் றீராது ஆணிப்பாரே. (௩௯௧)

ஊணவே வாலையுட தயாளமப்பா வொருவருக்குந் தெரியாது வுரைக்கிறேன் கேள், தோணுவாய் சக்கரமோ விண்ணுமாகுஞ் சொல்லரிய மந்திரமோ மவுனமாகும், பேணுவா யிப்படியே சதாநித்தந்தான் பேசாதே வாமத்தில் பூசைபண்ணு, காணலா மனோன்மணியாள் பக்கல்வந்து கைகாட்டி வாமீவாள் கண்டு கொள்ளே. (௩௯௨)

கொள்ளவே மாத்திரைதான் விவரங்கேளு கொடிவேலி குழித்தயில மிறக்கிக்கொண்டு, விள்ளுவேன் சிப்பியுட சுன்னம் வாங்கி விதமாகத் தயிலத்தில் புரட்டிக்கொண்டு, துள்ளுகிற கெந்தகத்தின்மேலே பூசி துடியாகச் சீலைமண் மூன்றுசெய்து, மெள்ளவே காடையுட புடத்திற்போடு விதமாகக் கூட்டிவிடு விவரந்தானே. (௩௯௩)

## சன்னி சிலேட்டுமேத்துக்கு சாதிலிங்க மாத்திரை.

விவரமாய்ச் செந்தகத்தை யெடுத்துக்கொண்டு வேலியென்ற பருத்தியுட கொழுந்துங்கூட்டி, தவராத படிகாரம் நாலிலொன்று தான்கூட்டி முச்சாம மரைத்துக் கொள்ளு, நிகரில்லை மாத்திரைதான் குன்றிபோல நிசமாக வுருட்டியே ரவியில் வைத்து, பகருவே யுலர்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளு பாங்கான மாத்திரைதான் மஞ்சாடியாமே. (௩௯௪)

ஆதுமப்பா செஞ்சூடி யெடுத்துக்கொண்டு ஐங்காரஞ் சாரமிட்டுக் குளிகைகொஞ்சம், நேகுபோ லரைத்துவிடு அஞ்சேயாக நிசமாக சன்னியப்பா அகன்றுபோகும், தாகான முலைப்பாலிற் கொடுக்கும்போது கூஷயமென்ற சபத்தையப்பா வாங்கிக்கொள்ளும், தாகமுள்ள சுரத்துக்கு யீந்தாயாகில் தப்பாது மூன்றிலே விட்டுப்போமே. (௩௯௫)

விட்டுவிடு மின்னமொரு மாத்திரைதான் கேளு வேங்கையுட பட்டையப்பா பலமோபத்து, இட்டுவிடு குழித்தயில மிறக்கிக்கொண்டு இதமான நவாச்சாரம் கொஞ்சமிட்டு, மட்டித்த சாதிலிங்கக்கட்டிவாங்கி வகையாக லிங்கத்தின்மேலேபூசி, மட்டித்த சாதிலிங்கங் கட்டதாகும் மைந்தனே யெடுத்துநன்றாய் வைத்துக்கொள்ளே. (௩௯௬)

வைத்தபின்பு வசம்புடனே காயங்கூட்டி மைந்தனே வஞ்சியுட சாற்றாலாட்டி, தைத்திடவே முச்சாம மரைத்துவாங்கி தனியாகமாத்திரைதான் கழற்காய்போல, சித்தியாய்த் தானம் பண்ணி யுலர்த்திக்கொண்டு திறமாக வனுபானம் செப்பக்கேளு, உத்து நின்று கிராம்பிலே கியாழமிட்டு உத்தமனே மாத்திரைதான் குன்றியீபே. (௩௯௭)

## கண்ட கோடாலி மாத்திரை.

ஈந்தபின்பு வாதசுரஞ் சன்னியெல்லாம் இதமாக வோடிவிடு மித மாய்ச் சொன்னேன், மாந்தர்களே யோமமென்ற கியாழத்திற்கொள்ள மகத்தான சிலேட்டுமத்தை யறுத்துப்போடும், சாந்தமாம்வாய்வுகுத்து திரட்டுவாதம் க்ஷயசுரமுங் காமாலை தாகம்வீக்கம், சேந்துடனே யிது வெல்லா மிற்றுப்போகும் திரஞ்சொன்னேன் வயித்தியத்தை செய்து பாரே. (ருகூஅ)

## கண்டகோடாலி சவ்வீர மாத்திரை.

செய்யவே யின்னமொரு மாத்திரைதான் கேளு திறமான பாஷாணக் கட்டிவாங்கி, உய்யவே யவுரியின்காய் குழித்தயிலம்வாங்கி உற்பனமாய்ச் சிப்பியுட சுன்னங்கூட்டி, தையலாள் வாலைக்குத் தியானம் பண்ணி தப்பாமற் றகட்டின்மேற் றயிலம்பூசி, பையவே புடமப்பா பெறவேயாகும் பாங்காக வாறியபின் னெடுத்துக்கொள்ளே. (ருகூகூ)

எடுத்துவிடு யிதிலுமொரு மருந்துகேளு யிதமான வெங்காரமெட்டி லொன்றுகூட்டி, தொடுத்திடுவாய் நேர்வாளம் பத்தி லொன்று திறமான சவர்க்காரம் பத்திலொன்றுகூட்டு, இடித்திடுவா யிதுகளொன்றுந் தப்பாமற்றான் யிணையாக ஞாதிரையாய் தூக்கிக்கொண்டு, தொடுத்திடுவாய் தாழையுட சாற்றாலாட்டி சொல்லுகிறே னிருசாம மரைத்துவாங்கே. (ச00)

வாங்கியபின் மெழுகுபோ லாட்டிற்றானல் மைந்தனே தானெடுத்து வைத்துக்கொண்டு, மூங்கிலுட நெல்லதுபோல் மாத்திரைதானப்பா முக்கியமா யுருட்டியதை நிழலுலர்த்திக் கொண்டு, பாங்கான மோரிலே கொடுக்கும்போது பறக்குமடா யிந்தசன்னி பாருபாரு, ஓங்காரமான தந்த வபானவாய்வு ஓடிவிடுஞ் சொல்லுகிறே னுறுதி தானே. (ச0க)

உறுதியா யின்னமொரு மாத்திரைதான்கேளு உத்தமனே சவ்வீரத்தை வாங்கிக்கொண்டு, மறுகுவாய் முருக்கினுட பட்டைபலம் பத்து வாகான செம்முள்ளி பலமோபத்து, குறுக்கியே காய்ச்சியதைத் தயில மாக்கிக் கொடுக்கையிலே நகத்திடை யோடும் போலே, வருக்கமேவ யெருவப்பா காடைபுடந்தீர்த்து மகிழ்ச்சியா யெடுத்துநீ வைத்துக்கொள்ளே. (ச0உ)

கொள்ளுவாய் கோஷ்டமுடன் சாரங்கூட்டி குருவான தாளகமுங் கொஞ்சங்கூட்டி, தள்ளுவாய் நேர்வாளஞ் சாதிலிங்கந் தனியான பூரமுட னென்றுப்க்கூட்டி, விள்ளுவேன் மேனியுட சாற்றலாட்டி விவரமாய் மெழுகுபோ லரைத்துவாங்கி, எள்ளதுபோல் காடியிலே கொடுக்கும்போது யிதமாகப் பறந்துவிடு மிதஞ்சொன்னேனே. (௪0௩)

இதஞ்சொன்னேன் பறந்துவிடு மிஞ்சிச்சாற்றில் இதமாகத் தான் கொடுக்க கெண்டைநீர்போகும், இறந்துவிடு சன்னியெங்கு நாடொட்டாது யிதமாகச் சொல்லிவிட்டே னெண்ணிப்பாரு, மறந்துவிட் டிருக்காதே சொன்னேனப்பா மகத்தான ரெண்டினுட நாமங்கேளு, துறந்துவிட்டேன் கண்டகோடாலியென்று சொல்லுகிறேன் கோடான கோடி தானே. (௪0௪)

விருமன் மாத்திரை யிலே.

கோடான கோடியிலே யொருவன்வாமி கூறினே னாயிரத் தைஞ்ஞூறப்பா, வீடான வீடுண்டு யெங்களுக்கு மேலான பதமுண்டு விரும்பிப்பாரு, வாடாதே மைந்தனே யுந்தனுக்கு வகையறிந்து சொல்லுகிறேன் மாத்திரைதான் கேளு, மூடான மூட்டையெல்லாந் துறந்து சொல்வேன் உத்தமனே யெண்ணிநீ முறையைப் பாரே. (௪0௫)

முறையாகச் சாதிலிங்கம் சவ்வீரம் வாங்கி முறைமையாய்க் கருங்காவிநீரிற் சுத்திசெய்து, அறைகிறேன் சாமமப்பா விராகனென்று அப்பனே பூரமப்பா விராகனென்று, விரையான நல்முத்து விராகனென்று விதமான தங்கமது விராகனென்று, மறையாத தாம்பரம் விராகனென்று மைந்தனே தீயான விராகனென்றே. (௪0௬)

ஒன்றான மேனியப்பா விராகனென்று யுறுதியுள்ள வேலிப்பருத்தி விராகனென்று, பண்டான கள்ளியின்வேர் பலமோவொன்று பாங்கான கருநொச்சிவேர் பலமோவொன்று, மன்றான வேலியின்வேர் பலமோவொன்று வகையாக யிவையெல்லாம் நிறையாய்த் தூக்கி, நன்றாக மூன்றுநா ளரைத்துக்கொண்டு நலமாக வழித்துவிடு நலமாய்ப்பாரே. (௪0௭)

மாத்திரை சேபம்.

பாரப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு பாங்கான மாத்திரையை எடுத்துக்கொண்டு, நேரப்பா மாவிலிங்கம் பட்டைதன்னை நிலையாக வெடியுப்பு கூட்டிக்கொண்டு, மாரப்பா சீலைமண் மூன்றுசெய்து மகத்துவமாய்க் குக்குடத்திற் புடமேதீரு, கூரப்பா வாறியபின் னெடுத்துப்பாரு குருவான முருக்கம்பூ நிறம்போலாமே. (௪0௮)

பூவான மாத்திரையை யெடுத்துக்கொண்டு பொருந்தியே வாலைக் குப் பூசைபண்ணி, மாலான் விஷ்ணுவை தியானம்பண்ணி மைந்தனே யுருவுண்டு சொல்லக்கேளு, நாளான கிழமையப்பா வாறிலேதான் ஓம்-ஓம்-ஹ்ரீம்-சிவாயென்றேதும், மேலான மாத்திரையின் பேரேதென்றால் வீரம்னென்று பேராகும் விவரந்தானே. (சு0கூ)

விவரமா யனுபானஞ் சொல்லக்கேளு வெள்ளாட்டு மோரிலே கொடுத்தாயாகில், தவறாத சன்னியெல்லா மோடிப்போகுஞ் சத்தியத் திற் றவறாம லிருக்கவேணும், நிகரில்லை யிஞ்சியுட சாற்றிற் கொள்ள நிசமான வாதசுரஞ் சன்னியோடும், பகரவே வேம்பினுட சாற்றிற் கொள்ளப் பதினெட்டு சன்னியுமே பறந்துபோமே. (சுக0)

பறந்துபோம் நீராம்பற் கெண்டைவீக்கம் பாங்கான கால்குடைச் சல் காதுமந்தம், சிறுத்துவிடு குட்டமாம் பெருவியாதி திறமான சதை யடைப்பு கிறிச்சினங்கள், துறந்துவிட்டே னனுபானம் நெய்பால் வெண்ணெய் சொல்லுகிறே னிதுபோலே யெவர்க்குஞ் சொல்லார், இறந்துவிட்டுப்போனாலும்பாவியுண்டா மிறந்து சற்றேபேசுமென்று யெண்ணிப்பாரே. (சுகக)

## சூதபற்பம் சஞ்சீவி மாத்திரை.

எண்ணவே யின்னமொரு குளிகைகேளு இதமான சூதமோ கழஞ்சுவாங்கி, தண்மையாயெள்ளரைத்துகுளிகைபோற் பண்ணி தருவான சூதத்தை யுள்ளேவிட்டு, நண்ணவே மேலுமொரு யெள்ளைப்பூசி நலமாக ரவியிலே யுலர்ந்தபின்பு, தண்மையாய்த் தானரைக்க மருந்துகேளு சஞ்சீவிச் சாறெள்ளு சாற்றுறேனே. (சுக௨)

சாற்றுகிறே னுபியப்பா நாவிலொன்று சாதிலிங்கங் கூட்டியப்பா நாவிலொன்று, மூத்ததோர் கொழிஞ்சிவிரை யெட்டிலொன்று முறையான நேர்வாள மாறிலொன்று, மாத்திரையின் பேரப்பா சஞ்சீவியாகும் வகையாக யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்து, பாத்திரமாய் முச்சாம மரைத்துவாங்கி பரிவாக மாத்திரைதான் வப்பழம்போலாக்கே. (சுகூ)

ஆக்கியே சீலைமண் மூன்றுசெய்து அப்பனே ரவியிலே யுலர்ந்த பின்பு, வாக்கியமாய்ச் சீலைமண் மூன்றுசெய்து மைந்தனே யுலர்ந்த பின்பு குக்குடத்திற்போடு, தாக்கிவிடு தேனிலே கொள்ளும்போது க்ஷயத்தையெல்லாம் வாங்கிவிடும் காசந்தீரும், மூக்கிலே பீனிசமுஞ் சூலைக்கட்டு விழிக்குமுன்னே போறேனென்று மோடிப்போமே. ()

ஓடிவிடு மிஞ்சியுட சாற்றிற்கொள்ள வுத்தமனே சன்னிவகை யெட்டுந்தீரும், பாடுகின்ற பித்தசன்னி சொல்லக்கேளு பக்கமே யணுகாமற் பயந்துபோகும், தேடியே யிந்தமுறை செய்யும்போது சிவசூட்சஞ் சிக்கிவிடுஞ் சித்தனுவார், நாடிநின்று வாடாதே யுபதேசந்தான் நம்-மம்-வம்-சிவம்-யென்றுஓதே. (சுகடு)

ஐந்துப்பு மாத்திரை.

ஓதுவா யின்னமொரு மாத்திரைதான் கேளு வுறுதியுள்ள வுப்புவைந்து பலமொன்றாக்கி, மாதுவாய் குளிர்ந்திருக்குந் தாமரைதான் மைந்தனே நாயுருவிச் சாறுங்கூட்டி, வேதுவைபோல் குகைபண்ணி வைத்துக்கொண்டு விதமான வுப்பரைத்து வுள்ளே வைத்து, சேர்த்துவாய் சீலைமண் மூன்றுகட்டி திறமாக மயிற்புடத்தி லுருகுப்பாரே. ()

உருக்கியபின் னுப்பெடுத்து வைத்துக்கொண்டு ஒருபலந்தான் காரத்தை யொன்றாய்ச் சேர்த்து, மருக்கமுள்ள நன்னாரிச் சாற்றைவிட்டு வளமாகத் தானரைத்து மண்தான் கட்டி, கருவாக சீலைதான் வலுவாய்ச்செய்து சடினமாம் ரவிதனிலே காயவைத்து, திருவாக வுலர்ந்தபின் புடமேகோழி தீரப்பா வாறியபின் னெடுத்துக் கொள்ளே. (சுகஎ)

கொள்ளவே யிறுகியது கற்போலாகுங் கூறினே னனுபானங் கூர்ந்துகேளு, விள்ளுறேன் வெண்ணெயிலே கொஞ்ச மீந்தால் மேலான பாண்டுவகை வீக்கந்தீரும், தெள்ளுறேன் திரிகடுகு கியாழத்திலீய திறமான தோஷமெல்லாஞ் சேராதோடும், எள்ளளவு தப்பில்லை மைந்தாகேளு யிருதயத்து வியாதியெல்லா மிறங்கிப்போமே. ()

கேர்ப்பத்துக்கு வீரமாத்திரை.

இரங்கவே யின்னமொரு மாத்திரைதான் கேளு எலுமிச்சம் பழமப்பா பத்துவாங்கி, வரமான வாலைதனைப் பூசைபண்ணி மைந்தனே பழத்தினுட சாறுவாங்கி, திறங்கண்டு நாகத்தை சுத்திசெய்து செப்புகிறேன் தங்கக்கா சொன்று வாங்கி, மரமான மங்கைக்கு யீயவேண்டி மைந்தனே திப்பிலிபோல் மாத்திரைதான் பண்ணே. (சுகசு)

பண்ணியே சீலைமண் மூன்று செய்து பாங்கான மயிற்புடமே தீர்த்துபோடு, எண்ணியே யலையாதே வீரமாத்திரை யெவருக்குஞ் சொல்லாதே யிதமாய்க்கேளு, பண்ணியுட நெய்யிலே கொடுத்தாயாகில் பாசமெல்லா மற்றுவிடுங் கெர்ப்பமுண்டாம், தண்ணியிலே தான் குளித்து வருகும்போது தங்கம்போல் நிற்குமடா தேசந்தானே. ()

தேகத்தில் வியாதிக்கு அனுபானங்கேள் நீலியுட கியாழத்திற் கொடுக்கும்போது, மோகித்த மங்கையினால் வந்தமேகம் மூவிரண்டா திலே முடிந்துபோகும், தாகித்த சூத்துக்கு துளசிச்சாறு சாற்றினே னனுபானந் தண்மையாக, பூவித்தை பாடுமெத்த வப்பாகேளு, பொய் யென்று யெண்ணாதே பொருந்திப்பாரே. (சஉக)

## அக்கினிகுமாரன் மாத்திரை.

பொருந்திப்பா ரின்னமொரு மாத்திரைதான் கேளு புகழான கடுக்காயும் சவர்க்காரங்கூட்டு, திருந்தவே பூரமப்பா சரியிடைதான் கூட்டு திறமாக லிங்கமப்பா நாலிலொன்று கூட்டு, அருந்தவே கல் மதந்தா னெட்டி லொன்றுகூட்டு அப்பனே யிவையெல்லா மொன் றாய்க்கூட்டி, திறந்திடவே பொடிபண்ணி மாதளம்பூச் சாற்றில் திற மாக மத்தித்து வைத்துக்கொள்ளே. (சஉஉ)

வைத்தபின்பு கும்மட்டிக் காயுஞ்சாறு வளமான திருகுகள்ளிப் பாலுங்கூட்டி, பொற்றலையான் சாறப்பா நாலிலொன்று புகழாக யிவை யெல்லா மொன்றாய்ச்சேர்த்து, வற்றவற்ற முச்சாம மரைத்துக் கொண்டு மைந்தனே திப்பிலிபோல் மாத்திரைதான்பண்ணு, சித்திர மாய் ரவியிலே யுலர்த்திக்கொண்டு சீலமண் மூன்றுசெய்து ரவியில் வையே. (சஉ௩)

வையப்பா வுலர்ந்தபின்பு சீலமண்தான் செய்து வளமான குக் குடத்தில் மாண்டுபோகும், உய்யவே மாத்திரைதான் கற்போலாகு முறுதியா யனுபானஞ் சொல்லக்கேளு, நெய்யிலே தான் கொடுக்க கடுப்புதீரும் நிலையான பாண்டுவகை நில்லாதோடும், தையலாள் தான றியச் சொல்லிவிட்டேன் தப்பாதே சொல்லுகிறேன் சார்ந்துபாரே. ()

## சந்தனாதி மாத்திரை.

சார்ந்துபா ரிஞ்சியுட சாற்றிற் கொள்ளச் சூதயுமான சன்னியும் ராசாவாகும், கூர்ந்துபார் மாத்திரையின் பேரேதென்றால் குணமான வக்கினிகுமார னென்று பேரேயாகும், சேர்ந்துபா ரின்னமொரு மாத் திரைதானுண்டு செப்புகிறே னேதென்னால் சந்தனாதி, ஊர்ந்துவிடு நிலனாகந் துழித்தயிலம் வாங்கி யுற்றதொரு திப்பிலியுட் சுன்னம் வாங்கே. (சஉ௫)

திப்பிலியுட் சுன்னமப்பா யெடுத்துக்கொண்டு திறமாக நாகத்தின் மேலேபூசி, அப்பிவிடு மேலுமொரு தயிலம்பூசி அன்னம்போல் சீலைமண் மூன்றுசெய்து, தப்பாதே புடத்திலிடு நீறதாகில் தயவாக யவ்விடைசுக்கு காரமிடு நாபிகூட்டு, இப்பியே யெட்டிதயிலம் விட்டரைத்து வாங்கி யிதமாக மாத்திரைதான் திப்பிலி போறப்பண்ணே. ()

பண்ணியே ரவியிலே யுலர்த்திக்கொண்டு பாங்காகப் பதனமே பண்ணிக்கொண்டு, எண்ணியே கியாழமடா நன்னாரியாகும் இதமான மேகமப்பா யிருபதுக்கும், விண்ணிலே யிருக்காம லோடிப்போகும் விவரமாய்ச் சொல்லிவிட்டேன் விளம்பக் கேளு, உன்னினைவி லென்னூலை யறிந்தாயானால் உத்தமனே சிவபதவி யெய்துவாரே. (௬௨௭)

வாரான சிரக கியாழத்திலீய மைந்தனே பித்தத்தா லெடுத்த கூர்மை, வாரான வாந்தியடா சோகைபாண்டு மகத்தான புண்புரைகள் மாண்டுபோகும், காரான நெய்யிலே யுண்ணும்போது காந்தலொடு வாந்திகுன்மங் காணாதோடும், கூரான மாத்திரைக்குப் பேரேதென்றால் குபேரனென்று பேராகுங் குறித்துக்காணே. (௬௨௮)

## குபேரன் மாத்திரை.

காணப்பா யின்னமொரு மாத்திரைதான்கேளு கருவானசவ்வீரம் வாங்கியேதான், தோணப்பா வாடுதொடா மூலிவேருஞ் சொல்லரிய திருகுகள்ளிப் பட்டைகூட்டு, ஊணப்பா குழித்தயில மிறக்கிக்கொண்டு உத்தமனே வீரத்தின்மேலேபூசி, தாணப்பா மயிற்புடத்தில் நீறிக்கொள்ளும் தப்பாதே தானெடுத்து வைத்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா வெள்ளுள்ளிக் காயங்கூட்டு குறிப்பான திப்பிலியுமாத்தைகூட்டு, தெள்ளப்பா தேன்கூட்டி யரைத்துக்கொள்ளு திறமாக விருசாம முரைத்தபின்பு, மெள்ளப்பா மெழுகுபத மாகுமட்டும் மீளவேதானரைப்பாய்க் கைவிடாமல், விள்ளப்பா மாத்திரைதான் கழற்காய்போல விளங்கவே யுலர்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. ()

கொண்டபின்பு வனுபான மேதேயாகில் கொடிவேலிக் கியாழத்திற் கொள்ளும்போது, உண்டான சன்னியெல்லா மோடிப்போகும் உத்தமனே குளிர்காய்ச்சல் பிணிசங்கள், பண்டான பாண்டுவகை சோகைவீக்கம் பறந்துவிடு மனுபானம் பாலேயாகும், உண்டான படிசொன்னே னறிந்துபாரு உத்தமனே யிதன்பேரு வயிரவியென்றுரைக்சலாமே. (௬௩௧)

## இந்திரன் மாத்திரை.

உரைக்கவே யின்னமொரு மாத்திரையாய்க் கேளு வுறுதியுள்ள சிங்கியப்பா பலந்தான்வாங்கி, மரைக்காதே கருநொச்சி சுண்டை தும்பை மைந்தனே யிதுமூன்றுங் குழித்தயிலம் வாங்கி, திரைத்து விடு சிங்கியின்மேற் பூசிக்கொண்டு திறமான சுன்னத்தை யதன்மேற் பூசி, வரைத்துவிடு குக்குடத்தில் மாண்டுபோகு மைந்தனே யாறவிட் டெடுத்துக்கொள்ளே. (சஙஉ)

எடுத்தபின்பு கட்டிதனை வாங்கிமைந்தா யிரதமப்பா காசிடைதா னதிலேகூட்டி, தொடுத்துவிடு பாஷாண மெட்டிலொன்று சொல்லுகி றேன் பூரமப்பா வாறிலொன்று, மடுத்திட்ட மேனியுட சாற்றாலாட்டி மைந்தனே முச்சாம மரைத்துவாங்கி, உருட்டுவாய் மாத்திரைதான் கழற்காய்போல உத்தமனே ரவியிலேயுலர்த்தி பின்பே. (சஙங)

## இருமல் வாராமல் மாத்திரை.

உலர்ந்தபின்பு சீலைமண் கட்டிரண்டு உவப்பான குக்குடத்தில் புடமேதீர்ந்து, சலம்பெறவே பராபரை வாலைக்கப்பா சத்தியை நீ பூசைபண்ணி தயவாய்ப்பாரு, சிலம்பினுட சத்தமப்பா கேட்குமட் டும் தியானத்தை விடுகாதே செப்பினேன் பார், அலர்ந்ததடா கப சன்னி யோடிப்போகும் அப்பனே யனுபானஞ் சொல்லுறேனே. ()

சொல்லுகிறே னரிப்புடலுங் கியாழமீயச் சுருதியாய் பித்தசுர சன்னிபோகும், வெல்லுகிறேன் துளசியுட சாற்றிலீய மேலான வதா சுரஞ் சன்னிபோகும், மல்லுகிறேன் பயித்தியத்தில் கபம் வந்தாக் கால் மாண்டுவிடும் ரோகமப்பா வகையாய்ப்பாரு, எல்லையா மிதன் பேரு யேதேயாகில் இந்திரன்றன் மாத்திரையென் றியம்புவேனே. ()

இயம்புவே னின்னமொரு மாத்திரைதான்கேளு இதமான செருப் படியு மமுக்குறாவும், சுயம்பெறவே குழித்தயில மிறக்கிக் கொண்டு சொல்லுகிறேன் துத்தத்தைப் பலமாய்வாங்கி, மயம்பெறவே தயிலத் தை மேலேபூசு மைந்தனே சீலைமண் வகையாய்ச் செய்து கலங்காதே யாறியபின் னெடுத்துக்கொண்டு கையான்றன் சாற்றிலே யரைதப் பாதே. (சஙசு)

அரைக்கையிலே பாஷாண மெட்டிலொன்று அப்பனே பூரமடா யாறிலொன்று, உரைக்கிறேன் முத்தப்பா பத்திலொன்று வுறுதியுள்ள காரமப்பா வாறிலொன்று, திரைக்கிறேன் வெள்ளுள்ளி நாலிலொன்று திறமான காயமப்பா அஞ்சிலொன்று, அரைத்துவிடு பனிநீராற் சாமம் ரண்டு அப்பனே மேனியுட சாற்றிலொன்றே. (சஙஎ)

ஒன்றாகச்சாம மரைக்கும்போது வொட்டுமப்பா கல்லோடே கல்லும்பாரு, தொண்டருக்குச் சொல்லாதே மாத்திரையின் மார்க்கஞ் சொன்னாலு மிகழ்ச்சிசொல்வார் சுணங்காப்பா, நன்றாகத் திப்பிலியின் காயைப்போல நளினமா யுருட்டிவிடு குக்குடமேபோடு, விண்டேனன் மாத்திரையின் பேரேதாகில் விருமதுவார பாலரென்று விளம்ப லாமே. (சஙஅ)

விளம்பவே யனுபானஞ் சொல்லக்கேளு வெள்ளாட்டுப் பாலிலே யுண்ணும்போது, தளம்புகிற குன்மங்க ளெட்டுந்தீருஞ் சன்னிக்கு வேம்பினுட கியாழமாகும், உளம்புகிற குட்டத்துக் கனுபான மைந்தா வொன்றான வமுக்குரா கியாழமாகும், களிப்பான பாண்டுக்கும் காசத் துக்கப்பா கடுக்காயுங் கியாழமுமாங் கண்டுபாரே. (சஙகூ)

சித்தன் மாத்திரை.

பாரப்பா யின்னமொரு மாத்திரைதான் கேளு பரிவான தாள கமோ பலந்தானென்று, கூரப்பா யெட்டிவிதைக் குழித்தயிலம் வாங் கிக் குறையாமற் சிப்பியுட சுன்னங்கூட்டி, காரப்பா சீலைமண் மூன்று கட்டி கைமுறையாய் ரவியிலே யுலர்ந்தபின்பு, தேரப்பா வங்கபொடி பத்திலொன்று திறமாகக் குறையாமற் சேர்த்துக்கொள்ளே. (சச0)

சேர்த்துமே யிவையெல்லா மூன்றுநாளுந் திடமாகத் தானரைத்து நவ்வக்காய்போல், மாத்திரைதா னுருட்டியே வைத்துக்கொண்டு மைந் தனே யரைக்கவொரு மருந்து அண்டம், ஊற்றியே யரையப்பா மைந்தா மூன்று வுறுதியாய்ச் சொல்லிவிட்டேன் குக்குடத்திற் போடு, எற்றி விடு வாலைக்குத் தூபதீப மிதஞ்சொன்னே மதன்பேராஞ் சித்தனாமே.()

ஆமப்பா வனுபானஞ் சொல்லக்கேளு அத்திவேர் கியாழத்திற் கொடுக்கும்போது, தாமப்பா வாதத்தால் வந்தநோய்கள் சாடிவிடுஞ் சொல்லுகிறேன் தாக்கிப்பாரு, நாமப்பா சுக்கினுட கியாழத்திற் கொள்ள நாடிவிடுஞ் சீவனப்பா வுள்ளேகாணும், நாமப்பா கண்டுசொ ன்னே மிந்தநூலை நடுமனையில் வைத்திருக்க நோய்கள்போமே. (சசஉ)

## பஞ்சகலியாணி மாத்திரை.

போமப்பா யின்னமொரு மாத்திரைதான்கேளு புகழான தாம்பர சுன்னமாக்கி, தாமப்பா சுன்னத்திற் பாதிபாதி தயவாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு, நாமப்பா நாகத்தின் மேலேயப்பி நன்மகனே சீலே மண் மூன்றுசெய்து, தாமப்பா குக்குடத்தி னீறிப்போகுந் தனியாகக் கட்டியதை யெடுத்துக்கொள்ளே. (சசங)

கொள்ளவே நாகமப்பா விராகனென்று கொடிதான தாம்பர சுன்னம்ஒன்று, வெள்ளையொரு பாஷாணம் விராகனென்று விதமாகத் தாம்பரம்||விராகனென்று, தள்ளுநீ வீரமப்பா விராகனென்று சாதகமா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி, விள்ளுகிறேன் விட்டரைக்கத் தயிலங்கேளு|விட்டுணுகிராந்தியடா தயிலந்தானே. (சசச)

தானாகக் குழித்தயில மிறக்கிக்கொண்டு தருசங்கங் குப்பியுட சாறுகூட்டி,|ஊனமென்ற கபடமெல்லா நீக்கித்தள்ளி யொருநாள்தானரைக்கவே வெண்ணெய்போலாம், தேனதிலே யூறவிட்டுத்தெளிந்த பின்பு தெளிவாக சாமமது மைபோலாட்டி, மானேகேள் மாத்திரைதானீச்சங்காய்போல் மைந்தனே தானுருட்டி ரவியில்வையே. (சசரு)

வைத்துவிடு ரவியிலே யுலர்ந்தபின்பு மைந்தனே சீலேமண் மூன்றுசெய்து, சத்தியைத்தான் தியானமிட்டுக் குக்குடமேபோடு தண்ணீரை விளவியே தொழுதுகொள்ளு, முத்திக்கு மாத்திரையை யெடுத்துப்பாரு முருக்கம்பூப் போலேயப்பா சிவந்துகாணும், எத்திசைக்கு மிகுந்த சித்தனான யெழிலான பஞ்சகலியாணியாமே. (சசசு)

கலியாண மங்கையர்க்குத் தேனிற்கொள்ளக் கசடெல்லா மறுத்துவிடுங் கெர்ப்பமுண்டாம், மலையதுபோல் நீரேறும் பேர்களுக்கு மைந்தனே வெள்ளாட்டுக் கோமயந்தான், இலேபோலே யுலருகிற தேகத்துக்கு மெண்ணெயப்பா காரெள்ளுத் தயிலம்பாரு, முலைமீறித் திரளாத மங்கையற்கு மூப்பான வாவினுட பாலுமாமே. (சசஎ)

பாலுமா மனுபான மின்னங்கேளு பரிவான யிஞ்சியுட சாற்றிற்கொள்ள, மேலுள்ள சனியெல்லாம் பறந்துபோகு மேலான வண்டுகடி புழுவெட்டுப்போம், பாலான வஸ்துவிலே கொள்ளும்போது பாண்டுவகை குஷ்டமெல்லாம் பறந்துபோகும், காலான விஷங்களுக்குக் கையாந்தகரை கனமாகக் கியாழமுண்டு கண்டுபாரே. (சசஅ)

கண்டுகொள் ளின்னமொரு மாத்திரைதான் கேளு கருவான கடுக்காய்தான் பலமோவொன்று, விண்டுகொள்வேன் கிராம்பு பலமோ வொன்று விதமான நல்மிளகு பலமேவொன்று, நண்டான வோடப்பா பலமோவொன்று நன்ருகவே யிடித்துத் தூளதாக்கி, கொண்டான குழித்தயில மிறக்கிவாங்கிக் குப்பியிலே தானடைத்து வைத்துக் கொள்ளே. (சசகூ)

வைத்தபின்பு சாதிலிங்கம் விராகன்ரண்டு வளமான தாளகமோ விராகன்ரண்டு, முத்தியுள்ள கெந்தகமோ விராகன்ரண்டு முதலான கடுங்காரம் விராகன்ரண்டு, சித்தான பாஷாணம் விராகன்ரண்டு திற மான வெண்காரம் விராகன்ரண்டு, உத்தியா யிவையெல்லாம் நிறுத்துக் கொண்டு உத்தமனே தயிலத்தில் தோய்த்துக்கொள்ளே. (சரு0)

தோய்த்துவிடு ரவியிலே யுலர்ந்ததாஞல் துடியாகச் சீலைமண் ணுறுகட்டி, மாய்த்துவிடு நிழலிலே யுலர்ந்தபின்பு மகத்தான குக்குட மாம் புடத்திற்போடு, ஏய்ந்துவிடு சிவகுருவைப் பூசைபண்ணு யீஸ்வ ரியைத் தியானமிட் டெடுத்துக்கொள்ளு, தாழ்ந்துவிடு முச்சாம மரை க்கும்போது தனிமெழுகு பதமாகுந் தாக்கிப்பாரே. (சருக)

## நயன சஞ்சீவி மாத்திரை.

தாக்கிப்பார் மெழுகுபோ லாகும்போது தனியான மாத்திரைதா னீச்சங்காய்போல், பாக்கியமாம் ரவியிலே யுலர்ந்தபின்பு பரிவாகச் சீலைமண் ணிரண்டுசெய்து, ஆக்கியமாய் ரவிதனிலே காய்வைத்து அப் பனே கணீரெனச் சத்தமிட்டால், வாக்கியமாய்க் குக்ருடத்திற் புட மே தீரு மைந்தனே யெடுத்துநன்ரு யரைத்துக்கொள்ளே. (சரு௨)

கொண்டபின் பாத்தை சுக்குக் கியாழத்திலீய கொடியதோர்சன் னியெட்டுங்கூட்டோடேபோம், நன்ருன தேனிலே கொள்ளும்போது நாவறளும் பித்தத்தை நாடொட்டாது, பன்ருன துளசியுட கியாழத் திற் கொள்ளப் பரிவான காசமெல்லாம் பறந்துபோகும், உண்டான படிசொன்னேன் மாத்திரையின்பேரு உத்தமனே நயனசஞ்சீவி யாமே. (சருங)

## வாதசன்னிக்கும் நரை திரை மாறவு மாத்திரை.

சஞ்சீவி யானதோ ரிஞ்சியப்பா தனியாகப் பலம்பத்து வாங்கிக் கொண்டு, மஞ்சான கஸ்தூரிச் சாறுங்கூட்டி மகிமையா யிவைரண்டு மத்தித்தேதான், அஞ்சான செம்பொன்று வெள்ளியொன்று அழகான முத்தொன்று தங்கமொன்று, பஞ்சாங்கம் பருத்திவித்தை அச்சாறிட் டுப் பாங்காக முச்சாம மரைத்துக்கொள்ளே. (சருச)

அரைத்துக்கொள் திப்பிலிபோல் மாத்திரைதான் பண்ணி அப்பனே ரவியிலே யுலர்த்திக்கொண்டு, உரைத்துவிடு வெள்ளுள்ளிக் கியாழம் வைத்து வுறுதியாய்த் தான்கொடுக்க வாதசன்னி, குறித்திடவே நில்லாம லோடிப்போகுங் கொள்கையாம் பித்தசன்னிக் கனுபானங்கேள், நரைக்கிறதோர் மைந்தனுக்கு வருஷங்கொள்ள நரைதிரையு மற்றுவிடும் நன்றாய்க்கேளே. (சடுரு)

## காந்த மாத்திரை.

கேளப்பா யின்னமொரு மாத்திரைதான் கேளு கெடியான சிங்கியுட பற்பமொன்று, நாளப்பா வங்கத்தின் பற்பமொன்று நலமான வுப்பினுட பற்பமொன்று, வாளப்பா தாளகத்தின் பற்பமொன்று வகையாகச் சத்தினுட பற்பமொன்று, தாளப்பாயிவையெல்லா மொன்றாய்க் கூட்டி சர்க்குருவைப் பூசைபண்ணித் தாக்கிப்பாரே. (சடுசு)

தாக்கப்பா சங்கஞ்சார் கழஞ்சியொன்று தருவான கொழிஞ்சிச்சார் கழஞ்சியொன்று, நோக்கப்பா பருத்தியின்சார் கழஞ்சியொன்று நுணுக்கமாய் மாதளஞ்சார் பலமோவொன்று, தேக்கப்பா யரைத்துவிடு முச்சாமந்தான் திறமாக மாத்திரைதான் திப்பிலிபோற் பண்ணு, வாக்கப்பா பேசாதே மவுனபூசை வாயுவுட தியானமிட் டெடுத்துக்கொள்ளே. (சடுஎ)

எடுத்துக்கொள் ளனுபானஞ் சொல்லக்கேளு யியலான தூதுவளைக் கியாழமிட்டு, அடுத்திடவே நில்லாதுகெண்டைசூலை அன்பாக வனுபானஞ் சொல்லக்கேளு, கொடுத்துவிடு கிரந்தியுட கியாழத்திலீய குரைநோயுஞ் க்ஷயமிருமல் கூட்டோடேபோம், தொடுத்துவிடுஞ் சன்னிக்கு யிஞ்சிச்சாறு சுக்கு சொல்லுகிறேன் சுருக்கு மெத்த சுருதிதானே. (சடுஅ)

சுருதியா யின்னமொரு மாத்திரைதான் கேளு சொல்லரிய காந்தமதை வாங்கிமைந்தா, பொருதுவாய் நீற்றியதை யெடுத்துக்கொண்டு பூரமுடன் வீரசவர்க் காரங்கூட்டு, அறுகுவாய் கியாழமிட்டு அரைக்கும்போது அப்பனே காயமுட னுள்ளிகூட்டு, மறக்காதே யிருசாமமரைக்கும்போது மாந்தர்களே மருந்தினுட மகிமைதானே. (சடுகூ)

## சன்னிக்கும் பாண்டுக்கும் கஸ்தூரி மாத்திரை.

தானுகை கலக்கடித் திருக்கும்போது தயவாக மாத்திரைதான் றிப்பிலிபோற் பண்ணி, தேனுன தேனிலே கொடுக்கும்போது திறமான கல்லடைப்பு கண்டமாலே, ஊனுன புண்புரைகள் பவுத்திரங்கள் உற்றதோர் சன்னியெல்லா மோடிப்போகும், தேனுன வனுபான மொன்றுக்குள்ளே தீராத நோய்களெல்லாந் தீரும்பாரே. (௪௬0)

பாரப்பா யின்னமொரு மாத்திரைதான் கேளு பாங்கான கஸ்தூரி விராகனென்று, நேரப்பா துருசுதான் விராகனென்று நிலேயான சாரமப்பா விராகனென்று, கூரப்பா சாதிலிங்கம் விராகனென்றுகுறியான வங்கசிங்கி விராகனென்று, சேரப்பா யிவையெல்லா மொன்றாய்க் கூட்டி திறமாக வரைக்கவே தயிலங்கேளே. (௪௬௧)

கேளப்பா சிற்றகத்தி நாயுருவி செடியான கருங்குன்றியிது வகைக்கு மூன்று, நாளப்பா குழித்தயில மிறக்கிக்கொண்டு நலமாக அட்டுப்பைக் கூட்டிநன்றாய், வாளப்பா வரைத்துருட்டி யிதன்மேற்பூசி வளமான குக்குடத்திற் புடத்தைப்போடு, தாளப்பா யெடுத்ததனைக் குப்பிச்சாற்றில் தானரைக்க மையதுபோ லாகும்பாரே. (௪௬௨)

பாரப்பா மையதனை யெடுத்துக்கொண்டு பரிவான சுண்டைபோல் மாத்திரையும் பண்ணி, நேரப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு நினைவாகச் சிவபூசை பண்ணிமைந்தா, தேரப்பா தேனிலே கொள்ளும்போது தீராத நோயெல்லா மகன்றுபோகும், கூரப்பா வனுபான மேதேயாகில் குருவான சுக்குமாங் கூறினேனே. (௪௬௩)

கூறினேன் கியாழத்திற் கொள்ளும்போது கொடிதான சன்னி வகை பாண்டுபோகும், மாறினீ மோரிலே கொள்ளும்போது வளமான பித்தசன்னி வாய்நீரோட்டம், நேருவாய் நெய்யிலே கொள்ளும்போது நிசமான மூலமது நிற்கும்பாரு, ஆருக்குஞ் சொல்லாதே மைந்தாகேளு அரியய னுரைத்தபடி யருளினேனே. (௪௬௪)

## புகைமருந்து வரிசை வாந்திக்குப் புகை.

அறுகுபோல் புகைமருந்து சொல்லக்கேளு அன்பான பூவரசு வேலிமேற்பருத்தி, முருக்கான வேர்சுண்டை வேரரிதாரந்தான் முதலான நண்டோடு முட்டையோடு, மருதான பருத்திவிரை யிவையெல்லாந்தான் வகையொன்று வேர்நிரையாய்த் தூக்கிக்கொண்டு, உருக்கியே புகைவாங்கிக் கொள்ளும்போது ஒய்வில்லா வாந்திகளுங் கழன்றுபோமே. (௪௬௫)

கழன்றுபோ மின்னமொரு புகைதான் கேளு கழுகினுட வெச்ச மப்பா காகமெல்லும், உழன்றுவிடுஞ் சுழிவண்டு வூருசுத்திஉத்தமனே கற்பூரம் சாம்பிராணி, விழன்றிட்ட மருந்தெல்லா மொன்றுய்க்கூட்டு விவரமாய்ப் பொடிபண்ணித் துணியிற்சுத்தி, அழன்றிடவே புகையங் கே வாங்கும்போது அப்பனே வியாதியி னருமைகேளே. (சுசுசு)

அருமைகேள் கபால கரப்பன்குத்து அறிவில்லாப் பீனிசங்கள் செவியடைப்பு, கருமத்தி னல்வந்த வாந்திவிக்கல் கபமெல்லா மறுத்து விடுங் கண்டுபாரு, தருமத்தை மறக்காதே பொய்சொல்லாதே சத்தி யமே துணையென்று சார்ந்துகொள்ளு, வெறுமையில்லை யென்னுலை வைத்திருக்க வேதாந்தம் விளையுமென்று விரும்பிக்காணே. (சுசுஎ)

கபாலத்திரி ஸ்திரீ வசியத்திரி புகை.

காணப்பா யின்னமொரு புகைதான்கேளு கருவான பனையின் மேல் பூவரசு, தோணப்பா தொழுகண்ணி சிணுங்கிவேரும் சுகமாகத் தூபமிட்டுப் பிடுங்கி மைந்தா, பூணப்பா புகையவே சுருளாய்சுத்திப் புகைபடவே ஸ்திரீகளுக்கு வசியமாகும், மூணப்பா நாளைக்கு முக்கால் வாங்கி மூக்கடைப்பு காதடைப்பு பீனிசமும் போமே. (சுசுஅ)

போகுமப்பா யின்னமொரு புகைதான்கேளு புகழான பூவரசு வெள்ளெருக்கன் வேரும், தாகுமப்பா மலைதாங்கி வேருங்கூட்டிச் சந்த னம்போற் பொடிபண்ணி மெழுகுகூட்டு, கூருமப்பா பொடிபண்ணி முன்மருந்தில்கூட்டி குமுறவே ரவியிலே யுலர்ந்தபின்பு, நாகுவாய்திரி கருக்கிப் புகையே வாங்க நலமான வியாதிபடும் பாடுபாரே. (சுசுகூ)

தோண்ணூற்றெட்டைச் சேர்ந்த தோண்ணூற்றெட்டு.

பாரப்பா மண்டையிடி கபாலசூலை பரிவான கண்ணீரும் வாய்நீ ரோட்டம், நேரப்பா விஷங்களுக்கு மிதுவேயாகும் நேரான பீனிசங்க ளெல்லாந்தீரும், கூரப்பா நேத்திரநோய் புழுவெட்டும்போம் பொல் லாத விஷக்கடியும் போகும்பாரு, காரப்பா வொன்றைவிட்டு வொரு நாட்கொள்ள கபாலதிரி மகத்துவத்தைக் காணலாமே. (சஎ0)

காணுவா யின்னமொரு புகைதான்கேளு கருமத்தின் வேருடனே சுக்கு மஞ்சள், தோணப்பா முசலமுக்கி யமுக்குருவுஞ் சொல்லு கிறேன் வகையொன்றுங் குறையாமற்றான், பூணுமப்பாவியிலே வுலர்த்திக்கொண்டு புகழாகச் சந்தனம்போல் பொடியேபண்ணி, பேணுவாய் பயபத்தி யோடே நீதான் பேசாமல் துணியில் வைத்துத் திரித்துக்கொள்ளே. (சஎக)

கொள்ளவே விஷக்கடியு மெலிக்கடியும் போகும் குறையாத நீரடைப்பு சதையடைப்புதீரும், விள்ளுகிறேன் கொர்ப்பத்துப் பாசமெல்லாம் வேரோடே பிடுங்கிவிடும் விவரங்கேளு, துள்ளுகின்ற நாய்கடிக்கும் பேய்கடிக்குமாகுஞ் சூட்சமடா வொருவருக்குஞ் சிக்காதப்பா, விள்ளுகிறேன் தும்மல்விக்க லெல்லாமோடுஞ் சுருதியுள்ள முறையினுட சூட்சந்தானே. (சஎஉ)

பேதன முறியப் புகை.

சூட்சமடா யின்னமொரு புகைதான்கேளு துடியான பொடுதலைவேர் காரையொட்டி, வாச்சான துளசிவேர் துத்த மப்பா வகையாக முருக்கன்வேர் பாறையொட்டி, பாச்சான திப்பிலி மிளகுங்கூட்டி பக்குவமாய்ப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, பூச்சாகத் துணியிலே புரட்டிக்கொண்டு பொருந்தியே யுலர்த்திவிடு திரித்துக்கொள்ளே. ()

கொண்டபின்பு மெழுகாட்டி வைத்துக்கொண்டு கூசாமற் புகையேற்று குறியைப்பாரு, உண்டான புத்தி பேதனத்துக்கெல்லாம் ஊணியே புகைவாங்க வோடிப்போகும், விண்டேனுன் பித்தத்தால், வாந்திமேக வீழ்ந்துமே ரோகமது வகன்றுபோகும், நன்றாகச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளீர் நாட்டிலுள்ள நோய்கட்கு நாட்டினேனே. ()

சன்னி பூதம் போக புகை.

நாட்டினே னின்னமொருபுகைதான்கேளு நலமான வெண்குன்றி விரைதான் பத்து, மூட்டுகிறேன் கருங்குன்றி விரைதான் பத்து முதலான தகரைவிரை கொழிஞ்சியோடு, மாட்டுகிறேன் வெள்ளுள்ளி வால்மிளகு மகத்தான பன்றியுட குளம்பு காஷ்டம், கூட்டியே பொடிபண்ணி வைத்துக்கொண்டு குறையாமல் சாண்திரியாய்த் திரித்துக்கொள்ளே. (சஎரு)

திரித்தபின்பு மெழுகாடி வைத்துக்கொண்டு திறமாகப் புகை வாங்கச் சன்னிபூதம், மரைத்துவிட் டோடிவிடுஞ் சொன்னேன் சொன்னேன் வகையாகப் பித்தசுபம் வாங்கிப்போகும், கரைத்திட்டேன் காதடைப்பு நாசிப்புண்ணும் கைகண்ட புகையாகுங் கண்டுபாரு, நெரித்துவிட்டேன் மானிடர்கள் பிழைக்கவேண்டி நிதமொன்று யெண்ணிப்போய் நிற்பான்பாரே. (௬௭௬)

பாரப்பா யின்னமொரு புகையைக்கேளு பரிவான கோவினுட கொம்புசீவி, நேரப்பா சூதமொரு விராகன்கூட்டி நிலையான வெற்றிலை யின் சாற்றாலாட்டி, கூரப்பா சீவினதை யெடுத்துக்கொண்டு குளம்பாக அரைமருந்தைக் குப்பிகொண்டு, மாரப்பா யேழுதா மமுக்கி யுலாவைத்து மைந்தனே சாதிக்காய் கிராம்பு கூட்டே. (௬௭௭)

கூட்டியபின் னிதுவரைத்துக் குழம்பதாக்கிக் குறையாமல் மூன்றுதரமமுக்கி யுலர்த்திப் பின்பு, மூட்டுவாய் சுருள்சுத்தி யாறுநாளும் முக்கியமாய்ப் புகைவாங்க நோய்கள்கேளு, மாட்டுறேன் தடிசூலை கள்ளிசூலை வாய்கைகால் புண்ணுடனே வாதசூலை, நேட்டமுள்ள சீய்மேகம் வெள்ளைமேகம் நில்லாம லோடிவிடும் நிசமாய்ப்பாரே. (௬௭௮)

நிசமாக யின்னமொரு புகைதான்கேளு நேரான வசம்புடனே யமுக்குறாவும், வசமான கோங்கிலவு தேவதாரம் வகையொன்று விராகனிடை தூக்கிவாங்கி, இசைவாகப் பொடித்துவிடு சந்தனம்போல் இன்னமுண்டு மருந்தப்பா யேதேயாகில், அசையாத வேம்பினுட முத்துஞ்சேர்த்து அப்பனே மெழுகுபோ லரைத்துவாங்கே. (௬௭௯)

வாங்கியபின் கடிதத்தில் பிரட்டிக்கொண்டு மைந்தனே திரியோட்டி யெடுத்துக்கொண்டு, தாங்கியே புகையேற்று சன்னியோடுந் தவறுதே சொல்லிவிட்டேன் சார்ந்துபாரு, தூங்கினவர் போலெழுந்து வார்த்தைசொல்வார் துறந்துவிட்டேன் மாந்தர்களே சூட்சமெல்லாம், நாங்களெல்லாஞ் செய்யுமுறை யிதுவல்லாமல் நாட்டவில்லை மாந்தர்களே நலமாய்ப்பாரே. (௬௮0)

பாரப்பா யின்னமொரு புகைதான்கேளு பாவட்டை கருங்குன்றிமோடியின் வேரும், கூறுநீ யாள்மிரட்டி விரையினோடு கூட்டிவிடு திப்பிலியும் வசம்பினோடும், சேருநீ யிவையெல்லாம் பொடியேபண்ணி திரியுடதுணியிலே வைத்துதேனில், காருநீ ரவியிலே யுலர்ந்தபின்பு கருதியே தானெடுத்துப் பதனம் பண்ணே. (௬௮௧)

## பேயோடத் திரி.

பண்ணவே புகைவாங்கும் போதுகேளு பாசமுள்ள கண்ணப்பா படலம்போகும், எண்ணவே சூலேயொடு கிரந்திமேக மிதமான வண்டு கடி யிடைந்துவோடும், கண்ணுவாய் நீர்ப்பாய்ச்சல் வாய்நீரோட்டம் நாடாது திரியினுட நடனமப்பா, எண்ணிவிடு தாயார்க்குப் பூசை பண்ணு யிறக்காம விருக்கவா மீவாள்பாரே. (சஅ௨)

ஈயவே யின்னமொருபுகைதான்கேளு யிதமான கருங்காலி சடை தானென்று, உய்யவே யதனுடைய வமுர்தமப்பா புரைகுத்திநெய் யெடுத்துக் கொண்டுமேதான், செய்குவாய் நாய்சட்டங் கழுதைக்கட் டந் திறமான மங்கையுட பூநீரோடும், பையவே யிவையெல்லாம் பொடியேபண்ணி பாங்காகச் சிமிளிலே யடைத்துக்கொள்ளே. ()

கொள்ளப்பாநவாச்சாரம் விராகனென்று கூரான கெந்தகந்தான் விராகனென்று, துள்ளவே சவர்க்காரம்விராகனென்று துடியான வெடி யுப்பு விராகனென்று, விள்ளுறே னிவையெல்லாம் பொடியேபண்ணி விவரமாய் முன்மருந்தில் கலந்துகொண்டு, உள்ளபடிசொல்லி விட்டேன் திரியிலூட்டு உத்தமனே யாதிநெய்யில் தோய்த்துக் கொள்ளே. ()

## பேய் ஈளை பெரும்பாடு இதற்குப் புகை.

தோய்த்துவிடு திரியேற்றிப் புகையும்போடு சொல்லடங்காப் பேயெல்லாஞ் சுருண்டுவோடும், மாய்த்துவிடும் ரிஷிபூத மிதுகளெல் லாம் வழிதிரும்பிப் பாராது மைந்தாகேளு, காய்ந்துவிடும் பச்சைமரம் வாடைகண்டால் கருவப்பா கொஞ்சமிது காட்டொணாது, மாய்ந்து விடுஞ் சித்தருக்கு மிகவும்வேணும் வையகத்தி லுள்ளபடி வகையைக் காணே. (சஅ௫)

காணப்பா யின்னமொரு புகைதான்கேளு கசகசா வால்மிளகு கடுகின்வேரும், பூணப்பா தழுதாழை நாயுருஞ்சி புற்றின்மேல் கறளக முஞ் சுக்குங்கூட்டி, பேணப்பா பொடிபண்ணி வைத்துக்கொண்டு பேருக வஸ்திரத்தில் திரியுமாக்கி, ஊணப்பா யாவினது னெய்யில் தோய்த்து வுறுதியாய்க் கருக்கியதை யெடுத்துக்கொள்ளே. (சஅசு)

எடுத்துவிடு கருக்கியதைப் புகையுங்காட்ட யீளையொடு பெரும் பாண்டு யிருண்டகண்ணும், மடுத்ததொரு வாய்வினுட் குத்துகளெல் லாம் வாராது யென்னுடைய புகையைக்கண்டால், தடுத்துவிடும் பேய் பிணிக ளகன்றுபோகும் தாரணியில் யிவ்வேதைக் கடினமெத்த, கொடுத்துவிடு கெர்ப்பமில்லா மங்கையர்க்குக் குறைவில்லே கெர்ப்ப முண்டாங் கூறினேனே. (சஅஎ)

கூறினே னின்னமொரு புகைதான் கேளு குறைவில்லை யாமை யொடு முட்டையோடும், மீறிவிடுங் கருநாயின் காமமப்பா விளங்கியே விழுகையிலே வஸ்திரத்தையிட்டு, மாறிவிடு தீபமிட்டு மெடுத்துக் கொண்டு வகையாக மருந்துண்டு கேளுகேளு, நாறிவிடு நன்னாரிவேர் சிற்றாமணக்கு நலமான கழுகினுட வெச்சங்கூட்டே. (சஅஅ)

கூட்டியே பொடிபண்ணி வைத்துக்கொண்டு கோரோசனை தன் னுடனே சாரப்பூவும், வாட்டியே பொடித்துவிடு திரியில் சேர்த்து மைந்தனே கருங்காலி நெய்யிலமுக்கு, காட்டகத்தின் சாம்பலுடன் சாம்பிராணி சமறவொண்ணாப் புழுகுடனே கஸ்தூரிதானும், ஊட்டி விடு விளக்கேற்றிப் புகையும்போது ஓடாத பேய்களெல்லா மோடுந் தானே. (சஅகூ)

அஷ்டமாசித்தி விவரம்.

ஓடுமப்பா யின்னமுண்டு முறையேதென்றால் உலகத்தி லறிந்தெ டுப்பா யருமைமைந்தா, நாட்டுவா யஷ்டமா சித்திமுத்தி நாயகியு முன் னிற்பாள் நடனம்பாரு, ஊட்டுவா யுருலட்சம் கருவேயொன்று வுறுதி யாய் நான்பார்த்தே னீயும்பாரு, கூட்டுவா யீஸ்வரியைத் தியானம்பண் ணக் குறையாமல் வாழலாங் கூர்ந்துபாரே. (சகூ0)

கூர்ந்துவிட்டேன் கருமுறையுங் குருமுறையுங் காட்டி கூறினே னென்னுடைய நூல்கண்டோர்கள், சேர்ந்திடுவார் சிவபத்தி யருளிச் செய்வார் சித்தனா யிருப்பார்கள் தெளிவுங் காண்பார், மாறுவார் சிவ சத்தி ரண்டுபேரை மறக்காமற் றானிருப்பார் மருளவாமி, ஊரிலே யிருந்துகொண்டு அனேககாலம் உத்தமர்க ளிருப்பார்க ளூடுதானே. ()

ஊடுபா ரத்திமுகன் றியானமப்பா வுரைக்கிறேன் கேளுநீ யுண் மையாக, கூடுவாய் ஓம் - இரிம் - சிரியும் - அம் - கங் - கங் - ஓமென்று, கூட்டிவிடு லட்சமுரு கூட்டி, நாடியே சித்திமுத்தி யறிவுதந்து நாட்டி வைப்பார் ஞானத்தின் சூட்சங்காட்டி, வாடியே யலையாதே மைந்தா கேளீர் மாளாத வரமீவார் வரிசைபாரே. (சகூஉ)

கணபதி தியானம் சுப்பிரமணியர் தியானம் வீரபத்திரர் தியானம்.

வரிசையாய் சுப்பிரமணியர் தியானங்கேளு வகையாக இரியும் சிரியும் - குருஓமென்று, துருசாக லட்சமுரு தியானம்பண்ணச் சூட்ச மப்பா யஷ்டமா சித்தியாடும், கரிமுகனுஞ் சிவகுருவு மிரண்டுமொன் றாய்க் காணலாங் கைலாச பரமுங்காணும், அறியவே சொல்லிவிட் டேன் மைந்தாகேளீர் அருளான மந்திரமு மிதுதான்பாரே. (சகூங

பாரப்பா வீரபத்திரர் தியானங்கேளு பரிவான ஓம் - சிவசிவ ல-ல-ல-ல-ல-லி-லி-லி-லி-சங்சங்சிவயென்று, நேரப்பா லட்சமுரு தியானம்பண்ண நிச்சயமாய்த் தற்சொரூபங்காணும், காரப்பா பூசையிடு வயிரவன்றான் கருதிக்கேள் தியானமப்பா யேதேயாகில், சேரப்பா ஓம் இறியும் வடுகாயா வடுகாயா நமாவென்று செப்புவாய் லட்சமுரு தியானந்தானே. (சகூச)

தியானமப்பா வைரவியும் பத்திரகாளி செபங்கேளு அம் - நம் சங் சிவாயவென்று, மயமாக வுருவப்பா லட்சம்போடு வாராகியுட தியானமிடு வங்-வங்-சிங்-சிங்-அம்-சிவவென்று, நயமாக வுருவப்பா லட்சம்போடு செபமேபண்ணு நாடார்களெமதூதர் நம்மள்மட்டும், பயமேது வாலையவ ளருகில்நிற்கப் பாராபரத்தைக் காட்டியே பலமீவாளே. ()

ஈவதுதா னுருக்கு யென்றாயாகில் யிதமான சிற்றின்ப மறந்த பேர்க்கு, ஈவதுதா னுருக்கு யென்றுகேளு யீஸ்வரியை மறவாமற் பூசித்தோர்க்கு, ஈவதுதா னுருக்கு யென்றுகேளு யென்னாலைப் பூசித்து யெண்ணினோர்க்கு, ஈவதுதா னிறக்காத வரத்தையீந்து எப்போது மிப்படியே யிருந்துவாழே. (சகூசு)

வாழவே யின்னமொரு தியானமப்பா வகையாக மூலியொன்று சொல்லக்கேளு, நாளப்பா ஞாயிறிலே காப்புகட்டி ரம்-ரம்-சிங்-அம்-சிவா வென்றோது, தாளப்பா வுருநூறு செபித்துக்கொண்டு தயவாக மாசாண் கிழ்க்காய்நெல்லை, வேரப்பா யறுக்காமற் பிடுங்கும்போது பெலியொன்று தான்கொடுத்து யெடுத்துக்கொள்ளே. (சகூஎ)

எடுத்தபின்பு கன்னியுட நூலாற்கட்டி யிரும்பான சத்தியிலே யடைத்துக்கட்டு, தொடுத்திட்ட பூதமெல்லா மோடும்பாரு சொல்லுகிறே னிர்சமோகனமே யாகும், மடுத்திட்ட சிறியாநங்கைக்கப்பா வகையாகச்செவ்வாயில்காப்புகட்டி, முடித்துவிடு மூலமென்ற மந்திரத்தைக்கேளு ஓம்-மோகினி-இறியும்-சிறியும்- அம்- சுவாவென்றே. ()

சிவாயமென்று செபம்பண்ணி பெலியுமீந்து திறமாக வளையமாய் நூலில்சுற்றி, உபாயமாய்த் தீபமிட்டுக்கையிற்போட வுத்தமனே சாப மோகனமுமாகும், கபாயமிட்டு வைப்பார்க ளுகமொண்ணுக கருவெல்லாம் வழிந்துவிடுங் கடுகப்பாரு, தவமான யெழுத்தப்பா சாபத்துக்குச் சாற்றினேன் சிவத்தினுட தயவுதானே. (சகூகூ)

## கருமத்தன் பூடு.

தயவாகக் கருமத்தன் பூடுக்கப்பா தாயான வெள்ளியன்று காப்பு கட்டி, மயமாக மந்திரந்தான் கேளுகேளுஓம்-வங்-வங்-அம்-அம்-மென் றோது, பயமப்பா வாகாது வுருவோநூறு பாடினேன் செவ்வாயிற் பிடுங்கும்போது, நயமாகப்பெலியீந்துக் கொடுத்துமேதான் நலமாக வயிரவற்கு பூசைகொள்ளே. (ரு00)

## விஷ்ணுமூலி வசிகரம்.

கொள்ளவே கன்னியுட நூலால்சுற்றிக் குருதியாய்ச் செம்பினுட சத்திலிட்டு, விள்ளுகிறேன் முன்னுருவைத் தியானம்பண்ணி வெடி முகத்திற் றன்புதைக்கக் குண்டேருது, கள்ளனு யிருக்கிற பேர்கள் கண்டால்கைகட்டித் தான்வணங்கும் கருதிப்பாரு, வெள்ளியென்றகிழ மைக்குச் சொல்லுறேன்கேள் விட்டுணுகிராந்திக்குக் காப்புகட்டே. ()

கட்டிவிடு மந்திரமோ சொல்லக்கேளு கருதிநில்லு மைந்தனே கருக்காட்டாதே, செட்டிவிடும் விடும் விசு விசு காங்கிங் அம் சிவாயெ ன்று வுரையடா மந்திரமுருநூறு, வெட்டிவிடு கிடாவொன்று பொங்க லிட்டு விவரமாய்த் தான்பிடுங்கி வைத்துக்கொண்டு, பட்டியிலே தான் புதைக்கப் பிணியண்டாது பலருக்கும் வசிகரமாம் பாருபாரே. (ரு0உ)

## பேய் உச்சாடன மூலி.

பாரடா யின்னமொரு மூலிகேளு பாங்கான வன்முருங்கை காப் புகட்டி, நேரடா திங்கள்நறுந் தீபமிட்டு நிசமாகப் பெலியொன்று செவ் வாய்க்கீந்து, மாரடா மந்திரந்தான் சொல்லக்கேளு வம் வம் வாவா சி அம் இம் ஓம்மென்றோது, சேரடா வுருநூறு செபித்துக்கொண்டு திட மாகப் பெலிகொடுத்து வாங்கிவையே. (ரு0ரு)

வையப்பா தாமரையி னூலாற்சுற்றி மைந்தனே சாம்பிராணி தூபமிட்டு, உய்யவே பேய்களுக்கு வுச்சாடனமுமாகு முத்தமனே நம்மளுக்கு விஷத்துக்காகும், பையவே யின்னமொரு மூலிகேளு பரி வான் வழுக்குறு பாருபாரு, வையகத்திற் பேயெல்லாம் நில்லாதோடு மங்கையர்க்குக் கட்டவே கெர்ப்பமுண்டாமே. (ரு0சா)

ஆமப்பா ஞாயிறு அம்மாவாசி அந்தநல்ல நாளையிலே காப்புசட்டி, தாமப்பா மூன்றுநா ளுருவேபோடு தப்பாதே மந்திரந்தா னேதேயா கில், வாகுமப்பா ஓம்க்ஷணம் பிரிமயிறீம்மென்று வசையாக வுருநூறு தியானம்பண்ணி, நாமப்பா நூலாலே கட்டிக்கொண்டு நன்மையாய் வைத்திருக்கப் பசாசுபோமே. (ருOரு)

## படை முறிய.

வைத்திருக்க யின்னமொரு மூலிகேளு வசியென்ற தாமப்பா நாளோபூசம், வைத்திடவே வாரமப்பா ஞாயிறுகும் தயவாக வெள் ளெருக்கில் காப்புகட்டி, நித்தமப்பா மூன்றுநாள் பெலிகொடுத்து நிச மாகப் பிடுங்கியதைப் பட்டுநூலால் சுற்றி, பத்தியாய்ப் பொன்சிமிளி லடைத்துக்கொண்டு படைமுகத்திற் போய்விடுநீ விலகும்பாரே. ()

## நடக்க வசியமாக.

விலகவே மூலியுண்டு சொல்லக்கேளு வெண்குன்றி வேருக்குக் காப்புகட்டி, தலையிலே யமுதுவைத்துப் படைத்துக் கொண்டு தய வாகக்கிடாவொன்று பெலியுமீந்து, கலையிலே சுயிற்சுத்தி கையிற்கட்டி கடுகவழி நடக்கவே நடைதோணாது, இடையிலே யிறுத்திவிடு சொல் லைத்தட்டார் எல்லவர்க்கு நல்லவனென் றியம்புவாரே. (ருOஎ)

இயம்பவே மூலியொன்று ரண்டுக்குந்தான் எண்ணிவிடு மந்தி ரமே யொன்றுமாகும், சுயம்பெறவே கருங்குன்றி வேருக்கப்பா சொல் லுகிறேன் மந்திரந்தான் சூட்சங்கேளு, மயம்பெறவே கங்-கங்-லம்-லம் சிவாயநமாவென்று மைந்தனே யிருநூறு வுருவேபோதும், பயம்பெ றவே கிடாவொன்று பெலியுமீந்து பக்குவமாய்ச் சொர்ன்னத்தி லடை த்துக்கட்டே. (ருOஅ)

கட்டியபின் விஷக்கடியு மோடிப்போகுங் கைகடந்த முறைக்காச் சல் காணாதோடும், முட்டிவிடும் பேய்களைத்தா னட்டங்கொள்ளு முனிந்துசொன்னேன் கோபமெல்லாந் தணிந்துகொள்ளும், திட்டமு டன் யிம்மூலி வசியமெத்த திடமான வுருவதுதான் செய்துகொள்ளு, கட்டிலே யிருக்கின்ற நாயைப்போலே கண்மூடி யஞ்சிடுவார் கசடுள் ளோரே. (ருOகூ)

## கசடர் வணங்க.

கசடர்க்கு யின்னமொரு மூலிகேளு கானகத்தில் வாழ்கின்ற செங்கத்தாரி, அசடுதான் போகாமல் ஞாயிறுக்கு அப்பனே காப்பணி ந்து தூபமிட்டு, அசடுவந்து போகாமல் மந்திரந்தான் இம் - உம் - அம் மென்றுசொல்லி யெண்ணிக் கொள்ளு, கசடனுக்கு ஆதுமப்பா பெலியு மீந்து கனமாக வைத்திருக்க வணங்குவாரே. (ருகO)

## எதிராளி வசியம்.

வணங்குவதற் கின்னமொரு மூலிகேளு மலையடியில் அரசுக்குக் காப்புகட்டி, இணங்காத மங்கையுட நூலில்சுத்தி யீசன்றனைத் தியானமிட மந்திரந்தான் கேளு, மணங்கோண நின்றுவிடு மைந்தா கேளு வம்-வம்-றீம்-றீம்-நமசிவாயமென்றுவோது, உணங்கிவிடும் பேர்களுக்குக் கட்டிப்பாரு உடல்தடிக்குந் தேகமடா வுறுதிபாரே. ()

உறுதியாய்ச் சொர்ன்னத்தி லடைத்துக்கொண்டு உத்தமனே சிரசிலே யிருக்கும்போது, மறதியா யெதிராளி நம்மைக்கண்டால் வார்த்தை சொல்வா னவனுடன் வருவான் மலைமட்டும், திருவான மலை யதனில் யிருக்குமூலி தேடரிய சித்தர்கட்கு கிட்டுமப்பா, கருதியே யமுர்தமுண்டு கண்டுகொண்டு கருவான மூலியுட கருத்துகாணே. ()

## தேவர் வசியம்.

காணப்பா யின்னமொரு மூலிகேளு கசடற்ற காவலைக்குக் காப்பு கட்டி, கோணப்பா முன்சொன்ன கிழமைபோலே சுத்திவிடு தீபமப்பா சுருதியாக, பேணப்பா பொங்கலொன்று பெலியே யிட்டுப் பிடுங் கவே மந்திரந்தான் கேளுகேளு, ஊணப்பா அம்-அம்-யிம்-உம்-அம் மென்று உத்தமனே தானெடுத்துச் சிமிளி லாக்கே. (ருகங)

ஆக்கிவிடு சிமிளிலப்பா சொர்ன்னமாகும் அன்பாகச் சிரசிலே தரித்தாயாகில், பாக்கியமாந் தேவருட வசியமாகும் பரிவான சத்துரு வும் பயந்துபோவான், தாக்கிவிடு வெந்நீரில் கொடுத்தாயாகில் தப் பாது பேதியாஞ் சார்ந்துபாரு, வாக்கிலே செய்யான மங்கையற்கு வசி கரமாஞ் சொல்லிவிட்டேன் வகையாய்ப்பாரே. (ருகச)

## பேய் பிணிபோகக் குளிசம்.

வகையாக யின்னமொரு மூலிகேளு மரமான புன்குக்குக் காப்பு கட்டி, நிகையாமற் கிழமையப்பா வெள்ளிவாரம் நிச்சயமாய்த் தூப மிட்டுத் தீபமேற்றி, முகையாகப் பொங்கலிட்டுப் பெலியுமீந்து மூவ ந்தி வேளையிலே பிடுங்கிவந்து, தகையான விரும்பினுட சத்தில்கட்டில் தப்பாது பேய்ப்பிணிகள் சாடிப்போமே. (ருகரு)

## வெட்டருக் கல்.

சாடிப்போ மின்னமொரு மூலிகேளு தயவான புளியின்மே லித்திகண்ணி, கூடினது சொல்லுகிறேன் கேளுமப்பா குணமாகக் கடாவொன்று பொங்கலொன்று, மாட்டிவிடு காப்புநூல் தரித்துக்கொண்டு மைந்தனே தூபமொடு தீபமோடு, நாடியே யோதிவிடு மந்திரத்தை நலமாக அம்-உம்-சிம்-ஓமென்றுசொல்லே. (ருகசு)

சொல்லியே வுருவப்பா நூறுபோடு சூட்சமாய் வேரெடுத்துத் தங்கத்தினுலே, வல்லியமாய் வைத்திருக்க வெட்டருது மைந்தனே சொல்லுகிறேன் மருவிப்பாரு, கல்லிலே வையாதே பலிதம்போகுங் காத்திருந்து மூலிதனை யெடுத்துக்கொள்ளு, வல்லியமாய்ச் சொல்லுகிறேன் ஸ்திரீகளுக்கும் வசிகரமா மென்றுநீ மனதிற்காணே. (ருகஎ)

காணப்பா யின்னமொரு மூலிகேளு கற்றுழஞ் செடிதனக்குக் காப்புகட்டி, தோணப்பா பச்சரிசி பொங்கலிட்டு துளசியா லர்ச்சித்து வுருத்தானூறு, பேணப்பா டம்-லம்-ணம்-ணம் ஸம்மென்று பேசாதே பிடுங்கிவிடு முன்னூல்சுத்தி, ஊணப்பா வெள்ளியுட தகட்டில் மாட்டி யுத்தமனே யிடையிலே வைத்துக்கொள்ளே. (ருகஅ)

## பசாசு வசியம்.

கொள்ளவே சொல்லுகிறேன் பாருபாரு குறுந்தொட்டி செடிதனக்குக் காப்புகட்டி, விள்ளுகிறேள் பொங்கலிட்டுக்கடாவும் வெட்டி வீருகத் தூபதீபங் காட்டியப்பா, கொள்ளுவாய் வேரதனைப் பிடுங்கி மைந்தா கூரான சிமிளிலே யடைத்துக்கொள்ளு, பெள்ளவே பசாசெல்லாஞ் சொல்லைக்கேட்டு விரும்பிநிற்கு மென்றுசொல்லி விளம்பினேனே. (ருகக)

## பேய் பூதமாரணம்.

விளம்பினே னின்னமொரு மூலிகேளு விதமான வாடுதின்னப் பாலைக்கப்பா, தளப்பெறவே ஞாயிறுநாள் காப்புகட்டி தயவாக வுருவப்பா நூறுபோடு, அளம்படவே ஓம்-அம்-ஓம்-உம்-ஹம்-ஹம்-ஹம்-மென்று அப்பனே தியானமிட்டுப் பெலியுமீந்து, வளம்பெறவே பிடுங்கியதைக் கன்னிநூலால் வசையாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (ருஉ0)

வைத்தபின்பு சொர்ன்னத்தால் சுத்திபண்ணி மகத்துவமாய்த் தீபமிட்டு அடைத்துக்கொள்ள, வைத்திடவே மாரணமாம் பேய்கள்பூதந் தாக்கினேன் மெய்ஞ்ஞானச் சார்வுபாரு, முத்துவிலை மதிப்பார்க ளுலகமெல்லாம் மூடரே ஞானத்தை முடிக்கப் போமோ, பத்தியாயிருந்துவிடு யெல்லாமாகும் பரமகுரு தாளடியைப் பாடினேனே. (ருஉக)

## உலகமெல்லாம் வணங்க.

பாடினே னின்னமொரு மூலிகேளு பாங்கான தேவியர்க்குக் காப்புகட்டி, தேடியே தூபதீபந் தானுமிட்டுச் சிறப்பாக மந்திரந்தான் செப்பக்கேளு, நாடியே ஓம்-ரீங்-ரிங்-சிவ-சிவவென்று நலமாகப் பொங் கலிட்டுப் பெலியுமீந்து, பாடியே வுருவப்பா நூற்றுவொன்று பக்கு வமாய்ப் பிடுங்கிநீ நூலால்சுத்தே. (ருஉஉ)

சுத்தியே யெடுத்ததனை வைத்துக்கொண்டு தூப தீபங்கொடுத்துச் சிரசில் கட்டி, பத்தியா யிருந்திடுவா ரசசரப்பா பாங்காகச் சொல்லி விட்டேன் பாருபாரு, முத்தியாய் மூலிகையா லுலகமெல்லா மூண்டுவிடு மென்னென்று கேள்வியாகும், பத்தியா யெண்ணுவித்துப் பேணு பேணு பலருக்கு நல்லவனென்றே பகருவாரே. (ருஉங)

## எதிராளி வசியம்.

பகரவே யின்னமொரு மூலிகேளு பாங்கான சிணுங்கியப்பா காப்புகட்டி, நிகரவே பூசையிடு மந்திரந்தான் கேளு நினைவாக ஓம்-நீலி நீலி-சிவ-சிவ-சிவவென்றோது, உகரவே தான்பிடுங்கி கன்னிநூலால் உத்தமனே தீபமிட்டு வைத்துக்கொள்ளு, தகருமடா யெதிராளி கூட் டிக்கொள்வான் தப்பாதே சொல்லிவிட்டேன் தாக்கிப்பாரே. (ருஉச)

## அஷ்டமாசித்தி மூலி.

தாக்கப்பா யின்னமொரு மூலிகேளு சங்கம்வேர் வடபுறத்தில் காப்புகட்டி, நோக்குவாய் மந்திரந்தான் சொல்லக்கேளு ஓம்-நொடி-நொடி-சிங்-வங்-அம்மென்றுபோடு, போக்குவாய் பெலிகொடுத்துப் பிடுங்கிக்கொள்ளு பொன்னான சுத்தியிலே யடைத்துக்கொள்ளு, வாக் கினாற் சொன்னதெல்லாம் வசியமாகு மைந்தனே யஷ்டமா சித்தி யாமே. (ருஉரு)

## சர்ப்பம் பிடிக்க.

ஆமப்பா யின்னமொரு மூலிசேளு அப்பனே சிந்திற்குக் காப்பு கட்டி, தாமப்பா மூலமென்ற மந்திரந்தான் சேளு சாதகமாய்ச்சொல்லி விட்டேன் சார்ந்துபாரு, காமப்பா வம்-வம்-வங்-வங்-சிவாவென்று கருதிவிடு வுருநூறு காட்டிப்போடு, ஊமப்பா பொங்கலிடு பெலிதா னீந்து உத்தமனே வேர்பிடுங்கி மஞ்சணூல் சுத்தே. (ருஉசு)

சுத்தியே வளையமிட்டுக் கையிற்போட துஷ்டனென்ற சர்ப்ப மெல்லாஞ் சுருங்கிப்போகும், நித்தநித்தந் தியானமிட லோகத்துக்கு நிசமாகவசிகரமாம் நினைவாய்ப்பாரு, பத்தினியாள் வன்முலையா ளிட்ட சாபம் பலியாது மருந்தினிட பாகம்பார்த்து, கர்த்தனைத் தியானமிட்டுக் கிழங்கையுண்ணக் கைகடந்த விஷமெல்லாங் கதறிப்போமே. ()

கதறிப்போ மின்னமொரு மூலிகேளு கருங்காலி வேருக்குக் காப்புகட்டி, சிதறியே போகாமல் மனத்தையொப்பி ஂறீம்-ஂறீம்-அம் உம்-சிவாயென்றோது, சதுரமடா நெல்லாலே பரத்திக்கொண்டு சாம்பிராணித் தூபமிட்டுக் கிடாதான்வெட்டி, நிதரியே வேர்பிடுங்கி மயிரில்கட்ட நிசஞ்சொன்னேன் மிருகமடா கண்டுநில்லே. (௫௨௭)

நில்லாது வோடிவிடு மிருகமப்பா நிச்சயமாய் நம்மளுக்கு மாற்றுனில்லை, பொல்லாது பொல்லாது மூலிசூட்சம் பிடுங்கையிலே யிதற்கெல்லாம் ஆட்டம்போடு, கல்லான மருந்திற்கு சூட்சமெத்தக் சடினமா மானிடவ ரறிதல்மெத்த, புல்லறிவாளர்தான் கண்டுகொள்வார் புகலவே கண்டுசொன்னேன் கருதான்பாரே. (௫௨௮)

## மோடிவைக்க விவரம்.

கருவாக மோடியொன்று சொல்லக்கேளு கடலையொடு மொச்சையப்பா பச்சரிசிகொண்டு, திறமாக வுளுந்துடனே மஞ்சள் சுன்னம் செப்பினே னிவையெல்லா மொன்றாய்க்கூட்டி, மறக்காமல் தும்பை மலர் வேம்பின்கோல் கொண்டு மைந்தனே யுருவடா லட்சப்போடு, பிரமான மந்திரந்தான் கேளுகேளு உரி-உரி - எரி-எரி-ஓம்யென்று தானே. (௫௨௯)

## நான்கு திசையிலுந் தேவதை நிறுத்தல்.

என்றுசெப்ம் பண்ணியே பெலியுமிட்டு யேற்றுவாய் பதமாயேணிதான் சேளு, நன்றாக முச்சந்தி வழியைப்பார்த்து நான்குபுறஞ் சதுரமாய் மெழுகிக்கொள்ளு, கனமாக் முச்சுடரை மனசிலெண்ணி கருத்தாக மயானத்தைப் பூசித்தேதான், விண்டனப்பா சதுரத்தில் குழிதான்வெட்டி வெள்ளாட்டுத் தலையொன்று வுள்ளேவையே. ()

வையப்பா சிரசிலே பணந்தானொன்று மைந்தனே பணமானல் ராசியாகும், உய்யப்பா ராசிபண மென்றுசொல்லி யுருவப்பா வாயிரத்தொண்ணூற்றஞ்சு, பையவே தியானமிட்டு பூசைபண்ணு பரிவாகத் தூபதீபம் பாங்காய்ச்செய்து, கையிலே நீரெடுக்கத் தியானஞ்சேளு கழுவி-கழுவி-வில்லு-வில்லு-கொல்லு-கொல்லு-ஹம் - ஹம் - ஆம்-கூதம் மென்றுபோடே. (௫௩௧)

போடப்பா வடதிசையில் முகமாய்வைத்துப் புகழாக முச்சா ணுக்கப்பாற்கேளு, மாடப்பா முக்கண்ணி விநாயகனை வைத்து வாகாக யேவலுக்கு மந்திரந்தான்கேளு, ஊடப்பா-காங்-கிங்-கூங்-உம்-அம்-அம் சிம்-றம்-ஹம்மென்று உருவப்பா வாயிரத்தொன்றுபோடு, வாட்டமாய் பூசையு மதன்பிறகு வகையாக வறுகோணம் வரைந்திடாயே. (ருகூஉ)

வரைந்திடவே நடுவணையில் ஸ்ரீம்-ஓம்-டும்போடு வகையாக கோணிலேயாறும்போடு, நிறைந்திடவே மந்திரந்தானேதேயாகில் ஓம் நீலா-நீலா-முகாயா-றீம்-றீம்-றும்-றும்-அம்-அம்-யீம்-உம்மென்றோது, எரிவிடும்பூசையிடு தீபமேற்று யெடுத்துக்கொள் சூலமொன்று யெண் ணிச்சொல்லு, சிறந்துவிடு மூன்றடக்கி யப்பாற்கேளு சீக்கிரமாய் காட்டேரி காளிதானே. (ருகூங)

காளிக்குச் சக்கரத்தைக் கேளுகேளு கருதிப்பார் கோண மடா அஞ்சுபோடு, நாளிலே யுள்ளறையில் இறியும்போடு நலமாக அஞ்சிலப்பா பஞ்சாட்சரமும்போடு, வாளிலே சக்கரத்தை மேலே வைத்து வடமான கயிறடா அதிலேவைத்து, தோளிலே மலர்வைத் துச் செபந்தான்பண்ணு மைந்தனே மந்திரந்தான் பலிக்குமில்லே. ()

நில்லப்பா அப்பாதத்தில் சாணென்றுக விறுத்தடா யிடும்ப னென்ற வீரனைத்தான், சொல்லடா மந்திரந்தா னேதேயாகில் சூட்ச மடா வங்-வங்-வர்-வர்-றி-றி-றி-றி-று-று-று-ஆம்வென்று போடு, மல் லடா வுருவதுதான் பத்துநூறு வகையாகத் தியானித்து வைத்துக் கொள்ளு, கல்லடாவானாலு முடிந்துபோகுஞ் சருவுண்டு சொல்லு கிறேன் கண்டுபாரே. (ருகூரு)

கண்டுபார் வரையப்பா குறுக்கேகிறி கருவான யெழுத்தடா யேதேயாகில், உண்டப்பா சொல்லுகிறேன் கேளுகேளு உருவடா ஓம் க்ஷம் ஞபாய நய்யீ அம்மென்றுருவூணு, பண்டான சித்தர்கள்தான் செய்யுமார்க்கம் பலிப்பதுவு மானிடற்கு கடினமாகும், தெண்டான வயிரவனு மவனேயாவான் சிவத்தினுட திறமப்பா செப்பினேனே. ()

செப்பினேன் பறவையொன்று கறுப்பாய்வாங்கி திறமாக வாயி னுள்ளே நஞ்சைவிட்டு, ஒப்புறேன் தீபமிட்டு முன்னே வைத்து ஓம் சீ-சீம்-ரம்-ரதேவி அம்மென்றோது, தப்பாதே ஆளப்பா நாலைவைத்து சாம்பிராணித் தூபமிட்டுத் தாக்கிப்பாரு, இப்படியே செபம்பண்ணி நீரெறிய யிருகண்ணுந் தெரியாது யெண்ணிப்பாரே. (ருகூஎ)

எண்ணிப்பா ரவன்செய்யு முறையேதென்றால் பிதமாக வதின் வடக்கு மேற்குத்தெற்கு, உண்ணிப்பார் சமசதுரம் பந்தல்போடு உருவான திரிபுரையை யுள்ளேவைத்து, மண்ணிலே ரூபமொன்று வரைந்துகொண்டு வாடிவாடி வடுக்காயீயார் பரல்லா யென்றுவூணு, தண்ணீரைத் தான்றெளித்துப் பூசையப்பா சாராயம் பெலிகொடுத்து ஆடையறுப்பானே. (ருகஅ)

அறுத்துவிட் டெடுப்பனென்று குழலுமூதி யருகிலே வரும்போது தியானமப்பா, அறுக்கிவிடு பூஷணி விபூஷணிமாதங்கி அரி அரிஅரி அடிஅடி குத்துகுத் தென்றுபோடு, பார்த்திடவே யிம்மார்க்கம் பாடுமெத்த பலித்திட்டால் யோகிசட்கு கிடைக்கவேண்டும், திருக்கிட்டுக் குழலடைத்து முகமுடைந்து திசைகெட்டு வோடிடுவான் செப்பினேமே. (ருகக)

செப்பினே மதன்பிறகு சொல்லக்கேளு சிம்-சிம்-வம்-வம்-இறியும்-ஸ்ரீம்-ஓம் மென்றோதி, ஒப்பினே னப்பா லுறுமே நூறு வொட்டவே மாட்டினுட தோலால் தேய்க்க, தப்பாமல் முறிந்துவிடும் யெறிந்துவந்து தான்வருகும் வேளையிலே தாளங்கொண்டு, கைப்பிணி கைப்பிணி காளி சிம்-சிம்-சிம்-தும் - வானென்று கண்முழித்து வரும்போது கருவைக்கேளே. (ருசு0)

கருவைக்கேள் வேம்பினிலே யுருவியப்பா சடி - சடி - இறியும் இறியும்-வடுகாய்-தாக்கு தாக்கு யிம்யிம் சிசுவென்று, மருவியே யெரிந்திடவே தாளமப்பா வகையாக வோசைகேட்டு வாயி லுதிரந்தள்ளி, உருகியே மணம்பதைத்து வீழ்வான்பாரு ஓகோகோ யென்ன சொல்வேனதுவறிந்து, மறிந்திட்டு முக்கணர்முறையேதென்றால்மைந்தனே பூனையுட மாசிதானே. (ருசுக)

## நாகம் வரவு அதற்குமறிவு.

மாசியிலே கோழியுட சிரசுபோட்டு மாட்டினிட கொழுப்பிலே கொஞ்சமிட்டு, ஓசிலையுந் தான்கூட்டித் தயிலம்வாங்கி யுத்தமனே தில்தமிட வோடிப்போகும், நாசியிலே புகைகொடுக்கும் போது அப்பா நளினமா யவன்வருவா னத்திப்பாரு, காசொன்று வேப்பிலையைக் கையில்வைத்து ஓம்-ஓம்-மம்-மம்-ரம்-ரம் க்ஷம் ஸ்ரீம் மென்று கருகிப்போடே. (ருசுஉ)

போட்டபின் பவனுடைய கூட்டத்துள்ளே போகும் நாகமொன்று பொருந்திக்காணும், ஓட்டமா யிருப்பார்க ளதுதான்விட்டால் உள்ளமெல்லாம் பதறியவ ளொடுங்கி நிற்பான், தாட்டவே முறிவுனூறு யெப்படியோ வென்னில் சாறணையின் கோலுடனே மாண்டாரெல்லாம், மூட்டியே புகைகொடுக்க முறிந்துபோகு முறிவை விட் டின்னமொரு முறையைக்கேளே. (ருசுங)

கேளப்பா வதன்பிறகு சொல்லக்கேளு கிடாவொன்று தான் வாங்கி செபந்தான்கேளு, நாளப்பா வுருவொன்று நூறேயாகும் நல மாகச் செபமப்பா கேளுகேளு, தேளப்பா சிங்-சிங்-வங்-வங்-சிவ-சா முண்டி குத்து குத்து சுவாகா வென்றுபோடு, தாளப்பா வெதிராளி யணுகமாட்டான் தப்பாதே முறிவுண்டு தாக்கிப்பாரே. (ருசச)

பாரப்பா முறிவான தெப்படியோவென்றால் பரிவான செவ் வேம்பு பாலேயோடு, நேரப்பா கழுவினுட குடலுலர்த்தி நேராகப் புகைபிடிக்க மந்திரந்தான்கேளு, கூரப்பா ஓம் முசிணற்றற லிலிலி லுலுலு அம் ஆம்-சிவாவென்று வோது, மாரப்பா வுருவடா அன்பத்தி யொன்று மைந்தனே முறிந்துவிடு மகிமைபாரே. (ருசரு)

விடுமப்பா யின்னமுண்டு மைந்தாகேளு விவரமாய் சூ ஐந்து வாக்கியேதான், விடுமப்பா வாழையுட தண்டைப் பார்த்து விதமாக ஐவரையு மதிலேகுத்தி, விடுமப்பா மூலமென்ற மந்திரத்தைக்கேளு விபூஷணி விபூஷணி கங் - கங்-தங்-தங்-தம்-தம் - சிங் - றங் - சங்-கசிவ் வென்று, விடுமப்பா யிருநூற்று வொன்று மூட்ட மேலாகப் பறந்து விடுஞ் சூரிதானே. (ருசசு)

சூரிக்குக் கருவுண்டு சொல்லக்கேளு சூட்சந்தா னேதென்றால் சிவனார்வேம்பு, சூரிக்கு வேணுமென்று காப்புகட்டி துருசாக முன் செபமே பண்ணிக்கொண்டு, சூரிக்குத் தடவியே வைத்தாயாகில் கோரையடா தான்வடிய சொல்லிப்பாயும், சூரிக்கு யெதிராட வொரு வர் மாடார் சொல்லுகிறேன் முறிவுண்டு சொல்வேன்கேளே. (ருசஎ)

கேளுநீ வெள்ளெருக்கு நண்டினோடுங் கெடியாகத் தேள் கொடுக்கு வெல்லாஞ்சேர்த்து, கேளுநீ பொடிபண்ணித் திரியில்சுத்தி கிரிகிரி - முரி - முரி - ஹரசிவா வென்றுசொல்லி, கேளுநீ யுருவப்பா தொண்ணூற்றாறு கெடியாகத் தான் போட்டுப் புகைக்க மெத்த, கேளப்பா யிவையெல்லா முறிந்துபோகுங் கிருபையாய் வாலைக்குத் தியானம்பண்ணே. (ருசஅ)

பண்ணவே யின்னமொரு முறையைக்கேளு பாங்கான அண்ட மப்பா பத்துவாங்கி, பண்ணப்பா சாம்பிராணி கூடன் ரண்டும் பரிவான படர்தாமரை வேரும்பத்து, பண்ணப்பா மந்திரந்தா னேதே யாகில் ஓம்வாமி வாமிதாக்கு சண்டாளி சண்டாளி அம் - அம் - ஓம் நயவ்சியென்று, பண்ணப்பா வுருகேளு முன்னூற்றொன்று பாகமாய்ப் பூசையிட்டுத் தூபம் போடே. (ருசகூ)

போட்டபின்பு அண்டத்தை யெடுத்துக்கொண்டு புகழாக முடிசுத்தி புகையைப்போடு, நாட்டமாய்ச் சொல்லுகிறே னவர்களெல்லாம் நடுநடுங்கி மதிகெட்டு நாய்போல்கத்தி, கூட்டுறவு தன்னை விட்டு வொன்றுக் கொன்று கூடாமலோடுவார் சொல்லக்கேளு, மூட்டு வாய் முறிவு கொண்டுயேதேயாகில்உத்தமனே மூலியொன்று வுரைக்கிறேனே. (௫௫௰)

## கடல்மிரட்டி நரிமிரட்டி மாரணம்

## பாட்டன் மாமன் அறிதலும்.

உரைக்கிறேன் மூலியென்றால் சொல்லக்கேளு ஒரு செடியாய்க் கருமணவில் முளைத்த பூண்டு, உரைக்கிறேன் உட்டிருங்கிக் காப்பு கட்டி யுத்தமனே பெலியொன்று பொங்கலிட்டு, உரைக்கிறேன் ஏகமாய்ப் பிடுங்கிக்கொண்டு உருவப்பா தியானமிட்டு நூற்றுவொன்று, உரைக்கிறேன் ஓம் படுபடு படா டாண்டா, ஸ்ரீம் - ஸ்ரீம் - க்ஷம்ராய் யென்றுபோடு உண்டான தடையற்று ஓடிப்போமே. (௫௫௧)

ஓடிவிட யின்னமொரு தொழிலைக் கேளு உருவான மந்திரமோ உன்னிப்பாரு,மாட்டிடுவாய்-ஓம்-இறிம்-இறிம்-மரி-மரி-யீம்-யீம்-படும் சிவாவென்று மகத்தான மூலியொன்று மைந்தா பாரு, தேட்டிவிடு மலையமுக்கி பூசைபண்ணு திறமான வவர்களுட காலடியில் மண்ணும், மோடியிலே தான்புதைத்து முன்னேபோக முறைகொண்டு யிவர் பிறகே தொடருவாரே. (௫௫௨)

தொடருவார் தொண்ணூறு நாழிமட்டுஞ் சொல்லாமல் வாய்திறந்து பேசிடாதே, இடித்திடுவா ரொருவருண்டோ மைந்தா கேளு இதற்குமுறி வொருவருக்குந் தெரியாதப்பா, படரவேசொல்லுகிறே னெனக்கேயன்றி பரமனுக்குந் தெரியாது பாருபாரு, மறவாமற் சொல்லிவிட்டேன் வால்மீகிக்கு மற்றொருவ ரறியார்கள் வகைதான் காணே. (௫௫௩)

காணப்பா யின்னமொரு முறைதான் கேளு கடல்மிரட்டி நரிமிரட்டிக்குக் காப்புகூட்டி, தோணப்பா மந்திரந்தான் சொல்லக் கேளு சொல்லுகிறேன் ஓம்-ஓம்-சிவ-சிவ-அம்-ஆம்-யீம்-உ-ஊம்-ஓம் படு சிவாய நமவென்று கூறு, பேணப்பா மங்கையுட கன்னிநூலால் பேசாமல் சுற்றிவிடு பெலிதான்போடு, ஊணப்பா மோடியின் முன்பு புதைத்தாயாகில் உத்தமனே யெதிராளி மூர்ச்சைபாரே. (௫௫௪)

பாரப்பா யிப்படியே புதைக்கக்கேளு பரிவான மந்திரந்தான் சொல்லக்கேளு, கூறடா ஓம்-ரூம்-கிம்-ரூம்-மசிசிய நமதாக்கு தாக்கு அம்-அம்-ணம்-ஙம்-நம்-வாடி-ஓம்-சிவ வென்று குறையாமல்சேரப்பா ஓம் மந்திரஞ் செபித்தாயானால் செப்பரிது வுருக்கள்தான் நூறுமாகும், மாரப்பா நீரெடுத்துச் செபித்துப்போட மதிகெட்டு வொருவனங்கே, மாளுவானே. (ருருரு)

சுலீபமோடி சலத்தில் நடக்க.

மாளுவா னதுமுறிய மருந்துமில்லை மாதாவால் தீராது யானு மாட்டேன், தாளுவாயொருவரினால் செயிக்கப்போமோ சதாசிவனால் முடியாது தாக்கிப்பாரு, தோளினால் முடியாது பிழைப்பதில்லை குரு வான மெய்ஞ்ஞான முபதேசித்தார், தோளிலே கணியிருக்க மேலே நோக்க சொல்லவில்லை சத்தியமாய்த் தொகுத்திட்டேனே. (ருருசு)

தொகுத்திட்டே னிப்படியே செய்தபேர்கள் சுருக்கடா வொரு வருக்குஞ் சொல்லவில்லை, வகுத்துவிட்டேன் பாட்டனென்று மாம னென்றும் வயித்திய முறைபிவரறிந்தால் மாள்ளவதில்லை, செகத் திலே யாசைமெத்த யிருந்ததாலே செத்திறந்து பிறப்பார்கள் திருட்டு வாமி, மகத்துவத்தா லொன்றுமிலலை மைந்தாகேளு வாலையைப் போல் தெய்வமில்லை வகையைச் சொல்லே. (ருருஎ)

சொல்லக்கேள் சொரூபத்தில் மோடியுண்டு சூட்சமது வொருவ ருக்குஞ் சிக்காதப்பா, கல்லப்பா நூற்றுவொன் றிறக்கிக்கொண்டு கரு தியே காளியுட தியானம்போடு, மல்லுக்கு அஞ்சாதே தெய்வமுண்டு வாலையுட மோடியென்றுவகுத்துப் போட்டேன், வில்லொன்று யிரும் பிறை லுண்டுபண்ணி விசையான மந்திரத்தை விரும்புவாயே. (ருருஅ)

விரும்புவாய மந்திரந்தா னேதேயாகில் விபரமாய்ச் சொல்லு கிறேன் பாருபாரு, கரும்படா யெங்களுக்கு ஆத்தாளப்பா கருவி கருவி கருவி காளி காளி, அரும்படா அட்சதைப் போட்டுமைதான் ஆம்-அம்-சிவாவென்றோது, தரும்படா யெதிராளி யணுகமாட்டான் சொல்லுகிறேன் சலநடுவில் சூட்சந்தானே. (ருருகூ)

சூட்சமாய் சலத்திலே நடக்கவப்பா சொல்லாதே யொருவருக் குஞ் சடைதானப்பா, சூட்சமாய் ஞாயிறுநாள் காப்புகட்டி சுருதியா யன்றைக்குப் பெலியுமிட்டு, சூட்சமுள்ள மந்திரந்தா னேதேயாகில் சொல்லுகிறேன் உங்-உங்-சிங்-சிங்-சிவாய நமவென்று, சூட்சமாயுரு வப்பா லட்சமாக்கு துடியாக யிடித்ததனைப் பொடியுமாக்கே. (ருசூ0)

ஆக்கிவிடு கொம்பரக் குங்கிலியம் அப்பனே சேர்த்து நன்றாய்ப் பிசைந்துகொண்டு, தாக்குவா யடித்துவிடு குறடுபண்ணு தாயாரைத் தியானமிடுவாசுவாங்கு, மூக்கப்பா வடைத்துவிடு நாவிலொன்றுபோடு முக்கியமாய்த் தன்மேலே பணமொன்று வைத்து, வாக்கப்பா பேசாதே சலத்தினுள்ளே வராகியைத்தான் தியானமிட்டுப் பணமொன்று வையே. (௫௬௧)

வைத்தபின்பு மூலமென்ற மந்திரத்தைக் கேளு மகத்தான வட்சரந்தான் மைந்தாகேளு, உற்றுநின்ற மந்திரந்தா னேதேயாகில் ஓம்-இறியும்-சிறியும்-சரவணபவாய்- நம் - உம் - வம் - வம்-சங்-சிவா வென்று வுருவடா வாயிரத் தொருநூறுக்கும், சத்தியமா யுலகத்தி லொருவராலுஞ் சாதிக்க முடியாது தண்மைதானே. (௫௬௨)

## முள்ளுக்கொழுஞ்சி மூலிகை.

தண்மையா யதன்பிறகு குருதான்பாரு தருவான முக்கொழுஞ்சி காப்புசட்டி, பண்மையாந் தூபமிட்டுப் பெலியுமீந்து பண்பாகச் சந்தனத்தோ டரைத்துக்கொண்டு, ஓம்பெரிய சாமுண்டி பட்டு பட்டு கட்டுளம்-உம்-அம்-கிம்-சிவ்வென்றோது, யுண்மையுள்ளபேரையெல்லா மணுகொட்டாது'முறைசொன்னேன் மாண்பரே முடித்துகொள்ளே.()

முடிந்துவிடு மப்போது சொல்லக்கேளு மும்மூர்த்திகளால் முடியாது ஆணையாலே, இடிந்திடுவாள் வராகியப்பா வணுகவொட்டாள் யெருமையென்ற வாணுவத்தோர் பேசமாட்டார், கடுகவே நாய்போலே யவர்விட்டபேர்கள் கழுகதுபோல் பறந்துவிடுங் காணமாட்டார், அடித்திடுவாள் சொல்லிவிட்டே னுலகத்துக்கு அவரவர்கள் பிழைக்கவு மருனினேமே. (௫௬௪)

## தம்பன மூலி.

அருளினே மின்னமொரு கருவைக்கேளு அப்பனே தம்பனந்தா னக்கினியாகும், மருளினேம் வெண்சாரணைக்குக் காப்புசட்டி மைந்தனே தூபமிட்டுப் பெலியு மீந்து, திரளான மந்திரந்தான் சேளு கேளு ஆயீ உ-எம்-யூ-ஸ்ரீம்யென்று, உருவப்பா யிருநூற்று வொன்றதாகும் உத்தமனே சொல்லுகிறே னுண்மைதானே. (௫௬௫)

உண்மையாய்த் தியானமிட்டு யெடுத்துக்கொண்டு உத்தமனே யிரும்பினுட சத்தினுள்ளே, பண்மையாய்த் தானடைத்துத் தலையில் சட்ட பகையான பூதமெல்லாம்பறந்துபோகும், தண்மையாய்ச் சொல்லுகிறேன் சேளு சேளு சத்துருவும் நாடாது தாக்கிப்பாரு, கண்விழியாய்ப் பார்க்கவொரு மைக்குமாகும் கருதிவிடு கைலாச பரத்தைத் தானே. (௫௬௬)

## சின்னிமூலிகை சிவதரிசனம்.

கைலாச பராபரத்தைக் காணவேண்டி கருதிப்பார் மூலியொன்று கண்டுகொள்ளு, மைலாகமையொன்று வாங்கிக்கொண்டு மைந்தனே சின்னிக்குக் காப்புகட்டி, கைலான காரெள்ளுத் தயிலத்தாலே கடுகவே விளக்கேற்றித் தீபமிட்டு, குலையாலே மந்திரித்துத் தியானம் பண்ணி குறிக்கிறேன் மந்திரந்தான் குறிக்கிறேனே. (௫௬௭)

குறிக்கிறேன் மந்திரந்தா னேதேயாகில் கூர்ந்துகேள் சிவயநம அம்-உம்-சிம்-வங்கென்று, விரைக்கிறே னுருவப்பா லட்சம்போட்டு மேலான வத்திதனைப் பெலியுமீந்து, துரைக்கிறேன் தூபதீபந் தான் கொடுத்து சுத்தமுள்ள செப்புதனிலடைத்துக் கட்ட, அரைக்கிறேன் வருஷ மொன்று மாசமெட்டில் அன்பாக வீசுரனைக் காணலாமே. ()

## கருந்தும்பைக்குத் தேவர் பலிதம்.

காணவே யின்னமொரு கருவைக்கேளு கறுப்பான தும்பைக் குக் காப்புகட்டி, தோணுவாய் தூபதீபந் தான் கொடுத்து சுற்றியே மூன்றுதரம் வடதிசையில் நின்று, ஊணவே மந்திரஞ் சொல்லக்கேளு ஓம் சிவ சிவ ஐயும் கிலியும் அம்-ஈம்-வம்-சிவாவென வுருவப்பா வாயி ரத் தொன்றுபோடு, வாணவே பெலிகொடுத்துப் பிடுங்கிக்கொண்டு மைந்தனே யிரும்பினுட சத்தில்கட்டே. (௫௬௯)

## அஷ்டகோண வாலை சக்கரம்.

கட்டவே யுலகிலுள்ள பூதம்பேய்கள் காளியொடு வீரபத்திரன் சுப்பிரமணியர், விட்டுன்னைப் பிரிவதில்லை மைந்தாகேளு வேறுமுள்ள பேய்களெல்லாம் நாடாதோடும், சிட்டமுள்ள வெதிராளி பில்லிக்கப்பா செகத்திலே யண்டார்கள் செப்பினேனுன், எட்டெழுத்தில் கருவுண்டு சொல்லுறேன் கேள் எவராலு முடியாது எண்ணினேனே. (௫௭0)

எண்ணினேன் மைந்தாநீ கேளுகேளு ய்திதமாகக் கோண மப்பா யெட்டுகிறி, நண்ணியே நடுவில் முக்கோணம் போட்டு நலமான அட்சரத்தை யறிந்துகட்டு, திண்ணமுடன் யோதிடவே வசியமாகும் சிவசிவா சூட்சமது அறிந்துபாரே, உண்ணியே அட்சரந்தா னேதே யாகில் உத்தமனே நடுவில் ஓங்காரம் போடே. (௫௭௧)

போட்டபின்பு யிந்திரனில் அகாரம் போடு புகழான அக்கினியில் உகாரம் போடு, நாட்டமா யெமன்மூலை தகாரம்போடு நலமான நிருதி யிலே வகாரம்போடு, மூட்டுவாய் வருணனிலே நகாரம்போடு முதலான வாயுவிலே சிகாரம்போடு, கூட்டுவாய் குபேரனிலே ணகாரம்போடு குறையரம லீசானியத்தில் யிறிங்காரம் போடே. (௫௭௨)

வாலை மந்திரம்.

போட்டபின்பு கீழ்வாசல் மகாரமிட்டு பொருந்தியே சுழியிட்டுக் கட்டிப்போடு, வாட்டமாய் நில்லாதே மந்திரந்தான் கேளு மகத்தான மூலமப்பா வாலைவாலை, நாட்டமாய் ஓம் இறியும்மென்று அம் - யெம்- உம் - உம் - அம் - யீம் - ஓம் - சிவாயென்று, மூட்டுவா யுருவப்பா வாயிரத்தொன்று உத்தமனே பூசையிடு தியானம்பண்ணே. (௱எ௨)

பண்ணியே கற்பூரம் புழுகுகூட்டிப் பாங்காகத் தகட்டின்மேல் பூசிக்கொண்டு, எண்ணியே புளியத்தி வேப்புகொச்சி யிவ்வகைக்கு மர மறிந்து கூட்டித்தூக்கி, தண்ணியப்பா பெருகிவிடு மாரிபெய்யும் சாஸ் திரமா யறிந்துவிடு தயவாய்ப்பாரு, கண்ணிலே காணலா மனேன் மணித்தாயைக் காணாதான் கழுதையென்ற ஞானிதானே. (௱எ௩)

ஞானமெல்லாம் வந்ததென்றால் போதாதப்பா நாதாந்த மூர்த்தி யிட வரமேவேண்டும், ஞானத்தை யாளச்செய்த குருவைக்கண்டு நாவி லொரு கிள்ளனைத்தான் கட்டவேண்டும், ஞானத்தைக் காண்பதற்குத் தெய்வமாறும் நாயகியாள் வாலையினால் நாட்டவேண்டும், ஞானத்தை யகந்தைசெய்த பேர்களெல்லாம் நரகமே யடைவார்கள் நாட்டந் தானே. (௱எ௪)

மோகினி விலக்கு பில்லி சூனியம் பேய்களுக்கு வெள்ளடம்பு.

நாட்டுகிறே னின்னமொரு முறையேதென்றால் நலமான வெள் ளடம்பு காப்புக்கட்டி, மூட்டுவாய் மூலமென்ற மந்திரந்தான் கேளு ஓம் - சிசிசி - லலலல - யென்று, கூட்டுவா யுருவப்பா யிருநூற்றொ ன்று குறையாமல் தியானமிடு அதற்குப்பின்பு, நோட்டமாய் பெலி கொடுத்து தீபமிட்டு நிலையாகத் தான்பிடுங்கி வைத்துக்கொள்ளே. ()

கொள்ளுவாய் தாம்பரத்தில் சத்துபண்ணிக் கூராகத் தானடை த்து தலையிற்கட்டி, விள்ளுறேன் மோகினியாய் வருகும் பேய்கள் வினைபில்லி சூனியங்க ளணுகாதப்பா, தெள்ளவே மங்கையர்க்குக் கழுத்திற்கட்ட தெய்வபத்தி யுண்டாகுங் கெர்ப்பமுண்டாம், வள்ள லென்ற விநாயகனைத் தியானம்பண்ண வருஷமொன்று திகையுமுன்னே பெறுவாள் பிள்ளை. (௱எ௫)

குழந்தைகட்குப் பேய் பிணி தோஷம் பதினறுவயது வரைக்கும் இலுப்பைவேர் மூலிகை விவரம்.

பிள்ளைகட்கு வருகின்ற பீடையப்பா பிறக்கையிலே தூக்கியது பதினறுக்கும், கள்ளனென்ற பிணிதோஷ மாந்தத்திற்கும் கால்கை யில் முகம்நீர்க்கும் காமாலைக்கும், மெள்ளவே யின்னமொரு மூலி கேளு விவரமாய்ச் சொல்லிவிட்டேன் விரும்பிப்பாரு, கிள்ளையரே ஓம் - வாவா அஷத்திசித்தி - அம் - உம் - சிவாவென்று தியானமிடு வுருவப்பா நூற்றுவொன்றே. (௱எ௭)

நூற்றென்று வுருவிட்டுப் பூபொங்கல்போட்டு நுண்மையாய்ப் பெலிகொடுத்துப் பிடுங்கிக்கொண்டு, மாற்றிவிடு சாம்பிராணித் தூப மிட்டு மாட்டினுட தோலிலே வைத்துத் தைத்து, சேர்த்துவிடு அரை யிலே கட்டிக்கொள்ளு திறங்கொண்ட பேய்களெல்லாம் நசித்துப்போ கும், கூத்தனென்ற ரிஷிபூத மணுகாதப்பா குழந்தைகட்கு மதுவா குங் கூறினேனே. (௫௭௮)

## கோடிபடை விலகும்.

கூறிவிட்டே னின்னமொரு மூலிகேளு குருபதத்துக் கேற்ற வண்ணங் கூர்ந்துபாரு, தேறிவிடும் புற்றின்மேல் திண்டாப்பாளை திற மாக ஞாயிறுநாள் காப்புகட்டி, வாரிவிடு குங்குமப்பூ முல்லைதும்பை வளமான சண்பகமு மருக்கொழுந்து, நீறுடனே சந்தனமும் புழுகுங் கூட்டி நேரமொன் றெட்டுநாள் தியானம்பண்ணே. (௫௭௯)

பண்ணியே யெட்டாநாள் மயக்கவேளை பார்த்து நீ பால்பொங் கல் கிடாவும்வெட்டு, எண்ணுநீ மூலமென்ற மந்திரந்தான் கேளு யீஸ் வரியென் னம்மே புவனு புவனீஸ்வரி, உண்ணுமையா ளிட்டதொரு சாபம் நீக்கி உம் - உம் ஹயும் சிவனும் அம் - அம் - சிவய நமவென் று, தண்ணீரைத் தானிரைத்து வேர்பிடுங்கி தங்கமென்ற சத்திலே யடைத்துக் கொள்ளே. (௫௮0)

கொண்டபின்பு அதனுடைய சூட்சங்கேளு கோடிபடை வந்தா லும் விலகிப்போகும், விண்டேனுன் மானிடவர் வாதுமாட மேல்வி ழுந்து அடிக்கவந்தால் புகைத்துப்போடு, வண்டனுட தடியெல்லாந் தோளில்வைத்து மாண்டவன்போல் நிற்பார்கள் வழியிற் போய்நீ, உண்டான படிசொன்னேம் குருநாதன்றன் உத்தமனே யுண்மையா யுரைக்கிறேனே. (௫௮௧)

## முறிவு.

கேளப்பா தொழுகண்ணிக்கு காப்புகட்டி செடியாகத் தியான முண்டு கேளுகேளு, தாளப்பா ஓம் - சிம் - சிம் - ரிரிரி - ருருரு - மரி மரிமரிசுவாகாவென்று தனியாகத் தூபமிட்டுப் பெலியு மீந்து, வாளப் பா மங்கையுட நூலால்சுற்றி மைந்தனே கருக்கியதைச் சாம்பலாக்கி, தேளப்பா நீர்சொரிய முறிந்துபோகும் சித்துக்கு மூலியடா செப் பினேனே. (௫௮௨)

## எருக்கின்மே லித்திக்கண்ணிக்குப் பேய்ப் பூதம்போம்.

செப்புகிறே னின்னமொரு மூலிகேளு திறமாக வெருக்கின்மே லித்திக்கண்ணி, ஒப்புகிறேன் செவ்வாயில் காப்புகட்டி யுத்தமனே மூன்றுநாள் விளக்குமேற்றி, தப்பாதே மந்திரந்தான் கேளு கேளு 'ஓம்சத்திசத்தி சரவணபவாய் - நம - அம் - ஓமென்று, முப்புரி நூல் சுத்திவிடு பொங்கல்போடு முறையாகப் பெலிகொடுத்து பிடுங்கிக் கொள்ளே. (௫௮௩)

கொள்ளவே பிடுங்கியதை யெடுத்துக்கொண்டு கூரான வெள்ளி யுட சத்தில்கட்டி, துள்ளவே சிரசிலே யிருக்கும்போது துடியான பூதமெல்லாஞ் சொல்லாதோடும், விள்ளுறேன் ஸ்திரீகளுக்குக் காப்பு கட்டி விவரமாய் மூன்றுநாள் கழிந்தபின்பு, அள்ளியே கட்டிவிட மலடி யெல்லாம் அப்பனே வருஷமொன்றில் கெர்ப்பமாமே. (ரு௮௪)

முடக்கோத்தானுக்குப் பேய்கள்போம்.

ஆகுமப்பா யின்னமொரு மூலிகேளு அப்பனே வுஞ்சலுட னித் திகண்ணி, தாக்குவாய் திங்களிலே காப்புகட்டி தப்பாமல் மூன்றுநாள் விளக்குமேற்றி, மேகுவாய் தும்பைமல ரர்ச்சனையுஞ் செய்து விவரமா யோதிடு மந்திரந்தான் கேளு, வாகுவாய் அம் - அம் - ஷணதய வசி யென்று மாட்டுவா யுருவப்பா தொண்ணூற் றென்றே. (ரு௮ரு)

உருவப்பா வோதியே தூபமிட்டு உத்தமனே பொங்கலிட்டுப் பெலியுமீந்து, மறவாமற் பிடுங்கிவிடு வேரறுமல் மைந்தனே யிரும் பினுட சத்தில்கட்டு, தருவான ராச சந்தோஷமாகுந் தப்பாது லோக த்து வசியமுந்தான், குருவான மூலியப்பா வசியத்துக்குக் கூறினேன் வசிகாத்து முறைதான்பாரே. (ரு௮௬)

முறையாக யின்னமொரு மூலிகேளு முடக்கொத்தான் மூலிக்கு காப்புகட்டி, உரையாக வுரைத்துவிட்டேன் வாரம் செவ்வாய் உத்த மனே சொல்லுகிறே னுறுதிகேளு, மறைவல்ல மூலமென்ற மந்திரந் தான் கேளு மாசிமாசி தூமாதேவி வலிசுடுவவிசு அம்சிவவென்று, கரையடா வுருநூறு செபமேபண்ணி கருதியே பிடுங்டுவிடு கருத் தைப்பாரே. (ரு௮எ)

கிலுகிலுப்பைக்கு எதிராளி கனைந்துபோவான்.

பாரப்பா யின்னமொன்று யேதேயாகில் பரிவான தங்கத்தால் சத்துபண்ணி, நேரப்பா சத்திலே யடைத்துக்கொண்டு நிலையாகத் தூபமிட்டுத் தலையிற்கட்ட, காரப்பா வசிகாமு மாகுமாகும் கைகண்ட முறைசொன்னேன் கண்டுபாரு, போப்பா புதைத்துவிடு பேய்களெல் லாம் பிசாசவன் பக்கலிலே யணுகாதென்றே. (ரு௮௮)

அணுகாது யின்னமொரு முறையைக்கேளு அப்பனே கிலுகிலு ப்பைக்குக் காப்புகட்டி, அணுகியே சாம்பிராணி தூபமிட்டு அப்பனே பொங்கலிட்டுப் பெலியுமீந்து, அணுகியே மூலமென்ற மந்திரந்தான் கேளு ஓம் - அம் - யீம் - உம் - சிம் - ரரரர வாசிவவென்று, அணு கியே யருமலதைப் பிடுங்கிக்கொண்டு அருளாகத் தூபமிட்டுத் தலை யில் கட்டே. (ரு௮௯)

கட்டியபின் னதனுடைய குணமேதென்றால் காளிதுர்க்கை சாமுண்டி யணுகாதப்பா, கட்டியபின் பூதமுதல் மிருக மெல்லாங் காணும லோடிவிடுங் கண்டுபாரு, கட்டியபின் ஞாவ தேவல்செய்தால் கரையேறு னெதிராளி கரைந்துபோவான், கட்டியே மனையதனி விருந் தாராகில் கட்டான பேய்பிணிக ளண்டாதன்றே. (ருகூ0)

கத்தரி.

அண்டாது யின்னமொரு மூலிகேளு அறியவே சொல்லுகிறே னரசர்க்காகும், விண்டேனன் கத்தரியின் பூடுக்கப்பா வியாழமென்ற கிழமைக்குக் காப்புகட்டி, நின்றங்கே யர்ச்சிக்கு மலரைக்கேளு நிலை யான ஆவரையின் பூவேயாகும், உண்டான மந்திரந்தா னேதேயாகில் உத்தமனே சொல்லுகிறே னாணிக்கேளே. (ருகூக)

கேளப்பா மந்திரந்தா னெப்படியேயாகில் கெடியாகச் சொல்லு கிறேன் கிணித்துத்தானே, வாளப்பா ஓம்நமசிவய அய்யும் இறியும் அம் - ஐயும் கிலியும் சிவாவென்று, தாளப்பா வுருவிடு நூற்றுவொ ன்று தப்பாதே பொங்கலிட்டுப் பெலியு மீந்து, நாளப்பா ஞாயிறிலே தீபமிட்டு நலமாகப் பிடுங்கிவிடு நன்றாய்த்தானே. (ருகூஉ)

நன்றாகச் செம்பினிட சத்திலிட்டு நலமான சூதமப்பா கொஞ்சம் விட்டு, ஒன்றாகத் தான்சேர்த்து அடைத்துக்கொள்ள வுத்தமனே சிர சிலே யிருக்கும்போது, பண்டாகப் பழிசெய்த பேர்களெல்லாம் பக்க மே வந்தணைவார் பாருபாரு, உண்டான படிசொன்னேன் மைந்தா கேளு உருவிட்டு யெட்டிலொன்று பூசைபண்ணே. (ருகூங)

வாலைக்குப் பூசாவிதி விவரம்.

பூசாவிதி சொல்லுகிறேன் கேளுமைந்தா புகழாக வாலைக்குத் தியானமுண்டு, பூசாவிதி மறைத்துவைத்தார் பதினெண்பேரும் போக் கறியா தனேகம்பேர் கெட்டுப்போனார், பூசையிலே தீர்க்கமது வேணு மென்றால் பூட்டுறே னெப்படியோ வென்றுகேளு, பூசைக்கு முறையு ண்டு நிற்பாருண்டோ பொய்யொன்று மாகாது பூட்டினேனே. ()

பூட்டினே னீயெழுத்தை வரைந்துகட்டு பொருந்தவே யிதின் மேலே வர்மம்வைத்து, காட்டியே கைவிரலை விட்டுக் கொண்டு கரு வான மந்திரத்தைக் கருதியுன்னு, நாட்டிலே விள்ளாதே மந்திரத்தைக் கேளு ஊச்சாடு உச்சாடு ஓம் - அம் - உம் - சிவவென்று, மாட்டிவிடு பூசைக்கு வுருவைஞ்ஞூறு மைந்தனே பூசைபண்ண வருவாள்பாரே.()

வருவாள்காண் மண்டலத்தில் தியானம்பண்ண வைரவனுஞ் சுப் பிரமணியர் வாசுதேவர், தருவான வல்லபையும் விநாயக ரிவர்களெல் லாம் தன்பிள்ளை யாகுமென்று தயவுசெய்வாள், கருவான வாசியுட தடமுங்காணும் கைலாச பரங்காணுங் கண்டுபாரு, பெருவாழ்வு தான் றந்து ஆதரித்து பிறப்பிரண்டு மில்லையென்று பேணுவாள் பாரே. ()

## பூசைக்குப் பலகாரவகைகள்.

பாரப்பா பூசைக்குப் பலகாரங்கள் பாங்கான நெற்பொரியுஞ் சர்க் கரை தேங்காயும், சேரப்பா மதுவோடு மாமிசங்கள் சிறப்பாகப் புழு குடனே சந்தனமுங் கூட்டு, காரப்பா கற்பூரஞ் சாம்பிராணி கருவளையல் மூக்குத்தி சிந்தாக்குமே, கூரப்பா சேலைபட்டுயிதுகள்வைத்துக் குறை யாமற் பூசையிடு குறியைப்பாரே. (ருசுஎ)

குறியாக யிவையெல்லா மணியச்செய்து குறிப்பாகத் தீபமிடு தூபமேற்றி, ஹரியான மனோன்மணித்தாய் வசமாய் நிற்பாள் அப்ப டியே தியானமிடு வாதமாகும், தெரியாத் நவசூட்ச மொருவருக்குந் தெரிந்தாலுங் காணாது செய்யாத தோஷம், அறிவார்கள் கோடியிலே யொருவரப்பா அம்பிகையா ளவரைவிட்டுப் பிரியாள் பாரே. (ருசுஅ)

பாரப்பா தாயாலே யெல்லாஞ் சித்தாம் பரிவாகச் சொல்லிவிட் டேன் பாருபாரு, நேரப்பா தகப்பனால் வருகுஞ் சித்து நிலைக்குமடா நீடூழிகாலம் வாழ்வார், கூறப்பா யிவர்களுட கூத்தைப்பார்த்து குறி கண்டு நின்றவனே சித்தன் சித்தன், மாறப்பா தாயைவிட்டுக் கெதியு மில்லை மைந்தனே மனமொப்பி வெளியில் பாரே. (ருசுசு)

வெளியான வெளியெங்கே யிருள்தா னெங்கே வேதாந்த சார மெங்கே விரும்பிப்பாரு, சுழியான சுழியெங்கே சூட்சமெங்கே சூட் சாதி மோட்சவழி காண்பதெங்கே, சுழியாத ஞானமெங்கே காலனெ ங்கே கவனமெங்கே தவமெங்கே கண்டுபாரு, அழியாத பதவியெங்கே யகாரமெங்கே அணுவெங்கே யிருந்தவிட மறிந்துசொல்லே. (சு00)

சொல்லுகிறேன் வெளியான விழியேயாகுஞ் சொல்லரிய ஞான மப்பா வெளிதான்பாரு, வெல்லுகிறேன் வேதாந்த சாரமாகில் விஷ் ணுவே கமலமுமாம் விரும்பிக்கேளு, மல்லுகிறேன் ஞானமடா வழி யாஞானம் வாதாடுங் காலனடா தூக்க மாகும், பொல்லாத வுச்சிக்கும் உண்ணாக்குக்கும் பூட்டுவிட்டுத் தானிருக்க மரணமாமே. (சு0க)

மரணமென்ற நிலையேது வாதபித்தம் வருகின்ற குறியேது மைந் தாகேளு, சரணமென்று தொழுவதுதான் முறைதானேது தாய்தந்தை யென்றுசொல்லுஞ் சாத்திரமேது, வருணனென்ற நீரேது மவுனமேது மகத்தான சையோகம் வாழ்க்கையேது, சோரணமென்ற நிலையேது சூட்சமேது சொல்லேது பொருளேது மண்தானேதே. (௬0௨)

மண்ணேது விண்ணேது மாயமேது வாழ்வேது தாழ்வேது வாச னைதானேது, கண்ணேது மூக்கேது காதுமேது கலந்துண்ணும் வாயேது பரிசனந்தானேது, எண்ணேது யெழுத்தேது யீசனேது எட்டெழு த்திலோரெழுத்து வுறுதியேது, ஒண்ணேது ரண்டேது மூணுமேது உள்ளேது புறம்பேது வூணிப்பாரே. (௬0௩)

ஊனேது வுறக்கமுட னிருப்பதேது ஓங்கார மானவெளி கோட் டையேது, ஆணேது பெண்ணேது ஆங்காரமேது ஆதிநயகுணமேது அரசரேது, நானேது நீயேது நிலையேதப்பா நின்றிடமும் போனிட மும் ரண்டுமேது, காணுமை லொவ்வொருவர் வீணேபேசி கரையேற மாட்டாத கழுதைதானே. (௬0௪)

காவேது பாவேது கள்ளரேது கரையேது முறையேது கமண்ட லந்தானேது, தாவேது நாவேது சத்தியேது சர்க்குருக்கள் நின்றவிடந் தாக்கிப்பாரு, வாவேது தூவேது வழிதானேது மாளாத வுடலேது வாசனைதானேது, காலேது தலையேது கபடமேது கருவறியாப் பேர்க ளுக்குக் காட்டொண்ணாதே. (௬0௫)

ஒண்ணாது வஞ்சமுற்ற சண்டாளர்க்கு உலகதனிற் சித்தனெ ன்பா ருருண்டுபோவார், கண்ணுற்கண் டேனப்பா யனேகஞ்சித்தர் கரையேற மாட்டாமல் கழன்றுபோனார், திண்ணான ஞானிகளில் பொய்ஞ் ஞானியென்றும் தேடறிய மெய்ஞ்ஞானி யென்றுஞ்சொல் வார், ஒண்ணான சித்தைநான் சேராத்தோஷம் உத்தமனே யிவர்க ளெல்லா முளறுவாரே. (௬0௬)

உளறுவா ரேதாலே யென்றுகேளு வூடான கருவையெல்லாம் வாங்கிக்கொண்டு, கிளறுவார் குருவையப்பா நிந்தித்தார்கள் கேட்டே னே பொதியையிலே யிருந்துகொண்டு, அளறியே யிவர்க்கொன்று மா காதென்று அப்படியே சொல்லிவிட்டே னுகைபாலே, உளறியேகெட் டலைந்த பேர்களப்பா வொருகோடி சித்தருண்டு வுரைக்கொண்ணாதே.()

## ஞானக்குறி யறிதல்.

உரைக்கவே யொண்ணாது மூடருக்கு வுரைத்தாலுங் கபடமில் லார்க் குரைக்கவேணும், மரைக்கவே யாகாது தோஷமெத்த மகத் தான பாவமுண்டு மைந்தாகேளு, நிரைக்கிறேன் கருவாளி யானலைப் பா நேராக சூட்சத்தை யறிந்துகொள்வான், விரைக்கிறேன் பூட்டெல் லாம் வெளியாய்ப்பாடி வேதாந்த கருவினுட விவரம்பாரே. (௬0௮)

## வேதாந்த வீடு.

பாரப்பா யிந்நூலை யொருவருக்கும் பகரவே யாகாது மைந்தா கேளு, சேரப்பா வொருவருக்கு மீயவேண்டாம் சேர்ந்துபார் குண மறிந்து செப்புறேன் கேள், காரப்பா பனிரண்டு வருடங்காத்தால் கப டமே யில்லாதவன்பனானால், நேரப்பா யவன்கிருபை யறிந்துகண்டு நிசமான சாத்திரத்தை யீந்துகொள்ளே. (சூ0௯)

கொள்ளவே யிருள்பகலுஞ் சத்திசிவமாகும் கூரான வகாரமே வாசுவாகும், துள்ளவே அகாரமடா கெர்ப்பமாகும் சொல்லரிய இகார மடா விந்துவாகும், தள்ளவே கெர்ப்பமென்றால் ராகுவாகும் சாஸ்தி ரங்க ணூல்களெல்லாஞ் சோதியாகும், கள்ளான மாங்கிஷமுஞ் சிவதவ மேயாகும் கண்டுகொள்வா யிதனுடைய கருவைதானே. (சூ௧0)

கருவான கருவையெல்லாங் கண்டுபார்த்து கலங்காம லிருக்கமனந் தரியவிட்டு, குருவான வுலகத்துக் குருக்கள்பக்கல் கூடியே பொய்வே டந் தரிக்கச்சொல்லி, மருளான மைந்தர்களே யென்றுசொல்லி வாங் குவா னனேகவிதம் பணமுங்காசும், அருளான குருவையல்லோ கா ணவேண்டும் அடியனென் றவர்சொல்லி யழைப்பார்தானே. (சூ௧௧)

அழைப்பார்காண் மார்க்கண்ட ரிஷிக்குத்தந்த அழியாத பதங் கொடுத்த தாகையாலே, இளைப்பாறி யன்றைக்கு மிருக்கலாகும் யீஸ் வரியாள் துணையிருந்து நடனஞ்செய்வாள், மழைக்கார்போல் பறந்து வரு மிருளையெல்லாம் வழியிலே நிறுத்தினால் விலக்கிக்கொள்வாள், கலைக்கோட்டு மாரிஷிகள் கடாட்சம்பெற்ற கதையொருவ ரறியார்கள் கண்டுபாரே. (சூ௧௨)

## நீகித்தால்.

கண்டுபார் வாயுவுக்குத் தடமேதென்றால் கண்ணாலே காண்பா ரோ மனுடரப்பா, தண்டுடனே கமண்டலமுஞ் சங்குமுண்டு திருவடி த்தா ளுண்டுதிரு மேனியுண்டு, நன்றான அரையுண்டு வாசலுண்டு நா லிரண்டு மனையுண்டு நடனமுண்டு, விண்டேனான் விரசுத்தைக் கேளு மைந்தா மேலான பதங்காணும் விவரங்காணே. (சூ௧௩)

காணப்பா கமலமென்றால் சிரசோபாதை கண்ணென்றுஞ் சொல் வதப்பா யறிவேயாகும், ஊணப்பா தண்டதுவே நாசியாகும் உடல் தானே அங்குலமே தொண்ணூற்றாறு, பூணப்பா யிதனுள்ளே ஐந்து பூதம் பூட்டினா ரிதற்கெல்லாங் குலையேசங்கு, பேணப்பா திருமேனி யென்பதெல்லாம் பேரான வுதிரமென்று பேணுவாயே. (சூ௧௪)

பேணுவா யுடலான வுதிரமெல்லாம்பற்றி பிறந்ததப்பா வாயுவது பேச்சில்லாமல், காணுவாய் நால்வருந்தா னிருந்ததாலே கவராக மூட்டிவிட்டார் கண்டுகொள்ளு, தோணுவா யிவர்போகத் தடமேயொன்று சுருக்கினு ரதன்பிறகு யிவர்கள்கூத்து, ஆணுவமா யங்கங்கே தடமதாக்கி ஆடினு ரறுபத்து நான்குசித்தும். (சுகரு)

சித்தான வாய்வைத்தா னறியவேண்டி செகத்திலே யலேந்தாக்கால் தெரியுமோதான், புத்தியில்லாத் தோஷமப்பா யலேவதெல்லாம் பொல்லாத பேர்களுக்குச் சொல்லொணுது, மித்திரபேதங்கள் செய்வார் பிரட்டுசொல்வார் வீண்பேச்சைப் பேசிடுவார் விரும்பமாட்டார், பத்தியுள்ள சீஷனுக்கு யிந்தநூலேப் பழுதறவே யீந்திடுங்காண் பாருபாரே. (சுகசு)

பாரப்பா பின்திரையே நாதமாகும் பாங்கான சுழிரண்டும் குழையுமாகும், சேரப்பா மேல்விசிரோ வொண்ணுமாளம் செப்புகிறே னயனத்தால் சுழற்றிப்பாரு, கூரப்பாயிப்படியே சதா நித்தம்பார்க்ககொள்கையாம் கறுப்பதுபோம் நிறமோகாணும், மாரப்பாயிப்படியே மாறும்போது வாசியென்ற குதிரைகட்ட யிடங் காணுந்தானே. (சுகஎ)

காணுமப்பா வதன்பிறகு பரியைக்கொண்டு கட்டவதைச் சொல்லுகிறேன் கருதிப்பாரு, பேணுவாய் பாஷாணக் கற்பத்தாலே பேச்சான மூச்செல்லாம் பிரண்டும்சேரும், ஆணுவமா யாருக்குஞ் சொல்லவேண்டாம் அப்பனே வுந்தனுக்கு அருளினேம்பார், தோணுவாய்க் கமலத்தில் நிறுத்திக்கொள்ளு சொல்லாதே யமுர்தமுண்டு சுகித்துக் கொள்ளே. (சுகஅ)

கொள்ளேயிலே லகிரியண்ட மதமோமீறும் குருவாகும் நானென்று வுபதேசியாதே, சள்ளப்பா வொருவரையு மணுகொட்டாதே சமுசார மாய்கையிலேயிருந்திடாதே, எள்ளளவு விசாரமப்பா யெண்ணிடாதே யிறக்கவழி யிதுவெல்லா மைந்தாகேளு, மெள்ளமெள்ள யிதுவெல்லாந் தள்ளாவிட்டால் வினேயென்று சொல்லிவிட்டோம் விஞ்சையோர்க்கே. (சுகக)

விஞ்சகத்தி லெனேப்போலே பாசம்விட்டு வீற்றிருந்தா ரொருவரில்லே விவரத்தோடு, நெஞ்சகமே தோர்வதன்றி வேறென்றில்லே நிசஞ்சொன்னே னுங்களுக்கு வுரைக்கப்போமோ, தஞ்சமில்லாப் பாவிகட்கு வுரைக்கவேண்டாம் தாட்சணியம் ஒருபோதுங் கொள்ளவேண்டாம், வஞ்சகமே சொல்லவில்லே மைந்தாகேளு மாளாம லிருக்கவரம் வகைதான்காணே. (சுஉ0)

வகையாக வனுபோகம். வேணுமாகில் மைந்தனே கருவுண்டு மனதிற்காணுங், தகையாக வப்பிரக செந்தூரந்தான் சொல்லு கிறேன் வருஷமொன்று வுண்ணும்போது, நிகையாதவாய்வைத்தான் வாங்கிவாங்கி நிறுத்தையிலே கமலமது வரியும்பாரு, பகையான போக ங்கள் செய்யும்போது பாங்காக வாசியினால் வாங்கலாமே. (௬௨௧)

காலறிதல் சத்திசிவ நிலையறிதல் உலகவாசான் வேடம்.

வாங்கலா மென்றைக்கு மிருக்கலாகும் வல்லமையுமாகாது பொய் யுமாகா, தூங்குகிற சடமாகா துக்கமாகா சுருதியுள்ள தேகத்துக் கழிவேயாகும், தாங்குவது தாயன்றி வேறேயில்லை சத்தியைப்போல் மற்றொருவர் காப்பதில்லை, எங்குவேன் சற்றுமவள் காணவிட்டால் என்னசெய்வே னென்றுசொல்லி யணுகுவாளே. (௬௨௨)

அணுகுவாள் தாரமென்று சொல்வதெல்லாம் ஆறுதாரமே யல்லாவில்லை, அணுகினால் கொல்லாது ஆறுதாரம் அப்பனே சொல்லு கிறேன் கேளுகேளு, அணுகினாற்கொல்லாது யேதேயாகில் அவ மானதாரமப்பா கண்டுகொள்ளு, அணுகவே தன்னையே யணுகினாக் கால் ஆராலும் வெல்வாரோ வசடர்தானே. (௬௨௩)

வெல்லுவார் சூத்தனைத்தா னென்பார்கோடி வெல்லாமல் வந்து கெட்டா ரனேகங்கோடி, கொல்லுவா ருயிர்களைத்தான் பாரமென்று கொலைகொடிய நரகத்தில் குறுகிவிழ்வார், சொல்லுவார் பாவத்தைச் செய்யவேண்டாம் சுருதிபெறும் புண்ணியத்தைச் செய்யவேண்டும், மல்லுவார் மாந்தர்கள்மே லாசைகொண்டு மாண்டுகெட்டார் கோடான கோடிதானே. (௬௨௪)

கோடியிலே யொருவனப்பா சித்தனாவான் கூறுவான் மெய்ச் சூரன் குறிப்பைக்கண்டு, நாடியே தாயாரைப் பூசைபண்ணி நாதாந்த மூர்த்தியுட வருளுங்கேட்டு, ஆடியே யறுபத்து நான்குசித்தும் அலங் கரிப்பா ராருக்கும் விள்ளமாட்டார், தேடுவார் பின்னுமவர் பூசை யோகந்தன்னைத் தினஞ்சிறிது காலமுமே திடஞ்செய்வாரே. (௬௨௫)

செய்பவே சொல்லுகிறேன் கேளுமைந்தா திறமறிந்து மனமது தான் றெளிந்தானுகில், உய்யவே தன்மனதைத் தானே யொப்பி யுறுதியா யைவரையு மொன்றுய்ச் சேர்த்து, பையவே வாசுவென்ற சிவத்தைப்பண்ணி பாலுண்ண யோகசித்தி பலிதமாகும், மைய்யலாய் வருந்துகின்ற தூக்கந்தன்னை மைந்தனே விட்டுவிடு வாழ்வுண்டாமே.()

விட்டிடுவா ரேதாலே யென்றுகேளு வீணைசை கொண்டல்லோ வுழன்றுபோவார், விட்டகுறை யில்லாட்டா லென்னவேண்டும் விமலி யென்ற கற்பமப்பா வுண்ணவேண்டும், விட்டகுறை வருவதெல்லாம் பூசைவேணும் வேதாந்தத் தெளிவறியார் வீணர்வீணர், விட்டவிடந் தொட்டவிட மேதேயாகில் மேலான பதமென்ற வீடுதானே. ()

வீடான வீடப்பா ஞானவீட்டில் வெளிகாணு மொளிகாணும் விவரங்காணும், வீடான வீட்டுக்கு ஆதாரமோயஞ்சு வீசுகிற நாதமோ ராசனுகும், வீடான மோட்சவழிக் கதிதபீட மேலான கருணைபெற வழியைவேண்டும், வீடான வீடப்பா அழியாவீடு வேதாந்த வீடென்றே விரும்புவாயே. (சஉஅ)

விரும்புகிறேன் சாகாத தலையேதென்றால் வெளியான வாசுவே விவரமாகும், கரும்பான காலப்பா வேகாக்காலு கருதினே னேதாகில் கண்டுகொள்ளு, இரும்பான சத்தியது வேறேதென்றும் எவராலு முடியுமோ வேழைப்பிள்ளாய், துரும்பாசு மாயமாய் நின்றுகொண்டு சூட்சமா யாடுகிற தொழில்தான்பாரே. (சஉகூ)

## உலக ஆசான் வேடம் மார்க்கண்டர் கலைக்கோட்டு மகாரிஷி மேல்பதம்.

பாரப்பா யிகாரமென்ற வெழுத்தையன்றிப் படைப்பதுவு மழிப் பதுவும் வேறேயில்லை, நேரப்பா வரைந்துவிட்டுச் சிவமேநூறு நிலையாகச் சிவம்பண்ண சித்துகாணும், கூரப்பா வருஷமொன்று மாதம்பத்து குறையாதே குருவறியக் கூறினேனுன், மாரப்பா வாசனமே புவியு மாகு மைந்தனே மாலையடா தாமரைதானுமே. (சகூ0)

தாமரையாள் சிவம்பண்ணப் பொய்யாகாது சர்க்குருவும் பராபரியுந் தயவாய் நிற்பாள், வாமரைநா லுலகுக்குப் பொய்யானது மைந்தனே தாமரைதான் பொய்யுமாகா, சாமனையுங் காலனையு மணுகொட்டாமல்கற்பமுண்டு சொல்லுகிறேன் கண்டுபாரு, சேமப்பா ரவிபோலே வெளியாய்க்காணுந் துரோகிகட்குக் காணாது சொல்லுறேனே. (சூ௩௧)

வாயலிருக்கப் பள்ளியரை யறிதல்
திறையறிதல் கற்பம் வாசிகட்ட.

சொல்லுகிறே னட்சரத்தின் பெருமைதானுஞ் சூட்சமாய் நூலுக்குள் சொல்லிப் போட்டேன், வெல்லுகிற வெழுத்தென்பரைம்பத்தொன்றும் விவரத்தைத் தானறியார் வீணரப்பா, மல்லுகிறேனைம்பதெல்லாம் பொய்வீடாகும் மகத்தான வீடதுவே யிகாரவீடு, எல்லையடா வோரெழுத்துப் பூசைபண்ண யிவன்போலே சித்தனில்லை யெண்ணிப்பாரே. (சூ௩௨)

எண்ணயிலே வெகுகெடுதி மயக்க முண்டா மிருதயங்கள் பேதலிக்குங் கவலைகாணும், பண்ணயிலே விழிரண்டுஞ் சிவப்புகாணும் பளிச்சென்னும் நாசிரண்டும் பறந்துகாணும், பின்னமே ரோகமென்று விட்டிடாதே பிடித்ததொரு சித்தெல்லாம் பொய்யாய்ப்போகும், உண்ணவே யமுர்தமுண்டு அன்னம் வேண்டாம் உத்தமனே யென்னுடைய முறையைப்பாரே. (சூ௩௩)

முறையாக யென்ஞானம் பார்க்கும்போது முடிவுவரு மென்று சொல்லி யெண்ணவேண்டாம், மறையாமற் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு வாதமென்ற தொழிலாடும் வணக்கமுண்டாம், தீறையான வயித்தியத்தைச் செய்யவேண்டும் தீராத நோயதனைத் தீர்க்கவேண்டும், குறையாம விருக்கலாஞ் சொன்னேனப்பா கூட்டுக்கு அழிவில்லை குணமாய் நில்லே. (சூ௩௪)

வேதாந்தவீடு சாகாததலை வேகாக்கால்
இகாரம் சேபம்பண்ண.

குணமென்ன மனமென்ன குணந்தானென்ன கூடென்ன நாடென்ன கூட்டமென்ன, தனமென்ன தாயென்ன தந்தையென்ன சற்குருவைக் காணவழி நடத்தைப்பாரு, மனமென்ன வாழ்வென்ன மாய்கையென்ன மாளவே யந்தகுறி யறிபாரானந்தர், தினமொன்றுக் கிருநோஞ் செபித்தாயானால் திறங்கண்டு புலியூர்க்குச் செல்லலாமே. ()

செல்லலாந் தாயினுட குணத்தைவிட்டுச் சுகமென்ன யிரவியற்ற ஆசைபாசம், பொல்லாத புந்திகளை நிறுத்திக்கொண்டு பொய்வாழ்வு யென்றுசொல்வார் பிரட்டரப்பா, எல்லார்க்குமப்படியே தோற்றினுக் கால் எந்தனுக்கிடமுண்டோ யேழைபிள்ளாய், கல்லான தெய்வமே வுங்கள் தெய்வமென்று கட்டினே னூல்வேதம் சாஸ்திரங்களாறே. ()

ஆறாறு முப்பத்தா ராகிலுஞ்சொன்னேன் அப்பனே யிருநூற் றைந்துஞ்சொன்னேன், தேறாத பதினாறில் தெளிவுஞ் சொன்னேன் செப்பியதோர் பூரணத்தில் தெளிந்து சொன்னேன், மாறாத காண் டத்தி லதிலுஞ் சொன்னேன் மைந்தனே யீரெழுத்தைச் சொல்ல வில்லை, வேறாக மறைத்துவைத்தே னொருவர்கண்டால் விவரமாய்ப் பொதியைக்கு வருகுவாரே. (௬௭)

வருவார்கள் பொதியைக்குக் கிழக்கதாக மறவனுட ராச்சியங் கள் வரிசைகேளு, தருவானக் காட்டுத் தோப்புமுண்டு சதாசிவத்தின் கோயிலுண்டு அதுவே தாரை, கருவான மலையினுட அடிவாரத்தில் கைலாச பரம்பரைபோல் கல்லோமெத்த, குருவான விஸ்வரியா ளிருந்தபீடம் கொங்கணமூர்த்தியும் நான் கூடினேமே. (௬௮)

கூடினே மவ்விடத்தில் நெல்லியுண்டு குருபூசை தான் முடித்து வுண்ணவேண்டும், நாடினே மங்கங்கே லிங்கக்கல்லு நடக்கவே தட மொருவ ரறியாமற்றான், ஓடினே மிருபேரு மோடும்போது வுரைத் தார்காண் கொங்கணவ ரேதேயாகில், வாடினே னினிமேல் நடக்கப் போமோ மயங்கினார் மனந்தேற்றி வந்தேன்காணே. (௬௯)

காணவே யிவருடைய தாகந்தீர்ந்து கல்லரைக்கு அவர்போனா ரதன்பிறகு, பேணவே யெனைக்காணத் தடமேதென்றால் பேரின்பத் தடத்தாலே யென்னைக்காணும், ஊணவே யப்படியே யில்லாவிட் டால் உத்தமனே யங்குவந்தால் புரச்சைகாணும், வாணம்போ லிது வெல்லாந் தள்ளிவந்தால் மாளாத வரம்வார் வகையைப்பாரே. (௭0)

அட்சரத்தின் பெருமை ஐம்பத்தோன்று போதியைக்குக்
கிழக்கு மறவர்தேசம் அடையாளம்.

பாரடா வர்மம்வந்து போச்சுதென்று பழியாக யொருவரையும் மகிழ்ந்திடாதே, வேரடாயற்றுவிடும் விம்பு வேண்டாம் விலைபட்ட கள்ளனைப்போல் தொண்டுபண்ணு, ஆரடா வுந்தனுக்கு யிணையு மில்லை அரகரா வென்றுசொல்லி யமர்ந்துகொள்ளு, தேரடா மனதையே யூன்றிக் கொண்டு தினஞ்சிவசூட்சமே தெளிவைப்பாரே. ()

தெளிவாகச் சொன்னமுறை யிந்தஞானம் செகத்திலே யொருவர்க்குஞ் செப்பவேண்டாம், அழியாத பதவிகண்டா லனைவருந்தான் ஆசாரஞ் செய்வார்க ளாகையாலே, கழியாமல் கேட்டருள வேண்டுமென்று கடைகெட்ட வண்டரெல்லாங் கருதிக்கேட்பார், வெளியாகச் சொல்லுவரோ மூடருக்கும் விதமறிந்தா லிந்திடுவான் வெளியுமாமே. (கூசஉ)

ஆதுமே வெளியென்று மிருளேயென்றும் அப்பனே வொளியென்றுஞ் சொல்வதெல்லாம், தாகுமே யிகாரமென்ற யெழுத்தல்லாமற் சாடையாய்ச் சொன்னதப்பா அஞ்சுமூன்றும், போகத்திலழிவு மெண்ணிப் புரளும்போலே புல்லருக்கு வைத்தமுறை பூட்டினேனுன், தேகத்துக் கழியாமல் கற்பமுண்டு திடஞ்சொன்னே னுத்தமர்களறிவதாமே. (கூசரு)

அகஸ்தியருங் கோங்கணருங் கூடினது
அஞ்சு மூன்று எழுத்து.

அறிவாக முன்னுரைத்த நூல்கட்கெல்லாம் அசாத்தியங்கள் வந்தாக்கால் தேறமாட்டார், தெரியாது கருக்கிடையுங் குழுக்கிடையுமப்பா செப்புகிறே னுதாக்கள் தெளிவை யெல்லாம், பரிவான சின்மயத்தை யெண்ணவேண்டும் பாங்கான ஞானவழி பெறவேவேண்டும், கரியானை முகத்தானை தியானப்பண்ணி சற்பமுண்ணச் சொல்லுகிறேன் கடுக்காய்தானே. (கூசச)

### கடுக்காய்க் கற்பம்.

காயான கடுக்காயை வாங்கிமைந்தா காராட்டு நீரிலே யூறவிட்டு, மாயாமல் தினம்பத்தில் தோய்த்துலர்த்தி மைந்தனே பொடிபண்ணி வஸ்திர காயங்கொண்டு, தாயாரை பூசைபண்ணி யோரண்ட நெய்யில் சாதிப்பாய் மூவிரலால் சூரணந்தான் சேளு, மாயாத வியாதியெல்லாந் தின்றுபோடு மைந்தனே வருஷமூன்று தேகம்பாரே. (சுசரு)

தேகமப்பா சூரணமே நிறமேயாகும் திறமாக யின்ன முண்டு கற்பங்கேளு, பாகமாய்ச் செய்யணுங்கா ணில்லாவிட்டால் பழி செய்யுந் தேகத்தை யசைத்துக் கொள்ளும், தாகமுடன் வேர்வையு மதிகமாகும் தனியான நோய்களுமே யதிகமாகும், வேகமாய்க் கால் கைகள் குடைச்சலுண்டாம் விதஞ்சொன்னே னிதுவறிந்து கண்டு கொள்ளே. (சுசசு)

### அன்னமூலிக் கற்பம்.

கொள்ளப்பா வதன்பிறகு கற்பங்சேளு கூரான தூதுவளை பிடி தானென்று, துள்ளவே பொன்னாங்காணி பலந்தானென்று துடியான கையானை பிடிதானென்று, தெள்ளவே வல்லாரை பிடிதானென்று செயலான பருப்பரிசி பிடிதானென்று, கொள்ளவே நெய்விட்டுப் பொங்கிக்கொண்டு கூட்டியே வருஷமொன்று கொள்ளும்போதே. ()

போதவே வருஷமது கொள்ளும்போது பூட்டிநின்ற வியாதி யெல்லா மோடிப்போகும், மாதருடன் சேராதே யிறந்து போவாய் மைந்தனே காயத்தில் சுத்தியாகும், நீதமாம் பூமிசர்க்கரை வருஷ முண்ண நிலையாத வாய்வப்பா நிசத்தைப்பேணும், நாதனுட திரு வருளால் சொல்லிப் போட்டேன் நாதவிந்து அதன்பக்க லடக்க மாமே. (சுசஅ)

### பாஷாண கற்பம்.

அடக்கவே யின்னமுண்டு கற்பமைந்தா அன்பான செடியல்ல பூடுமல்ல, மடக்கமுள்ள பாஷாணக் கட்டைவாங்கி மசுத்தான குமரி தனில் சுத்திசெய்து, திடப்படவே கையானை வேருங்கூட்டிச் செய லான கண்ணிடவேர் திறமாய்க்கூட்டி, செடப்படவே வேரையப்பா அண்டம்விட்டு சீக்கிரமாய்ச் சிலைமண் மூன்றுஞ் செய்யே. (சுசகூ)

செய்யவே மாிற்புடத்தில் நீறிப்போகும் திறமாக வனுபானம் நெய்யிற்கூட்டு, உய்யவே வருஷமொன்று வுண்ணும்போது வுலகத்துக் கொருவிதமை நிறமுமாகும், பையவே நரைதிரையு மற்றுப் போகும் பளிச்செனவே தேகமப்பா தெளிவுகாணும், கொய்யவந்த காலனுமை யணுகமாட்டான் கூறினேன் பாஷாணங் குருவுமாமே. ()

## கேந்தகக் கற்பம்.

குருவான கெந்தகமோ சட்டிவாங்கிக் கும்மட்டித் தயிலத்தில் சுத்தியாக்கி, மருகாதே முட்சுண்டை வேரெடுத்து வகையாகப் பனி நீர்விட் டரைத்துக்கொண்டு, கருவடா சிலைமண் மூன்றுதரஞ் செய்து கவுதாரிப் புடம்போடக் கட்டிநீறும், இருளெல்லாம் வெளியாகு மிந்தகற்பம் யிவன்தேகம் வாதமென்ற குருவுமாமே. (கூ௱க)

## நூறுவருட மறிந்தவர்கள்

ஆதுமப்பா கடுகளவாய் குன்றிமட்டாய் அப்படியே ரணதிக்கி முறையே யுண்டு, ஏகுவா யனுட்டான வாலைபூசையிப்படியே வுண்ண வுண்ண மெத்தநன்று, பாகுடனே தர்மத்தைச் செய்யவேண்டும் பாங்காக மோக்ஷவழி யெய்யவேண்டும், யோகத்தைக் கட்டலா மிந்தக்கற்பம் நூறுநா ளுண்டிருந்து வாழலாமே. (கூ௱உ)

வாழலா மென்முறைபோ லாருஞ்சொல்லார் மாளவே மறைத்து வைப்பார் மருந்தையெல்லாம், தாழ்வாகச் சொன்னதெல்லாம் வெளியாய்ப் பாடி சாற்றுகிறே னறிவுள்ளோர் கண்டுதேர்வார், மூழ்கவே வயித்திய சாகரத்தில் மூழ்கி முடிவான மனோன்மணியை யறிய வேண்டும், நாழிலே பழசணுங்கா ணிதுகளெல்லாம் நாட்டினேன் சூத்திரத்தை நாட்டினேனே. (கூ௱ங)

நாட்டினேன் புவியிலுள்ள பேர்கட்காக நல்லவர்க்கும் ஞானத்தை யெழுதிப்போட்டேன், கூட்டிலே கபடற்றுச் சொன்னேன் மைந்தா குணம்போலே யறியலா மின்னமுண்டு, காட்டிலே யிருக்காட்டா லுலகில் மாண்பர் கண்டாக்கால் விடுவாரோ கருவைக்கேட்பார், ஏட்டிலே யெழுதுமென்பார் படியுமென்பரர் எனக்கொன்றுந் தெரியாதென் றிருந்திட்டேனே. (௩௫௪)

நவகோண வரைவாதசித்தி யோகசித்தி யறியவும்.

இருந்திட்டே னென்னூலை யறிந்தபேர்க ளென்னுடைய பொதியைக்குவந்தாராகில், சிறந்திட்ட சித்தர்களைச் சொல்லிவிட்டுச் சீக்கிரமாய்த் தானழைத்து முத்திரையு மீந்து, மறந்திட்ட வுபதேச மருளிச் செய்து மாணிக்கத் திருவடிக்கு யருளுமீந்து, பறந்திட்ட வாசுவுக்கு வழியில்லாமல் பக்கமே தானிருக்கப் பகருவேனே. (௩௫௫)

பகருவே னின்னமொரு சூட்சங்கேளு பரிவாக நவகோணம் வரைந்துகொள்ளு, சிகரத்தில் அகாரமிடு அதன்பிறகு தீர்க்கமாய்ச் சகாரமிடு செப்புறேனுன், உகாரத்தி லகாரமிடு அதற்குங்கிழே யுத்தமனே நகாரமிட்டு வுயிரைத்தாக்கு, மிகாரவெண் காரமிடு மேலாம் பாதம் விதமாக வகார மிடு விரும்பிக்கொள்ளே. (௩௫௬)

கொள்ளப்பா முக்கோண மிச்சமுண்டு கூறுகிறேன் ஓம் ஆம் சிவ வென்றுபோடு, உள்ளத்தே யிகாரமிடு வளையம்நாலும் உறவாகச் சுத்திவிடு ஓங்காரம்போடு, மெள்ளவே வாசலிடு நாலுபக்கம் விவரமாய்ச் சொரிந்துவிடு மந்திரந்தான்சேரு, விள்ளவே - ஓம் நமசிவய - ஸ்ரீம் - அம் - அம் சிவாவென்று விரும்பியே வப்பாலே லட்சம் போடே. (௩௫௭)

போடப்பா திசைவடக்கு மூலைநன்று புசழாக மாயாம் பளிங்கு மாகும், கூடப்பா வாலையுட பூசைமார்க்கம் குறையாமற் புழுகு பன்னீர் சந்தனமுங்கூட்டு, தேடப்பா சிவாயப் பூசைபண்ணு திடமாக மனதிலே தியானமோது, மாடப்பா வாலையொடு வஸ்துவைத்து மைந்தனே பூசையெல்லாம் வழங்குவாயே. (௩௫௮)

போதியைக்குத் தெற்கு குளம் இராமரச முண்ணும்போது வேளை.

வளம்பெறவே கனிகளொடு பலகாரங்கள் வகையாக மாங்கிஷங்கள் பாலினோடு, தளம்பெறவே சாம்பிராணி தூபதீபந் தப்பாமற் கொடுத்துவிடு தாயைப்பேணு, உளம்பெறவே யலையாதே தாயைக் காணும் உறுதியாய்ச் சொல்லிவிட்டே னுண்மைபாரு, குளம்பின லாகாது குற்றமுண்டு குறையாமற் சாபமிட்டுக் கூடாள் பாரே. ()

பாரப்பா ஆசனமோ மான்றோலாகும் பரிவாகச் சொல்லிவிட்டேன் பாருபாரு, சேரப்பா யிப்படியே சேர்ந்துநிற்கச் செப்புகிறேன் பக்கலிலே சேர்த்துக்கொள்வாள், கூரப்பா யவளைவிட்டால் தாயோ யில்லை குரும்பரே யிவளையன்றி நீக்கப்போமோ, ஆரப்பா யின்னால் போ லாருஞ்சொல்லார் அப்பனே சொல்லுகிறே னறியத்தானே. ()

அறிவாகச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு ஆசானை நிழல்போலே யடுத்துக்காரு, தெரியவே சொல்லார்களுள்ளம்பார்த்து சிவசூட்சமறியவே தெளிவுகாணும், மறிவாகா தொருவருக்கு மைந்தாகேளு வார்த்தையிலே தானறிந்து வசனஞ்சொல்வார், குறியாகச் சொல்லிவிட்டே னுள்ளந்தேறி கூறினேங்காண் சிவபதமே குறித்துச் சொல்லே. (௬௬௧)

சொல்லுகிறேன் வாதசித்தி காயசித்தி துடியான யோகசித்தி ஞானசித்தி, வில்லுகிறே னிதற்கெல்லா மூன்றுபேரும் விரும்புகிறேன் வாலையொன்று புவனையொன்று, நல்லவள் தாய் திரிபுரையாள் மூன்றுபேரும் நாடியே மூன்றுமடா நன்றாய்ப்பாரு, சொல்லுவதும் பிழைப்பதுவு மூன்றினாலே கூறினேன் மெய்ஞ்ஞானக்குறிப்புதானே. (௬௬௨)

குறியாகப் பொதியைமலைச் சார்பின்றெற்கே குளமடா யவ்விடத்தில் குறியாய்ப்பாரு, திருவாகக்காணலாங் கொடிதானிளம் சிவப்புக்கு அதுபோலே குருவுமில்லை, தெரிவாக சித்தர்கள் கோடாகோடி தெரிசிப்பார் மனோன்மணியின் தியானமெத்த, பரிவாக அவ்விடத்தில் வரவொட்டார்கள் பணிகார மெத்தவுண்டு பாருபாரே. (௬௬௩)

பாரடா பழியாவ தாரேயாகில் பாழான வண்டுதும்பி பறந்துகொல்லும், மாரடா பதினெண்பேர் கண்டாலுஞ் சொல்லார் பக்கமுள்ள சித்தரப்பா பார்க்க வொட்டார், காரடா வலபக்கம் வணங்கிக்கொண்டு கருவான ஞானத்தைக் கொஞ்சஞ்சொல்லு, மாரடா சொல்லார்க ளழைத்துக்கொண்டு வாய்திறந்து கேட்டதெல்லாம் வரமீவாரே. (௬௬௪)

## வாய்வு நிலையறிந்த தெளிவின் குணம்.

ஈவதுதா னேககோடி காலம்வேணும் எளிதிலுங் கிடைத்தது ண்டு யெப்படியேயாகில், உய்யவே ராமரச முண்ணும்போது வுள்ள மெல்லாங் குளிர்ந்திருக்கும் வேளைபார்த்து, தையலாள் தனைத்துதித்து நிற்கும்வேளை தானறிந் தவர்கட்கு முத்திபக்கம், கைலாச பதஞ்சேர வருளுமுண்டாங் கசடருக்குக் கிடையாது காப்பார்பாரே. (௬௬௫)

காப்பதுதா னேதாலே பெருமையல்ல கர்மமுண்டு தலையுமட் டுங் கருவைச் சொல்வேன், சேர்ப்பதற்கு முறையல்ல சிவனுக்கப்பா தெரியாது சாபத்தைத் தீர்க்கமாட்டார், பார்ப்பதற்குக் குணமென்ன வென்றாற்கேளு பராபரத்தில் கியானமிட்டால் சித்தனப்பா, நாற்பதுக் குள் ளாகவே பார்க்கவேணும் நாதாந்த குருவினிட நடனந்தானே. ()

நடமான வாய்வுநிலை யறியவேண்டி நயனத்திற் றான்பார்க்கக் காணலாகும், படமான விழிசொருகி மேலேநோக்கப் பளிச்செனவே வெளிச்சமடா பாச்சலாகும், திடமாக வாயுவையும் வாங்கிக்கொண்டு சிங் - வங் - சிவாவென்று சேவித்துக்கொள்ளு, இடமான கமலத்தைக் கண்டானாகில் இறக்காமற் றானிருப்பா னிதஞ்சொன்னேனே.(௬௬௭)

சொன்னதினை லறிவாரோ மைந்தாகேளு சுருதியாய்த் தான்பாரா சுணங்கரப்பா, முன்னமே செய்தகுறை யவர்க்குத்தோஷ மூடிவைக் கும் ஞானமென்பார் மூடரப்பா, முன்னேநா னிருந்தவித மிதுகளெ ல்லா முறைசொன்னேன் குறைசொன்னேன் முடியவேண்டாம், அன் னமே யுண்டதினை லென்னமுத்தி அப்பனே சொல்லுகிறே னசை வுதானே. (௬௬அ)

அசையாது என்னூலை யறிந்தாராகில் அப்பனே யென்றைக்கு மிருக்கலாகும். இசைவாகஸ்திரீபோகஞ்செய்யலாகும் இப்படியே யன் னமுண்டு யிருக்கலாகும், பசையான விந்துமணி கட்டலாகும் பரிவான வாசுவிலே யிருக்கலாகும், தசையான காயத்துக் சழிவில்லாமல் சற்கு ருவின் பக்கமதில் சாரலாமே. (௬௬௯)

தடங்காண காவிடம்.

சார்வதற்குத் தடமாவ தெங்கேயாகில் சார்வான பொதியையிலே அஞ்சுராசன், சேர்வதற்கு வகையேது யென்றாற்கேளு சிந்தையற் றிருக்கணுவங்கா ணில்லாவிட்டால், கூர்வதற்கு யிப்பொதியை மலையை த்தள்ளி குறையாம லப்பொதியைச் சார்பில்நில்லு, மாய்வதற் குபாய முண்டு மைந்தாகேளு மகத்தான சிறுகுகையுங் கட்டிக்கொள்ளே. ()

கொண்டபின் பதனுள்ளே யிருந்துகொண்டு குருபூதத்தைத் தியானமிடு கூர்ந்துபாரு, நன்றாக வுன்னிடத்தி லவரும்வந்து நலமாக வுபதேச மருளிச்செய்வார், குன்றுமல நீயுமே பதத்திற்சேர்ந்து கூசா மல் மேருகிரி சென்றுமேதான், இன்றுமுத லன்றளவு யிதுபோல் சித்த ரிருக்கிறோ மைந்தர்களே யியல்புதானே. (௬௭௧)

இகாரவெழுத்தின் பூசை.

இயல்பாகச் சொல்லுகிறே னிதுகட்கெல்லாம் இகாரமென்ற யெழுத்தன்றி வேறேயில்லை, இகாரமே ஆண்பெண் ணலியுமாகி யிறப் பதுவும் பிறப்பதுவு மிரண்டுமாகி, இகாரமே மண்ணாகி விண்ணுமாகி யெப்பொழுதுந் தானாகி மலமுமாகி, இகாரமே யெவ்வுயிர்க்குஞ் சீவ னுமாகி யிருக்கின்ற வகையறியா ரீனர்தானே. (௬௭௨)

தானாகி வூனாகிச் சடமுமாகி சத்தற்ற சூதமாகிக் கருவுமாகி, மானான மனமாகி கல்வியாகி மாளாமலிருக்கிற வடிவுமாகி, நானாகி நீயாகி நாதனாகி நடப்பதுவுங் கிடப்பதுவு மிரண்டுமாகி, தேனாகி ரிஷி யாகி செகத்துக்குள்ளே தேளாகப் பிறந்திருக்குந் தெளிவுதானே. ()

தெளிவாகுஞ் சித்தனுக்கு யிகாரபூசை செப்புகிறே னிதுவன்றி வேறேயில்லை, அழியாத முத்தியுண்டாஞ் சொன்னேன் சொன்னேன் அறிவாலே தானேக்கி லண்டங்காணும், முழியாமல் கண்மூடித் திற க்குமுன்னே முக்கியமாங் கபாலத்தின் வழியேகாணும், கழியாமற் கட் டுகிற வொளியிதப்பா கண்டபடி தெளிவுகாண் கண்டுகொள்ளே. ()

கண்டுகொள்ளும் வெளியொளியும் இகாரமப்பா கருவான யெழு த்தொன்று வேறேயில்லை, நண்டான வாமைமுதல் தவமேசெய்யும் நாட்டகத்துள் சொல்வார்கள் ஞானிமார்கள், கண்டோருஞ் சித்தனெ ன்றே பொய்ப்பேச்சப்பா கனநாட்டிற் சித்தனென்ன நீசசென்மம். உண்டான படியப்பா வறியச்சொன்னே னுலகதனி லறிவார்க ளநற் றோர்தாமே. (௬௭௫)

அறிவார்க ளுத்தமர்கள் கண்டுதேறி ஆசார மேடையிலே யிருந்துகொண்டு, தெரிவார்கள் மற்றுமுள்ள பேர்கட்கெல்லாம் திடப்படுத்திச் சொல்லிடுவார் செகத்துக்குள்ளே, அறிவாரே யறிவார்க ளறிவில்லாட்டால் ஆரறியப்போறார்க ளப்பாசொன்னேன், குறியிலொன்றுந் தப்பாதே சொன்னேன் கேளு குறிப்பறிந்து கடையவ ரங்கூட்டுவாரே. (௬௱௭௬)

கூட்டான கூட்டுறவில் பிள்ளையென்றுங் குலமான சாதியெல்லாங் கூட்டுக்காமோ, கூட்டான சொர்ணமன்னங் கொள்கையாலே கூட்டிலே தீங்கில்லா திருக்கவேணும், கூடான காயத்துக் கற்பமன்றிக் கூராகக் கூட்டொன்றுங் கூடாதப்பா, கூடாரங் கூட்டுக்கு ஐவரன்றி குறைவில்லை சொல்லிவிட்டேன் குறிப்பாய்த்தானே. (௬௱௭௭)

குறிப்பாக யின்னமொரு சித்தனுக்குக் குறையேது நிறையென்ன கோலந்தானென்ன, மறிப்பான மங்கையின்மே லாசையென்ன மனையென்ன மனதுக்குத் துயரமென்ன, இருப்பான யிருப்பென்ன தொழிலைவிட்டு இறக்காம லிருக்கவல்லோர் பார்க்கவேணும், கரிப்பாக லாகாது மனதைத்தேறிக் கைலாச பரவெளிக்குக் கருதிப்பாரே. (௬௱௭௮)

சித்தர் கேவுனம்பெற்றது உபதேச சூட்சம்.

பார்க்கையிலே பதினெண்பேர் சித்தருக்கும் பாக்கியங்கள் வந்ததெல்லாம் வாலையாலே, சேர்க்கையிலே மனோன்மணித்தா யவரைப்போலே செகத்திலே யொருவரில்லை செப்பக்கேளு, கார்க்கையிலே கருவூரார் கொங்கணர்தான் கைலாச சட்டைமுனி போகநாதன், மூர்க்கமுள்ள திருமூல ரிவர்களெல்லா முத்திபெற்றார் வாலையினால் முன்புதானே. (௬௱௭௯)

முத்தியா மென்னூலைப் பார்த்தபேர்கள் முறைதப்ப லாகாது முனிந்துகோபம், நித்திரையுந் தள்ளுங்காண் பொய்யாகாது நேமநிட்டை வாலையன்றி வேறுமாகா, சித்தியா மூலகுக்கு வுடலுக்கப்பா தொளிகாணும் வெளிகாணுஞ் செப்பினேன்பார், சுத்தியாங் காயமது பிலத்துக்கொள்ளுஞ் சொல்லுகிறே னுபதேசஞ் சூட்சங்காணே. ()

சூட்சமாய்ப் பாடாமல் வாதம்பொய்யாம் சுடரெழுத்தை யறியாட்டால் ஞானம்பொய்யாம், தாட்சிணையாய்க் கருவறியான் மையும் பொய்யாம் தனையறிய மாட்டாதான் தாயும்பொய்யாம், கூச்சமற்றுப் பாராட்டால் மந்திரமும் பொய்யாம் குணமறிந்து யீயாட்டா லிவனும் பொய்யாம், எச்சடா வந்துவிடு மூலகுக்கெல்லாம் இதுவறிந்தென்னூலை யெழுதினேனே. (௬௱௮௧)

எழுதினேன் மறைவெல்லாம் வெளியதாக வீஸ்வரியை மறவாம விதமாய்ச் சொன்னேன், பழுதுவரச் சொன்னதில்லை பலிபீடத்தை பராபரமே யருள்காணும் பரிந்துபாரு, வழுதிடா சின்மயத்தைக் கூர்ந்துமெத்த, வலமாக மனோன்மணியின் தெளிமையாலே, எழுதினதோ ரென்னூலை பார்த்தாயானால் இருக்கலாம் நற்பதியி லிருக்கலாமே. ()

இருக்கவே சக்கர மந்திரமுஞ் சொன்னேன் எழுத்தருப் பூட்டையெல்லாம் வெளியிற் சொன்னேன், உருக்கவே புத்திசொன்னேன் னறிவுசொன்னேன் ஊடான கருசொன்னே னுண்மையாக; பெருக்கவே வேதாந்தத் தாயெனக்கு போதித்தாள் நானுமே கண்டுகொண்டேன், அருக்கவே செந்தூரங் கற்பஞ்சொன்னேன் அனுஷ்டான தடங்கண்டு அறிந்துகொள்ளே. (கூஅங)

அரியெழுத் துபதேசம் நூலுடைக்க வந்தவன் அணுகுவா யிதின் சிறுதி காரமப்பா, அரியென்ற முதலெழுத்தைத் தகட்டிற்கீறி சிங்-வங் - ஸ்ரீம் ஸ்ரீம் அம்அம் - உம் - உம் - ஓ மென்றோது, அணுகிநீ தியானமப்பா வுருநூற்றோன்றும் அர்ச்சனையாய்ச் செய்துவிடு ஆட்டம்பாரு, அணுகிடவே வருஷமொன்று திகையுமுன்னே அவனியா யிருப்பார்களறிந்துசெய்யே. (கூஅச)

செய்யவே யவள்வசமாய்ச் சித்தையெல்லாம் திறப்படுத்திக் கொண்டுவிடு தெளிவேயாகும், உய்யவே யுன்னைவிட்டு அவளும்போகாள் உருவான காலனுமோ அஞ்சிக்கொள்வான், மையலென்ற வசைவுதன்னை விட்டுத்தள்ளி வணங்கவே சித்தெல்லாம் வழங்கும்பாரு, ஐயெழுத்தே குருவன்றி வேறேயில்லை ஆருக்குஞ் சொல்லாதே யடக்கந்தானே. (கூஅரு)

அடக்கமாய் வைத்திருந்தே னிந்தநூலை யமுர்தமுண்ணுங் சல்மேலே மறந்துவிட்டேன், உடைக்கவே யொருவனங்கே வந்தான்கண்டாய் உலகதனில் விஷயகுலத் துதித்தோன் மைந்தன், திடப்படவே யுலகத்துச் சித்தனுகி திறமையுள்ளா னென்றுமே பேரெடுத்து, உடைக்காதே வெளியென்று சொல்லிப்போட்டேன் உலகுக்கு அவனடனமுசத்திதானே. (கூஅசு)

## வாமபூசைக்குப் பத்திரம்.

உசத்தியாம் வாமமென்ற பூசைக்சப்பா வுருவான பத்திரமோ மண்டையாகும், இசைத்திடவே நானுமிப்போ பாத்திரத்தில் இதமாக வஸ்துவிட்டுச் சாபந்திர்த்து, சமைத்திட்ட பலகாரஞ் சுத்தியெல்லாம் சரியாக வெவ்வேறே தான் படைத்துக்கொண்டு, விசைத்திடவே போகாமல் பூசைபண்ணி விவரமாயுண்ணவே காணலாமே. (கூஅஎ)

## அஞ்சன மைவரிசை.

காணவே யென்னுடைய முறைமைக்கேளு கருவான வூமத்தின் றயிலம்வாங்கி, கோணவே கும்மட்டிவேர் பிடுங்கியேதான் குறுகவே நறுக்கியதைக் கருக்கிக்கொண்டு, ஊணவே யேரண்ட நெய்யைவிட்டு வுத்தமனே மத்தித்துக் கையிற்போட, பேணவே கையிலிட்டு பார்க்கும்போது புறத்திலே வெளிச்சமொன்று காணலாமே. (சுஅஅ)

## நீர்மேல்நெருப்பு மை.

வெளிச்சமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு விதமான நீர்மேலின் நெருப்பை வாங்கி, வளியோடு மூலமென்ற மந்திரத்தைச்சொல்லி வகையாகத் தூபமிட்டு யெடுத்துக்கொண்டு, களியடா யானைக்கண் சட்டிதன்னில் கருக்கியமை யெடுத்து யேரண்ட நெய்யில், இழையடா வுள்ளங்கை முகத்திலிட்டு யின்பமாய்த் தானேக்கக் குருவைக் கேளே. (சுஅகூ)

குருவாக யிதற்கெல்லா மந்திரமோவுண்டு கொள்கையாய்ச் சொல்லுகிறேன் கூடிப்பாரு, ஒருகாலே மூலமென்ற மந்திரத்தைக் கேளு ஓம் - மாயி மாயி மாயாகுண்டலி - அம் - சிவவென்று, உருவப்பா நூற்றொன்று தியானம்பண்ணி யுத்தமனே சாரணைக்குக் காப்புகூடி, மருகவே பிடுங்கியதை பெலியுமீந்து மைந்தனே வேர்பிடுங்கி வைத்துக்கொள்ளே. (சுகூ0)

## சாறணை மை.

வேரான சாறணைவேர் வெள்ளெருக்கின்வேரும் மேலான கவிழ் தும்பை வேருங்கூட்டி, கூராக விடித்ததனைப் பொடியே பண்ணி குறையாமற்றான் கருக்கி யெடுத்துக்கொண்டு, மாராலே காரெள்ளுத் தயிலம்வாங்கி மைந்தனே யிழைத்து நன்றாய் வைத்துக்கொண்டு, சேரப்பா வுள்ளங்கை முகத்திற்போட்டு திறமாகப் பார்க்கவே யோடுங் காணே. (சுகூக)

## நரிமிரட்டி மை.

ஓடுங்காண் தூரமென்ன வென்றாயாகில் உத்தமனே யடியேழா மோட்டமாகும், நாடுவா யின்னமொரு வகையைக்கேளு நரிமிரட்டி தனக்குமே காப்புகட்டி, மாடுவாய் பெலிகொடுத்துத் தூபமிட்டு விரிக்கிழங்கின் சாரதிலே யூறவிட்டு, கூடுவாயுலர்த்தியதை யெடுத்துக் கொண்டு குறையாமற் கருக்கிவிட்டு மையை வாங்கே. ()

வாங்குவாய் மையெடுத்து வைத்துக்கொண்டு மைந்தனே யேரண்டத் தயிலமூட்டி, தாங்குவாய் விழியிலே மையுமூட்டி சத்தியைத்தான் தியானமிட்டுத் தாக்கிப்பாரு, எங்கிடாதிந்தவண்ணஞ் செய்தாயாகில் என்மகனே சித்திக்கும் யாவுங்கண்டீர், தூங்குவாய் நிதிகளெல்லாங் காணலாகுஞ் சூட்சமாய்.சொல்லிவிட்டேன் சுருதி பாரே.()

பாரப்பா யிதன்மேலே யின்னங்கேளு பரிவாக ஞாயிறு நாள் காப்புக்கட்டி, நேரப்பா யமுக்குரூ பிடுங்கி மைந்தா நிலையாகத் தூப மிட்டு வைத்துக்கொண்டு, சேரப்பா பூனைக்கண் ஆனைக்கண்ணும் திற மாகத் தானெடுத்துப் பொடியே பண்ணி, மாரப்பா யோண்டத் தயி லம்விட்டு மைந்தனே குழப்பிநன்றாய் வைத்துக்கொள்ளே. (கூகூச)

கொண்டபின்பு நெற்றியிலே திலதம்போடு கூடியே வுள்ளங்கை முகத்திற்போடு, விண்டேனன் மையுடைய வோட்டம்பாரு வெளி யாகும் வெள்ளிமீ னொளிவுகாணும், நன்றாகப் பார்த்துவிடு பாதாளத் தை நாயதுபோல் பறித்துவிடும் நடக்கும்பாரு, உண்டான படிசொன் னேன் மைந்தாகேளு வுருவாகும் வாலையுட வொளிவுகாணே. (கூகூரு)

காவளை மை.

காணப்பா சொல்லுகிறே னின்னங்கேளு காவளையின் வேருக்குக் காப்புகட்டி, தோணப்பா ஞாயிறிலே பொங்கல் போட்டு சொல்லு கிறேன் பெலிகொடுத்துத் தீபமேற்றி, ஊணப்பா நன்றாக வெடுத்துக் கொண்டு உத்தமனே சாரணைவேர் கொஞ்சங்கூட்டி, வாணுவமாய்க் கருக்கியதை யெடுத்துக்கொண்டு மைந்தனே சிமிளிலே யடைத்துக் கொள்ளே. (கூகூசு)

கழுவின் கண்.

கொள்ளப்பா வதன்பிறகு கழுகின்கண்ணுங் கூரான வாந்தை யுட கூகைக்கண்ணும், விள்ளுகிறே னிவையெல்லாம் பொடியாய்ப் பண்ணி விவரமாய்த் தானெடுத்து வைத்துக்கொண்டு, துள்ளவே யேர ண்டநெய்யில் மைந்தா சுருதியாய் மத்தித்துப் பூசைபண்ணு, மெள் ளவே மந்திரந்தானேதேயாகில் ஓம்வீசு அஞ்சனாதேவி இரியும் கிரியும் ஆம்சிவ வென்றுபோடே. (கூகூஎ)

ஆந்தைக்கண் மை.

போட்டபின்பு வொளிகாணும் பாதாளங்காணும் புசழாக நிதிகளெ ல்லாம் வெளியாய்க்காணும், ஆட்டப்பா அண்டத்தி னுண்மைகண் டால் அறியலா மப்படியே சிவமும்வேணும், தீட்டுவாய் சிகாரவரை தோற்றம்பாரு சிவசிவா என்னவைகள் தோஷநிறம்பாரு, மூட்டுவா யுருவப்பா நூற்றுவொன்று முறையொன்றுந் தப்பாதே மூசிவாய்ப் பாரே. (கூகூஅ)

## ஓடாதகண்ணுக்கு மை.

முசியாமல் வாழலா மிதுபோ லுண்டோ முன்பின்னாய்ச் சொன் னதெல்லாந் தெரிந்துபாரு, நசியமுண்டு வோடாத கண்ணுக்கப்பா நாயுரிஞ்சி மதனையென்ற பூச்சியொன்றும், கசியதமாய் கிரகமது போலச் செய்யும் கண்காண தோட்டமது கடினமெத்த, விசையாகத் தான்கசக்கி நாசிக்கண்ணில் விவரமாய்த்தான்பிழிய வோட்டமாமே.()

ஆருமே வொட்டாத கண்ணுக்கப்பா அறிவாகத் தான்பாரு யெல்லாங்காணும், போகுமே மையினுட வாடைகண்டால் பூதமென்ற பேய்களுமே யணுகாதப்பா, பாகமாய்ச் செய்யாட்டால் குற்றமுண்டு பளிச்சௌவே கண்ணசையார் பார்க்கவேண்டாம், ஆகமா யறிந்து செய்ய வெல்லாந் தோற்றும் அன்பாகச் சொல்லிவிட்டே நடன மாமே. (எ00)

## நாரைக்கண் மை.

நடனமப்பா யின்னமுண்டு மையேதாகில் நாரையுட கண்ணு டனே பிள்ளைப்பூச்சி, திடமாகக் கவுதாரி கண்ணுங் கூட்டித் தேவியர்க் குப் பூசைபண்ணி யுலர்த்திக்கொண்டு, வடமாகத் தான்பொடித்துப் புற் றுத்தேனில் மையிடவே தான்கேளு வடிவுகாணுங், குடமான கரிமு கனை முன்னேகாணும் கூறினே னிதனுடைய குணத்தைப்பாரே. ()

## பூசைக்கு நிமித்தியம்.

குணமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு கூறினே னின்னமொ ன்று கூர்ந்துபாரு, தினைமாவும் நெற்பொரியுஞ் சர்க்கரையுந் தேங்காய் திறமாகச் சாம்பிராணிச் சூடனோடு, அனுமான்போல் ரூபமொன்று வரைந்துகொண்டு அகாரமுடன் உகாரம்சவ்வு மகாரமிட்டு, தினைமாவு மிவையெல்லாம் பூசையிட்டுச் சீக்கிரமாய்த் தூபமிட்டு யிருந்துகொள் ளே. (எ0உ)

## தீண்டாப்பாளை மை.

இருந்துவிடு அதன்பிறகு மையைக்கேளு இதமானரற்றினமேல் தீண்டாப்பாளை, திருந்தவே சுழல்வண்டு யிதுகள்ரண்டுஞ் சேர்த்துமே கருக்கியிடு மைபோலாக்கு, விரும்பிவிட்டு நிலப்பரண்டில் யாளிக்கண் ணும் வெண்ணெயைப்போல் பொடிபண்ணிவைத்துக்கொண்டு அரும் பானயானைக்கண் சட்டித்தூறில் அப்பனே மையெடுத்து வைத்துக் கொள்ளே. (எ0ந

வைத்தபின் பேரண்டத் தயிலங்கூட்டு மைந்தனே குழைத்து நன்றாயெடுத்துக்கொண்டு, பத்தியாய்த் தியானத்தை யுபதேசித்துப் பார்க்கவே கைவிட்டு வோடும்பாரு, சத்தியமாய்ச் சொன்னனடா விந்த மார்க்கம் சரியாகும் சிகாரமதை யுச்சரிப்பாய், வெற்றிலையி லிட்டானு மதுராங்காணும் விதஞ்சொன்னே னிதியெடுக்க விபாங்காணே. (எ0ச)

வேள்ளேலி மை.

விபரமாய் முறையுண்டு யின்னங்கேளு வெள்ளெலியின் வயிற்றிலுள்ள கருவைவாங்கி, தவறாதே புற்றின்மேல் முளைத்திருக்குந் தனியான யெருக்குக்குக் காப்புகட்டி, கவறுமற் பெலிகொடுத்துத் தீபமிட்டுக் கையினாற் றொடாமலதைப் பிடுங்கிக்கொண்டு, நிகராத ரவியிலே யுலர்ந்தபின்பு நிச்சயமாய்த் தானெடுத்துப் பொடிதான் பண்ணே. (எ0ரு)

பண்ணவே யிதையெடுத்து வைத்துக்கொண்டு பாங்காகத் தலைகிழாய்த் தூங்கும்பட்சி, எண்ணவே சமூலமப்பா நெய்யிறக்கி யிதமாகத் தானெடுத்துக் குழைத்துப்போடு, வண்ணமுடன் கைபாகம் பிசகிடாமல் மைந்தனே சூட்சமதை யறிந்துமேதான், நண்ணுமடா நாழிகைதா னென்றுதூரம் நடக்குமப்பா வனுமனுட மையுமாமே. (எ0சு)

மைக்கெல்லா வனுமன்னர் வேறேயில்லை மாயத்தைக் காணுமலறிந்து கெட்டார், கைக்கெல்லாம் வாலையன்றி வேறேயில்லை காணார்கள் கடைகெட்ட வண்டரப்பா, பைக்கெல்லாஞ் சிவனறிவே வேறேயில்லை பார்த்திருந்துந் தெரியாது பாவிமார்க்கு, மெய்க்கெல்லாம் வாலையன்றி வேறேயில்லை விரும்பினேன் விபரமாயறிந்துகொள்ளே.()

தாமரை மை.

அறிவவே யின்னவொரு முறைதான் கேளு அடுக்கான தாமரையின் வித்தைவாங்கி, குறியாக வாள்மிரட்டி வித்திேைனாடு குறையாமூற் றூன்றாக்கி யிடித்துக்கொண்டு, மறியவே குழித்தயில மிறக்கி மைந்தா வகையாகத் தான்வாங்கி யெடுத்துக்கொண்டு, கரியான வாளியுட னெய்யுலர்த்திக் கடுகவே தான்பொடித்து வைத்திடாயே.(எ0அ)

வையப்பா யானைக்கண் சட்டித்தூறில் மைந்தனே தடவியதையெடுத்துக்கொண்டு உய்யவே கற்பூர விளக்குமேற்றி யுத்தமனே கருப்பற்றி யெடுத்துக்கொண்டு, பையவே யேரண்டத் தயிலங் கூட்டு பாங்காக மத்தித்துக் கையிற்போடு, நெய்யடா நெற்றியிலே திலதம் போடு நோக்கு மின்னுகிற மின்னைப்பாரே. (எ0கூ)

மின்னப்பா பூரணத்தின் சந்திரன் போலே வெளிச்சமடா நாழிகைதான் மூன்றுக்குள்ளே, மின்னப்பா பக்கமாய் மின்னும்பின்பு வெளிகாணு தென்றுசொல்லி மயங்கிடாதே, மின்னப்பா பாதாளந் திறந்துபோகும் வெளிகண்டமட்டுமடா விவரமாகும், மின்னப்பா யிருக்கிற பொருளையெல்லாம் வேரோடே பிடுங்கிவிடும் விவரந்தானே.()

விவரமா யெடுத்துநீ வைத்துக்கொண்டு விமலியென்ற வாலைக்குக் கோயில்கட்டு, தவறாதே தான்மிகுங் கொடுமையாகா தாய்தந்தை குலத்துக்குச் சாபமுண்டாம், பகரவே சொல்லிவிட்டேன் மைந்தா கேளு பாத்துக்கே தானமிடு பாவந்தீரும், கவறுதே யுந்தனுக்கு நன்றாய்ச்சொல்லுங் கருதியே நின்றாக்கால் காணலாமே. (எகக)

குருவேங்கை மை.

காணவே யின்னமொரு மையைக்கேளு கருவேங்கை வித்தை யப்பா பலமோவொன்று, தோணவே சிறுவழிஞ்சில் விரை பலமோ வொன்று துடியான நீர்முள்ளிவிரை பலமோவொன்று, ஊணவே யிவையெல்லாந் தூளாய்த்தூக்கி யுத்தமனே தயிலத்தை யெடுத்துக் கொண்டு, பேணவே காராட்டுக் கண்ணும்வேணும் பேசாதே காடையுட கண்ணும்வேணும். (எகஉ)

கருநாயின் மை.

வேணுமப்பா கருநாயின் கண்ணுங்கூட்டி வேதையென்ற ரவியிலே யுலர்த்திக்கொண்டு, பேணுநீ பொடிபண்ணி வைத்துமைந்தா பேசாமல் தியானமிடு யதற்குப்பின்பு, தோணுநீ யானைக்கண் சட்டித் தூறில் சொல்லுகிறேன் மைதடவிச் சூடமேற்றி, காணுநீ யேரண்டத் தயிலம்விட்டுக் கையாலே மத்தித்துத் தூபமேற்றே. (எகங)

ஏற்றியபின் வாலைக்குத் தியானஞ்செய்து யிதமாகக் கையிலிடு காதமோடும், மாற்றிவிடும் பாராதே மை யிதுதான் சொன்னேன் மைந்தனே வைத்ததெல்லாம் வெளியிற்காணும், மேற்றிவிடு மையதுவே சுப்பிரமணியர் மேலான பொருளெல்லாங் காட்டிடுவார்பார், ஆத்துமத்துக்கிதுவுமொருவசிகாமுமாகும் அப்பனேநீயறிந்து அறிவினூடே.()

அறிவில்லை யடக்கமில்லையாசானில்லை ஆத்தாளைத் துதிப்பதில்லை யகந்தைசொல்வார், மறைவாக வைத்ததெல்லா மாய்கையாலே மறந்து கெட்டுச் செய்யாதே மைந்தாகேளு, பிறிவெல்லாஞ் சொல்லுகிறே னறிந்து பார்த்து பேயனைப்போ லலையாதே பேசவேண்டாம், தெருவிலே கள்ளருண்டு மோசஞ்செய்வார் செப்புகிறேன் சூஸ்திரத்தைத் திருஷ்டிப்பாயே. (எகரு)

திடமாக நமனைப்போல் திரிவானென்று சிறிதுபோ லென்னசெய் வார் சொல்லக்கேளு, தடமான தடத்திலே நடக்கும்போது சதிபண்ண மருந்தையங்கே புதைப்பாரப்பா, நடமாட்டங் குறையாம விருக்கக் கேளு நன்றாக வாசியுட தியானம்பண்ணு, புடமதிலே யமூர்தமங்கே நீறும்போலே போய்விடுங்காண் சொல்லுகிறேன் புதுமைபாரே. ()

சாப நிவர்த்தி.

புதுமையுள்ள கருவொன்றும் பலிதமாகா பூட்டுவார் சாபமிட்டு புரட்டுசெய்வார், புதுமையுள்ள வாலைதனைத் தியானம்பண்ணப் புக ழான மந்திரந்தான் கேளுகேளு, அதரமடா பூசையிடு ஓம் - அம் - வீகி - விக - ரக்ஷா - சிவாயநமா வென்றுபோடு, கதுமையுள்ள சாப மெல்லாம் நிவர்த்தியாகுங் கைகண்ட முறைசொன்னேன் கண்டு பாரே. (௭௧௭)

கண்டுகொள்வா யின்னமொரு மையைக்கேளு கருநாயின் கண் ணுடனே பச்சோந்திக் கண்ணும், உண்டேனு னிழலிலே யுலர்த்திக் கொண்டு யுகவாகப் பொடிபண்ணி வைத்துக்கொள்ளு, நன்றாகச் சிறு சின்னி தீண்டாப்பாளை நரிமிரட்டி யிதற்கெல்லாங் காப்புகட்டி, உண் டான மந்திரந்தா னேதேயாகில் ஓம் - சித்திசித்தி - அம் - உம் - சிவா வென்று வூணுபண்ணே. (௭௧௮)

பண்ணியிடு யானைக்கண் சட்டித்தூறில் பாங்காகத் தான்றடவிச் சூடமேற்றி, உண்ணிவிடு மைதனையே யெடுத்துக்கொண்டு வுத்தம னே யோண்டத் தயிலமூட்டி, திண்ணமுடன் கைலாசம் பிசகிடாமல் தீர்க்கமாய் பூசிப்பாய் திறமோமெத்த, எண்ணிவிடு சர்க்குருவைப் பூசைபண்ணு யிதமாக வுள்ளங்கை புறங்கையும் போடே. (௭௧௯)

போட்டபின் பதனுடைய சுருக்குகேளு புகழான விழிரண்டும் காந்தல்காணும், நேட்டமாய் நீரெல்லாம் வாங்கிக்கொண்டு நின்றபின்பு வெளிச்சமடா விளக்காய்த் தோணும், நோட்டத்தை விட்டுவிடு பார்க் கவேண்டாம் நொடியிலே கைதிறக்கும் நுணுக்கம்பாரு, ஆட்டமடா யஞ்சன தேவிவந்து அனுமனை யணைத்திடுவா ளறிந்துபாரே. (௭௨0)

பாரப்பா வாசுமகன் வந்தபின்பு பரிவாக வழிதிறந்து போகும் போகும், தேரப்பா பாதாளந் திறந்துபோகும் செப்புகிறே னிதிக ளெல்லாந் தெளிவாய்க்காணும், கூரப்பா நிதிதனையே யெடுக்கும்போது கூப்பிடுநீ மூன்றுசத்தம் வராகிதன்னை, பேரப்பா கேட்டாக்கால் பசாசு பூதம் பேசாமலோடிவிடும் பிறவிதாமே. (௭௨௧)

## பிரம்புக்கு உருப்போட.

பிறப்பாகப் பூதமங்கே வந்ததாகில் பிரம்புதனை யுருவேற்றி வைத்துக்கொண்டு, மறைப்பில்லா மந்திரந்தான் ஓம் வாமி - அ - அ - வாலை பரமேஸ்வரி சிவாவென்றுபோடு, திறப்பாக வவ்வெழுத்தை யுச்சரித்தாயானால் தீர்க்கமா யவள்வந்து காட்சியீவாள், இறப்பாகும் நமக்கென்று வோடிப்போமே இதற்கொன்று மஞ்சாதே யெழுத்து தானே. (எஉஉ)

## பச்சைப்பாம்பு கருங்காக்கையின் மை.

எழுத்தாக யின்னமொரு மையைக்கேளு யெப்படியோ வென்று சொல்லி மலைக்கவேண்டாம், திழிவான பாம்பப்பா பச்சைக்கண்ணுந் திறமாக நீரிலுறுங் காக்கைக்கண்ணும், வெளியாகத் தானுலர்த்திப் பொடிதான்பண்ணு விவரமாய்த் தானெடுத்துக்கொண்டுமேதான், வெளியாக மூலியுண்டு சொல்லக்கேளு வாடாதமல்லிகைக்குக் காப்பு கட்டே. (எஉ௩)

கட்டியபின் வாரமடா ஞாயிறுருங் கருவாடும் பொங்கலுமாய்ப் பூசைபண்ணி, திட்டமாய்த் தான்பிடுங்கிக் கருக்கிக்கொண்டு திறமான வானைக்கண் சட்டிதன்னில், ஓட்டிலே மைதடவி விருடமேற்றி யுத்தமனே யோண்ட நெய்யிற்கூட்டு, திட்டமாய் முழுகிவந்து கையிற் போடச் செப்புகிறே னிதிகளெல்லாந் தெரியுங்காணே. (எஉச)

தெளிவாகக் காணுமப்பா நிதிகளெல்லாந் திறஞ்சொன்னேன் மைந்தனே தேடவேண்டாம், பழியாதே பெரியோரைத் தூஷியாதே பராபரியை மறவாதே பணிந்துநில்லு, நளியாதே தவசுக்குப் பிலத்தைத்தேடு நற்பரியாள் முன்னிற்பாள் சார்ந்துபாரு, வழியோடேசெய்யாட்டால் பலமுமில்லை மைந்தனே சொல்லுகிறேன் வாழ்த்துவாயே.()

## கருங்காக்கை மை.

வாழ்த்துவா யின்னமொரு மையைக்கேளு மகத்தான கருங்காக்கை பிடித்துக்கொண்டு, சேர்த்துவாய் நெய்யெடுத்து வைத்துக்கொண்டு திடமாக மூலியுண்டு செப்பக்கேளு, பார்த்துநீ செம்பருத்தி விரையை வாங்கிப் பாங்காகத் தயிலத்தை யெடுத்துக்கொண்டு, போர்த்துவாய் வாலைக்குப் பூசைபண்ணிப் புகழாக வைத்துவிடு சொல்லக்கேளே. (எஉ௬)

## முடக்கோத்தான் மை.

கேளப்பா முடக்கொத்தான் கிழ்க்காய்நெல்லி செடியான கன்னி நூல் காப்புகட்டி, வேளப்பா யெட்டாநாள் வாரஞ் செவ்வாய் விதமாகப் பெலிகொடுத்துப் பிடுங்கிமைந்தா, தாளப்பா கருக்கியதை யேரண்டநெய்யில் தனிபாகத்தான்குழைத்து முன் னெய்யுங்கூட்டி, வாளப்பா கையிலிட்டு நிதியைநோக்கி மகத்துவமாய்த் தானெடுத்து வைத்து நில்லே. (எ௨எ)

## பேய்களுக்குப் பூசை.

நில்லப்பா யிதுக்கெல்லாம் பூசையுண்டு நிதிகாக்கும் பேய்களுக்குக் கொடுக்கவேண்டி, சொல்லப்பா கிடாவொன்று பறவையொன்று சோறுக்கு அரிசியடா செந்தாழையாகும், வெல்லப்பா ஆணியா மிரும்பு பாகு மேல்விழுகும்ரிஷிகளுக்குப் பூசையப்பா, எல்லைவிட் டகன்றிடுமே விதனைக்கண்டு யெடுத்துக்கொள் நிதியெல்லா மிதஞ்சொன்னேனே. (எ௨அ)

## சிச்சிலுப்பை மை.

சொன்னனடா யின்னமுண்டு மையைச்சேளு துடியான சிச்சிலுப்பைக் காப்புகட்டி, இன்னமுண்டு பூவாசு வடவேர்வாங்கி யிதுவண்டுஞ் சரிநிறையாய்த் தூக்கிக்கொண்டு, மின்னுமப்பா பூச்சியதைப் பிடித்துமைந்தா மேலான யானைக்கண் சட்டிக்குளிட்டு, பண்ணப்பா கரியெடுத்து வைத்துக்கொண்டு பாங்காகச்சூடத்தி லெரித்துவாங்கே.

வாங்கியபின் வாலைக்குத் தியானம்பண்ணி மகத்தான சைமுகத்தி விட்டுப்பாரு, தாங்கியே யோடிவிடுஞ் சொன்னேன் சொன்னேன் தப்பாது பாதாளம் வெளியேகாணும், ஓங்குவது தூர்க்கையெல்லாம் வெளியாய்க்காணும் உட்பூதம் புறபூத மெல்லாங்காணும், ஏங்கியே யலையாதே மைந்தாசேளு யிதற்கெல்லாங் கருவுண்டு யெழுதிப் போட்டேன். (எகூ0)

போட்டனப்பா பூசைசொன்னேன் மந்திரமுஞ் சொன்னேன் புகழாக மூலிசொன்னேன் வெளியதாக, நாட்டகத்து லிருந்துகொண்டு பிழைக்கவேண்டி நலமாகத் தீட்சைவிதி நாட்டஞ்சொன்னேன் பாட்டனுள்ள காலத்தில் வைத்ததெல்லாம் பரிவாக நிதியெடுக்கப் பரிந்து சொன்னேன், காட்டமாய் காயத்துக் காயூனவரேமெத்த காணுர்கள் சாபத்தின் கருதான்பாரே. (எகூக)

## கோடிவேலி குப்பைமேனி மை.

பாரப்பா யின்னமுண்டு மையைச்சேளு பாங்கான கொடிவேலி குப்பைமேனி, சேரப்பா சாரணைவேர் வெள்ளியாகுந் திடமாகக் கருக்கியதை யெடுத்துக்கொண்டு, கூரப்பா கற்பூரம் பச்சைவாங்கிக் குறையாமல் விளக்கேற்றி மைபற்றவைத்து, நேரப்பா யெடுத்ததனை வைத்துக் கொண்டு நிலையாக யேரண்ட நெய்யை வாங்கே. (எகூ௨)

நெய்யப்பா வாங்கியபின் மையைக்கூட்டி நெடுகத்தா னுளேந்து வைத்துக்கொண்டு, கையப்பா யிருபுறமுந் தடவமையைக் கண்டெறிக் கத்தான்பாரு மின்னல்சாணும், பொய்யப்பா சொல்லவில்லை யென்ற நூலில் புண்ணியங்கள் செய்தவர்க்கு யின்னூல்கிட்டும், மெய்யப்பா சொல்லிவிட்டே னின்னூல்கண்டு விரும்பியே சமயத்தோர் குரு வானாரே. (எஙங)

குருவாவார் தவமாவார் குணத்துக்கப்பா குணமாகக் கூறுவான் மைந்தாகேளு, கருவாவான் குருவாவான் கமலமாவான் கைலாச தமர் வழிக்குக் காவலாவான், பருவான ஞானவழிக் கடக்கலாவான் பாங் கான சின்மயத்தை விரும்பலாவான், அருவாவான் திருவாவா னுசா னுவான் ஆத்தாளைப் பூசித்தா லரசனாமே. (எஙச)

## ஆமணக்கு மை.

அரசாக யின்னமொரு மையைக்கேளு ஆமணக்கு மூலிக்குக் காப்புகட்டி, மறையான மந்திரத்தை யுபதேசித்து மைந்தனே பிடுங்கி யதை வைத்துக்கொண்டு, நிறையாகக் கஞ்சாவின்விரைத் தயிலம் வாங்கி நிச்சயமாய்க் கருக்கியதை வைத்துக்கொண்டு, விரையப்பா முன்சொன்ன தயிலந்தன்னை மிகவாக நீயதனைப் புரட்டிக்கொள்ளே. ()

கொண்டபின்பு யின்னமதைக் குழைத்துக்கொண்டு குறியாகக் கையிலிடக் குணத்தைக்கேளு, மண்டான பாதாளம் வெளியிற்கா ணும் மைந்தனே சொல்லுகின்ற வகையைக்கேளு, கண்டுகொள்ளு முருகனைத்தா னறியான்பண்ணு காவலுள்ள பேய்களெல்லாங் கதறி யோடும், வண்டருக்குச் சொல்லாதே மகிமைபோகு மைநோக்க மானி டவர் குறியைக்காணே. (எஙரு)

காணப்பா காலுமுந்திப் பிறந்தோனுகுங் கண்ணப்பா கடுநெற் றிப் புருவமாகும், தோணப்பா தலைப்பிள்ளை யுதிரக்கண்ணன் தாகுமே மிகக்கண்ணன் வெள்ளிக்கண்ணன், ஊணப்பா யிப்படியே நாலுநன்று வுத்தமனே யிதுவன்றி யொன்றுமாகா, பேணப்பா யிவர்களுக்கு முழு கக்கேளு பேரான யெண்ணெயொன்று மாகாதென்றே. (எஙசா)

## மைபார்க்கு மனிதர்க்கு தலைமுழுகும் எண்ணெய்.

ஆகுமப்பா தயிலமுண்டு சொல்லக்கேளு அழிஞ்சிலுட வித்தை யப்பா படிதான்பத்து, தாகுவாய்ப் பொன்னாங்கண்ணிச் சமூலமப்பா சரியாகப் பலம்பத்து பிடுங்கிமைந்தா, பாகுபோல் காய்ச்சிவிடு பிழிந்து கொண்டு பாகமாய் மிளகடா பலமோவொன்று, மேகுவாய் பொடித்த தனை மேலேதூவி விவரமாய்த் தான்குறுக்கி வைத்துக்கொள்ளே. ()

வைத்தபின்பு தயிலத்தை மூன்றிலொன்று மைந்தனே கண்தெரியும் வகையாயோடும், கைத்திரத்தான் மாய்பாரு விழியாற்காணும் சாற்றுகிறேன் வருஷமொன்று முழுகும்போது, பத்திவிடும் தேகத்து ரோமமெல்லாம் பறந்துவிடுஞ் சொல்லுகிறேன் பாருபாரு, நித்தமப்பா முழுகினல் மெத்தநன்று நிசஞ்சொன்னேன் தப்பாது நினைவாய்ப்பாரே. (எ௬௯)

நீர்க்காக்கையின் மை.

நினைவாக யின்னமொரு மையைக்கேளு நீருள்ளே வாழுகின்ற காக்கைமைந்தா, இனமாகத் தான்பிடித்து யெடுத்துக்கொண்டு யிறக்கிவிடு நெய்யப்பா யிதமாய்ச் சொன்னேன், வனமான மூலியுண்டு யேதேயாகில் மகத்தான வெள்ளெருக்கு வட புறத்தின்வேரும், கனமான கருங்குன்றி யிதுகள்ரண்டுங் காப்பணிந்து தீபமிட்டுக் காவுமீயே. ()

ஈயவே மூலமென்ற மந்திரத்தைக்கேளு ஸ்ரீம் - ஸ்ரீஓம் - கங்-கங் உம் - உம் - அர - அர சிவா வென்றுபோடு, உய்யவே யுருவப்பா நூற்றுவொன்று வுத்தமனே தியான மிட்டுப் பிடுங்கிமைந்தா, பையவே கருக்கியதைக் காக்கைநெய்யில் பாங்காகத் தான் குழைத்துக் கையிற்போட, தையலாள் வந்திருந்து நிதிகளுக்குந் தான்காட்டி யுபதேசஞ் சாற்றுவாளே. (எசக)

சாற்றுநீ வாலைதனைப் பூசைபண்ணிச்சர்க்குருவைத் தானினைந்து சரத்தைப்பாரு, போற்றுநீ மனேன்மணியை மறக்கவேண்டாம்புதைத்திருக்கும் நிதிகளைத்தான் பொருந்தியீவாள், மாற்றிவிடு மதுவோடு பலகாரங்கள் வகையாகச் சவரணையும் மாரிதுவுமாகும், காத்துவிடு வாலைபதம் நினையாப்பேர்க்கு கைகண்ட வித்தையெல்லாங் கரியாய்ப்போமே. (எசஉ)

சாரணை மை

கரியானை முகத்தோனை யன்றிவேறே கருவுண்டோ யென்பதெல்லாங் காணுர்மட்டை, முறவான யெழுத்தப்பா மூடருக்கு முனிந்தவர்க்குரண்டு மொன்றே வேறேயில்லை, விரிவான மோட்சவழி விர்த்தியாகும் வினையகற்றிக் கயிலாசக் காணியாவன், சரியாக வுன்னையங்கே யிருத்திக்கொண்டு சாகாதான் வரவோதான் தயவாய்த்தானே. ()

## மச்ச மை.

தயவாக யின்னமுண்டு மையைக்கேளு சாரணையின் வேருடனே காப்புகட்டி, நயமான கும்மட்டி யாள்மிரட்டி நலமாக வேர்பிடுங்கி வைத்துக்கொண்டு, பயமாக யானைக்கண் சட்டித்தூறில் பாங்குடனே தான்கருக்கி வைத்துக்கொண்டு, வய்ணமா யின்ன முள்ள மையைக் கேளு மகத்தான மச்சமப்பா வகையாய்ப் பாரே. (எசச)

பாரப்பா மச்சந்தான் கூர்மமச்சம் பாங்காகத் தான்பிடித்து விழி யெடுத்து, நேரப்பாமச்சத்தை வேகப்போட்டு நெய்யெடுத்துச் சிமி ளிலே யடைத்துக்கொண்டு, காரப்பா மூலியொன்று யேதேயாகில் கருவான வாகாசக்கொடியுமாகும், சேரப்பா செவ்வாயில் காப்புகட் டித் திடமாகத் தான்பார்க்க வையேதெர்க்கு. (எசரு)

வைத்தபின்பு கருக்கியதை யெடுத்துக்கொண்டு மைந்தனே நெய் யிலே குழைத்துக்கொண்டு, முத்திதரு முருகனையே தியானஞ்செய்து முக்கியமாய்க் கையிலிடு மூறிந்துவோடும், தைத்துநின்ற பறவையடா யிதற்குப்பேரு சாற்றுகிறே னிதுகளிவை சாரமில்லை, வெத்தியிலே செய்தாக்கா லென்னவுண்டு வெறுவாயை யுலர்த்துகிற வீணாமே. ()

வீணாக வலையாதே மைந்தாகேளு விவரமாய்ச் சொல்லுகிறேன் விரும்பிப்பாரு, தோணாது கடினமெத்த வென்றுசொல்லித் துக்கித் தாற் பலனு முண்டோ சுணங்கருக்கு, காணவே மையென்பார் கையோவென்பார் பட்டதெல்லாங் கெட்டதென்பார் பாவிமார்கள், ஊணில்லை யுறக்கமில்லை யலைவானப்பா யுருகாணு னருகாணு னுளறு வானே. (எசஎ)

உருக்காண வேணுமென்றால் என்னூல்வேணும் உத்தமனே கருக்காணத் தாயார்வேணும், மறக்காம விருப்பவர்க்கு யெல்லாஞ் சித்தி மைந்தனே சொல்லுகிறேன் மனதையூணு, திரப்பான வாசல் வழி கபாலபீடம் திடமான அயம் பொரியுமதீதமெத்த, பிறக்காம லிறக்காம லிருக்கச்செய்வாள் பேரான வாலையப்பா பேசுவாளே. ()

பேசுவாள் வரமீவாள் மருளருக்குப் பேரின்ப நூல்களெல்லாம் பிலத்திக்கொள்வாள், வாசமுள்ள மலரீவாள் வாலையப்பா வாழ்த்துவாள் நித்தநித்தம் வரிசையீவாள், ஏசுவாள் மனோன்மணியின் வாக்கினு லே எங்கெங்கும் சோதிவழிக் கதிதபீடம், வீசுவாள் நம்மைவிட்டு வவளும்போகாள் விளம்பினே னவளுடைய மாய்கைதானே. (எசகூ)

மாயத்துக் கலைப்போல் தெய்வமில்லை வரம்ய வாலையைப்போ லாருமில்லை, காயத்துக் குறுதியவள் போலேகாணேன் கருவான வித்தைக்கு அவளே தெய்வம், உபாயத்து ஞானவழி பீஜமீவாள் வுச்சரிக்க பிராணுய மயமேதோன்றும், ஞாயத்துக் கலைவிட்டால் கெதியுமில்லை நாட்டினே னுறுதியிதை நாட்டினேனே. (எடு0)

கற்ருழை மை.

உறுதியா யின்னமொரு மையைக்கேளு வுத்தமனே கற்ருழைக் குக் காப்புகட்டி, தெருகவே யாடுதொடா மூலிவேருஞ் செயமுள்ளி வேருடனே மூன்றுங்கூட்டி, பருகவே மூலிக்கு காப்புகட்டி பாகு டனே பெலியீந்து மூன்ருநாள்தான், கருகவே கருக்கியதை யெடுத் துக்கொண்டு கருநாயின் கண்ணுலர்த்திப் பொடிதான் பண்ணே. ()

பண்ணியபின் ஞமையுட கண்ணுங்கூட்டிப் பாங்கான பச்சோந் திக் கண்ணுங்கூட்டு, எண்ணியே ரவியிலே யுலர்த்திக்கொண்டு யித மாகப் பொடிபண்ணி யெல்லாங்கூட்டி, திண்ணமுடன் கட்டாலத்தில் மையைமீட்டி திடமாகப் பிடித்துமே வைத்துக்கொண்டு, வெண்ணெ யப்பா கொஞ்சமிடு திரியுமேற்று விதமாக வானைக்கண் துறிலேற்றே()

ஏய்த்தபின்பு விளக்கேற்றி மைபத்தித்து யியலாக மையெடுத் துச் செப்பக்கேளு, காய்த்தெடுத்த யோண்ட நெய்யைவாங்கிக் கலக்கி விடு மையாக்கிக் கருதிக்கொள்ளு, வாய்த்திடவே தாயார்க்குப் பூசை பண்ணு மைந்தனே கையிலிடு வரிசைபாரு, மாய்த்திட்ட பொருளெல் லாம் வெளியிற்காணு மைந்தனே யறுகாதந் தூரம்போமே. (எடுங)

போகுமப்பா காலடியில் தூக்கும்பின்னே பூட்டெல்லாந் திறந்து விடு முன்போலோடும், தாகுமப்பா நிதியிலுள்ள பொருள்க ளெல் லாந் தனித்தனியே யறியலாந் தாக்கிப்பாரு, நாகமது காத்திருந்து கொண்டதாகில் நாடாதே சாபமுண்டு நாட்டினேன்பார், யோகத்துக் காகாது சொன்னேன் சொன்னேன் யுவப்பாகக் கண்டறிந்து நுணுக் கஞ்செய்யே. (எடுச)

செய்யப்பா சாபமில்லை நிதியைப் பார்த்துத் திறமாக வெடுத் ததனை வைத்துக்கொண்டு, செய்யப்பா பூசையிடு வாலையாட்குச் செப்புகிறேன் சுப்பிரமணியர் தேவிபூசை, செய்யப்பா வாலையிட பூசையப்பா சிறப்பாகப் புவனையிட பூசையாகும், செய்யப்பா தான முடன் காமபோகம் சிறப்பாகப் புரத்துக்குஞ் செலுத்துவாயே. ()

செலுத்துவாய் மாதாமக்கள் பெண்டுபிள்ளை திறமாக விதற் கெல்லாம் பின்புசெய்ய, உனுத்தனைப்போ விருக்காதே காணாதே போம் உந்தனுக்குக் கிடையாது வொருவனுண்டு, செலத்தைவிட்டு நீபோனால் பிழைக்கப்போமோ திறமாகச் சிவனுடைய சாபமுண்டு, உரைத்துவிட்டேன் மெய்ஞ்ஞானக் கருவையெல்லாம் ஒளியாமற் சொல்லுகிறே னுறுதிதானே. (எடுசு)

உறுதியா யின்னமொரு மையைக்கேளு வொருசெடியாய்ப் புற் றின்மேல் முளைத்துநிற்கும், பருதியின்பா ரதன்பேரோ தானியாகும் பாங்காக ஞாயிறுநாள் காப்புகட்டி, நிருதியென்ற மூலையிலே பொங்க விட்டு நிலையாகப் பெலிகொடுத்துப் பிடுங்கிவந்து, பருதியென்ற செம் பருத்திப் பஞ்சுமைந்தா பசுவினுட நெய்தனிலே வைத்துக் கொள்ளே. (எடுஎ)

கொண்டபின்பு வேரதனைப் பொடிதான்செய்து கூரான வழிஞ்சி யுடன் மருளூமத்தன், விண்டேனன் விரையெல்லாம் பொடிதான் செய்து வீராக வஸ்திரத்திற் சுத்திசெய்து, குன்றுமல் யிடைபாகம் பிசகிடாமல் கூர்ந்துமே கைபாகம் மனசிலூணி, நன்றாகப் பஞ்சிலே சுருட்டி மைந்தா நலமாக விளக்கேற்றி மையைவாங்கே. (எடுஅ)

வாங்கியபின் னேரண்டத் தயிலம்வாங்கி வளமாக மத்தித்துக் கையிற்போடு, தாங்காம லோடிவிடு முன்னூறுகாதஞ் சத்தியைத்தா னறியாமல் சையோகந்தள்ளு, நாங்களெல்லாஞ் செய்யுமுறை யிதுவே யாகும் நலமாகப் பார்த்துவிடு நிதிகளெல்லாம், பாங்காக யெடுக்கலாம் பயப்படாதே பராபரியாள் மையொன்று பகருவேனே. (எடுகூ)

## சிவன்வேம்பின் மை.

பகருவே னின்னமொரு மையைக்கேளு பாங்கான சிவன்வேம் பின் காப்புகட்டி, நிகரவே நிருதியுட மூலைநோக்கி நிசமாகப் பலி கொடுத்துப் பொங்கலிட்டு, தவறாதே பிடுங்கினதைக் கருக்கிமைந்தா தப்பாமற் சட்டிதனில் மைபத்தித்து, விகரவே தானெடுத்து வைத் துக்கொண்டு விதமாக யோண்டங் குழைத்துக்கொள்ளே. (எசூ0)

குழைத்துவிரு கையிலிடு வோட்டம்பாரு குருவான சிவபூசை தியானம்பண்ணு, அழைத்துவிடு ஓம் - சிவாயநமா - அம் - உம் - வம் யென்று அப்பனே யுருவடா தொண்ணூற்றொன்று, வளைத்தடா வயி ரவியை நினைத்துக்கொண்டு மைந்தனே முக்காத வழிதான்போகும், இளைத்துவிட யிருக்காதே நிதியைப்பாரு யிருதயத்தைத் தேற்றிவிடு யெண்ணினேனே. (எசூக)

## புளிமேலோட்டின் மை.

எண்ணினே னின்னமொருமையைக்கேளு யிதமான புளியின்மே லோடுக்கப்பா, கன்னியுட நூலாலே காப்புகட்டி கடுகவே மந்திரந்தான் சொல்லக்கேளு, உன்னிவிடு-ஓம்-சி-சி-வாம்-ராம்-யம் சிவவென்று வுத் தமனே யுருவப்பா நூற்றுவொன்று, பன்னிவிடு சாம்பிராணித் தூப மிட்டுப் பரிவாகத் தான்பிடுங்கி யெடுத்துக்கொள்ளே. (௭௬௨)

எடுத்துவிடு யானைக்கண் சட்டிதன்னி விதமாகத் தான்பிடுங்கிக் கொண்டுமேதான், தொடுத்துவிடு பச்சைநல்ல சூடமேற்றிச் சொல் லுகிறேன் மையெடுத்து அடைத்துக்கொண்டு, விடுத்ததோ ரோண்ட நெய்யில்மைந்தா விபரமாய்த் தான் குழைத்துக் கையிற்போட, அடைத்துவைத்த செபமெல்லாம் வெளியாய்க்காணும் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரே. (௭௬௩)

அறிந்துவிடு யிங்கிதியை யெடுக்கலாகும் அப்பனே சொல்லு கிறேன் னன்பாய்க்கேளு, முறிந்துவிடும் படைகளெல்லாந் திலதம் போட முறிவுக்கு யிதுபோலே மையுமில்லை, செரித்துமே பூனைக் கண்ணுனன் பார்க்க செகமெல்லாம் நிதிகண்டு யெடுக்கலாகும், தெரிந் தவனே யானுக்கால் கண்டுதேறு திடமாக்கு வசியமாய் செப்பு றேனே. (௭௬௪)

செப்புகிறே னின்னமொரு மையைக்கேளு திடமாகக் களவு செய்து கழுவில்மாண்டோன், உப்புகிறே னுடல்சிரசு யெடுத்துக் கொண்டு வுத்தமனே சிரசதனை யுலர்த்திக்கொள்ளு, தப்பாதே யாடு தொடா மூலிதன்னைத் தாக்கியே காப்பணிந்து பிடுங்கி மைந்தா, இப் படியே மையாக்கிப் பொடியுங்கூட்டி யிளகவே கையிலிடத் திறக்கும் பாரே. (௭௬௫)

திறக்குமடா முன்னூறுதூரம்பாரு செப்பினேன் பூரணம்போ லொளிவுகாணும், மறைப்பெல்லாம் நீக்கிவிட்டு வெளியாய்ச் சொன் னேன் மைந்தனே யிதுவானல் மெத்தநன்று, பறக்குமடா பாதாளம் வெளியாய்க்காணும் பாடினேன் குருவறியப் பாரமில்லை, சிறப்பாகு முன்னுரைத்த நூல்களெல்லாஞ் செப்பினே னிதுவுமொரு திறவு கோலே. (௭௬௬)

பசளை மை.

திறமாக யின்னமொரு மையைக்கேளு சிப்பியடா மெத்தவது சொண்டுவந்து, இரவிலே வேகவிட்டு நெய்யெடுத்து யிதமாசப் பசளைக்குக் காப்புகட்டி, பரமாக மந்திரத்தை யுச்சரித்து பாங்காகத் தூபமிட்டு தியானமிட்டு, குறைவில்லா நடுமையம் வேளைபார்த்துக் குறிப்பாகப் பொங்கலிட்டுக் கூர்ந்துகொள்ளே. (௭௬௭)

கொள்ளவே புத்திதனைத் திடப்படுத்திக் கூர்ந்துபார் பாதாளங் குறிப்பாய்க் காணும், தெள்ளுவாள் நிதிகளெல்லாந் திறந்துகாணுஞ் செப்புகிறே னிப்படியே செய்துபாரு, துள்ளுகிற பூதமெல்லாம் வெளியாய்க்காணுந் துடியாகத் தூமாதேவியைத் தியானம்பண்ணு, வள்ளலென்ற வீரனைத்தான் குறிப்பாயெண்ணி மைந்தனே சொல்லு கிறேன் மருவிப்பாரே. (௭௬௮)

மறக்காம லின்னமொரு மையைக்கேளு மகத்தான விரியனுட விரையைவாங்கி, தறக்கான ஆத்தியுட விரையுங்கூட்டிச் சரிசமனாய்த் தானளந்து தைலம்வாங்கி, கருவான நீர்நாயின் நெய்யும் வாங்கிக் கலந்துவிடு யிதுரண்டும் பதனம்பண்ணு, தருவான முக்கொழிஞ்சிரு பாரையொட்டித் தான்பிடுங்கிக் கருக்கியதை யெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துவிடு சூட்சமடா விளக்குமேற்றி யெரித்தெடுத்த மையதனை முன் தயிலம்விட்டு, தொடுத்துவிடு நன்றாக மத்தித்தித்தேதான் சுருதியாய்க் கையிலிடு துறந்துவோடும், அடுத்துவிடு யின்னமப்பா சொல்லக்கேளு அறிவாலே திறந்துவிடு மெல்லாமாகும், மடுக்கவே யின்னமொரு மைதானுண்டு மைந்தனே சொல்லுகிறேன் வரிசைக் காணே. (௭௭0)

காணப்பா யின்னமொரு மைதான்கேளு கருவலா யிருக்கின்ற நாகமாண்டால், தோணப்பா சொல்லுகிறே னயனம்வாங்கிச் சொல் லரிய கல்லொட்டி யாந்தைக் கண்ணும், ஊனப்பா வுலர்த்தி யதைப் பொடியேபண்ணி யுத்தமனே செம்பருத்தி நூலாற்சுற்றி, பேணுவாய் கோப்பாகக் கருப்புநெய்யில் பிலக்கவே தாதுவைத்துச் சட்டியாக்கே. ()

ஆக்கப்பா யானைக்கண் சட்டிதன்னில் அப்பனே தூறிலே மை பத்தித்து, தாக்கப்பா யோண்ட நெய்யிற்குழைத்து தவறாமற் கையி லிடு தயவாய்ப்பாரு, நோக்கப்பா நாழிகைதான் மூன்றிலோடும் நுணுக்கமாய்ச் சொல்லிவிட்டே னுண்மைபாரு, வாக்கப்பா பேசாதே நிதிகளெல்லா மைந்தனே தெரிந்துவிடும் வகையைப்பாரே. (௭௭௨)

## கருநாயின் மை.

பாரப்பா யின்னமொரு மையைக்கேளு பரிவான பனையின்மே லரசுவெட்டு, நேரப்பா திங்களிலே காப்புகட்டி நிலையாகத் தான் பிடுங்கி யெடுத்துக்கொண்டு, கூரப்பா காரையின்மே லித்திகண்ணி குறையாமல் ஞாயிறிலே காப்புகட்டி, சேரப்பா பொங்க லிட்டுப் பலியுமீந்து திடமாகத் தான்பிடுங்கி வைத்துக்காணே. (௭௭௩)

காணப்பா குழைத்துவிடு கையிற்போடு காதமடா வழிநடக்குங் கருதிப்பாரு, தோணப்பா நிதிகளெல்லாம் வெளியாய்க்காணுஞ் சொல்லுகிறேன் மைந்தனே சூட்சம்பாரு, ஊணப்பா நீயொருவர்க் கிந்த வார்த்தை யுரையாதே சொல்லுகிறே னுறுதியாகும், பேணப்பா வாலைதனைப் பூசைபண்ணப் பேசாத கருவெல்லாம் பேசும்பாரே. ( )

பேசுமப்பா யின்னமொரு மையைக்கேளு பிள்ளையடா தலைச்சனது மாண்டுபோனால், நேசமாய்த் தானெடுத்துப் பொடியே பண்ணி நிலையான புற்றுத்தேன் குழைத்துக்கொள்ளு, வாசமாய் கையிலிடு கிரியைபாரு மைந்தனே யிதுவெல்லாம் வழங்குமென்று, மோசமில்லை யுந்தனுக்கு சோதனை சொன்னேன் முடிந்துவிடு மணந்தேறி யெடுத்துக்கொள்ளே. (௭௭௫)

## பனைமேலோட்டு மை.

எடுத்துவிடு யின்னமொரு மையைக்கேளு யிதமான வாடுதொடா மூலியொன்று, மடுத்துவிடு சாரணைதன் மூலியொன்று வனந்தனிலே நிலவேம்பு மூலியோடு, அடுத்துவிடு வெண்துத்தி மூலியொன்று அப்பனே முட்சுண்டை மூலியொன்று, குடத்துடனே யிதுவெல்லாம் நிழலுலர்த்தி குணமாகப் பொடிபண்ணி யெடுத்துப்பாரே. (௭௭௬)

பாரப்பா யிவையெல்லா மொருநிறையாய்த் தூக்கி பரிவாக யானைக்கண் சட்டியிலிட்டு, சேரப்பா கருக்கியதை யெடுத்துக்கொண்டு திறமாகக் கரியெடுத்துப் பதனம்பண்ணு, கூரப்பா யின்னமுண்டு சொல்லக்கேளு கூட்டுகிற முறையிலே தப்பவேண்டாம், மாரப்பா கண்ணுண்டு யேதேயாகில் மைந்தனே சொல்லுகிறேன் வகையைத் தானே. (௭௭௭)

வகையாக வாமைக்கண் முதலைக்கண்ணு மைந்தனே காராட்டுக் கண்ணுங்கூட்டு, துகையாகக் கழுவின்கண் ணாந்தைக் கண்ணுஞ் சொல்லுகிறேன் பொடிபண்ணி யெடுத்துக்கொண்டு, நிகையான யேரண்டத் தயிலம்விட்டு நிசமாகத் தான்குழைத்து வைத்துக் கொள்ளு, வகையாகக் கையிலிடு வொளியைப்பாரு மைந்தனே திசை திசைக்கு வாடீமாமே. (௭௭௮)

## மாந்தரீக மை.

வாமென்ற பாதாளம் வெளியாய்க்காணு மைந்தனே நிதிகளெல் லாம் வகையாய்க்காணும், ஞானமென்ற சித்தனுக்குச் சிவனுங் காணும் நாட்டிலுள்ள பூதமெல்லாம் நன்றாய்க்காணும், பானமென்ற பாத்திரத்தை யறிவாற்காணும் பாதாள கண்டியென்று யிதுவின்பே ராம், தாகையா யிருப்பவர்க்கு யிதுவும்வேணுந் தனக்கொன்று ஆயுத முங் கருதவேணும். (எளகூ)

வேணுமப்பா வாலைக்குப் பூசைவேணும் விபரமாய்ச் சொல்லி விட்டேன் வீண்போகாது, பேணுமப்பா யிதிலேதான் குறைவுமில்லை மெய்ஞ்ஞானக் குருவறிவாய் விளம்பிவிட்டேன், வேணுமப்பா கடப் பாரை கையிலொன்று விரும்பாட்டா லவன்வீணன் வேதனல்ல, வேணுமப்பா தியானமது மறக்கலாகா வேண்டுவாய் கேட்டவரம் விளம்புவாளே. (எஅ0)

## ஆயுதந்தனக்குக் கடப்பாரை.

விரும்புவா யெந்தனையு மறந்திடாதே விளம்பினு ரென்று சொல்லி பெண்ணிடாதே, தரும்படா யெல்லவரும் குருவென்று சொல்வார் திறமாகச் சித்தரப்பா சூட்சமென்பார், விரும்புவா ரெனக் கொன்றுந் தெரியாதப்பா மெய்ஞ்ஞான மூர்த்தியுடக் கடாக்ஷமன்றி, எறும்படா யெனக்கென்ன தெரியுமைந்தா யீசனுட செயலென்று யெண்ணினேனே. (எஅக)

எண்ணினே னுங்களுக்குத் தெய்வம்வேறே யென்று சொல்லி மனங்களிலே கருதவேண்டாம், உன்னிடமு மென்னிடமும் வாலை யன்றி யொருவரில்லை நம்மளுக்கென் றுரைத்துக்கொள்ளு, கண்ணன் முதல்யிந்தவழி கடந்துபோனர் கண்காணு தொருவருண்டோ கடிந்து பாரு, தன்னுயிர்வே றென்னுயிர்வேறென்று சொல்லி சளங்களை நீ யெண்ணுதே தாயைப் பேணே. (எஅ௨)

பேணப்பா தாயாரைப் பூசைபண்ணு பேரான கண்சொருகிக் கபாலம்பாரு, ஊணப்பா வானமென்ற பாத்திரத்தில் உத்தமனே வஸ்துவொடு யெல்லாஞ்சித்தி, காணப்பா யிப்படியே வருஷம்பண் ணக் கருதிநிற்பாள் வாலையடா கண்டுபாரு, தோணுவாய் சர்க்குரு வைப் பூசைபண்ணித் துவக்கிவிட வாசுவின் நடனந்தானே. ()

### அய பற்பம்.

நடனமா யின்னமொன்று சொல்லக்கேளு நாட்டிலுள்ள பேர்களுக்கு வுதவியாக, இடமான பற்பமுண்டு மைந்தாகேளு யீஸ்வரியைப் பூசைபண்ணு யெல்லாஞ்சித்தி, தடமான கருவையெல்லாம் பலிதமாகச் சர்க்குருவைக் காட்டிடுவாள் தாயைப்பூசி, வடமான வாலையப்பா வராகிதானும் வையகத்தில் தெய்வமென்று வாழ்த்துவோமே. (எஅச)

வாழ்த்துகிறே னின்னமொரு பற்பங்கேளு மைந்தனே அயமதனைப் பொடிதான்செய்து, சேர்த்துவா யெலுமிச்சம் பழச்சார்விட்டுத் திறமாக அரைபண்ணி யெடுத்துக்கொண்டு, பார்த்துமே பதம்பார்த்து புடமுமிட்டு பாங்காக மறுபடியும் எடுத்துக்கொண்டு, மாற்றுவாய் வாலைக்குப் பூசைபண்ணி மைந்தனே நாவலுட சாற்றிலாட்டே. ()

ஆட்டியபின் சொல்லுகிறேன் கேளுகேளு அப்பனே காரமடா விராகனெட்டு, நேட்டமாய் மேனியுட சாறுங்கூட்டி நிசமாகத் தானரைத்து வில்லைபண்ணி, தீட்டமுடன் ரவிதனிலே காயவைத்து தீர்க்கமுடன் மண்சீலை வலுவாய்ச் செய்து, மூட்டுவாய் மயிற்புடத்தில் நீறிப்போச்சு முத்துபோல் பற்பமடா வெள்ளையாச்சே. (எஅசு)

ஆச்சப்பா பற்பத்தை யெடுத்துக்கொண்டு அப்பனேயனுபானஞ் சொல்லக்கேளு, வீச்சப்பா நெய்யிலே கொள்ளும்போது மெய்யிலுள்ள மேகமெல்லா மிரண்டுபோகும், போச்சப்பா பாண்டுமுதல் யீளைபோகும் பொல்லாத கடிவிஷங்கள் விஷநீர்தீரும், பாச்சப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது பரிவான கடிவிஷங்கள் பறந்துபோமே. ()

### துரா பற்பம்.

பறந்துவிடு தேனிலே கொள்ளும்போது பரிவான வாய்வுவகை பகிரொட்டாது, சிறந்துவிட யின்னமொருபற்பங்கேளு செப்புகிறேன் மைந்தனே திறமாய்ப்பாரு, நிறைந்திடவே துராவதுதான் பலந்தான் வாங்கி நேராகப் பொடியெடுத்து வைத்துக்கொண்டு, சிறந்திடவே புளிமோரில் சுத்திசெய்து திறமாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (எஅஅ)

வைத்தபின்பு சாரமப்பா விராகன்ரண்டு வளமான வீரமப்பாவிராகன் ரண்டு, பத்தியுள்ள பாஷாணம் விராகன்ரண்டு பசலையுட சாற்றாலே யரைத்துவாங்கி, சத்தமுடன் ரவிதனிலே காயவைத்து சாங்கமாய் சீலையது வலுவாய்ச்செய்து, சித்தியாய் வில்லைபண்ணி வைத்துக்கொண்டு திறமாக மயிற்புடத்தில் நீறிப்போமே. (எஅகூ)

நீறியதோர் வெள்ளையப்பா பதனம்பண்ணி நிலையாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு, மாறிவிடு மனுபானம் நெய்யிற்கொள்ள மண்டையிடி வாயினிட குத்துதீரும், தேறியதோர் மேகமெல்லாம் திரண்டேயோடும் தீராத சூலையொடு பாண்டுதீரும், கூறிவிடுந் தேனிலே கொள்ளும்போது குட்டமொடு கிரந்திபிர மேகம்போமே. (எகூ0)

## வெங்கல பற்பம்.

போகுமப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது புகழான பீனிசமுஞ் சோகைதீரும், ஆகுமப்பா யின்னமொரு பற்பங்கேளு அப்பனே வெங்கலமோ பலந்தான்வாங்கி, நேகதுபோல் பொடியாக்கிப் புளிமோரிலிட்டு நீதமாய் மூன்றுதரஞ் சுத்திசெய்து, பாகுபோல் தானெடுத்து வைத்துக்கொண்டு பாங்காகக் காரமப்பா விராகன்கூட்டே. ()

கூட்டியபின் னவுரியுட சாற்றாலாட்டிக் குறையாமல் வெடியுப்பு விராகன்கூட்டி, மாட்டியே யரைத்துவிடு வில்லைபண்ணு மைந்தனே மயிற்புடத்திற் பற்பமாச்சு, நீட்டியதோர் க்ஷயரோக காசரோகம் நேரான கிரந்திமுதல் பிளவைபோகும், ஊட்டிவிடு மனுபானம் நெய்யிற்கொள்ளு வுத்தமனே க்ஷயரோக மற்றுப்போமே. (எகூ௨)

## தியான பற்பம்.

அற்றுவிடு மின்னமொரு வனுபானந்தான் அப்பனே சொல்லுகிறேன் றேனிற்கொள்ளு, பற்றியதோர் பிரமேகம் வாதசூலை பறக்குமடா பாண்டுவகை யெல்லாந்தீரும், தொற்றுகின்ற நரம்புவலி நோய்கள்தீரும் தொடாாது கர்மவலி பிணிகள்தீரும், குத்துகின்ற குன்மமென்ற வாய்வுக்கப்பா கொடுத்துவிடு மனுபானம் வெண்ணெயாமே. ()

வெண்ணெயா மின்னமொரு பற்பங்கேளு விதமான பூரந்தான் விராகன் மூன்று, எண்ணவே பொடியாக்கி வைத்துக்கொண்டு யிதமான சிறுநீரில் சுத்திபண்ணி, திண்ணமுடன் யிடைபாகம் சரியாய்க் கொண்டு திட்டமுடன் ரவிதனிலே காயவைத்து, புன்னையுடன் வேரப்பா விராகன் ரண்டு புகழான சாரமது விராகன் ரண்டே. (எகூ௪)

சாரமப்பா தான்கூட்டி யரைத்துக்கொண்டு தனியாகவேளையிடச் சாறுங் கூட்டி, நேரப்பா தானரைத்து வில்லைபண்ணி நிசமாகத் தானதையுலர்த்திக்கொண்டு, கூரப்பா சீலையது வலுவாய்ச்செய்து கொற்றவனே பூசையது மிகவுஞ்செய்து, மாரப்பா மயிற்புடத்தில் நீறிப்போச்சு மைந்தனே மல்லிகைப்பூ நிறமுமாச்சே. (எகூரு)

நிறமான பற்பத்தை யெடுத்துக்கொண்டு நெய்யிலே கொண்டாக்கால் வியாதிகேளு, திறமான பாண்டுவகை சோகைவீக்கஞ் செப்புகிறே னிவையெல்லாந் தெறித்துவோடும், உறமான காசமொடு கண்டமாலை யோடிவிடுஞ் சொல்லுகிறே னுண்மைபாரு, மறைவான வெடிப்பெல்லாம் வாங்கிப்போகு மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்ப் பாரே. (அ0சு)

தங்க பற்பம்.

பாரப்பா யின்னமொரு பற்பங்கேளு பாங்கான தங்கக்கா சொன்றுவாங்கி, சேரப்பா சொல்லுகிறேன் காரஞ்சீனந் திடமாகத் தானரைத்து வேலைச்சாற்றில், நேரப்பா மேல்பூசி யுலர்ந்தபின்பு நிதமாக யிதற்கெல்லாஞ் சீலைமண்தான்கட்டி, கூரப்பா கெஜபுடத்தில் நீறிப்போச்சு கொள்ளவே யனுபானங் கூர்ந்துகேளே. (அ0எ)

கேளப்பா நெய்யிலே கொள்ளும்போது கெடியான சலக்கழிச்சல் பிரமேகங்கள், மாளப்பா குன்மமுடன் வாய்நீரோட்டம் வகையாக வனுபானந் தேனிற்கொள்ள, காளப்பா சூலைமுதல் வாயுபோகும் கடினமாம் குடல்வலியு மாண்டுபோகும், தாளப்பா வியாதியெல்லா மூண்டுபோகுஞ் சர்க்கரையுங் கூட்டிவிடு அனுபானந்தானே. (அ0அ)

தாம்பர பற்பம்.

தானான யின்னமொரு பற்பங்கேளு தாம்பர துட்டப்பா பலமோ வாங்கி, ஊனான கெந்தகந்தான் பாதிகூட்டி யுத்தமனே வேலியுட பருத்திவேரும், மானான வேலையுட வேருங்கூட்டி மைந்தனே மெழுகு போல் மேலேபூசி, வானான கெசபுடத்தில் பற்பமாச்சு மைந்தனே சொல்லுகிறேன் வகையைத்தானே. (அ0கூ)

வகையாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு மைந்தனே மனுபானம் நெய்யிற்கொள்ள, நிகையாலும் வந்ததொரு கெண்டைசோகை நீர்ப்பாண்டு வுள்வரட்சி தேனிற்கொள்ளு, திகையாது நீராம்பல் சூலைக்கட்டு தெளிவாகுங் குன்மமுடன் கொடிவிஷந்தான், பகையாக வந்ததொரு குட்டஞ்சூலை பறக்குமடா தாம்பர பற்பத்தாலே. (அக0)

வெள்வங்க பற்பம்.

பற்பமடா யின்னமொன்று சொல்லக்கேளு பரிவான வங்கமது வெள்ளைவாங்கி, உற்பனமா யண்டத்து ஓடுங்கூட்டி யுதவியாய் நண்டினுட வோடுங்கூட்டி, சொற்பனமாங் காரமது சரியாய்க்கூட்டி துடியான முப்பூவுங் கூடச்சேர்த்து, அற்பமடா மேனியுடச் சாற்றாலாட்டி யப்பனே வில்லைசெய்து ரவியில்வையே. (அகக)

வைத்தபின்பு மயிற்புடத்தில் நீறிப்போகு மைந்தனே மல்லி கைப்பூநிறமுமாகும், தைத்துவிடு வெண்ணெயிலே கொள்ளும்போது க்ஷயரோகம் வண்டுகடி சாடிப்போகும், நைத்துவரும் பாண்டுமுத லகன்றுபோகும் நாடாது காமாலை முதலைந்துநீங்கும், பொற்றலையான் சூரணத்தி லுண்ணும்போது புண்புரைகள் மேகமப்பா பொடிந்து போமே. (௧௬௨)

சிப்பிநீர் பற்பம்

பொடிந்துவிடுஞ் சர்க்கரையிற் கொண்டுவந்தால் புகழான கிரந்தி யுட புழுவெட்டும்போ, மடிந்துவிடுங் கபத்தையடா வாங்கிப்போடு மைந்தனே யின்னமொரு பற்பங்கேளு, விடிந்துவரும் வேளையிலே சிப்பிக்கப்பா விதமாகக் காத்திருந்து கொண்டுவந்து, படிந்திடவே சுட்டுமதைச் சாம்பலாக்கிப் பாங்காகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (௧௬௩)

கொண்டபின்பு காரமுடன் சாரங்கூட்டிக் குமரியுட வேரப்பா சரியாய்க்கூட்டி, விண்டேனு னிதுவெல்லாம் நன்றாய்க்கூட்டி விபர மாய்த் தானாட்டி வில்லைசெய்து, பன்றாக ரவிதனிலே காயவைத்துப் பாங்காகச் சீலையது வலுவாய்ச்செய்து, நன்றாக முன்போலே புடமே போடு நலமாகத் தாமரைபோல் நிறமுமாமே. (௧௬௪)

ஆகுமப்பா சொல்லுகிறேன் கேளுகேளு அனுபானம் நெய் தனிலே கொடுக்கவேண்டும், போகுமப்பா கெண்டையொடு தவளைக் கட்டு புகழான மகோதரமும் பொரிந்துபோகும், தாகுமப்பா வாத சுரஞ் சீதசுரமும்போகுந் தப்பாது சொல்லுகிறேன் தயவாய்ப்பாரு, கூவுகிற குரலடைப்பு வியாதிக்கப்பா கொடுத்துவிடு தேனிலே குணமு மாமே. (௧௬௫)

சூத பற்பம்.

குணமாக யின்னமொரு பற்பங்கேளு குருவான சூதமடா கழ ஞ்சுவாங்கி, மணமான முல்லையுட வேருவாங்கி மகத்தான பாரெள்ளுக் கட்டிவாங்கி, நிணமாகத் தானரைத்து வைத்துக்கொண்டு நிச்சய மாய்ச் சூதமதைச் சுத்திசெய்து, வணமான சூதத்தை யுள்ளேவைத்து மைந்தனே மயிற்புடத்தில் பற்பமாச்சே. (௧௬௬)

ஆச்சப்பா பற்பத்தை யெடுத்துக்கொண்டு அப்பனே சர்க்கரை யிற் கொள்ளும்போது, போச்சப்பா புண்புரைக ளுதிரக்கட்டு புக ழாகப் பதினெட்டு சூலையெல்லாம், வாச்சுதடா வண்டுகடி வாயிற் புண்ணு மகத்தான நோய்களெல்லா மாண்டுபோகும், பேச்சப்பா பிணியேது சொல்லப்போறேன் பிரியாத நோய்களெல்லாம் பிரிந்து போமே. (௧௬௭)

## சவ்வீர பற்பம்.

பிரியவே யின்னமொரு பற்பங்கேளு போரான சவ்வீரம் பலந் தான்வாங்கி, உரியதொரு முன்சொன்ன சிப்பி பற்ப முறையாக நீர் விட்டு மேலேபூசி, அரியதோ ரவியிலே யுலர்த்திக்கொண்டு அப் பனே குக்குடத்திற் பற்பமாகும், குறியான வனுபான மேதேயாகில் குரைநோயும் வண்டுகடி சிறந்துபோமே. (அ௧௮)

சிறந்துவிடும் நெய்யிலே கொண்டாயானல் திடமான வாத முடன் சூலைபோகும், திறந்துவிடும் க்ஷயரோக மீளைபோகும் தீராத யிடுப்புவலி யிசிவுதீரும், துறந்துவிடும் கடுப்புமுதல் காசம்போகும் துரையான மேல்மூச்சு துறந்துபோகும், கறந்துவிடும் பாலிலே யுண் ணும்போது கண்புகைச்சல் காதுமந்தங் கலைந்துபோமே. (அ௧௯)

## கரியுப்பு பற்பம்.

கலைந்துவிடு மின்னமொரு பற்பங்கேளு கரியுப்பு பலமொன்று வாங்கிமைந்தா, சலந்தனிலே வாழுகின்ற குளித் தாமரையைத் திறமாகத் தான்பிடுங்கிச் சாற்றுவாட்டி, உலர்ந்திடவே சாமமது காய்ந்ததானல் வுத்தமனே என்னசொல்வேன் மருந்தின்வேகம், மலர்ந்திடவே வில்லைபண்ணி யுலர்த்திக்கொண்டு மைந்தனே யிலை யரைத்து மேலேபூசே. (அ௨0)

பூசியபின் சீலைமண் மூன்றுஞ்செய்து புகழாக மயிற்புடத்தில் கட்டிப்போகும், மாசில்லாப் பின்னமொரு புடமேபோட மைந்தனே நீறியது பற்பமாகும், நேசமாய் பற்பத்தை யெடுத்துக்கொண்டு நெய்யிலே கொண்டிடவே மகோதரம் போகும், மோசமில்லை சர்க்க ரையிற் கொள்ளும்போது முறைசுரமும் விட்டுவிடுங் கெண்டை போமே. (அ௨௧)

## நாக பற்பம்.

முறையான பற்பமுண்டு சொல்லக்கேளு முதலான நாகமது பலந்தான்வாங்கி, புறையான மேனியப்பா சுண்டைவேரு புகழான வேளையின்வேர் மூன்றுங்கூட்டி, திறையான மூலிதான் காவளை வேரும் திறமாகத் தானெடுப்பாய் வடவேர்தன்னை, நிறையாகத் தான்றாக்கி யெடுத்துக்கொண்டு நிச்சயமாய்க் காரமடா விராகன் ரண்டே. (அ௨௨)

ரெண்டப்பா சீலையது மொன்றாய்க்கூட்டி நிலையாகத் தான ரைத்து மேலேபூசி, பண்டான குக்குடத்தில் சட்டிப்போகும் பாங் காக நீறியது பற்பமாகும், திண்டாக பராபரிக்குப் பூசைசெய்து திடமாகச் சின்மயத்தைப் போற்றியேதான், கொண்டாக்கா லனுபா னம் நெய்யுமாகும் கூறினேன் மைந்தனே குணத்தைக் கேளே. ()

குணங்கெட்ட மண்டையிடி சலக்கழிச்சல் குடல்வாய்வு மடல் வாய்வுங் கூட்டோடேபோம், நிணமுற்ற வண்டுகடி யுதரக்காசம் நிலை யாது தேகம் விட்டகன்றுபோகும், திணங்கண்ட மேகமென்ற தெண்பதும்போம் திறமான சலக்கழிச்சல் தாரைபோகும், மணங் கெட்ட தேகத்தைத் திடப்படுத்து மைந்தனே சொல்லுகிறேன் மகிமைதானே. (அ௨ச)

மகிமையாஞ் சுரங்கட்கு தேனிற்கொள்ள மாளாத சுரங்களப்பா மாண்டுபோகும், தமரியுள்ள சூலையொடு வீக்கமெல்லாந் தன்பக்க மணுகாது தாக்கினேனுன், உகமையாய் யிந்தமொழி மார்க்கம் பொய்யா துத்தமனே தட்சணாமூர்த்திநாயன், பகமையுடன் சொல்லி விட்டேன் மைந்தாகேளு பராபரியைப் பூசைபண்ணப் பலிக்குந் தானே. (அ௨ரு)

கெந்தகப் பற்பம்.

தானாக யின்னமொரு பற்பங்கேளு தருவான கெந்தகமோ பலந் தான்வாங்கி, ஊனான ஊராட்டு அமுரிதன்னில் உத்தமனே சுத்தி செய்து வைத்துக்கொண்டு, தேனாக மருந்தைமிகச் செபித்துமேதான் தெளிவாக மண்டலந்தான் கொள்ளும்போது, மானாகச் சிப்பியுட பற்பம்பூசி மைந்தனே மூலியுண்டு வகையைக்கேளே. (அ௨சு)

கேளப்பா கீழ்க்காயி னெல்லிதன்னைக் கிருபையுடன் றான்பிடுங்கி யரைத்துக்கொண்டு, தாளப்பா முன்மருந்து மேலேபூசித் தருவாகச் சீலைமண் மூன்றுங்கட்டி, வேளப்பா ரவியிலே யுலர்த்திக்கொண்டு விதமாகக் குக்குடத்தில் பற்பமாச்சே, தேளப்பா பற்பமது யெடுத் துக்கொண்டு திறமாகச் சிமிழ்தனிலே யடைத்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா நெய்யிலே கொள்ளும்போது கொடிதான மூலை மூலபவுத்திரங்கள், தெள்ளவே யிதுவெல்லா மோடிப்போகுந் திறஞ் சொன்னே னனுபான மின்னங்கேளு, கொள்ளவே திப்பிலிச் சூர ணந்தான் கொள்ள கொடியதொரு ரோகமெல்லா மகன்றுபோகும், விள்ளுறேன் றேனிலே கொள்ளும்போது மேலினுள்ள வீக்கமொடு கடுப்பும்போமே. (அ௨அ)

போகுமப்பா க்ஷயரோக மிரும லுளமாந்தை புகழாக நீர்ச் செறிப்புபுண்புரைகள், தாகுமப்பா யிவையெல்லா மோடிப்போ குஞ் சாற்றுகிறே னின்னமொரு பற்பங்கேளு, பாகுடனே மாந்தர் கள்தான் பிழைக்கவென்று பாடுகிறேன் மாணாக்காள் கேட்டிருங்கள், வாகுமப்பா சிங்கியது பலந்தான்வாங்கி மைந்தனே கருங்காலி னீரிற் போடே. (அ௨கூ)

## மிருதார்சிங்கி பற்பம்.

போடப்பா மூன்றுநாள் தணிந்தபின்பு புகழான சிங்கியதை யெடுத்துக்கொண்டு, மாடப்பா சவர்க்காரம் விராகன்ரண்டு மைந்தனே கடுங்காரம் விராகன்ரண்டு, தேடப்பா சேர்த்துமே யரைத்துக்கொண்டு திறமாகக் கொடிவேலிச் சாற்றிலாட்டி, கூட்டப்பா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி குறையாமல் முச்சாம மரைத்துவாங்கே. (அ௯0)

வாங்கியபின் வில்லைபண்ணி ரவியில்வைத்து மைந்தனே சீலை மண் ணிரண்டுங்கட்டி, தாங்கிவிடு நிழலிலே யுலர்ந்தபின்பு தருவான மயிற்புடத்தில் கட்டிநீறும், தேங்காமல் மயேஸ்வரிக்குப் பூசை மார்க்கம் செப்பவே தெளிவுபெறச் செய்யவேண்டும், பாங்குடனே பற்பமதை யெடுத்துக்கொண்டு பாங்காக வனுபான மறிந்துசெய்யே.()

அறிந்துவிடு தேனிலே கொள்ளும்போது அணுகாது வாதத் தால் வந்தரோகம், தெரிந்திடவே சர்க்கரையிற் கொள்ளும்போது திசைகெட்டு வோடுமடா பித்தநோய்கள், உரிந்துவரும் கயரோகம் எல்லாம் நீங்கும் வுத்தமனே வண்டுகடி விஷமும்நீங்கும், பரிந்து விடு நெய்யிலே கொள்ளும்போது பறக்குமடா ஐயமென்ற நோய்கள் தானே. (அ௯உ)

## கடல்நுரை பற்பம்.

நோயான நோய்களுக்குச் சொல்லக்கேளு நுண்மையுள்ள கடல்நுரைதான் பலமோவொன்று, மாயான கல்லுப்புப் பலமோ வொன்று மைந்தனே சவர்க்காரம் பலமோவொன்று, தாயான வீர மடா பலமோவொன்று தாக்கியே நிறுத்துவிடு சமனாய்ச்சேர்த்து, நாயான செடிச்சாற்றால் மைபோலாட்டி நளினமாய் யரைத்துவிடு நளினங்காணே. (அ௯௩)

காணப்பா யின்னமதை வில்லைபண்ணிக் கானலிலே தானுலர்த் திச் சீலைமண்தான் செய்து, தோணப்பா பின்னுமதை யுலர்த்திக் கொண்டு சொல்லுகிறேன் கெசபுடத்தில் பாதிபோடு, மாணப்பா யிந்தவிதம் சொல்லக்கேளு மக்களே ஒருவருக்கும் சொல்லவேண் டாம், ஊணப்பா நீறியது வெள்ளையாகு முத்தமனே தானெடுத்து வைத்துக்கொள்ளே. (அ௯௪)

வைத்தபின் பனுபான மென்னவென்றால் மைந்தனே தேனிலே கொடுக்கும்போது, பற்றினதோர் கெண்டைவலி வாய்நீ ரோட்டம் பறக்குமடா சொல்லுகிறேன் பாருபாரு, நைத்துகின்ற குன்மவலி நவின்றேயோடும் நாடாது காடேபோம் நவிலக்கேளும், சித்தியுட னெய்யிலே கொள்ளும்போது திறமான பாண்டுவகை காசிபோமே. ()

காசியிலே யாறுவகைக் காசிபோகும் கறளேழுளை யிதுவெல் லாங் காணுதோடும், தேசிகனே சுரவையுள்ள நீரும்போகும் திறமா கச் சொல்லிவிட்டேன் செப்பக்கேளு, ஆசியாய் எந்தனுக்கு ஆத் தாள்சொன்னாள் அப்பனே தட்சணா மூர்த்திசொன்னேன், வாசியடா யின்னமுண்டு பற்பங்கேளு மகத்தான கருவையெல்லாம் மாட்டு றேனே. (அ௬௬)

## கல்மதப் பற்பம்.

மாட்டுகிறே னின்னமொரு பற்பங்கேளு மைந்தனே கல்மதம் பலந்தானொன்று, கூட்டுவாய் வெடியுப்பு பலந்தானொன்று குறையாம லிவ்விரண்டுஞ் சமனாய்ச்சேர்த்து, மூட்டுவாய் திருகுகள்ளிப் பாலுங் கூட்டி முறையான பருத்தியுடச் சாருங்கூட்டு, நேட்டமாய் வேலியுட வேர் பலந்தான்கூட்டு நேராகத் தானரைத்து வைத்துக்கொள்ளே. ()

கொண்டபின்பு வில்லைசெய்து ரவியில் வைத்துக் குமுறவே யுலர் ந்தபின்பு யெடுத்துக்கொண்டு, நன்றாகச் சீலைமண்தா னிரண்டுங் கட்டி நலமாகமயிற்புடத்தில் நீறும்நன்றாய், குன்றாமல் தானெடுத்து பூசைசெய்து கொப்பெனவே சின்மயத்தைப் பணிந்துபோற்றி, உண் டான பற்பமதை யெடுத்துக்கொண்டு வுத்தமனே சொல்லுகிறேன் கொள்கைதானே. (அ௬அ)

கொள்ளப்பா வாதத்தர லெடுத்தகூறு கொடிதான குளிர்சுர முஞ் சன்னிபோகும், தள்ளப்பா சர்க்கரையில் கொடுக்கவேணுந் தப் பாமல் நெய்யான பித்தப்பாண்டு, நள்ளப்பா கொடியதோர் சூலைபோ கும் நலமான வியாதியெல்லா மகன்றேபோகும், வள்ளப்பா தேனுகில் பித்தத்தாலே வளருகின்ற கபமெல்லா மாண்டுபோமே. (அ௬௯)

## மனேசிலை பற்பம்.

மாண்டுபோ மின்னமொரு பற்பங்கேளு மைந்தனே மனே சிலைதான் பலமோவாங்கி, நீண்டதோர் சதாவேலிக் கிழங்குபல மொன்று நேரான அட்டுப்பு பலமோவொன்று, மாண்டுவிடு நண் டோடு பலமோவொன்று மைந்தனே யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்து, ஊண்டிடவே யரைத்துவிடு செம்பீர்க்கஞ்சாற்றால் உத்த மனே சொல்லுகிறே னுறுதியாமே. (அ௭0)

உறுதியாய் முச்சாம மரைத்துவாங்கி வூட்டப்பா பின்பதுதான் வில்லைபண்ணி, திருந்தவே ரவியிலே யுலர்ந்தபின்பு சீக்கிரமாய்ச் சீலை மண் ரண்டுங்கட்டி, பொருந்தவே புவனைபதம் தாள்பணிந்து பூட்டிடவே நோய்களெல்லாம் பறந்தே போகும், கருதிவிடு வாலைக்குப் பூசைபண்ணு கண்டுவிடு மயிற்புடத்தில் பற்பமாச்சே. (அசுக)

ஆச்சப்பா வனுபானம் நெய்யிற்கொள்ள அரைகடிகள் புண்புரைகள் கண்டவீக்கம், போச்சப்பா தேனிலே கொள்ளும்போது புகழான பீனிசங்கள் திரண்டவாய்வு, மூச்சப்பா கெண்டைவலி சுரோணிதங்கள் முனையான நீர்ப்பாய்ச்சல் பிரண்டேயோடும், வாச்சப்பா சர்க்கரையில் கொள்ளும்போது மைந்தனே வயிற்றிலுள்ள கெண்டை போமே. (அசுஉ)

## குங்கிலியப் பற்பம்.

போகுமப்பா யின்னமொரு பற்பங்கேளு புகழான குங்கிலியம் பலமோ வொன்று, தாகுமப்பா சவர்க்காரம் பலமோவொன்று தனியாக அட்டுப்புப் பலந்தானொன்று, வாகுமப்பா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி மகத்தான சிறுசின்னிச் சாற்றாலாட்டி, நேகுபோலே யரைத்து வைத்துக்கொண்டு நிலையான வில்லைசெய்து ரவியில் வைபே. (அசுங)

வைத்தபின்பு மூன்றுநா ளுலர்ந்தபின்பு மைந்தனே நீயெடுத்துச் சீலைமண்செய்து, தைத்துவிடு மயிற்புடத்தில் நீறிப்போச்சு தவறுமற்றானெடுத்து வைத்துக்கொண்டு, கைத்துமே மனோன்மணியைப் பணிந்துமேதான் கதறவே சொரூபத்தை மாற்றிக்கொண்டு, பத்தியமா யிருப்பவர்க்கு யீவாயன்றி பரிவாக யீந்தாக்கால் பரியுமாமே. (அசுசு)

## பித்தளை பற்பம்.

பரிவாக யின்னமொரு பற்பங்கேளு பாங்காகப் பித்தளைதான் பலமோவொன்று, தெளிவான கண்ணியப்பா பலமோவொன்று திறமான வேளைதான் பலமோவொன்று, அளிவான ஆவாரை பலமோ வொன்று அப்பனே அழிஞ்சியப்பா பலமோவொன்று, வளிபோடே தானரைத்து மேலேபூசி மைந்தனே ரவியிலே யுலர்த்திக்கொள்ளே.()

கொள்ளவே சீலைமண் ணென்றுகட்டி கூராக கெசபுடத்தில் குழுறிநீறும், தெள்ளவே யிதுவெடுத்து வைத்துக்கொண்டு செயலாக வனுபானம் நெய்யிற்கொள்ள, துள்ளுகின்ற குளிர்காய்ச்சல் வாதசூலை சுருதியுள்ள நீரடைப்பு வாய்நீரோட்டம், மெள்ளவே யிவையெல்லா மோடிப்போகும் விபரமாய்ச் சொல்லுகிறேன் விரும்பிப்பாரே. ()

பாரப்பா தேனிலே கொள்ளும்போது பாங்காக வாந்திகுன்மம் பறந்துபோகும், நேரப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது நிலைத்து நின்ற அண்டத்து வழலைதானும், ஆரப்பா யெனைப்போலச் சொல்வா ரப்பா அப்பனே நானுனக்கு அறியச்சொன்னேன், கூரப்பா யிது வறிந்து மருந்துயிய குணமாகும் நோய்களெல்லாங் குலைந்துபோமே.()

## வங்கசிங்கி பற்பம்.

குலைந்துவிடு மின்னமொரு பற்பங்கேளு குறையாமல் வங்கசிங்கி பலந்தான் வாங்கி, மலையாதே நீணுதுயென்றுசொல்லி மைந்தனே மருந்துண்டு கேளுகேளு, நிலையாத காயமப்பா நினைந்துபாரு நேர்மை யாய் சொரூபத்தைப் பணிந்துமேதான், அலையாதே கெந்தகமுங் குப் பைமேனி யப்பனே தானரைத்து மேலேயப்பே. (அசஅ)

அப்பியபின் ரவியிலே யுலர்ந்தபின்பு அப்படியே தானெடுத்து அவிப்புடம்போடு, தப்பாது தேகமெல்லாம் நீறிக்காணுந் தயவாக வுள்ளுக்குக் கருகிநிற்கும், எப்படியும் நாதர்முறை பொய்யாதையா என்மகனே நானுனக்கு வுரைத்தேன்பாரு, அப்பிவிடும் பின்னுமந்த் மருந்தைத்தானே யன்பாக மறுபுடத்தில் பற்பந்தானே. (அசகூ)

பற்பமதை தானெடுத்து வைத்துக்கொண்டு பாங்காகச் சர்க்கரை யில் கொடுக்கும்போது, அற்பமடா வியாதியெல்லா மோடிப்போகும் அளவற்ற குட்டமதை யணுகொட்டாது, உற்பனமாய் நெய்யிலே கொள்ளும்போது, ஓடிவிடுஞ் சலக்கழிச்சல் மேகமெல்லாம், அற்ப மென் றெண்ணுதே மைந்தாகேளு ஆத்தாளை தியானமிடு யெல்லா மாமே. (அரு0)

## கோம்பரக்கு பற்பம்.

ஆத்தாளை தியானமிட்டு வைத்துக்கொண்டு அன்பாகயின்னமொரு பற்பங்கேளு, சோத்தப்பா கொம்பாக்குப் பலந்தாணென்று திறமான தாழையின்வேர் பலமோவொன்று, மார்த்தப்பா காரமது பலந்தாணெ ன்று மைந்தனே யிவையெல்லா மொன்ருய்க்கட்டி, கார்த்தப்பா சுப்ர மண்ய தியானமிட்டுக் கருவாகத் தான்கூட்டி யரைத்துக்கொள்ளே. ()

அரைத்துவிடு முச்சாம மரைத்தபின்பு அப்பனே வில்லைபண்ணி ரவியில்வைத்து, முரைத்துவிடு சீலைமண் மூன்றுகட்டி முறையாகப் புடம்போட அற்றுநீறும், கரைத்துவிடும் ரோகமெல்லாம் கழன்றே போகும் கண்காணு தோடமடாகண்டுபாரு, விரைத்துவிட்டேன் பற் பத்தையெடுத்துக்கொண்டுவிபரமா யனுபானஞ் சொல்லுறேனே. ()

சொல்லுகிறே னனுபானம் நெய்யிற்கொள்ளச் சுருதியுள்ள வண்டு கடி துலையாவீக்கம், வில்லுகிறேன் சர்க்கரையில் கொடுத்தாயாகில் மேலிளைப் பேங்கலுடன் மிரண்டுபோகும், நல்லதோர் சர்க்கரையிற் கொள்ளும்போது நரம்புவலி சுழிக்கணையும் நாடாதப்பா, பொல்லா ருக் கியாதே சொன்னேன் மைந்தா பூட்டினேன் சாஸ்திரத்தைப் பூட்டினேனே. (அடு௩)

துத்த பற்பம்.

பூட்டுகிறே னின்னமொரு பற்பங்கேளு புகழான துத்தமடா பலந்தான் வாங்கி, மூட்டுவாய் சிறுதும்பை குப்பைமேனி விதமான காரமுடன் சாரங்கூட்டி, நீட்டமுடன் யிவையெல்லாம் வொன்றாய்க் கூட்டி நினைவாக யிருசாமம் மைபோ லாட்டி, ஊட்டியே யரைத்துவிடு மெழுகதானல் உத்தமனே வில்லைபண்ணி ரவியில் வையே. (அடு௪)

வைத்தபின் புலர்த்தியதை யெடுத்துக்கொண்டு மைந்தனே மண் சீலை ரண்டுகட்டி, சித்தியாய்க் குக்குடத்தில் பற்பமாகுந் திறஞ்சொன் னேன் பற்பத்தை யெடுத்துக்கொண்டு, முத்திபெற தேகமது கற்ப மாக முயற்சியாய் தேனிலே கொண்டுபாரு, பத்தியா யனுபானம் நெய் யிற் கொள்ளப் பறந்துவிடும் பதினெட்டுச் சூலைதானே. (அடு௫)

சூலையிலே பதினெட்டுச் சூலைபோகுந் துலையாத புண்புரைக ளற் றுப்போகும், மாலையென்ற வீக்கமடா வாங்கிப்போகு மகத்தான மகோதரமும் வியாதிதானும், காலையெனு மந்திசந்தி கொள்வாயானல் காட்டகத்தே யோடுமடா கண்டுபாரு, வாலையைத்தான் பூசைபண்ண யெல்லாஞ்சித்தி மைந்தனே சொல்லுகிறேன் வகையைத்தானே. ()

துருசு பற்பம்.

வகையாக யின்னமொரு பற்பங்கேளு மகத்தான துருசையடா பலந்தா னென்று, துகையறவே காரமது விராகன்ரண்டு சொல்லுகி றேன் சாரமது விராகன்ரண்டு, வகையான பூரமது விராகன்ரண்டு வனு மையாம் பூநீறு சரியதாக, நிகையாகத் தான்றாக்கி வைத்துக்கொண்டு கிலப்பனையின் சாற்றாலே யரைத்துக் கொள்ளே. (அடு௭)

அரைத்துவிடு முச்சாம மைபோலாகும் அப்பனே வில்லைபண்ணி ரவியில் வைத்து, உரைக்கிறேன் சீலைமண் மூன்றுகட்டி வுத்தமனே குக்குடத்தில் பற்பமாச்சு, திரைக்கிறேன் மருந்தை நீ யெடுத்துக் கொண்டு தெளிவாக மநுபான மறிந்தே யுண்ணு, விரைக்கிறேன் பற்பத்தை யெடுத்துக்கொண்டு விதமாக வனுபான மறிந்துசெய்யே. ()

செய்யப்பா தேனிலே கொள்ளும்போது திறமாக வாதமொடு சூலைபோகும், உய்யவே சர்க்கரையிற் கொள்ளும்போது உற்றதோர் நீரிழிவு மோடிப்போகும், தொய்யவே தேனதிற் கொள்ளும்போது தூய்தான நோய்களெல்லா மகன்றே போகும், பையவே திரிகடுகில் கொள்ளும்போது பாங்கான பீனசமும் பறந்து போமே. (அருகூ)

முத்து பற்பம்.

போகுமே யின்னமொரு பற்பங்கேளு புகழாகச் சொல்லுகிறேன் பாருபாரு, ஆகுமே நல்முத்து விராகனென்று அடவான பவழமப்பா விராகனென்று, பாகுமே சிலையது விராகனென்று பாங்கான குடோரியது விராகனென்று, சேருமே தாம்பரந்தான் விராகனென்று திறமான வெள்ளியடா விராகனென்றே. (அசுo)

வெள்ளியைப்போல் நிறையங்கே குறையாமல் நிறுத்து விருப்பமாய்ச் சொர்ணமடா விராகனென்று, தெள்ளியதோர் குடவனடா விராகனென்று திறமான வயமதுதான் விராகனென்று, அள்ளியதோர் நாகமது விராகனென்று அப்பனே வங்கமது விராகனென்று, வள்ளியுட சாற்றுலே யிதுகளெல்லாம் வகையாகச் சுத்திபண்ணிப் பொடியுமாக்கே. (அசுக)

ஆக்கப்பா வதன்பிறகு பொடியதன்னை யப்பனே தானெடுத்து வைத்துக்கொண்டு, தாக்கப்பா வேலைச்சார் தும்பைச்சாறுந் தனியாகத் தானரைத்து யெல்லாமொன்றாய், நோக்கப்பா சரியிடைதான் தூக்கிக்கொண்டு நுட்பமாய் கைபாகம் பிசகிடாமல், பாக்குதுபோலுருட்டியதை நாபியில்வைத்து பாங்காகத் தானுலர்த்தி வைத்துக் கொள்ளே. (அசுஉ)

கொள்ளப்பா வாலைக்குப் பூசைசெய்து குறிப்பான மந்திரத்தை யூன்றிக்கொண்டு, தெள்ளப்பா புடமிரண்டு குக்குடமே தீர்ந்தால் திறமாகப் படுபாதி வெள்ளையாகும், மெள்ளப்பா யிதுபோலக் கண்டதுண்டோ மேதினியில் கருமிகளுக் கீயவேண்டாம், துள்ளவே யதையெடுத்து வைத்துக்கொண்டு சுருதியாய்க் காரமடா விராகன் கூட்டே. ()

கூட்டப்பா காரமது விராகனென்று குறையாதே சாரமடா விராகனென்று, கூட்டப்பா வீரமொரு விராகனென்று குமுறவே கஸ்தூரி விராகனென்று, நீட்டமுடன் சரியாக யெடுத்துக்கொண்டு நினைவாக மயேஸ்வரிக்கு பூசைசெய்து, மூட்டப்பா யிவையெல்லா மொன்றாய்க் கூட்டி முறையாக முருங்கையுடச் சாற்றாலாட்டே. (அசுச)

ஆட்டப்பா முச்சாம மரைத்தபின்பு அப்படியே வில்லைபண்ணி யெடுத்துக்கொண்டு, மூட்டப்பா சீலைமண் மூன்றுஞ்செய்து முறையாக ரவியிலே யுலர்த்திக்கொள்ளும், நாட்டப்பா மந்திரத்தை யுச்சரித்து நலமாகத் தேவிபதம் போற்றியேதான், ஊட்டப்பா சொல்லுகிறேன் மயிற்புடத்தில் உத்தமனே நீறியது வெளுக்கும் பாரே. (அசுரு)

பாரப்பா பற்பத்தை யெடுத்துக்கொண்டு பரிவாக வனுபானம் நெய்யிற்கொள்ளு, நேரப்பா வாதமுடன் காமாலை சோகை நில்லாது தேகம்விட் டகன்றுபோகும், ஆரப்பா யெனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நானுனக்குச் சொல்லிவிட்டேன், கூரப்பா தேனிலே கொள்ளும்போது குறைநோயும் வண்டுகடி குலைந்துபோமே. (அசுசு)

குலைந்துபோம் சர்க்கரையில் கொள்ளும்போது குட்டமொடு கிரந்தி பிரமேகம் போகும், அலைந்திடவே வேண்டாங்கேள் மைந்தா நீயும் அனுபான மறிந்துசெய்ய யெல்லாந்தீரும், நிலைந்துவிடும் வியாதி யெல்லாம் நீங்கிப்போகும் நிமிஷத்திற் றீராத வியாதிதீரும், மலைந்துவிடுங் கியாழங்கள் சூரணங்கள் வகையறிந்து தான்கொடுக்க வரிசையாமே. (அசுஎ)

## பஞ்சலோக பற்பம்.

வரிசையா யறுத்துவிடும் வியாதியெல்லா மைந்தனே சொல்லுகிறேன் பஞ்சலோகபற்பம், துருசடா வியாதிக்கு அரசனுகும் சொல்லுகிறேன் சன்னிக்குக் குருவுமாகும், கருசையுள்ள சரக்குகட் கறுதியாகும் கர்த்தனு ரெந்தனுக் குரைத்தவாறு, பெருசடா வியாதிக்கு யிந்த பற்பம் பேசாதே யொருவர்க்கு முரையாதென்றே. (அசுஅ)

உரைக்கிறே னின்னமொரு பற்பங்கேளு வுத்தமனே கல்நாரி னுண்மைதன்னை, மரைப்பில்லை சொல்லுகிறேன் புங்கம்வேரை மைந்தனே தானரைத்து மேலேபூசி, கிரைக்கவே சீலைமண் வலுவாய்ச் செய்து செப்பிடவே மயேஸ்வரியாள் தாள்பணிந்து, விரைக்கிறேன் குக்குடத்தில் புடமேபோட விதமாக நீறியது பாதியாமே. (அசுகூ)

பாதியாம் கல்நாரை யெடுத்துக்கொண்டு பாங்கான காரமப்பா விராகன்கூட்டு, சோதியாம் அட்டுப்பு விராகனஞ்சு சுருதியாய்த் தூதுவளைச் சாற்றிலாட்டு, வாதியாய்ச் சீலைமண் மூன்றுகட்டி வளமாகத் தானுலர்த்தி மயிற்புடம்போடு, பாதியாய் நெய்யிலே கொள்ளும் போது பறக்குமடா தேகத்துத் தடிப்புவீக்கம். (௭௰)

வீக்கமுடன் மண்டையிடி கெண்டை சோகை வீரமுடன் மாலைக்கண் மாண்டுபோகும், மூர்க்கமுடன் தேனிலே கொள்ளும்போது முறைகெட்ட சன்னியெல்லா முறிந்துபோகும், தீர்க்கமா மீளைமுதல் பாண்டுபோகும் தீராத குடல்வாத மிரண்டேபோகும் நோக்கடா சர்க்கரையில் கொள்ளும்போது நுணுக்கமுடன் பிரமேகம் நொடியிற் போமே. (௭௧)

சாதிலிங்க பற்பம்.

போகுமப்பா யின்னமொரு பற்பங்கேளு புகழான லிங்கமது பலந்தான்வாங்கி, வாகுடனே கருங்குன்றி மூலிச்சாறும் வகையாகத் தான்கூட்டி யரைத்துக்கொண்டு, பாகுடனே முப்பூவுங் கூடச்சேர்த்து பண்பாக நாதநீர் தன்னுலாட்டி, மேகுவாய் சீனமது விராகனஞ்சு விதமாக பூரமது விராகனஞ்சே. (௭௨)

அஞ்சப்பா விராலியிடச் சாற்றில்மைந்தா அன்பாகத் தானரைக்க மெழுகுபோலாம், பஞ்சப்பா வில்லைபண்ணி ரவியில்வைத்துப் பரிவாகத் தானுலர்த்தி சீலை மண்தான்கட்டி, கொஞ்சப்பா வெயில்தனிலே யுலரவைத்து கூறியதோராத்தாட்குப் பூசைமார்க்கம், வஞ்சப்பா மயிற்புடத்தில் நீறிப்போகு மைந்தனே நீயெடுத்து வைத்துக்கொள்ளே. ()

கொள்ளப்பா பற்பத்தை நெய்யிற்கொள்ளு குட்டமென்ற யெட்டுவகை குன்மம்போகும், மெள்ளவே தேனிலே கொள்ளும்போது விகண்டசுரம் வாய்நீரும் விடாவலிப்பும், அள்ளியதோர் குடல்பிரட்டு மசக்கைதீரும் அப்பனே தெட்சணாய னுரைத்தவாறு, துள்ளுகின்ற சன்னிக்கு யிதுபோலில்லை சொல்லுகிறேன் வெருசுருக்கு தொடர்ந்து கூட்டே. (௭௪)

கூட்டப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது குரைநோயும் க்ஷயரோகம் குறுகுங் குன்மம், மூட்டப்பா யிவையெல்லா போடிப்போகு முறையொன்றுந் தப்பாமற்செய்துபாரு, வாட்டப்பா காமிகட் கீயவேண்டாம் வாகான தர்மிகட் கீயவேண்டும், ஊட்டப்பா யிதுமகிமை யாருங்காணார் உரைக்கிறேன் மெய்ஞ்ஞானத் தெளிவுதானே. (௭௫)

கற்பூர பற்பம்.

ஒளிவாக பின்னமொரு பற்பங்கேளு வுறுதியாய்ப் பூரமப்பா பல ந்தான் வாங்கி, தெளிவாகச் சூதமது பலந்தானென்று திறமான வெடி யுப்பு விராகனஞ்சு, களிவான முப்பூவும் விராகனென்று கனிவான வெங்கோலம் விராகனென்றே, வளியாக யிவை யெல்லா மொன்றாய்க் கூட்டி மைந்தனே யூமத்தஞ் சாற்றாலாட்டே. (௭௬௬)

ஆட்டியபின் கடுக்காயின் சாறுங்கூட்டி யப்பனே காராட்டுச் சாறுங் கூட்டி, தீட்டியதோர் சாரமுடன் பூரங்கூட்டி தெளிவான வழலையுடன் காரஞ்சேர்த்து, பூட்டியே சரியிடையாய்த் தூக்கிக்கொண்டு புண்ணி யனே தானெடுப்பாய் முறைதப்பாமல், மூட்டியே யரைத்துவிடு மூன் றுசாம முறையாகத் தானரைத்து வில்லைபண்ணே. (௭௬௭)

பண்ணப்பா வதன்பிறகு சீலைமண்செய்து பரிவாக வுலர்ந்தபின்பு குக்குடத்தில் நீறும், எண்ணப்பா வாலைதனைப் பூசைசெய்து யித மான தியானமதை யெடுத்துப்பாரும், குண்ணுமல் மயேஸ்வரியைப் பணிந்துபோற்றி கூறிடவே சின்மயத்தைக் கடந்துநில்லு; உண்ணவே வெண்ணெயிலே கொள்ளும்போது வுறுதியுள்ள நோய்கள்படும் பாடுபாரே. (௭௬௮)

பாரடா வாந்தி குன்மம் வலிப்பு யேங்கல் பாழான காசமெல்லாம் பறந்து போகும், நோராடா தேனிலே கொள்ளும்போது நிலையாகக் கருங்குட்டம் விஷக்கடியும் போகும், தூரடா அண்டத்தின் வலியுந் தீரும் துடியான விரவலிவீக்கந்தீரும், கூரடா சர்க்கரையிற் கொள்ளும் போது கருங்குட்டம் உள்வறட்சி கோழைபோமே. (௭௬௯)

நாபி பற்பம்.

கோழையடா யின்னமொன்று சொல்லக்கேளு கூரான நாபியடா பலந்தானென்று, வேளையின்வேர் பூளையின்வே ரண்டுமப்பா மேன் மையா யிவ்விரண்டும் பொருந்தத்தூக்கி, காளையர்மேல் விராலியின் மூலிதானும் கடினமாம் மூலியிட வேருங்கூட்டி, வாழையுடச் சாற்றா லே மைந்தாகேளு வகையாகத் தானரைத்து வைத்துக்கொள்ளே. ()

சொன்னேனு னிதுபோலே யனுபானம் பார்த்து தூக்கியே பண விடைதான் கொடுக்கும்போது, மின்னான தேகத்து நோய்களெல்லாம் விதமாக மாண்டுவிடும் விபரம்பாரு, அன்னேதான் எந்தனுக்கு அரு ளினுள்பார் அப்பனே தட்சணா மூர்த்திநாயன், மன்னனே யிப்படி யீந்தாயாகில் வருஷமொன்று திரைகயுமுன்னே கருப்புதானே. (௭௮௧)

## நாக பற்பம்.

கருப்பாக யின்னமொரு பற்பங்கேளு கருவான நாகமடா பலமோ வொன்று, திருப்பான காரமடா பலமோவொன்று திறமான சாரமப்பா பலந்தானென்று, வெருப்பான காரமது பலந்தானென்று வேந்தனே சிங்கியது பலந்தானென்று, நெருப்பான வீரமது பலந்தானென்று நேராகத் தான்கூட்டிப் பொடியுமாக்கே. (௮௬௨)

## அரப்பொடி பற்பம்.

ஆக்கியபின் னரப்பொடிதான் பலமோவொன்று அப்பனே யெலு மிச்சம்பழச் சாற்றாலாட்டி, நோக்கப்பா நாழிகைதா னன்பத்தொன்று நுணுக்கமாய்த் தானரைத்து வில்லைதட்டி, தேக்கப்பா தொகைபாகம் பிசகிடாமல் தெளிவாக செய்திட்டால் நோய்கள் தீரும், வாக்கப்பா பேசாதே சீலைமண்செய்து மைந்தனே ரவியிலே யுலர்த்திக்கொள்ளே.()

கொண்டபின்பு கெசபுடத்தில் நீறிப்போச்சு குருவான வாலையிட பூசைசெய்து, விண்டேனு னதன்பிறகு யெடுத்துக்கொண்டு விதமாகப் பற்பத்தைச் சொல்லக்கேளு, திண்டான நோய்கட்கு கொடுத்தாயானல் திறமாக வியாதி யெல்லா மகன்றே போகும், பண்டான வேம்பினுட சாற்றில்மைந்தா பகரவே தானரைக்க மருந்துகேளே. (௮௬௪)

## சாதிலிங்க வைப்பு.

கேளப்பா வெங்காரம் விராகனஞ்சு கெடியான சாதிலிங்கம் விராகன்கூட்டி, தாளப்பா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி தானரைக்க மேனியுடச்சாறுமாகும், ஆளப்பா யிந்தமுறை பொய்யாதையா அப்பனே நானுனக்குச் சொன்னேன் பாரு, வாளப்பா தானெடுத்து வைத்துக்கொண்டு மைந்தனே வில்லை பண்ணி ரவியில்வையே. (௮௬௫)

வைபப்பா மயிற்புடத்தில் நீறிப்போகு மைந்தனே யெடுத்த தனை வைத்துக்கொண்டு, செப்பப்பா வியாதிகட் கனுபானங்கண்டு திறமாகத் தான்கொடுக்கச் செப்பக்கேளு, பையவே பத்தியமோ காரு காரு பண்பாக மண்டலந்தான் கொண்டுபாரு, உய்யவே நெய்யினிற் கொள்ளும்போது வுத்தமனே பாண்டுவகை யாறும்போமே. (௮௬௬)

பேரகும்பா தேனிலே கொள்ளும்போது புகழான குட்டமெல்லாம் விட்டுப்போகும், வாகுவாய் சர்க்கரையில் கொள்ளும்போது மைந்தனே கண்டமாலை புற்றும் போகும், பாகுடனே பிரவலியு மீளைபோகும் பண்பாக சகலவலி மேகம்போகும், தாகுவா யிப்படியே யின்னங்கேளு தயவான கியாழங்கள் கொடுத்துப்பாரே. (அஅஎ)

பாரப்பா பேய்ப்புடல் சூரணத்திற் கொள்ளப் பரிவான வாந்தியுடன் மண்டைசோகை, சேரப்பா கிரந்தியுட கியாழங் கொள்ளத் திறமான சுரங்களெல்லாந் தீர்ந்துபோகும், ஆரப்பா எனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நானுனக்குச் சொன்னேன் பாரு, கூரப்பா யிப்படியே பார்த்துநன்றாய்க் கொடுத்திடவே நோய்களெல்லாங் குலைந்துபோமே. (அஅஅ)

அப்பிரக பற்பம்.

குலைந்துபோ மின்னமொரு பற்பங்கேளு குறையாம லப்பிரகம் பலந்தான் வாங்கி, நிலையான வீரமுடன் காரங்கூட்டி நேரான பூரமுடன் சாரங்கூட்டு, அலையாதே யிந்தவழி யாருஞ்சொல்லார் அப்பனே நானுனக்குச் சொன்னேன்பாரு, மலையாமல் நண்டோடு முட்டையோடு மகத்தான மனிதருட கபாலத்தோடே. (அஅகூ)

ஓடப்பா யிவையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு வுத்தமனே காரமிட்டு நீரிலாட்டு, மாடப்பா முச்சாம மரைத்துவாங்கு மையதுபோலானபின் பெடுத்துக்கொண்டு, ஆடப்பா பில்லையது தட்டியேதான் அப்பனே கைபாகம் பிசகிடாமல், நோடப்பா வில்லைபண்ணி ரவியில் வைத்து நுணுக்கமாய்ச் சீலைமண் ரண்டுசெய்யே. (அகூ0)

செய்தபின்பு கெசபுடத்தில் நீறிப்போகும் திறமாகச் சொல்லுகிறேன் தேறிப்பாரு, பையவே யாறியபின் னெடுத்துக்கொண்டு பாங்காக நெய்பிலே கொடுக்கும்போது, தொய்யவே வியாதியெல்லாந் தீர்ந்துபோகும் தொடராது கர்மவினை யகன்றுபோகும், தையலாள் கடாட்சத்தில் வியாதியெல்லாந் தப்பாதே யோடிவிடுந் தாக்கிப்பாரே. (அகூக)

பாரடா சர்க்கரையில் தேனைவிட்டுப் பரிவாகச் சூரணங்க ளேகி யங்களோடு, நேரடா யிப்படியே கொண்டாற்கேளு நிலையாது வியாதி யெல்லாம் நிசமாய்ச் சொன்னேன், ஆரடா எனைப்போலச் சொல்வா ரப்பா அப்பனே நானுனக்குச் சொன்னேன்பாரு, சேரடா வனுபான மறியச்சொல்லி திறமான நாடியொன்று செப்பினேனே. (அ௬௨)

சேந்தூர வரிசை.

செப்புகிறேன் தேவியைத்தான் பூசைபண்ணு சித்திக்கு மிவன் றேகம் தெளிவுகாணும், ஒப்புகிறே னின்னமுண்டு யேதேயாகில்உறு தியுள்ள செந்தூர முறையுமாகும், செப்பாதே யொருவருக்குஞ் சொல் லவேண்டாம் தெளிவாக நானுனக்குச் சொன்னேன்பாரு, தப்பாமற் செய்துவிடு மைந்தாகேளு சாகாத கருவு முண்டு சாற்றுறேனே. ()

காந்த சேந்தூரம்.

சாற்றுகிறேன் காந்தமதை வாங்கிமைந்தா தப்பாமற் செய்து விடு மைந்தாகேளு, மாற்றுகிறேன் காரமொடு பூநீர்விட்டு மைந் தனே சீனமுடன் வழலைகூட்டி, தூற்றுகிற நோய்களெல்லாம் துடிகொண்டோடும் சொல்லினேரெந்தனுக்கு வாலைதானும், சோற்றுட வொன்றாக வேளைச்சாறுஞ் செப்பாத யெலுமிச்சம் பழத்தின்சாறே.()

சாறுவகை யிதுரண்டு மொன்றாய்க்கூட்டித் தப்பாமற் றானரைக்க மூன்றுசாமம், கூறவே யரைத்ததனை வுருட்டிக்கொண்டு குறையாமல் வில்லைபண்ணி ரவியில்வைக்க, நீறுடனே காய்ந்துமே கணிலிட்டாக் கால் நேத்தியாய்த் தவளம்போல் நீறும்பாரு, மாறுவா யுலர்ந்தபின்பு சீலைமண்செய்து மைந்தனே யுலர்த்தியதைப் புடத்திற்போடே. ()

போடப்பா கெசபுடத்தில் தீர்த்தாயாகில் புகழாக நீறியது பற்ப மாகும், நாடப்பா மூன்றுபுடந் தீர்த்தாயாகில் நலமான முருக்கம்பூ நிற முமாகும், போடப்பா மயேஸ்வரிக்குப் பூசைமார்க்கம் பொங்கமுடன் செய்திடவே பிணிகள்போகும், தேடப்பா செந்தூர மெடுத்துக் கொண்டு செப்புகிறேன் சிமிளிலே யடைத்துக்கொள்ளே. (அ௬௬)

அடைத்ததோர் செந்தூரம் நெய்யிற்கொள்ள அப்பனே வியாதி யடா சொல்லக்கேளு, விடையுள்ள வீக்கமுதல் சோகைபாண்டு வித மான பீனிசமு மற்றுப்போகும், தடையறவே பாண்டுமுதல் பிசிவு போகுந் தப்பாது தட்சணாமூர்த்தி வாக்கு, படைத்துவிடுந் தேனிலே கொள்ளும்போது பதினெட்டுக் குட்டமுடன் பறந்துபோமே.(அ௬௭)

அற்றுப்போம் சர்க்கரையிற் கொள்ளும்போது அழலையுடன் கிறுகிறுப்புவலி யேங்கல் போகும், உற்றுப்பார் சித்தனுக்கு கற்ப முண்ண வுரைக்கிறே னரைதிரையு மற்றுப்போகும், எத்திசையு மிந்த முறை பொய்யாதையா என்மகனே நானுனக்கு யுரைக்கும்வாறு, பத்தியமாய்க் கொள்ளடா நமனும் வாரான் பாடினேன் மெய்ஞ்ஞா னப் பாடல்தானே. (அகூஅ)

பாடலைத் தானறிந்து மைந்தா கேளு பரிவாக வாலைக்குப் பூசை பண்ண, பாடலிலே சொல்லுதென்று யெண்ணிக்கொண்டு பாங்காக மாதாவை மறந்திடாதே, பாடலிலே யெனைப்போலச் சொல்லாரப்பா பாருலகில் கிடையாது பாருபாரு, பாடலிலே சாகாத முத்தியுண்டு பார்த்தவரே சித்தனப்பா பாருபாரே. (அகூகூ)

## அப்பிரகச் சேந்தூரம்.

பாரப்பா யின்னமொரு செந்தூரந்தான் பாங்கான வப்பிரகம் பலந் தான் கூட்டி, சேரப்பா பூநீறு பலந்தான் கூட்டு தெளிவான காரமது பலந்தான் கூட்டு, ஆரப்பா எனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நானுனக்குச் சொன்னேன் பாரு, மாரப்பா யிவையெல்லா மொன்றாய்க் கூட்டி மைந்தனே வல்லாரைச் சாற்றி லாட்டே. (கூ00)

ஆட்டப்பா மூன்றுநா ளரைத்த பின்பு அப்பனே வில்லை பண்ணி ரவியில் வைத்து, மூட்டப்பா சீலைமண் மூன்று செய்து முறையாகத் தானுலர்த்தி கெசபுடமே போடு, ஆட்டப்பா யிந்தமுறை ரண்டு பாகம் அப்பனே செய்திடவே வேதையாகும், மாட்டப்பா நீறியது மஞ்சள்போலா மறுபடியுந் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (கூ0க)

வைத்தபின்பு மருந்ததனை யெடுத்துக்கொண்டு வகையாகக் காரமப்பா பலந்தான் கூட்டி, பொற்றலையான் சாற்றிலே யரைத்தபின்பு புகழாக முலைப்பால் தான் கூட்டிக்கொள்ளு, வைத்திடவே ரவிதனிலே காயவைத்து வண்மையாய் மயேஸ்வரிக்கு பூசைமார்க்கம், தைத்திடவே சீலைமண் மூன்றுசெய்து தாக்கிவிடு கெஜபுடத்திஸ் செந்தூரமாமே. (கூ0உ)

ஆமப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு அப்பனே நெய்யிலே கொள்ளும்போது, தாமப்பா மேகத்தால் வந்தமேகந் தனியான நீரிழிவு சாடிப்போகும், ஓமப்பா தேனிலே கொள்ளும்போது வொடுங்காத பாண்டுவகை யுழன்றுபோகும், வாமப்பா சர்க்கரையிற் கொள்ளும் போது மகத்தான குட்டமெல்லாம் வாங்கிப்போமே. (கூ0௩)

வாங்கியேசித்தனுக் கனுபானங்கேளு மகத்தான கடுக்காயில் கொள்ளும்போது, பாங்கான நரைபோகும் யிளமையாவார் பாடினே ஹுறுதியாய்ப் பாடிப்போட்டேன், திங்கில்லா யிந்தமுறை பொய்யா தையா செப்பினேன் மாந்தர்கள்தான் பிழைக்கவென்று, நாங்களெல் லாஞ் செய்துவிட்டோம் செந்தூரத்தை நமனணுகான் சொல்லிவிட் டே னன்ருய்ப்பாரே. (கூ0ச)

## லவண சேந்தூரம்.

பாரப்பா யின்னமொரு செந்தூரங்கேளு பரிவான லவணத்தைப் பலந்தான் வாங்கி, நேரப்பா தாமரைதான் குழியுமாகும் நிலையா கத் தன்சாற்றி லரைத்துக்கொண்டு, ஆரப்பா எனைப்போலச் சொல் வாரப்பா அப்பனே நானுனக்குச் சொன்னேன் பாரு, கூரப்பா வில்லை பண்ணி ரவியில்வைத்துக் குறையாம லுலர்த்திவிடு கூர்ந்துகேளே. ()

கேளப்பா சீலமண் ணிரண்டுகட்டி கெடியாகத் தானுலர்த்திக் குக்குடமே போடு, காணப்பா புடமூன்றில் செந்தூரமாகுந் தாக்கினே னதையெடுத்து வைத்துக்கொள்ளு, தேளப்பாயிம்மருந்து பிசகாதையா தெளிவாக மானிடர்க்குச் சொன்னேன்பாரு, நாளப்பா பத்திலே தே னிற் கொள்ள நாடாது வியாதியுட நடனம் பாரே. (கூ0ரு)

நடனமுள்ள கெண்டையொடு சோகை வீக்கம் நலமான பாண்டு வகை யெல்லாந் தீரும், குடமான நீராம்பல் குடல்வாதங்கள் குலைந்து விடுஞ் சொல்லுகிறேன் கொடுத்துப்பாரு, அடலான பாண்டுமுதல் யிசிவுபோகும் அப்பனே குன்மவலி யீளைபோகும், திடமான நெய் யிலே கொள்ளும்போது தீராத மகோதரமுந் தீரும் பாரே. (கூ0எ)

## மிருதார்சிங்கி சேந்தூரம்.

தீருமப்பா யின்னமொரு செந்தூரங்கேளு திறமான மிருதாரு சிங்கி வாங்கி, மாறுவாய் காரமுடன் சீனங்கூட்டி மைந்தனே தான ரைக்கச் சாறுகேளு, கூருடனே குமரியின் சாற்றினாலே கொற்ற வனே தானரைப்பாய் ரண்டுசாமம், தேறுநீ வெள்ளெருக்கன் சாற்றி லாட்டித் திறமாக முச்சாம மரைத்துக் கொள்ளே. (கூ0அ)

அரைத்தபின்பு மறுபடியும் பூரங்கூட்டி அப்படியே தூக்கமொன் று குறையாமற்றுன், உரைக்கிறேன் கருங்காலி நீரும்விட்டு வுத்தமனே முச்சாம மரைத்துவாங்கி, திரைக்கிறேன் ரவிதனிலே காயவைத்து தெளிவாக வாத்தாட்கு பூசைமார்க்கம், மரைக்கிறேன் வில்லைபண்ணி மைந்தா கேளு மகிமையாய்ச் சீலமண் ணிரண்டுசெட்டே. (கூ0கூ)

கட்டியே ரவியிலே யுலர்ந்தபின்பு கருதியே செசபுடத்தில் பற்பமாகும், அட்டியில்லா பற்பத்தை யெடுத்துக்கொண்டு அப்பனே மறுபடியும் கல்வமிட்டு, திட்டமுடன் சாரதனைப் பிழிந்துமேதான் திடமாக மைபோல வரைத்துமேதான், திட்டமா யாறியபின் மறு புடத்திற் போடு திறமான செந்தூர முருக்கம் பூவே. (௬௧0)

முருக்கம்பூ நிறமாகு மெடுத்துக்கொண்டு முறையாக வனுபானங் கண்டுயீய, ரூருக்கின்ற குட்டமுடன் வெடிப்பு வீக்கங் குறைநோயும் வண்டூரசி கூட்டோடேபோம், இறுக்கமுடன் தட்சணாமூர்த்தி நாயன் சிறுவர்கட்கும் பெரியர்கட்கு முரைத்தோம் பாரு, இறுக்கிவிடும் வாதசன்னி வாதகுன்ம மிவைகளெல்லா மோடிவிடு மிதமாய்ச் சொன்னேன். (௬௧௧)

கெவுரி செந்தூரம்.

சொன்னேனு னின்னமொரு செந்தூரங் கேளு சுருதியாய்க் கெவுரியப்பா பலந்தான் வாங்கி, உண்கின்ற பாலிலே சுத்திசெய்து வுத்தமனே வீரமுடன் பூரங்கூட்டி, பன்னுன காரமுடன் சாரங்கூட்டி பகர்ந்திடவே மூலிக்கு சாபந் தீர்த்து, பொன்னுவாரைச் சார்விட்டு மூன்று சாமம் பூட்டியே யரைத்துவிடப் பொருந்திப்பாரே. (௬௧௨)

பாரப்பா வதன்பிறகு சொல்லக்கேளு பரிவான கஸ்தூரி விராகன் கூட்டு, சேரப்பா சாரமது விராகன் கூட்டு திறமான முலையமிர்தம் வார்த்து நன்றாய், நேரப்பா ரவிதனிலே காயவைத்து நேத்தியாய் சத்தமது கணிவிட்டாக்கால், கூரப்பா விருசாம மரைத்துருட்டிக் குறையாமல் வில்லைபண்ணி ரவியில் வையே. (௬௧௩)

வைத்தபின்பு சீலைமண் மூன்றுகட்டி வளமான மயிற்புடத்தில் செந்தூரமாச்சு, தைத்திடவே நிறமப்பா பூரணம்போற் காணும் தயவாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளு, சித்திபெற மனோன்மணியைப் பணிந்து போற்றி தெளிவுபெற சின்மயத்தைப் பெறுகவேண்டி, பத்தியாய்ப் பூசைபண்ணி வைத்துக்கொண்டு பரிவாக வனுபானமறிந்து செய்யே. (௬௧௪)

செய்யடா வெண்ணெயிலே கொள்ளும்போது திடமான காமாலை சோகை பாண்டு, வையடா நெய்யிலே கொண்டாயாகில் வயிறெரிவு பெரும்பாடு வாடாவீக்கம், தொய்யவே மேல்வலியு மீளைபோகும் துடியான வாதமொடு சூலைபோகும், பையவே யிவையெல்லாம் விட்டுப்போகும் பரிவாகத் தானறிந்து பண்டிதந்தான் செய்யே. (௬௧௫

### கெந்தக செந்தூரம்.

செய்யப்பா யின்னமொரு செந்தூரங் கேளு தெளிவான கெந்தகமோ பலந்தான் வாங்கி, உய்யவே தானெடுத்துச் சுத்திபண்ணி யுத்தமனே குமரியுட சாறுமாகும், பையவே தக்காளிச் சாறுமாகும் பாங்கான கருணையுட சாறுமாகும், கையானின் சாறுவிட்டு அரைக்கவேண்டும் கருவான பூநீறும் விராகன் கூட்டே. (௬௧௬)

கூட்டியபின் சாரமது விராகன் கூட்டு கூரான வீரமது விராகன் கூட்டு, ஆட்டியே முச்சாம மரைத்துவாங்கி அப்பனே வில்லைபண்ணி ரவியில்வைத்து, வாட்டிப்பின் புலர்த்தியதை யெடுத்துக்கொண்டு வளமான சீலைமண் மூன்றுகட்டி, சாட்டிவிடுங் குக்குடத்தில் பற்பமாகுந் தருவான மறுபுடத்தில் செந்தூரந்தானே. (௬௧௭)

தானப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு தருவான வனுபானம் நெய்யிற் கொள்ள, வானப்பா யிடி வீக்கங் கபாலசூலை மைந்தனே புண்புரைகள் மாண்டுபோகும், கூனப்பா திமிர்சூலை கருப்புத்தீரும் குறிப்பான கால்முடச்சு கருணைதீரும், பானப்பா வாயுவதை நீங்கிப்போகும் பார்த்தறிந்து வனுபானம் பாங்காய்ச் செய்யே. (௬௧௮)

பாங்கான சர்க்கரையிற் கொள்ளும்போது பாழான குஷ்டமடா பறந்து போகும், தாங்காதே கெந்தகத்தில் நோயும் போகும் தருவான வனுபான மில்லை மைந்தா, ஏங்காதே மருந்தினிட வேகம்பாரு என்மக்காள் நாமுனக்குச் சொன்னோம் பாரு, தூங்காதே மவுனமாய்த் தூங்கச் சொன்னேன் துடியான மருந்தினிட தொடர்பு பாரே. (௬௧௯)

### நாபி செந்தூரம்.

தொடர்ந்துவிடு மின்னமொரு செந்தூரங் கேளு துடியான நாபியடா பலமோ வொன்று, அடர்ந்துவிடும் அண்டமப்பா பலமோ வொன்று அறியவே சொல்லிவிட்டே னேடும் பாரு, தொடர்ந்துவரு மருந்துகள் தான் மெத்தவுண்டு செப்பரிது செப்பரிது சொல்லொண்ணாது, இடைந்துவிடு மாதளம்பூச் சாற்றிலாட்டு இதமாக விருசாம மரைத்த பின்பே. (௬௨0)

அரைத்த பின்பு வெண்காரம் விராகன் ரண்டு அப்பனே சவர்க்காரம் விராகன் ரண்டு, துரத்திவிடுங் கருங்காலி நீரில்மைந்தா ஆடியாக முச்சாம மரைத்துக்கொள்ளு, நிரைத்துமே ரவிதனிலே காயவைத்து திடமாக சத்தமது கணிவிட்டாக்கால், விரைத்து விட்டேன் வில்லை பண்ணி ரவியில்வைத்து மேலாகச் சீலைமண் மூன்று செய்யே. (௬௨௧)

சிலையப்பாமூன்று செய்து ரவியில் வைத்து திறமாகச் சொல்லு கிறே னுலர்ந்தபின்பு, வாலையைத்தான் தியானமிடு மயிற்புடம் போடு மைந்தனே பற்பமா மதன்பிறகு, காலையிலு மாலையிலும் தின்றுமே தான் காயாதி தேகத்திற் குறுதி பாரு, வேலையில்லை மயிற்புடத்தி லிட்டாயாகில் விதமான முருக்கம்பூ நிறமுமாமே. (கூ௨௨)

ஆமப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு அப்பனே சர்க்கரை யிற் கொள்ளும்போது, தாகுத்த புற்றிலே ஐந்தும் போகுந் தனியான கிரந்தி பிரமேகம் போகும், வாகுத்த வயிருளைச்சல் பிரணம நீங்கும் வாகான மயிற்பீலி நோவும் போகும், போகுமே பிறவலியு மிசிவு போகும் பொல்லாத பெருமூச்சு சுவாசம் போமே. (கூ௨௩)

தாம்பர செந்தூரம்.

போகுமடா யின்னமொரு ஞானந்தான் பாரு புசழான தாம்ப ரத்து துட்டு வாங்கி, நாகமுடன் கெந்தகமோ விராகன் ரண்டு நலமான வேலியுட பருத்திவேரும், தாகமுடன் கோரையுட னறுதாளிவேரும் சாங்கமாய் முடக்கொத்தான் மூலிதானும், போகாமற் றுன்றாக்கி யொன்றுய்க் கூட்டிப் புகழாக வரைத்துவிடு மெழுகு மாக்கே. (கூ௨௪)

ஆக்கியபின் மைந்தனே சொல்லக்கேளு அன்பான தாம்பரத் தின் மேலேபூசி, பாக்கியமா யுலர்ந்தபின்பு சொல்லக்கேளு பாங்கான கெசபுடத்தில் பற்பமாகும், தூக்குடனே யிரண்டுமுறை யிந்தபாகம் தப்பாது தட்சணுமூர்த்திநாயன், நோக்கவே பின்னுமதைப் புடமே போடு நுணுக்கமாய்ச் செந்தூர முருக்கம் பூவாமே. (கூ௨௫)

மேலான செந்தூர மெடுத்துக்கொண்டு வெல்லத்திற் றுன்கொ டுக்க வியாதி கேளு, வாலான முடக்கமொடு பாண்டு சோகை வாய்புலத் திற் பீனிசங்கள் கண்டமாலை, கோலான அண்டத்தின் புற்றுந்தீரும் கொடிதான் புண்புரைக ளெல்லாம் நீங்கும், மேலான வுள்தடிப்பு விது களெல்லாம் மிரண்டங்கே யோடிவிடும் விரும்பினேனே. (கூ௨௬)

விரும்பகிறேன் தேனிலே கொள்ளும்போது வீக்கமுடன் தடிப் புடனே யோடிப்போகும், சுரும்பான கெண்டைவலி மேகம் போகும் சூடசமா மிந்தமுறை பொய்யாதையா, கரும்பான யிந்நூலை யார்தானீ வார் கீாசினியில் மானிடர்கள் பிழைக்க யீந்தேன், துரும்படா வியாதி யெல்லா மோடிப்போகுஞ் சொன்னேனென்பார் சொல்லாதே சூட் சந்தானே. (கூ௨௭)

### அயச் செந்தூரம்.

சூட்சமா யின்னமொரு செந்தூரங் கேளு சொல்லுகிறே னயமது தான் பொடியே பண்ணி, வாச்சடா யெலுமிச்சம் பழத்தின் சாறு வகையாகத் தான்கூட்டிச் சுத்திசெய்து, போச்சடா யிந்தமுறை பத்துவிதம் புகலவே செய்துவர முறை பொய்யாது, பாச்சப்பா மேனியுடன் காரங்கூட்டிப் பாங்கான பருத்தியுட வேருங் கூட்டே. (கூஉஅ)

கூட்டடா விழியுட வேருங்கூட்டு குறையாமல் மருந்தை யெல்லாஞ் சமனாய்த்தூக்கி, ஆட்டியே முச்சாம மெடுத்துக்கொண்டு அப்பனே வில்லைபண்ணி ரவியில்வைத்து, நாட்டமுடன் மயேஸ்வரிக்கு பூசைமார்க்கம் நவிலவே சக்கரமும் பீசம்போடு, மூட்டிடுவாய் சீலைமண் மூன்றுகட்டு முறையாக மயிற்புடத்தில் நீறிப்போச்சே. (கூஉகூ)

போச்சப்பா வதன்பிறகு யெடுத்துக்கொண்டு புகழாகப் பின்னுமொரு புடமேபோடு, மாச்சப்பா தீர்ந்தது செந்தூரந்தான் மஞ்சாடி போலாக நிற்கும்பாரு, ஆச்சப்பா யிந்தமுறை பொய்யாதையா அப்பனே நானுனக்குச் சொன்னேன்மைந்தா, வாச்சப்பா சொல்லுகிறேன் மைந்தா கேளு வகையாக வனுபானம் வறைகிறேனே. (கூ௩0)

வறைகிறே னெய்யிலே கொள்ளும்போது மகத்தான குட்டமுடன் கிரந்தி வீக்கம், உரைக்கிறேன் வெல்லத்தி லுண்ணும்போது உள்வறட்சி வண்டுகடி சூலை மேகம், திரைக்கின்ற மேகவகை யிருபதும் தெளிவான ரோகமுதல் அற்றுப்போகும், அரைக்கிறேன் தேனிலே கொள்ளும்போது அப்பனே குன்மமடா அற்றுப்போமே. ()

### வெள்வங்க செந்தூரம்.

அற்றுப்போ மின்னமொரு செந்தூரங் கேளு அப்பனே வெள்வங்கம் பலந்தான் வாங்கி, பத்தியுள்ள மாதளம்பூச் சாறுகூட்டிப் பாங்கான கொடிவேலி வேருங்கூட்டி, சித்திபெற யிம்மருந்தைப் பிசகிடாமல் தெளிவுபெற மாணாக்கர் செய்து பார்ப்பார், முத்தியாம் அண்டத்தி னோடுங்கூட்டி முறையாகத் தானரைக்கச் சாறு தும்பை. (கூ௩உ)

தும்பையுடன் பூரமப்பா விராகன் கூட்டிச் சொல்லுகிறேன் மையது போ லரைக்கும்போது, வெம்பியதோர் காரமப்பா விராகன் கூட்டி விதமாக வில்லைபண்ணி ரவியில் வைத்து, நம்பியே கணபதிக்குப் பூசைமார்க்கம் நவிலவே செய்துவர வரம்புகேளு, தம்பியே யுலர்ந்தபின் பெடுத்துக்கொண்டு தயவாகச் சீலைமண் ணிரண்டு கட்டே. ()

கட்டியபின் கனக்கவே புடமே போடு கருதியப்பா வாறியபின் னெடுத்துக் கொள்ளு, மட்டற்ற வங்கமடா பருத்தி போலாம் மறு புடத்தில் செந்தூரம் வரிசையாச்சு, திட்டமுடன் வனுபானங் கொண் டாயானல் தீராத வியாதி யெல்லாந் தீர்ந்து போகும், ஒட்டிற்ற குன்ம முடன் காசிக்கிய வோடுமடா பித்தத்தில் வந்தரோகம். (௬௬௪)

ரோகமென்ற சயரோகம் காந்தலுக்கு நோக்கடா வனுபானம் வெண்ணெ யாகும், தேகத்தி லுள்ளதொரு ரோகமெல்லாம் நில்லாது சொல்லுகிறே னீங்கும்பாரு, ஆகமத்தில் யிந்தமுறை சொல்லாதையா அப்பனே நாமுனக்குச் சொன்னோம் பாரு, மேகத்துக் கிதுவப்பா வெகுசுருக்கு விதஞ்சொன்னே னின்னமொன்று விரும்பிக் கேளே. ()

## வெள்ளி செந்தூரம்.

கேளப்பாயின்னமொரு செந்தூரந்தான் கெடியான வெள்ளியப்பா வாங்கி மைந்தா, தாளப்பா மறுபடியும் பொடியே பண்ணத் தயவான வமுக்குரு வேருங்கூட்டி, கேளப்பா வனமூலி தானுங்கூட்டி கெடி யான கைமுறைதான் தப்பாவண்ணம், நாளப்பா வேலியின்வேர் வே லிவேரும் நலமாகத் தான்கூட்டி நிறுத்துக் கொண்டே. (௬௬௫)

கொண்டபின்பு விராகனடா காரங்கூட்டு குறியாகச் சாரமப்பா விராகன் கூட்டு, பன்றாகப் பொடிபண்ணி கல்வமிட்டு பாங்காக மூலி யிடச் சாற்றாலாட்டி, தின்றாக பில்லைதட்டிக் காயவைத்து திடமாக ரவிதனிலே காயவைத்து, நன்றாக யிவையெல்லா மொன்றாய்க் கூட்டி நலமாகத் தானரைத்து வில்லை பண்ணே. (௬௬௭)

பண்ணியபின் ரவியிலே யுலர்ந்தபின்பு பாங்கான சீலைமண்ணிர ண்டுங் கட்டி, எண்ணியே தாயாரைப் பூசைபண்ணி யின்பமாய்த் தானெடுத்து மயிற்புடம் போடு, திண்ணமுடன் யிந்தமுறை பொய் யாதையா செப்புகிறேன் சித்தர்கட்காகுமென்று, உன்னியே நீயறிந்து செந்தூரமைந்தா வுத்தமனே பூரணவுதயமாமே. (௬௬௮)

உதயமாஞ் செந்தூர மெடுத்துக்கொண்டு வுத்தமனே பதனம தாய் வைத்துக்கொண்டு, பதையாதே சொல்லுகிறே னெய்யிற் கொள் ளப் பறக்குமடா பதினெட்டு மேகம்பாரு, திதையான சூலையொடுபக் கச்சூலை திறமான மேல்மூச்சு வலிப்புதீரும், உதயத்தி லீந்தாக்கால் மெத்தநன்று வுத்தமனே சொல்லுகிறே னுறுதிதானே. (௬௬௯)

உறுதியாஞ் சர்க்கரையிற் கொள்ளும்போது உடல் நோயும் பெருவயறு வறட்சிகாந்தல், திருந்தவேபாலிலே யுண்ணும்போது திறமான விப்புருதி சழலை யெல்லாம், பொருந்தாம லுடலைவிட் டக லும் பாரு புண்ணியனே நாமுனக்கு வுரைத்தோம்பாரு, அருந்திடவே யிவையெல்லா மோடிப்போகும் அப்படியே யனுபான மறிந்து செய்யே. (௬௭0)

## நாக செந்தூரம்

செய்யவே யின்னமொரு செந்தூரங்கேளு திறமான நாகமப்பா பலந்தான்வாங்கி, உய்யவே மூலியுண்டு யேதேயாகி லுறுதியுள்ள புன்னைவேர் கருநொச்சி வேரும், பையவே வேம்பினுட வேருங்கூட்டி பாங்கான தும்பையுட வேருங்கூட்டி, பையவே சிறுசின்னிச் சாற்றுலாட்டி பதிலாக வரைத்ததனை வைத்துக் கொள்ளே. (கூசக)

கொள்ளவே யதன்பிறகு காரங்கூட்டு குறியான பூரமடா குறித்துப்போடு, தெள்ளவே யண்டத்தின் கருவாலாட்டித் திறமாக வில்லை பண்ணி ரவியில் வைத்து, அள்ளவே மயேஸ்வரிக்குப் பூசைசெய்து அப்பனே பீஜாட்சர மோதவேண்டும், மெள்ளவே யுலர்ந்தபின் பெடுத்துக்கொண்டு விதமாகச் சீலைமண் மூன்று கட்டே. (கூசஉ)

கட்டியபின் மயிற்புடத்தில் நீறுமைந்தா கருகியே யிருக்குமது யெடுத்துப் பார்க்க, நட்டணையா யின்னமொரு புடமேபோடு நலமாக நீறியது செந்தூரந்தான், திட்டமுடன் மண்டலந்தான் கொண்டாயானால்தீராத வியாதியெல்லாந் தீர்ந்துபோகும், இட்டமாய்த்தானப்பா யெடுத்துக்கொண்டு யிதமாக விரும்பினுடச் சிமிளில் வையே.(கூசந)

வைபடா நெய்யிலே கொண்டாயாகில் மகத்தான வியாதிபடும் பாடுபாரு, கொய்யுகிற நோயடா கவுசிகுன்மங் குறைநோயும் வண்டுகடி கூட்டோடே போம், நையவரும் க்ஷயரோகம் காசரோகம் நவிலவே யுடலைவிட் டோடும்பாரு, செய்யவே தேனிலே கொள்ளும்போது திறமான பீனிசமுஞ் சிதறிப் போமே. (கூசச)

சிதறிப்போஞ் சர்க்கரையிற் கொள்ளும்போது திடமான பாண்டுடனே புற்றுபோகும், உதறிவிட்டே னிதுவறிந்து யீந்தாயாகி லுலகிலே யீசனைப்போ லிருக்கலாகும், அதறிடவே யிந்தமுறை யாருஞ் சொல்லார் அப்பனே நாமுனக்குச் சொன்னோம் பாரு, பதறிவிட்டுச் செய்யாதே மைந்தாகேளு பாங்கான வாலையுட பூசை பண்ணே. ()

பண்ணவே யின்னமொரு செந்தூரங் கேளு பரிவான துராவதுதான் பலந்தான் வாங்கி, விண்ணவே பொடிபண்ணி வைத்துக்கொண்டு வீரமுடன் காரமடா விதமாய்க் கூட்டு, திண்ணமுடன் யிந்தமுறை பொய்யாதையா தீராத ரோகமெல்லாம் தீர்ந்துபோகும், தண்மையா யிவையெல்லா மொன்றாய்க் கூட்டித் தருமான மருந்துண்டு சொல்லக்கேளே. (கூசசா)

கேளப்பா கொடிவேலி சிற்றுமுட்டி கெடியாகச் சமூலமுந்தான் பிடுங்கி மைந்தா, தாளப்பா யிடித்ததனைச் சாறுவிட்டுத் தப்பாமல் மூச்சாம மரைத்துக்கொண்டு, கேளப்பா பில்லைதட்டி ரவியில்வைத்து கெடியான சீலையது வலுவாய்ச் செய்து, வாளப்பா பூசையது செய்து மேதான் மகத்துவமா யுலர்த்தி நன்றாய் வைத்துக் கொள்ளே. (சுசஅ)

கொண்டபின்பு சீலைமண் ரண்டுகட்டி குமுறவே குக்குடத்தில் செந்தூரமாகும், விண்டேனன் மாண்பர்களே கேளும் கேளும் விபரமாய்ச் சொல்லிவிட்டே னெடுத்துக்கொள்ளு, குன்றான மண்டலந் தான் கொள்ளுகொள்ளு குறிப்பான வியாதியெல்லாம் நீங்கும்நீங்கும், நன்றான செந்தூரந் தேனிற் கொள்ளு நாடாது சொல்லுகிறேன் வியாதி கேளே. (சுசசு)

கேளப்பா குன்மத்தி லாறும்போகும் கெடியான நீராம்பல் கெண்டை போகும், நாளப்பா வெல்லத்தி லுண்ணும்போது நலமில்லா மலடிகட்கு கெர்ப்பமுண்டாம், கேளப்பா யெனைப்போலச் சொல்லாரப்பா கெடியான யிந்தமுறை பிசகாதையா, வாளப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது வாதத்தால் வந்தவினை யெல்லாம் போமே. (சுடு0)

## நாபி செந்தூரம்.

போகுமப்பா யின்னமொரு செந்தூரங் கேளு புகழான நாபியடா பலந்தான் வாங்கி, தாகுவா யமுரியிலே சுத்திபண்ணித் தப்பாமற் றனெடுத்து வைத்துக்கொண்டு, பாகுடனே கைபாகம் பிசகிடாமல் பார்த்திபனே செய்திடவே யெல்லாஞ் சித்தி, மேருவாய் சீனமடா விராகன்ரண்டு விதமான பூரமது விராகன் ரண்டே. (சுடுக)

ரெண்டாகும் விராகனடா நாகங்கூட்டு நிலையாகச் சொல்லுகிறேனிதுகளெல்லாம், ஒன்றாகத் தான்கூட்டிப் பொடியே பண்ணு வுத்தமனே சொல்லுகிறே னுறுதிகேளு; குன்றான மலமருந் ததனையெடுத்தும் தான் குறையாமல் கல்வத்தி லிட்டுக்கொண்டு, முன்றான யிலையரைத்துச் சாறுங்கூட்டு முச்சாம மரைத்ததனை மெழுகுமாக்கே. (சுடுஉ)

ஆக்கியபின் வில்லைபண்ணி ரவியில்வைத்து அப்பனே சீலைமண் மூன்றுகட்டி, தாக்கிவிடு மயிற்புடத்தில் பற்பமாகுந் தருகாதே மறுபுடத்தில் செந்தூரமாகும், போக்கில்லா மருந்ததனைப் பதனம் பண்ணு புண்ணியனே யார்க்குந்தான் கிட்டாதப்பா, நோக்கப்பா விப்புருதிக் கனுபானங்கேளு நுணுக்கமாய் சர்க்கரைதா னேயைக்கேளே. (சுடுங)

கேளப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது கெடியான நீரடைப்பு கல்லடைப்பு, வேளப்பா சதையடைப்பு பாண்டு வீக்க மேலுள்ள காந் தல்முத லற்றுப் போகும், கோளப்பா வியாதியெல்லாம் நீங்கும் நீங்கும் கொடிதான ரோகமுதல் போகும்பாரு, மாளப்பா வென்றாலு மாளொட்டாது மைந்தனே சொல்லுகிறேன் வரிசை கேளே. (௬௫௪)

வரிசையா யின்னமோ ரனுபானங் கேளு மகிமையாய் நெய்யிலே கொள்ளும்போது, துருசான குட்டமொடு கிரந்திமேகஞ் சொல்லு கிறே னிவ்வயெல்லாஞ் சொல்லாதோடும், தருசான சூலையொடு மண் டைவீக்கம் தாக்கான காப்பனொடு சூலைவாய்வு, கரிசாலைச் சூரணத்திற் கொள்ளும்போது கட்டுமாம் விந்தங்கே கருதிப்பாரே. (௬௫௫)

## தங்கச் செந்தூரம்.

பாரடா யின்னமொரு செந்தூரங்கேளு பரிவாகத் தங்கக் காசொன்று வாங்கி, நேரடா பொடியாக்கி யெடுத்துக்கொண்டு நிலையா கத் தானெடுத்து வைத்துக்கொண்டு, கூரடா யென்சொல்லு தப்பாமற் றான் குறிப்பாக கைபாகம் பிசகிடாமல், சேரடா கும்மட்டிச் சாற்றால் மைந்தா திறமாக வரைக்கையிலே மருந்து கேளே. (௬௫௬)

அரைக்கையிலே சாரமுடன் காரங்கூட்டி அப்பனே யவுரியுட சாறுங் கூட்டி, உரைக்கிறேன் திருதகள்ளிப் பாலுங்கூட்டி வுத்தமனே தானரைத்து வில்லைபண்ணு, திரைக்காமல் ரவிதனிலே காயவைத்து திறமாக கணபதிக்குப் பூசைசெய்து, குரைக்காமற் சீலைமண் மூன்று கட்டு குறையாமல் மயிற்புடத்தில் செந்தூரமாமே. (௬௫௭)

ஆதுயப்பா நெய்யிலே கொள்ளும்போது அப்பனே பாண்டு வகை குட்டம்சூலை, பாருவாய் மண்டைவலி பீனிசங்கள் பறக்கு மடா தங்கச் செந்தூரத்தாலே, ஏகுவாய் யிந்தமுறை பொய்யாதையா என்மகனே யுந்தனுக்கு வுரைத்தேன்பாரு, மேகுவாய் தேனிலே கொள்ளும் போது விளம்புறேன் புத்தி பேதனமும் போமே. (௬௫௮)

புத்தியாய்ச் சர்க்கரையிற் கொள்ளும்போது புண் புரைகள் வண் டுகடி பிரட்டல் வாந்தி, சத்தியா யிவையெல்லா மோடிப்போகுந் தப் பாதே சொல்லுகிறேன் தாக்கிப்பாரு, பத்தியாய் வெந்நீரிற் கொள் ளும்போது பாங்குடனே நோய்களெல்லாம் பறக்கும்பாரு, வெத்தி யாய்க் குளிர்நீரிற் கொள்ளும்போது விரமான பேதிகையுங் குன்மம் போமே. (௬௫௯)

போகுமடா சுடுநீரிற் கொள்ளும்போது புகழான சுரங்களெல் லாம் விட்டுப்போகும், தாகுவாய் கஸ்தூரி கூட்டியுண்ணத் தங்கம் போல் தேகமடா நிற்கும்பாரு, பாகுடனே குங்குமத்தி லுண்ணும் போது பாருபோல் தேகமது காந்திவீசும், வாகுவா யிப்படியே வருஷ முண்ண மாளாம லிருக்கவே மருந்துமாமே. (கூகூ0)

மருந்தவமே செய்யவென்று யெண்ணினக்கால் மனதையல்லோ திடப்படுத்தி நிறுத்தவேணும், மருந்தவமே மௌமப்பா ஞானத்துக்கு மைந்தனே சொல்லுகிறேன் வரிசையாகும், திறந்துமே யர்னுமங்கே திடமாய்ச் சொன்னேன் தேசத்தி லெனைப்போலச் சொல்லாரப்பா, சிறந்தவமே யிதுபோலே யில்லை மன்னு சீக்கிரமாய் வாலையுட பூசை பண்ணே. (கூகூக)

வாலையைத்தான் மாந்தர்க் கிதெல்லாம் போச்சு மாதாவை விட்ட தொரு வுறவுமுண்டோ, வேலையப்பா யில்லாமல் திறப்படுத்த விமலி யைப்போ லொருவரில்லை விதமாய்ப்பாரு, காலையனுரு காலமனுகா னப்பா கடிதான யிந்தமுறை பொய்யாதையா, ஆலயத்தில் துணையி ருந்து சிவனைக்காத்து ஆளடிமை யாக்கிவைப்பா ளறிந்துபாரே. (கூகூஉ)

இரசச் செந்தூரம்.

பாரப்பா யின்னமொரு செந்தூரந்தான் பரிவாகச் சூதமடா பலந் தான் வாங்கி, சேரப்பா யிலுப்பை நெய்யிற் சுத்திபண்ணி சீராகத் தானெடுத்து வைத்துக்கொண்டு, ஆரப்பா யெனைப்போலச் சொல்வா ரப்பா அப்பனே நானுனக்குச் சொன்னேன் பாரு, சேரப்பா சொல்லு கிறேன் காரம்பூரம் திறமாகத் தானிரண்டு விராகன் கூட்டே. (கூகூ௩)

கூட்டியபின் கஸ்தூரி மஞ்சளப்பா குமுறவே மரமஞ்சள் விராக னென்று, கூட்டிக்கொள் ளாட்டிவிடு வெற்றிலையின் சாற்றில் குறிப் பாக வரைந்துவிடு மூன்றுசாமம், தீட்டியே மயேஸ்வரிக்குப் பூசை மார்க்கம் திறமாகச் செய்துமே பீசம்போடு, மாட்டியே வில்லை பண்ணி ரவியில்வைத்து மைந்தனே மயிற்புடத்தில் செந்தூரமாமே. (கூகூச)

செந்தூரந் தானெடுத்து வைத்துக்கொண்டு திறமாக வெண்ணெ யிலே கொடுக்கும்போது, மந்தார காசமுடன் புண்புரைகள் போகும் மயக்கமுடன் பித்தத்தால் வந்தமேகம், தொந்தரைகள் செய்கி ன்ற காசரோகம் துடியான வாதமுடன் முடக்குச்சூலை, சிந்தைதனில் குடைச்சலொடு முடக்குசூலை தீர்ந்துவிடுஞ் சொல்லுகிறேன் குற மாய்த் தானே. (கூகூ௫)

சொன்னேனப்பா சர்க்கரையிற் கொள்ளும்போது துடியான சூலையெல்லாம் பறந்துபோகுஞ், சொன்னேனுன் வெல்லத்திற் கொள்ளும்போது சுகசன்னி மார்க்கமடா சூடாய்த்தீரும், சொன்னேனே திரிகடுகில் கொள்ளும்போது சூலைமுதல் அரையாப்பு புற்றும்போகும் சொன்னேனு னிதுபோலே செந்தூரத்தைச் சொல்லவில்லை மெய்ஞ்ஞானச் சூட்சந்தானே. (௬௬௬)

## சவ்வீரச் செந்தூரம்.

சூட்சமா யின்னமொரு செந்தூரங்கேளு சொல்லுகிறேன் சவ்வீரம் பலமோவொன்று, மாட்சியா யெலுமிச்சம் பழச்சாற்றாலாட்டி மைந்தனே தானெடுத்து வைத்துக்கொண்டு, காட்சியா யிம்மருந்து பிசகிடாது காசினியில் யெனைப்போலச் சொல்லாரப்பா, வாச்சப்பா யேதென்றால் சொல்லக்கேளு வரிசையாய்ப் பூரமடா விராகன் ரண்டே. (௬௬எ)

ரெண்டாகக் காரமடா விராகனாகும் நீதியாய்ச் சொல்லுகிறேன் பூரீர் கூட்டு, ஒன்றாக விவையெல்லா முருங்கைச்சாற்றா லுத்தமனே யறுசாம மரைத்து வாங்கு, பன்றாக கைபாகம் பிசகிடாமல் பாங்காகச் சரியிடையும் பார்த்துமேதான், நன்றாக வில்லைபண்ணி யுலர்த்திக் கொண்டு நலமாக மயிற்புடத்தி விட்டுவாங்கே. (௬௬அ)

வாங்கியே யெடுத்துப்பார் பற்பம்போலே மைந்தனே நீறுமடா மஞ்சள்போல, தாங்கியே பின்னுமொரு புடமேபோடு தப்பாமற் செந்தூரம் பூரணம்போலாகும், ஓங்கியதோர் கணபதிக்குப் பூசைமார்க்கம் வுத்தமனே செய்துமே யெடுத்துக்கொண்டு, பாங்குடனே தானெடுத்து வைத்துக்கொண்டு பக்குவமாய்ப் பணவிடைதா னெய்யிற் கொள்ளே. (௬௬௬)

கொண்டபின் பதனுடைய கூத்தைக்கேளு குடலிலுட சலக்கழிச்சல்கூட்டோடே போம், பண்டான காமத்தில் மைந்தா வந்த காசமாம் பதினெட்டு மோடிப்போகும், திண்டான நெய்யிலே கொள்ளும்போது திடமான நோய்களெல்லாம் தீரும்பாரு, விண்டேனு னெய்யிலே கொள்ளும்போது விஷங்களெல்லா மோடிவிடும் விதஞ்சொன்னேனே. (௬எ0)

## சவர்க்கார செந்தூரம்.

விதமாக பின்னமொரு செந்தூரங் கேளு மேலான சவர்க்காரம் வாங்கி மைந்தா, இதமான முருங்கைவேர் நிலையமுக்கி யிரஞ்சலத்திற் சாறுடனே யெல்லாஞ் சேர்த்து, நெதமாகக்கல்வத்தி லிட்டுக்கொண்டு நேரான வறுசாம மரைத்துமேதான், பதமாக மெழுகதுபோ லரைத்துவாங்கிப் பரிவாகத் தானுருட்டி வில்லை பண்ணே. (௬எக)

பண்ணியபின் ரவியிலே யுலர்த்திக்கொண்டு பரிவாகச் சீலைமண் மூன்றுகட்டு, எண்ணவே குக்குடத்தில் நீறுமைந்தா யிதமாகச் செந்தூரம் நீறும்பாரு, குண்ணுமல் செந்தூரம் மலர்ந்துமேதான் குறியான காரமது மெத்தவுண்டு, பண்ணியுட ரத்தம்போல் நிறமுமாகும் பாங்காகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (கூ௭௨)

வைத்துவிடு செந்தூரஞ் சொல்லக்கேளு வகையாகக் கயிலாசர் தியானம்பண்ணு, தெய்த்திடவே வாலைக்குப் பூசைசெய்து செப்புகிறேன் மைந்தனே திடமாய்ப்பாரு, நைத்திடவே செந்தூரம் காரமெத்த நணுகாது வியாதி யெல்லாம் நவின்றேயோடும், மத்திட வேறொன்றுமெண்ண வேண்டா மாதருடன் சேராதே மைந்தா காணே.()

பஞ்சபாஷாண செந்தூரம்.

காணப்பா யின்னமொரு செந்தூரங்கேளுகையானைச் சமூலமடா தயிலம்வாங்கி, தோணவே பாஷாணம் விராகனஞ்சு சொல்லுகிறேன் கெந்தகமோ விராகனஞ்சு, காணவே பூநீறு விராகன் அஞ்சு கடிதான சாரமது விராகன் அஞ்சு, ஊணப்பா தாளகமோ விராகனஞ்சு வுத்தமனே யிவையெல்லாங் குணமாய்க்கூட்டே. (கூ௭௪)

கூட்டப்பா சவ்வீரம் விராகனைந்து குறியான சிங்கியது விராகனஞ்சு, மூட்டப்பா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி மூர்க்கமென்ற தயிலத்தைச் சுத்திபண்ணி, காட்டப்பா கல்வத்தி லிட்டுமேதான் கடிதான சாமமது ஆறுமாகும், ஓட்டுவாய் நன்றாக வரைக்கக்கேளு வுத்தமனே வஸ்துவிட்டுச் சாமமூன்றே. (கூ௭௫)

சாமமடா மூன்றாக வரைத்துக்கொண்டு தயவாக வில்லைபண்ணி ரவியில்வைத்து, வாமமென்ற பாத்திரத்தில் வஸ்துவைத்து வாலைக்கும் பூசைசெய் தானபின்பு, காமமென்ற மாய்கைதனைத் தள்ளவேண்டும் காசினியில் வெகுபேர்கள் லோபிமக்காள், தாமரைநூல் திரிபோட்டு விளக்குமேற்றிச் சார்பாகத் தீபமுடன் தூபம்போடே. (கூ௭௬)

போட்டபின்பு சீலைமண் ரண்டுகட்டிப் புகழாகத் தானுலர்த்திப் புடமேகேளு, மூட்டப்பா கெஜபுடத்தில் தீர்த்தாயாகில் முறையொன்றுந் தப்பாது செந்தூரமாகும், பூட்டப்பா பூசையது செய்துமேதான் புண்ணியனே அட்சரத்தை யோதவேண்டும், கூட்டப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு குறையாமற் பணவிடைதா னெய்யிற் கூட்டே. (கூ௭௭)

கூட்டியபின் னேயினுட கூத்தைப்பாரு கொடிதான பதினெட்டு நோயும்போகும், நாட்டகத்துள் வியாதிக்கு எல்லாமப்பா நலமான செந்தூர மிதுபோலில்லை, நோட்டமுடன் யாருக்கு கிடைக்குமப்பா நுணுக்கமா மிந்தமுறை பொய்யாதையா, காட்டிலே யலைகின்ற சித்தனுக்குக் கைகண்ட கற்பமடா கருவைக்கேளே. (௩௭௮)

கருவான வல்லாரைச் சூரணத்திற் கொள்ளக் கறுத்ததோர் தேகமடா சிவப்புகாணும், உருவான தொருவர்க்குந் தெரியாதப்பா ஓகோகோ சிவ்தூதனவனேயாகும், அருவான யிம்மருந்து பொய்யாதப்பா அப்பனே நானுனக்குச் சொன்னதப்பா, குருவென்று யெண்ணிவிடு செந்தூரத்தைக் குறைவில்லை மைந்தனே கூர்ந்து கேளே. (௩௭௯)

கூர்ந்துவிடு சொல்லுகிறேன் வருஷமுண்ணு குளிகையடா கெவுனமொன்று கருதிக்கொள்ளு, சேர்ந்துவிடு தியானத்தை மறந்திடாதே செத்தவன்போ லிருக்காதே தொடர்ந்துபாரு, பார்த்துமே பலநூலை பார்த்துமேதான் பாங்காக கைபாகம் பிசகிடாமல், மாய்ந்துவிட்ட பேர்களெல்லா மிருக்குந்தாவு மைந்தனே யறியலாம் வணங்கி நில்லே.()

## துத்த சேந்தூரம்

நில்லப்பா யின்னமொரு செந்தூரங்கேளு நிலையான துத்தமடா பலமோவொன்று, சொல்லுகிறேன் வேங்கையுட தயிலத்தாலே சுருதியாய்ச் சுத்திபண்ணி வைத்துக்கொண்டு, அல்லவே சரியெடையும் தூக்கிக்கொண்டு அப்பனே கைபாகம் பிசகிடாமல், மெல்லவே பூரமடா விராகன்கூட்டி விதமாகச் சொல்லுகிறேன் விவரந்தானே. ()

விவரமாயின்னமொரு மருந்துகேளு வெடியுப்பு விராகனிடையஞ்சுகூட்டு, தவறுதே யழிஞ்சியுட பட்டைதானுந் தப்பாமல் விராகனிடை யஞ்சுகூட்டு, நிகரவே கருமுள்ளிச் சாற்றிநூலும் நேரான வெள்ளைமுள்ளிச் சாற்றிநூலும், பகரவே செம்முள்ளிச் சாறுகூட்டிப் பாங்குடனே சாமமொன்று அரைத்துக் கொள்ளே. (௩௮௨)

அரைத்தபின்பு வில்லைபண்ணி ரவியில்வைத்து அப்பனே சீலைமண் ரண்டுகட்டி, உரைக்கிறேன் குக்குடத்தில் பற்பமாச்சு வுத்தமனே தானெடுத்து வைத்துக்கொண்டு, திரைப்பான விஷ்ணுவின் பூசைமார்க்கம் தீர்ப்பாகச் செய்துமே நைவேத்தியஞ் செய்து, மரைப்பான சீலைமண்ணுடைத்தெடுத்து மகத்தான காரமடா விராகன் கூட்டே. ()

கூட்டியபின் ஆடுதின்னுச் சாற்றாலாட்டி குறையாமல் வில்லை பண்ணி ரவியில்வைத்து, மூட்டுவாய் குக்குடத்தில் செந்தூரமாகு முறையாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளு, திட்டமுடன் பரணி யிலே பதனம்பண்ணு திடமாக கைபாகம் பிசகிடாமல், மாட்டுவாய் செந்தூர முருக்கம் பூப்போலா மைந்தனே தானெடுத்து வைத்துக் கொள்ளே. (கூ௮௪)

கொள்ளப்பா வனுபானம் நெய்யிற்கொள்ளக் கொடியதோர் சலக் கழிச்சல் குன்மசூலை, வள்ளுகின்ற தேனிலே கொள்ளும்போது வீக் கமுடன் பாண்டுவகை யிரண்டுபோகும், அள்ளுடனே பிறவலியு மீளை போகும் அன்பான நோய்களெல்லா மகலும்பாரு, துள்ளவே சர்க்க ரையிற் கொள்ளும்போது திடிவாதம் சன்னியெல்லாஞ் சுருண் டுபோகும். (கூ௮௫)

துருசு செந்தூரம்

போகுமடா யின்னமொரு செந்தூரங்கேளு புகழான துருச தனை வாங்கிமைந்தா, ஆகுமடா மாதளங்காய்ச் சாறுகூட்டி அப்பனே யரையடாவதன்பிறகு, நாகுவாய் மருந்துகேள் கொடிவேலிச்சார் நல மான கள்ளிப்பால் விட்டரைத்து, பாகுமே காரமடா அட்டுப்பு கால் தான் பண்பாக மருந்தரைப்பாய் மூன்றுசாமம், (கூ௮௬)

மூன்றுகுஞ் சாமமதை யரைக்கும்போது மெழுகுபோ லான பின்பு வில்லைபண்ணி, நன்றாக ரவியிலே யுலர்த்திக்கொண்டு நாலடா சீலைமண் நலமாய்ப்போடு, குன்றாமல் ரவிதனிலே காயவைத்துக் கூசா மல் கணிலெனச் சத்தமிட்டால், பன்றான வாலையைத்தான் றியானம் பண்ணப் பாங்காகக் குக்குடத்திற் செந்தூரமாமே. (கூ௮௭)

செந்தூரந் தானெடுத்து வைத்துக்கொண்டு திடமான சிவபூசை பண்ணிக்கொண்டு, மந்தாரைப் பூவாலே யர்ச்சனைசெய்து மாதாவைத் தோத்தரித்து மைந்தாகேளு, சந்தான மில்லாத பேர்களுக்கு தப்பாது யிம்மருந்து பிசகிடாது. முந்தான பவளத்தி விட்டுப்பாரு முப்பது நாள் கழியுமுன் னிளக்கமாமே. (கூ௮௮)

இளக்கவிது வறிந்து கொண்டு யெலுமிச்சங்காய்த் தானிட்டுமே யிசைவாகப்பாருபாரு, களயடா தன்னிறம்போய்க் கறுப்புகாணுங் கரு தியேயனுபானங் கண்டுபாரு, வளமான தேனிலே கொள்ளும்போது வாகான நோய்களெல்லா மகலும்பாரு, தளமான நெய்யிலே கொள்ளும் போது தங்காது புண்புரைகள் குட்டம்போமே. (கூ௮௯)

குட்டமுடன் சோகையடா பாண்டு விக்கங் குரைநோயுந் தாமரை யுங் கூட்டோடே போம், திட்டமாய்த் தேனிலே கொள்ளும்போது தீராத காசமெல்லாந் தீர்ந்துபோகும், அட்டான குன்மமுடன் ரோகம் போகும் அப்பனே தேகமது காந்திவீசும், வட்டமிட்ட பட்சியைப்போ லலையவேண்டா மைந்தனே சொல்லுகிறேன் மகிமைதானே. (கூகூ0)

மகிமையாய்ச் சர்க்கரையிற் கொள்ளும்போது வாதமென்ற சிலேட்டுமத்தால் வந்தசன்னி, மகிமையாய் நில்லாது சொன்னேன் கேளு ம்கத்தான சதையடைப்பு பவுத்ரநோய் மூலைபோம், தகிமை யுடன் நோய்களெல்லாம் மகலும்பாரு தப்பாது காயமது சுத்தியா கும், அகிமையாய் வலிப்புடனே யேங்கல் விக்கல் அப்பனே யிவை யெல்லா மலறியோடும். (கூகூக)

## தேக காந்தலுக்கு அத்தித் தயிலம்.

அலறிப்போ மின்னமொரு தயிலங்கேளு அத்தியுட வேரப்பா பலமோபத்து, விராலியுட வேரப்பா பலமோ அஞ்சு வேளையுட வேரப்பா பலமோ அஞ்சு, தராலமுடன் கருநொச்சி வேருதானும் தாக் கான சாரணையின் வேருங்கூட்டி, புரசான வேரடா பலமோ அஞ்சு பூட்டியே யிவையெல்லாந் தயிலம்வாங்கே. (கூகூஉ)

வாங்கியபின் தயிலத்தை யெடுத்துக்கொண்டு மைந்தனே தயி லத்தி னளவுமட்டும், பாங்கான நல்லெண்ணெ யளவாயிட்டுப் பரிவா கக் காய்ச்சிவிடு தயிலம்பாதி, தீங்கில்லா கோஷ்டமுடன் சிறுதேக்கு தா னும் திடமான வாய்விளங்கம் சரியாய்சேர்த்து, தேங்குவா யதிமதுரந் தேவதாருஞ் சிறப்பாகத் தான்பொடித்துப் பொடியைத்தூவே. ()

தூவியபின் காய்ச்சியதைக் கிளறும்போது சொல்லுகிறேன் மெழுகுபத மாகும்பாரு, ஆவியெல்லா மடங்குமட்டு மடுப்பிலாறி அப் பனே யெடுத்துநன்றாய் வைத்துக்கொள்ளு, காவியத்தில் சொன்ன மொழி பிசகிடாமல் கட்டளையாய் கைபாகஞ் செய்துபாரு, மேவியே மண்டலந்தான் முழுகும்போது விதமான வியாதியுட விவரங்கேளே. ()

விவரமாய்த் தேகத்துக் காந்தலெல்லாம் விடுபட்டு பீனிசங்கள் பித்தவெட்டை, தவறுமலோடிவிடுஞ் சொன்னேனப்பா தலையிலுள்ள வண்டுகடி சாடிப்போகும், நகாவே தயிலமெத்த வேகமெத்த நாடாது வியாதியெல்லாந் தீரும்தீரும், பகரவே யித்தபில மொன்றைவிட் டுப் பாங்காக முழுகிவரப் பறந்துபோமே. (கூகூரு)

## வாதத்துக்கும் காந்தலுக்கும் ஆவாரம்பட்டைத் தயிலம்.

பறந்துபோ மின்னமொரு தயிலங்கேளு பரிவான வாவவரையின் பட்டை பலம்பத்து, சிறந்திடவே சிறிய செருப்படி சமூலம்பத்து திறமாகத் தானெடுத்துப் பானையிலிட்டு, கறந்திடவே யிம்மருந்து வேகமெத்த கடினமா பாருக்குஞ் செப்பிடாது, நிறைந்திட்வே தண் ணியடா விட்டுமைந்தா நிசமாகப் படியொன்றாய் நறுக்கி வாங்கே. ()

வாங்கியபின் காரெள்ளுத் தயிலம் படிதானென்று வளமாகத் தான்வார்த்துக் கலக்கிக்கொள்ளு, வாங்கிவிடு அதிமதுரந் தேவதாரம் வால்மிளகு யிம்மூன்றும் பொடியேபண்ணு, தீங்கில்லா பதம்பார்த்து பாகம்பார்த்து திடமான கைபாகம் பிசகிடாமல், பாங்கான தயிலத்தில் விட்டுக்காய்ச்சு பரிவாக மெழுகுபத மானவாறே. (௯௯௭)

வாரப்பா தயிலத்தை யெடுத்துக்கொண்டு மைந்தனே யொன்றை விட்டு முழுகும்போது, கூரப்பா தேகத்தில் வந்தநோய்கள் குறுகு கின்ற வாதமுடன் கூட்டோடேபோகும், ஆரப்பா யெனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நானுனக்கு மறியச்சொன்னேன், தேரப்பா தேகமது தெளிவுகாணுந் திடமான நெஞ்செரிவு காந்தல்போமே. ()

## வேங்கைப்பட்டைத் தயிலம்.

காந்தல்போ மின்னமொரு தயிலங்கேளு கருவேங்கைப் பட்டை யடா பலமோவொன்று, சேர்ந்திடவே சின்னியடா வேர் பலந்தா னென்று திடமான நாயுருவி பலமோவொன்று, கூர்ந்திடவே கையா னின் மூலிதானும் குறிப்பான சிறுதொரா மூலிதானும், வார்ந்திடவே யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி மகத்தான படிபத்து நீரும் வாரே. (௯௯௯)

நீரப்பா பாதியாய்க் குறுகும்போது நிலையாக மருந்தையெல் லாம் பிழிந்துதள்ளு, சேரப்பா கோஷ்டமுடன் மிளகுகூட்டு திறமா கச் சாதிக்காய் கிராம்புகூட்டு, மாரப்பா காரமுடன் லவங்கப்பட்டை நேரான குங்குமப்பூ ஏலந்தானும், பேரப்பா நெய்யதுதான் படிதான் விட்டுப் பேய்ப்பீர்க்கன் சாறடா நாழிவிட்டே. (க000)

விட்டபின் சரக்கெல்லாம் வற்றினுக்கால் மெழுகுபோல் பத மாகு மெடுத்துக்கொள்ளு, முட்டாமல் மண்டலந்தான் முழுகும் போது முனிந்தகார் பிரமேகம் போகும்போகும், தட்டாமல் பிற வலியு மிசிவுபோகும், தாக்கான குன்மமுடன் தடிப்புபோகும் கூட் டாத சூலையடா கால்வெடிப்பு காணாது தேகம்விட் டகன்றுபோமே.()

### குரைநோய் வண்டுகேடி இதற்குக் கோடிவேலித் தயிலம்.

போகுமடா யின்னமொரு தயிலங்கேளு புகழான கொடிவேலி பலமோபத்து, தாகுவாய் பசளைவேர் பலமோபத்து தயவாக விதுரண் டுஞ் சமனுய்த்தூக்கி, நேருடனே கைபாகம் பிசகிடாமல் நெடிதான சின்மயத்தைப் பணிந்துபோற்றி, பாகுபோல் காய்ச்சிவிடு படிநீர் பத்து பாங்காக விட்டப்பா படியொன்றுக்கே. (௧00௨)

ஆக்கியபின் னெண்ணெயப்பா படிதானிரண்டு அப்பனே தான் கூட்டிக் காய்ச்சும்போது, பாக்கியபின் கமுகம்பூ லவங்கப்பூவும் பாங் கான கசகசா சாதிக்காயும், வாக்கியமா மதனப்பூ ஏலந்தானும் வாகான குங்குமப்பூ ரோசனைதானும், தாக்கியே பொடிபண்ணி தயி லத்திலிட்டுத் தயவாக மெழுகுபோ லாகும்பாரே. (௧00௩)

பாரப்பா தயிலத்தை வாங்கிமைந்தா பரிவாக வொன்றைவிட்டு வொருநாள்கேளு, கூறுகிறேன் மண்டலந்தான் முழுகும்போது குரை நோயும் வண்டுசெடி குடைச்சல்தீரும், தூறுகின்ற குடல்வாதம் பிரட்டு வாதம் துடியான மண்டையிடி பீனிசம்போம், சேரப்பா சொல்லு கிறே னின்னங்கேளு தெளிவான தயிலமொன்று செப்புறேனே. ()

### மண்டையிடி கபாலசூலைக்கு குறுந்தொட்டித் தைலம்.

செப்புகிறே னின்னமொரு தயிலங்கேளு திறமான குறுந் தொட்டி பலமோபத்து, ஒப்புகிறேன் தும்பைவேர் பலமோபத்து வுத்தமனே யிதுரண்டு சமனுய்க்கூட்டி, தப்பாமற் கசக்கியே கல்வ மிட்டு தாக்கான மூலிக்குச் சாபமிட்டு, தப்பாதே நீரடா படிதான் பத்து தயவாகத் தானடுப்பில் சரியாய்வையே. (௧00௫)

வைத்தபின்பு சொல்லுகிறேன் கேளுமைந்தா வளமான பாதி யாய்க் குறுகும்போது, தைத்துவிடு மருந்தையெல்லாம் பிழிந்து விட்டு தப்பாமற் படியொன்றாய்க் குறுக்கிக்கொள்ளு, நைத்துமே கருவாயின் பட்டையெல்லாம் நளினமாம் சோம்புடனே குராசானி யோமம், பத்தியாய்ச் சாதிக்காய் கிராம்புயேலம் பாங்கான வெள்ளுள் ளிப் பலமுங்கூட்டே. (௧00௬)

கூட்டியபின் னிதுவெல்லா மரைத்து மைந்தா குறையாமற் கிண்டியே காய்ச்சிக்கொள்ளு, மூட்டியே மெழுகுபத மாகும்போது முக்கண்ணி வாலையைநீ தியானம்பண்ணு, நாட்டமுடன் யிம்மருந்து பிசகாதையா நளினமாம் சித்தருக்கு கிட்டும்பாரு, ஊட்டியே மண்ட லந்தான் முழுகும்போது உத்தமனே சொல்லுகிறே னுரைக்கக் கேளே. (௧00௭)

உரைக்கிறேன் மண்டையிடி கபாலசூலை உற்றதோர் வாய்நீரும் உள்வறட்சை, சிறப்பான கண்பாய்ச்சல் கால்சரங்கள் செல்வனே யிது வெல்லா மோடிப்போகும், சரப்பாணின் நோய்கள்முதல் கழன்றே போகும் காட்டினார் சித்தர்தா மெமக்குச்சொன்னார், விரைக்கிறே னின்னமொரு தயிலங்கேளு விதமான வேங்கையுட பட்டைபலம் பத்தே. (௧00அ)

## சோகைக்கு வேங்கைத் தயிலம்.

பந்தாகேள் முசுட்டைவேர் பலந்தான்பத்து பரிவான யிதுரண்டும் பாங்காய்த்தூக்கி, முத்தான யேரண்ட யெண்ணெய் படிவாங்கி முறையாக பரணியிலே வைத்துக்கொள்ளு, சித்தான சின்மயத்தைப் பணிந்துபோற்றி தெளிவான அட்சரத்தை யோதவேண்டும், பத்தான பட்டையுட தயிலத்திற் கூட்டிப் பரிவாகக் காய்ச்சிவிடு பதத்திற் கேளே. (௧00௯)

கேளப்பா யதிமதுரந் தேவதாரங் கெடியான சாதிக்கா யரத்தையெல்லாம், தாளப்பா பொடிபண்ணித் தயிலத்திலிட்டுத் தயவாகக் கிண்டியே காய்ச்சும்போது, கேளப்பா கறுத்துமே வெளுப்புமாகும் கெடியான கமலாக்கினி யெரியும்போது, வேளப்பா மெழுகுபோல் பதமுமாகும் விருப்பமாய்த் தானிறக்கி வைத்துக்கொள்ளே. (௧0௧0)

கொண்டபின்பு மண்டலந்தான் முழுகும்போது கூரான காந்தலுடன் சோகைபோகும், விண்டேனன் கண்புகைச்சல் காதுமந்தம் வீக்கமுடன் பாண்டுவகை விதமாய்த்தீரும், திண்டான கால்குடைச்சல் கரணைதீரும் தெளிவான மயக்கமொடு பித்தந்தீரும், உண்டானபடி சொன்னேன் மைந்தாகேளு வுத்தமனே யின்னமுண்டு வுரைக்கிறேனே. (௧0௧௧)

## வேறுவகைத் தயிலம்.

உரைக்கிறே னின்னமொரு தயிலங்கேளு வுத்தமனே பூனையின் வேர் பலமேரவொன்று, உரைக்கிறே ஞெச்சியின்வேர் பலமோவொன்று உதவியுள்ள குறுந்தொட்டி பலமோவொன்று, திரைக்கிறேன் கருநொச்சி பலமோவொன்று திறமான வெண்ணுவல் பலமோவொன்று, நருக்கியே யிவையெல்லா மெடுத்துக்கொண்டு நலமான பானையிலே யிட்டுக்கொள்ளே. (௧0௧௨)

இட்டபின்பு நீருமே படிதான்பத்து யிதமாகத் தான்வார்த்து அடுப்பில்விட்டு, இட்டபின்பு பாதியாய்க் குறுகும்போது மெடுத்த் தனைப்பிழிந்தெறிந்து சட்டியில்நீர், விட்டுமே மெழுகுபத மாகும் போது விடுபட்டு தீயெரிப்பாய் கமலம்போல, விட்டெரித்துப் படி யரையாய்க் குறுகும்போது விருப்பமுட னெண்ணெயடா படிரண்டு வாரே. (கoகரு)

பீனிசம் கபாலசூலேக்குக் கருந்துளசித் தயிலம்.

வார்த்தபின் பேலமுடன் கிராம்புகூட்டு வளமான பத்திரிதான் பலந்தான்கூட்டு, சேர்த்துவிடு சீரகமும் பலந்தான்பாதி திறமாகத் தானரைத்துத் தயிலத்திலிட்டு, ஆர்த்திடுவாய் காடாக்கினி யெரிப்பா யப்பா அப்பனேநானுனக்கு அறைந்தவாறு, மார்த்திவிடு வாறியபின் னெடுத்துக்கொண்டு மைந்தனே தான்முழுக வரிசைகேளே. (கoகசு)

வரிசையாய் வாந்திக்குங் கண்புகைச்சலுக்கு மகத்தான கிறுகிறு ப்பு வாய்நீரோட்டம், பரிசமுள்ள புண்புரைகள் மண்டைக்குத்து பறக்குமடா யிவையெல்லாம் போகும்பாரு, சிதறியே யோடிவிடு மைந்தாகேளு செப்புகிறே னன்னாரிவேர் பலமோபத்து, உறுதியாய்த் தும்பைவேர் பலமோபத்து உவப்பாக யிடித்துபத்து படிநீர்வாரே. ()

வாரப்பா யதன்பிறகு சொல்லக்கேளு மைந்தனே மூன்றி லொன்றாய்க் குறுகும்போது, பாரப்பா மருந்தெல்லாம் பிழிந்து போட்டுப் பரிவாகப்பின்னுமது குறுகும்போது, வாரப்பா பாண்ட மதில் விட்டுக்கொண்டு வாகான மயேஸ்வரியைப் பூசித்தேதான் நேரப்பாயதை யெடுத்து வைத்துக்கொண்டு நிலவாவரைச்சாறடா படிதான்கூட்டே. (கoகரு)

கூட்டியபின் நல்மிளகு வால்மிளகு குறையாமல் கடுக்காயுஞ் சரியாய்த்தூக்கி, நேட்டமாய் வெள்ளுள்ளிச் சீரகந்தான் நிலேயாக யிவையெல்லாம் பொடியாப்பண்ணி, தீட்டுவாய் வஸ்திரகாயஞ்செய்து தெளிவாக சூரணத்தை யெடுத்துக்கொண்டு, மூட்டுவாய் கியாழத்தி விட்டுமைந்தா முறையாகப் படிரண்டு யெண்ணெய்வாரே. (கoகள)

படிரண்டு யெண்ணெய்தனை விட்டுப்பின்பு பாங்கான சட்டுவத்தில் கிளறுமைந்தா, பொடியடா தானெடுத்து அதிலேயிட்டுப் புகழாகக் கிளறிவர மெழுகுபோலாம், துடியான தேவதைக்குப் பூசைமார்க்கம் தெளிவாகச் செப்புகிறேன் தட்சணாயன், வடியப்பா கொண்டதனை யெடுத்துக்கொண்டு மைந்தனே சொல்லுகிறேன் முழுகக்கேளே. ()

முழுகவே வொன்றுவிட்டு வொருநாளப்பா மூக்கிலுள்ள பீனி சங்கள் கபாலசூலை, தொழுதுவிட்டு வோடிவிடுஞ் சொன்னேன் சொன்னேன் சுருதியுள்ள வாதமடா குடைச்சல் போகும், அழுகிய தோர் சூலைமுதல் நமைச்சல்போகும் அப்பனே பிரவலியுஞ் சன்னி போகும், பழுதறவே சொல்லிவிட்டேன் மைந்தாகேளு, பாங்கான தயிலத்தில் பரிட்சைகேளே. (௧0௪௯)

ஊஷ்ணத்துக்கும் சகல சுரத்துக்கும் சதாவேலித் தயிலம்.

கேளப்பா யின்னமொரு தயிலங்கேளு கெடியான சதாவேலிப் பலமோவொன்று, தாளப்பா கொடிவேலி சிற்றுமுட்டித் தருவான பேராமுட்டிப் பலமோவொன்று, ஆளப்பா பெருதும்பை பலமோ வொன்று அப்பனே கோஷ்டமாம் பலமோ வொன்று, நாளப்பா நெல்லிப்பருப்பு பலமோவொன்று நலமாக யிவையெல்லாஞ் சரியாய்த் தூக்கே. (௧0௨0)

தூக்கியபின் வுரலிலே யிடித்துத்தூளாய்ச் சுருதியாய்ப் படி பத்து நீருவ்வார்த்து, தாக்கிவிடு பாதியாய்க் குறுகும்போது தப் பாதே வடிகொண்டு கசட்டைத்தள்ளு, யோக்கியமா மிம்மருந்து பொய்யாதையா யொப்பமுடன் சித்தர்கள்தா முரைத்தவாறு, பாக்கிய மாய்ப் பசுவின்பால் படிதான்விட்டுப் பாங்காகக் காய்ச்சியதைப் படி ரண்டாக்கே. (௧0௨௧)

படிரண்டில் ரண்டுபடி யெண்ணெய்விட்டுப் பரிவாகக் காய்ச்சு கையில் மருந்துசேளு, பொடியடா சாதிக்காய் கிராம்புயேலம் புசழான அதிமதுரந் தேவதாரம், துடியான லவங்கத்தின் பட்டைதானும் துவர்ப்பான கடுக்காயின்பூவுங்கூட்டி, இடியடா சீரகமுங் கலந்துகூட்டி யிதமாகத் தயிலத்திலிட்டுகொள்ளே. (௧0௨௨)

இட்டபின்பு காய்ச்சிவிடு மெழுகுபோலா மிதமாகத் தானெ டுத்து வைத்துக்கொண்டு, முட்டாமல் மூன்றிலொன்று முழுகும் போது முறையான பத்தியங்கள் தப்பலாகா, குட்டமாம் பதினெட்டு ரோகம்போகும் குடிலமாம் சன்னிமுதல் தீர்ந்துபோகும், திட்டமாய் தின்றக்கால் வியாதிகேளு திரண்டுவரு மூஷ்ணமெல்லாந் தீரும் பாரே. (௧0௨௩)

தீருமப்பா காந்தலுடன் மேகந்தீரும் திறமான சாலேசாமு மற்றுப்போகும், கூறுகிறேன் மைந்தனே சொல்லக்கேளு குடல் வாய்வு வுடல்நோவு குளிருங்காய்ச்சல், சீறுகின்ற முறைக்காய்ச்சல் தீருந்தீரும் தீராதவிசிவுமுதல் நீங்கும்பாரு, மாறிவிடு மிவ்வயெல்லா மைந்தாகேளு மகத்தான தயிலமொன்று மாட்டுறேனே. (௧0௨௪)

## கோடிநோய் வண்டுகடிக்கு

## சங்கங்குப்பித் தயிலம்.

மாட்டுறே னின்னமொரு தயிலங்கேளு மகத்தான குப்பியின்வேர்
பலமோபத்து, கூட்டுவாய் காரையின்வேர் பலமோபத்து, குறை
யாதே பனங்கிழங்கு பலமோபத்து, தீட்டுவாய் மூங்கிலின்வேர்
பலமோபத்து தெளிவாகக் காக்கட்டான் பலமோபத்து, மூட்டுவாய்
பானையிலே நீரைவார்த்து முறையாக யெரித்துவிடு முனிந்துபாரே. ()

பாரப்பா மூன்றிலொன்று குறுகும்போது பரிவாக வால்மிளகு
கடுக்காய்கூட்டு, சேரப்பா வெள்ளுள்ளி யறுகன்வேருந் திறமாகத்
தான்கூட்டு யெண்ணெய்படிரண்டு, நேரப்பா யெனைப்போலச் சொல்லா
ரப்பா நெடிதான யின்னூல்தான் பொய்யாதையா, கூரப்பா காய்ச்சிவிடு
மெழுகுபோலே குறையாமல் வடிகொண்டு யெடுத்துக்கொள்ளே. ()

கொள்ளவே மண்டலந்தான் முழுகும்போது கொடிநோவு
வண்டுகடி குடைச்சல்வாதம், துள்ளுகின்ற நரம்புவலி சோகைவீக்
கந் துலையாத மேகமெல்லாந் துலைந்துபோகும், கொள்ளாத பீனிசங்
கள் குரைநோய்தீரும் கொடிதான நீர்ப்பாய்ச்சல் கரணைதீரும், எள்ளள
வுந் தப்பில்லை மைந்தாகேளு யிதமாகச் சொல்லிவிட்டே னெண்ணிப்
பாரே. (௧0௨௭)

## மண்டையிடி பீனிசத்துக்கு

## இஞ்சித்தயிலம்.

எண்ணவே யின்னமொரு தயிலங்கேளு யிஞ்சியுட சாரப்பா
படிதானொன்று, நண்ணவே பொன்னாங்கண்ணிச் சார்படிதானொன்று
நலமான துளசிச்சார் படிதானொன்று, திண்ணமாம் தூதுவளை பொன்
னாங்கண்ணி திடமான கட்டுமா மூலிதானும், பண்ணவேயிளநீரும் படி
தானொன்று பாங்காக விவையெல்லா மொன்றாய்க்கூட்டே. (௧0௨௮)

கூட்டப்பா அதிமதுரந் தேவதாரங் குறையாமல் வால்மிளகு
கடுக்காய்தானும், ஊட்டப்பா யரைத்து நன்றாய்த் தயிலம்விட்டு வுத்
தமனே நல்லெண்ணெய்படிதான்வாரு, தீட்டப்பா பசுவின்பால் படிதா
னொன்று தெளிவான இளநீரு பலந்தானொன்று, மூட்டப்பா வடுப்
பில்வைத்து விறகுகேளு முறையாக மூன்றடா யெரித்துக்கொள்ளே. ()

எரித்துவிடு மெழுகுபத மாகும்போது யிதமான சீரகந்தான் புன்னைக்கா யளவுபோடு, முருக்கியது வருகையிலே யிறக்கிக்கொண்டு முறையாக வாறியபின் வடிதான்கொள்ளு, திருக்கமா யிம்மருந்து பொய்யாதையா தெளிவான மருந்தினிடவேகமப்பா, விரித்துவிட் டேன் மூன்றிலொன்று மண்டலந்தான் முழுகவே வியாதியுட விபரங் கேளே. (க0ௌ0)

கேளப்பா மண்டையிடி பீனிசங்கள் கெடியான காந்தலுடன் சோகைவீக்கம், தாளப்பா வாந்தியுடன் வாய்நீரோட்டம் தப்பாமற் சொரிசிரங்கு குட்டஞ்சூலே, தேளப்பா விஷக்கடியும் எல்லாம்போகும் தீராத வியாதியெல்லாந் திரும்தீரும், மாளப்பா யிவையெல்லாம் விலகிப்போகு மைந்தனே சொல்லுகிறேன் வரிசையாமே. (க0ௌக)

## கல்லடைப்பு சதையடைப்புக்குத் தூதுவளைத் தயிலம்.

வரிசையா யின்னமொரு தயிலங்கேளு வகையான தூதுவளை பலமோபத்து, பெரியதோர் துளசியின்வேர் பலமோபத்து பேரான முக்கொழிஞ்சி பலமோபத்து, சிறியானின்னங்கையுட மூலிதானும் தெளிவான கலியாணமூலிதானும், கரியான சாறடா பலமோபத்து காடிநீர்படியப்பா பத்துங்கூட்டே. (க0ௌ௨)

கூட்டியபின் குளிநீரு பலமோபத்து குறையாம லிவையெல்லா மொன்றாய்க்கூட்டி, மாட்டிவிடு பானையின்மேல் வைத்துமைந்தா வளமாகயெரித்துவிட்டு யிறக்கிவைத்து, பூட்டகமாம் தேவிக்குப் பூசை மார்க்கம் புகழான நந்திபதம் தாள்வணங்கி, ஊட்டியதோர் மருந்தை யெல்லாம் பிழிந்துதள்ளி வுத்தமனே படிமூன்றாய்க் குறுக்கிவாங்கே. ()

வாங்கியபின் கோஷ்டமுடன் தேவதாரம் வளமான அதிமதுரம் அரத்தையோடு, பாங்கான சீரகமுஞ் சாதிக்காயும் பரிவாக யிவையெல் லாஞ் சரியாய்த்தூக்கி, திங்கில்லா நன்னாரிசுக்குதானும் தீர்க்கமா முசுக் கையுட மூலிதானும், மூங்கிலின் யரிசியப்பா விராகனஞ்சு முறையாக விவையெல்லாம் பொடிதான்பண்ணே. (க0ௌச)

பண்ணியபின் காரெள்ளுத் தயிலம் படிரண்டு பரிவாகத் தான் கூட்டிக் காய்ச்சக்கேளும், உன்னியதோர் தீக்காந்தல் மெத்தவாகா வொருவிறகாய்த் தானெரித்துக் குறுகும்போது, சன்னியமாம் மருந்தி னிட வேகம்பாரு சாற்றினே மானிடர்கள் பிழைக்க வென்று, வன்னி யென்ற சலமெல்லாம் வற்றிமைந்தா வகையாக மெழுகாகு மிறக்கிக் கொள்ளே. (௧0௩௫)

இறக்கியபின் மண்டலந்தான் முழுகும்போது இதமான மேகத் தாலெடுத்த நோய்கள், திறக்கமுள்ள கல்லடைப்பு சதையடைப்பு திறமான செவியடைப்பு வாய்நீரோட்டம், முறக்கமுள்ள விஷநீரின் கோர்வைதீரும் முக்கியமாம் சன்னிமுதல் பிளவைநீங்கும், மறக்க மென்ற புத்தி பேதனத்துக்கெல்லா மகாசுறுக்கு யித்தயில மைந்தா கேளே. (௧0௩௬)

மேல்தடிப்பு வண்டுகேடி சிலவிஷம் இதற்கு

வெட்டிவேர்த் தயிலம்.

கேளப்பா யின்னமொரு தயிலங்கேளு கெடியான வெட்டிவேர் பலந்தானொன்று, தாளப்பா சிவன்வேம்பு பலமோவொன்று தனி யான சிறுதும்பை பலமோவொன்று, நாளப்பா செவ்வள்ளிக் கொடி யோவொன்று நலமான வெண்ணாவல் பலமோவொன்று, வாளப்பா கொத்தமல்லி பலமோவொன்று வளமாக யிவையெல்லாந் தூள தாக்கே. (௧0௩௭)

ஆக்கியபின் படிநீரு காடிவிட்டு அப்பனே யிவையெல்லா மொன் றுய்ச்சேர்த்து, பாக்கியமாய்ப் படிபத்து நீரைவார்த்துப் பாங்காகத் தான்குறுக்கி வைத்துக்கொண்டு, தேக்கமாம் பாண்டமதில் வைத்துக் கொண்டு தெளிமையா மயேஸ்வரிக்குப் பூசைமார்க்கம், முக்கியமாய்ச் சீலைப்பா வடியுங்கொண்டு முறையாகரண்டுபடி குறுக்கிக்கொள்ளே.()

குறுக்கியபின் வால்மிளகு கடுக்காய்மைந்தா குறையாமல் நல் மிளகு சீரகமுங்கூட்டு, மருக்கமுள்ள மாசக்காய் சாதிக்காயும் வள மாக யிவையெல்லாம் பொடிதான்செய்து, சுருக்கமாங் கைபாகம் பிசகிடாமல் சுருதிபெற சின்மயத்தைப் பணிந்துபோற்றி, முருக்கி னுட சாற்றாலே யரைத்துமைந்தா முறையாகத் தயிலமிட்டு ருக்கிக் கொள்ளே. (௧0௩௯)

கொண்டபின்பு ரண்டுபடி நெய்யைவிட்டுக் குறுக்கியே காய்ச்சி விடு மெழுகுபோலாம், விண்டேனுன் மண்டலந்தான் முழுகும்போது மேல்தடிப்பு வண்டுகடி சிலவிஷங்கள், திண்டான பிரலாபசன்னி போகும் தீராத வியாதியெல்லாந் தீரும்பாரு, முண்டான வாய்வுடனே சூலையெல்லா மோடிவிடுஞ் சொல்லுகிறே னுறுதிதானே. (௧0௪0)

உறுதியா மின்னமொரு வியாதிசேளு முத்தமனே மங்கையப்பா பட்சமானல், சுறுதியாய்க் கெர்ப்பமில்லா திருக்குங் கண்டாய் சுகமாக வுள்ளுக்குக் கரண்டிகொள்ள, நிருதமுள்ள கெற்பவலி கெற்பரோகம் நேரான சதையடைப்புக் கல்லடைப்பு, வருஷமப்பா திகையுமுன்னே பாலன்றன்னை வகையாகத் தான்பெறுவாள் மண்டலந்தானே. (௧0௪௧)

## கும்மட்டிக்காய்த் தயிலம்.

கொள்ளவே யின்னமொரு தயிலங்சேளு கும்மட்டிச்சாறடா படி தானென்று, விள்ளுகிறேன் வெற்றிலைச்சார் படிதானென்று மேலான பருத்திச்சார் படிதானென்று, துள்ளியதோர் தழுதாழை மூலிதா னும் துகையான வல்லாரை மூலிதானும், கள்ளியினற்சார் படிதானெ ன்றுகூட்டிக் கருங்காலி யிலைச்சாறு படிதானென்றே. (௧0௪௨)

ஒன்றாக விவையெல்லாங் கூட்டிமைந்தா வுத்தமனே தயிலமது படியொன்றாக, நன்றாகவே காய்ச்சிப் பாதியானல் நல்மிளகு சீரகமும் வெள்ளுள்ளியோடு, குன்றானகஸ்தூரி தேவதாரம் கொடிதான அமுக்குரா கொவ்வைமூலம், பன்றானயேலத்தி னரிசிதன்னில் பாங்காக மேல்த்தோடு பலமும்போடே. (௧0௪௩)

போட்டபின்பு சாதிக்காய் கடுக்காய் நெல்லி புகழாகப் பொடி பண்ணி போட்டுக்கொள்ளு, போட்டபின் பெரித்து நன்றாய் மெழுகு மாகும் புண்ணியனே வொன்றுவிட்டு வொருநாள்கொள்ளு, நீட்டமா மயேஸ்வரிக்குப் பூசைமார்க்கம் நிலமான தேவதைக்கு புஷ்பஞ்சாற்று, கூட்டியே மண்டலந்தான் மூழ்கும்போது குடல்வாதம் கண்புகைச்சல் குறியாய்ப்போமே. (௧0௪௪)

போமப்பா நீரிழிவு ரத்தமேகம் புகழானசலமேகம் புண்புரை கள், ஆமப்பா யிப்படியே முழுகும்போது அண்டாது தேகத்து வியா தியெல்லாம், சாமப்பா வியாதியெல்லாந் தீருந் தீருந் தப்பாது தட்சணு மூர்த்திவாக்கு, தாமப்பா தாகமுள்ள சுரத்துக்கியத் தப்பாது விட்டு விடுஞ் சாற்றுறேனே. (௧0௪௫)

## குன்றிவேர்த் தயிலம்.

சாற்றுகிறே னின்னமொரு தயிலங்சேளு தருவான குன்றிவேர் பலந்தானென்று, மூற்றதோ ரவுரிவேர் பலந்தானென்று முறையாக யிவைரண்டுஞ் சமனுய்த்தாக்கி, நேர்த்தியாய்ப் பாண்டமதில் விட்டுமே தான் நெகிழான முப்பூவுங் கூட்டிக்கொண்டு, பாத்திரத்தி விட்டப்பா படிதான் பத்து பாங்காக நீரைவிட்டு அடுப்பில்வையே. (௧0௪௬)

வைத்தபின்பு மூன்றிலொன்று குறுகும்போது மைந்தனே மருந்தையெல்லாம் பிழிந்துதள்ளி, பொற்றலையான் சாறப்பா படிதானொன்று புகழாகவிட்டுவொன்றாய்க் காச்சும்போது, நாற்றமில்லாபச்சிலைக்கிழங்குதானும் நலமானவிலாமிச்சு கோரைதானும், பத்தியாய்ச் சாதிக்காய் கிராம்புயேலம் பாங்காகத்தான்கூட்டி பரிந்துகேளே. (கO௪எ)

கேளப்பா அதிமதுரந் தேவதாரங்கெடியான சீரகமு மொருபங்காய்க்கூட்டி, தாளப்பா பொடிபண்ணி வைத்துக்கொண்டு தனியான பசுவினெய் படிதான் மூன்று, ஆளப்பா இளநீறு படிதான் கூட்டு அப்பனே கைபாகம் பிசகிடாமல், நாளப்பா-காய்ச்சி நன்றாய் மெழுகதானல் நலமாக மூன்றிலொன்று மண்டலந்தான் மூழ்கே. (கO௪அ)

மூழுகினல் வியாதியுட போக்கைக்கேளு முடக்கமுள்ள வாதமுடன் வாய்நீரோட்டம், பழுதறவே யோடிவிடுஞ் சொன்னேன் மைந்தா பாங்கான குளிர்காய்ச்சல் பறந்துபோகும், விழுதறவே நோய்களெல்லா மகலும்பாரு விணான சயரோகம்நீங்கும்பாரு அழுகின்ற காதிலுள்ள அக்குணிகள் அப்பனே யிவையெல்லா மகன்றுபோமே. (கO௪கூ)

## வேம்பின்பட்டைத் தயிலம்.

அகன்றுமே யின்னமொரு தயிலங்கேளு அப்பனே வேம்பினுட பட்டைபலம்பத்து, இகன்றதோர் குறிஞ்சான்வேர் பலமுமஞ்சுயிதமான புளியினுடபட்டை பலமூன்று, துகன்றதொரு வேலியின் பருத்திதானும் துடியான விலாமிச்சு நன்னாரிதானும், மகன்றிடவே யிதுவெல்லாந் தூக்கிமைந்தா மகிழ்வாக மிடாவிலிட்டுக் குடமிரண்டுவாரே. (௪O௫O)

வாரப்பாவதன்பிறகு அடுப்பில்வைத்து மைந்தனே தீமூட்டி யெரித்துக்கொள்ளு, கூரப்பா மூன்றிலொன்று முழுகும்போது கூறுகெட்ட பொரிகரப்பான் கூட்டோடேபோம், நீரப்பா வியாதியெல்லாம் நெருங்கியோடும் நேரான கண்புகைச்சல் காந்தல்தீரும், பாரப்பா கண்ணெரிவு காதுமந்தம் பலமான வயிற்றெரிவு வாங்கிப்போமே. ()

## வாதத்துக்கு கோடிவேலித் தயிலம்.

வாங்கிவிடு மின்னமொரு தயிலங்கேளு மகத்தான வேலியுடசாறு படிபொன்று, பாங்கான நொச்சிச்சார் படிதானென்று பரிவான புளியிலைச்சார் படிதானென்று, தீங்கில்லா கையான்சார் படிதானென்று தெளிவான மாதளஞ்சார் படிதானென்று, தாங்காத மேனிச்சார் படிதானென்று தப்பாம லிவையெல்லாம் பிழிந்துக்கொள்ளே. (௪O௫உ)

கொள்ளவே யெருக்கிலைச்சார் படிதானென்று குறியான வழுக்குருச்சார் படிதானென்று, துள்ளவே யிவையெல்லா மொன்றாய்க்கூட்டிச் சுருதியாய்ப் படியொன்று யெண்ணைவிட்டு, அள்ளவே பாண்டத்திலூற்றியேதான் அன்பாக சின்மயத்தைப் பணிந்துபோற்றி, விள்ளுறேன் பாதியாய் வற்றும்போது மேலானபொடியுண்டு சொல்லக்கேளே. (௧0௫௩)

கேளப்பா கோஷ்டமுடன் தேவதாரங் கெடியான அதிமதுரம் மிளகுகூட்டு, தாளப்பா வகைவகைக்குப் பலந்தான்கூட்டு தப்பாமற் பொடிபண்ணி வஸ்திரகாயங்கொண்டு, மீளப்பா சூரணத்தை பாண்டமிட்டு மிகுதியாய் எண்ணெய்தனை யெடுத்துமேதான், மூளப்பா தயிலத்திலிட்டுமைந்தா முறையோடே தான்காய்ச்ச மெழுகுமாமே. ()

மெழுகுபதமானபின்பு யெடுத்துக்கொண்டு மேன்மையாய் மூன்றிலொன்று முழுகும்போது, பழுதறவே வாதமுடன் சன்னிசோகை பாண்டுவகை யிவையெல்லாம் பறந்துபோகும், நழுதமுள்ள கயரோகம் காசரோகம் நலமான விப்புருதிகண்டமாலை, அழுகுமடா வியாதி யிந்த தயிலங்கண்டால் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரே. ()

## பீனசம் கபாலசூலைக்கு சிறுதேக்குத் தயிலம்.

பாரப்பா யின்னமொரு தயிலங்கேளு பாங்கான சிறுதேக்கு பலமோவொன்று, நேரப்பா நிலப்பனைதான் பலமோவொன்று நேரான அமுக்கரா பலமோவொன்று, நாரப்பா பிரமதண்டிப் பலமோவொன்று நலமான காந்தையப்பா பலமோவொன்று, கூரப்பா சின்னியது பலமோ வொன்று கொடிவேலி வேரடா பலந்தானென்றே. (௧0௫௬)

ஒன்றாக விவையெல்லா மிடித்துத்தூளா யுத்தமனே மிடாவிலிட்டுப்பதக்குநீராய், நன்றாகக்காய்ச்சியது பாதியானால் நலமாக அரித்ததனை யெடுத்துக்கொண்டு, குன்றாமல் ரோகிணியும் பாதிகூட்டு குறையாமல் குங்குமப்பூ விராகன்கூட்டு, மண்டூக மானதைத்தான் விராகனஞ்சு வளமாகத் தான்பொடித்து அதிலேபோடே. (௧0௫௭)

போட்டபின்பு நெல்லிவற்றல் தான்றிவற்றல் புசமாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, கூட்டுவாய் வால்மிளகு நல்மிளகு குருவான சாதிக்கா யேலங்கூட்டு, நாட்டமாய் குராசானி யோமம்கூட்டு நவிலவே கருஞ்சீரம்தானும் கூட்டு, மாட்டுவாய் வெள்ளுள்ளி புனுகு கூட்டுமைந்தனே கோவினெய் படிரண்டாக்கே. (௧0௫௮)

ஆக்கிவிடு மெழுகுபத மாச்சுதானால் அப்பனே யெள்ளெண்ணெய் கரண்டிகுத்து, தாக்கியே யெடுத்துவிட்டு ஆறியபின்னப்பா தப்பாமற் சாம்பிராணி பொடித்துப்போடு, நோக்கறவே சின்மயத்தைப் பணிந்துபோற்றி நுணுக்கமா மயேஸ்வரியைத்தாள்பணிந்து, பாக்கியமாய் வடிகொண்டு வைத்துக்கொண்டு பரிவாக வொன்றுவிட்டு வொருநாள் கொள்ளே. (௧0௫௯)

கொள்ளப்பா மண்டலந்தான் முழுகும்போது கொடிதான பீனிசங்கள் கபாலசூலை, தள்ளப்பாவாதமுடன் வாய்நீரோட்டந் தப்பாது சொல்லிவிட்டேன் சார்ந்துபாரு, பள்ளப்பா வியாதியெல்லாம் பறக்கும்பாரு பட்சமுடன் மானிடர்க்கு வுரைத்தவாறு, நள்ளப்பா திங்களிலே பாண்டுபோகும் நாட்டுகிறேன் மைந்தனே நடனந்தானே. (௧0௬0)

நரிமிரட்டித் தயிலம்.

நடனமா மின்னமொரு தயிலங்கேளு நரிமிரட்டி சமூலமடா பிடுங்கிமைந்தா, படமான தாளியப்பா வேர்பலந்தான்பத்து பாங்கான சம்பீர்க்குச் சாறுபடிரண்டு, திடமான காக்கணத்தின் வேருங்கூட்டி தெளிவான காஞ்சோரி வேருதானும், விடமாக நெருஞ்சியின் வேர் பலமோபத்து விதமாகத் தான்றாக்கிப் பானையிற்போடே. (௧0௬௧)

போட்டபின்பு தூணியப்பா பதக்குநீர்விட்டுப் புகலுகிறே னடுப்பில்வைத்து யிறக்கிமைந்தா, மாட்டப்பா கோமயந்தான் படிதான்விட்டு மைந்தனே மூன்றிலொன்றாய்க் குறுக்கிக்கொள்ளு, தேடப்பா பாண்டமதில் விட்டுக்காய்ச்சி திறமையாங் கணபதிக்குப் பூசைசெய்து, நோடப்பா யிறக்கியதைப் பிழிந்துதள்ளி நுட்பமாய்ச் சொல்லுகிறே னுணுக்கந்தானே. (௧0௬௨)

நுணுக்கமாய்ச் சாதிக்கா யேலமப்பா நுட்பமாய் மிளகுடனே கடுக்காய்கூட்டு, வனத்தியென்னு மாவாரைச் சார்விட்டாட்டு மைந்தனே கியாழத்திலிட்டுக்கொள்ளு, கனத்திடவே பஞ்சமூலக் கியாழந்தனில் சடினமாம் சரியிடையாய் சேர்த்துக்கொண்டு, தனித்ததோர்பசுவினெய் படியிரண்டப்பா சரியாகத் தயிலத்தி விட்டுக்கிண்டே. ()

விட்டுநீ காச்சியே வருகும்போது விதமாக மெழுகுபத மாகும்பாரு, ஒட்டுபடாகையிலே பதத்தைப்பார்த்து வுத்தமனே யிறக்கியதைவைத்துக்கொள்ளு, திட்டமுடன் கைபாகம் பிசகிடாமல் திறமாக மானிடர்கள் செய்வாரானால், பட்டழிந்து பொறுக்காத வியாதிக்கப்பா பரிவாக மூன்றிலொன்று முழுகக்கேளே. (௧0௬௪)

கேளப்பா வாதத்தி லெழுந்தவீக்கங் கெடியான பித்தத்தா லெழுந்தமேகம், தேளப்பா ஐயத்தில் வந்தசன்னி திறமாக வோடிவிடுந் திறத்தைப்பாரு, நாளப்பா வியாதிகள்தான் போகும்பாரு நவிலவே நோயகலும் காண்பீர்மக்காள், வாளப்பா வியாதிக்கு யிதுபோலாரு மைந்தனே யொருவர்சொல்லார் வகையைப்பாரே. (௧0சுடு)

## கருமத்தன் பட்டைத் தயிலம்.

பாரப்பா யின்னமொரு தயிலங்கேளு பாங்கான கருமத்தன் பட்டைபலம்பத்து, சேரப்பா நெல்லியுட பட்டைபலம்பத்து திறமாக யிதுரண்டுஞ் சரியாய்த்தூக்கி, கூரப்பா குருபதந்தான் வணங்கிப்போற்றி கொடிதான தேவபதம் போற்றியேதான், வாரப்பா யிடித்து நன்ருய் வைத்துக்கொண்டு வகையாகப் படித்துமே நீரைவாரே. (௧0சுசு)

வாரப்பா வதன்பிறகு மூன்றிலொன்ருய் மைந்தனே குறுக்கிய பின் னெடுத்துக்கொண்டு, வேரப்பாகைபாகம் பிசகிடாமல் விபரமாய் மறுபடியு மடுப்பிலேற்றி, கூரப்பா இளநீரு படிதானொன்று குறிப்பான நெல்லிச்சார் படிதானொன்று, சேரப்பா நல்லெண்ணெய் படிதான் மூன்று சேர்த்துவிடு அதன்பிறகு செப்புறேனே. (௧0சுஎ)

செப்புகிறே னதன்பிறகு மைந்தாகேளு திறமான வால்மிளகு சீரகமுங்கூட்டு, ஒப்புகிறேன் கசகசா சாதிக்காயும் உத்தமனே வெண்ணெயுட னரைத்துக்கொண்டு, செப்பிடவே பாண்டமதில் எடுத்துப்போடு சிறப்பாக சின்மயத்தைப் பணிந்துபோற்றி, அப்படியே தயிலத்தி லரைமருந்தை அன்பாக விளாங்காயி னளவுபோடே. (௧0சுஅ)

போட்டபின்பு நன்ருகக் கிளறும்போது புசழாக மெழுகுபோல் பதமுமாகும், தேட்டமுடன் தயிலத்தை யிறக்கிக்கொண்டு திறமாக வொன்று விட்டு வோர்நாள் சேளு, நோட்டமுடன் மண்டலந்தான் முழுகவேண்டும் நுணுக்கமாம் பத்தியந்தான் காக்கவேண்டும், நேட்டமாய் முழுகிவர மைந்தாசொன்னேன் நேர்மையாய் வியாதியுட விபரங்கேளே. (௧0சுகூ)

விபரமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு வெடிப்புடனே தடிப்புவகை வீக்கம்பாண்டு, தவருதே மண்டையிடி பீனிசங்கள் தப்பாது சொல்லுகிறே னோடிப்போகும், நவராத வியாதியெல்லாம் போகும் போகும் நாட்டிலுள்ள மானிடர்கள் பிழைக்கவென்று, நிகரில்லாத் தந்தத்தி னசைவுபோகும் நிசஞ்சொன்னேன் மைந்தனே நினைவாய்ப்பாரே. (௧0எ0)

## சிறுதும்பைத் தயிலம்.

பாரப்பா யின்னமொரு தயிலஞ்சேளு பரிவான சிறுதும்பை விலாமிச்சோடு, சாரப்பா சரிதூக்கித் தூளதாக்கித் தயவாகத் தூணி நீரளந்து விட்டு, நேரப்பா பாண்டமதில் விட்டுமேதான் நெடிதான சிவபதம் வணங்கியேதான், கூரப்பா தீமூட்டிக் காய்ச்சிக்கொண்டு குறையாமல் மூன்றிலொன்ருய்க் குறுக்கிக்கொள்ளே. (௪0௭௧)

குறுக்கியபின் வடிகொண்டு பிழிந்துதள்ளி குறையாமற் படி ரண்டுயெண்ணெய்வாரு, மருக்கமுள்ள மருக்கொழுந்து விராகனஞ்சு வளமானசாதிக்காய் விராகனஞ்சு, நெருக்கமுள்ள குராசானி யோமமப்பா நேர்மையாம் சாபத்திரி லவங்கப்பூவாம், திருக்கமுள்ள நல் மிளகு பலமுமொன்று திறமான சீரகமும் பலந்தானென்றே. (௪0௭௨)

ஒன்ருகவிவையெல்லாந் தூக்கி மைந்தா வுத்தமனே தூளாக்கி வடிதான்கொண்டு, நன்ருக வஸ்திரகாயமும்பண்ணி நலமான தயிலத்தி விட்டுமைந்தா, அண்டிடா வியாதியெல்லாமகலும்பாரு அப்பனே நாமுனக்கு அறைந்தவாறே, கிண்டிவிடுகுறுகியது மெழுகுபோலாங் கிருபையா மாயிபதம் நோக்கிக்கொள்ளே. (௪0௭௩)

கொள்ளப்பா மூன்றிலொன்று முழுகும்போது குரைநோயும் வண்டுகடி குன்மவாய்வு, துள்ளுகின்ற குளிர்சுரமுங் காந்தலெல்லாஞ் சொல்லுகிறேன் தூரவிட் டகன்றுபோகும், அள்ளவே நோயகலும் போகுங் கண்டாய் அப்பனே தட்சணமூர்த்திநாயன், மெள்ளவே மண் டலந்தான் முழுகவேணும் விதமாக யிந்நோய்கள் விலகிப்போமே. ()

## கரைத் தயிலம்.

விலகிப்போ மின்னமொரு தயிலஞ்சேளு விதமான கரையின் வேர் சூரியோடு, உலகிலே திரிகின்ற தேளுங்கூட்டு வுத்தமனே பிள் ளையென்ற பூச்சியாகும், நலகாதநோயகலும் கண்டீர்பாராய் நாடாது வியாதியெல்லாம் போகும்பாராய், மலையாதே யென்னுடைய நூலை நோக்கி மைந்தனே விராகனது ரண்டுகூட்டே. (௪0௭௫)

கூட்டிவிடு வேரி ண்டு பலமோ பத்து கொள்கையாந்தேளதுவே விராகனகும், மூட்டியே முறைப்படியே செய்வாராகில் முறையாக மூன்றிலொன்ருய்க் குறுகிற்ருனல், சாட்டுவாய் கைபாகம் பிசகிடாமல் கணிதமாம் தட்சணமூர்த்திவாக்கு, மாட்டுவாய் பிழிந்ததனை யெடுத் துக்கொண்டு மைந்தனே பின்னுமதைப் படிரண்டாக்கே. (௪0௭௬)

ஆக்கியபின் னெண்ணெயடா படிதான்ரண்டு அப்பனே யிவை யெல்லா மொன்ருய்க்கூட்டு, தாக்கிடவே பாண்டமதி விட்டுமேதான் தயவாக மண்டலந்தான் முழுகிவாநீ, மூக்கமில்லா ரவர்பெருமை சொல் லப்போமோ முதன்மையாந் தட்சணுமூர்த்திவாக்கு, பாக்களவு வெண் ணெயிடு வதன்பிறகு பாங்கான பத்திரிதான் விராக னஞ்சே. (௪0எஎ)

அஞ்சாகுஞ் சாதிக்காய் விராகனஞ்சு அப்பனே கோஷ்டமடா விராகனஞ்சு, நஞ்சானபரப்படா வெள்ளையஞ்சி நலமான சீரகமோ விரா கனஞ்சு, தஞ்சமென்ற தக்கோலம் விராகனஞ்சு சார்வான வர்ல்மிளகு விராகனஞ்சு, பிஞ்சான அத்தியடா விராகனஞ்சு பிலத்தவா யிவை யெல்லா மரைத்துக்கேளே. (௪0எஅ)

அரைக்கவடா சாறுதான் புளியிலையுமாகும் அப்பனே நன்ருக வரைத்துக்கொள்ளு, உரைக்கிறேன் தயிலத்தி விட்டுக்காய்ச்சி யுத்த மனே மெழுகுபதமாகும்போது, திரைக்கவே சடாட்சரபதம் பணிந்து தெளிமையாம் தேவதமானபூசை, முரைக்கிறேன் மூன்றிலொன்று முழுகும்போது முறையான தயிலத்தின் முளக்கம்பாரே, (௪0எகூ)

முளக்கமடா மேகமொடு சோகைவீக்க முறையான கண்பூவுப் பீனிசங்கள், இளக்கமுள்ள வறிவுபுத்தி யிதுகளெல்லாம் இதமாகப் பறந்துவிடு மிதமாய்ச்சொன்னேன், துளக்கமுள்ள கயரோகம் காசரோ கம் துடியான கால்வீக்கம் பாண்டுபோகும், பளக்கமுள்ள குஷ்டமடா வெடிப்பு வீக்கம் பறந்துவிடும் வருஷமிது முழுகும்போதே. (௪0அ0)

## பதினெட்டு வாதமுடக்குக்கு கருவேம்புத் தயிலம்.

வருஷமடா நூறுசென்ற கருவேம்புமப்பா வகையாகப் பலம்பத்து பட்டைவாங்கி, இரமான கும்மட்டி பலமோபத்து யெண்ணிவிடு சற் ருழை பலமோ அஞ்சு, காமான கவுதும்பை வேருங்கூட்டிக் கனியான இம்பூரா வேருங்கூட்டி, உரமான சிறுதும்பைவேர் பலமோவஞ்சு வுத் தமனே யிதுவகைக்கு யெல்லாங் கூட்டே. (௪0அக)

கூட்டியே யிடித்ததனைப் பொடியாய்ப்பண்ணி குமுறவேபடி நீரு பத்துமிட்டு, மாட்டியே யடுப்பில்வைத்துக் குறுகும்போது மைந் தனே சரிசமனுய் வற்றிற்ருனல், பூட்டகமாம் கைபாகம் பிசகிடாமல் புனிதமாம் குருவாக்குப் பொய்யாதையா, மூட்டுவாய் மருந்தையடா வடிதான்கொண்டு முறையான கசட்டையெல்லாம் பிழிந்துதள்ளே. ()

தள்ளியபின் னதையடுப்பில் வைத்துமேதான் தயவாகப் படி யொன்றாய்க் குறுக்கிக்கொள்ளு, உள்ளியடா வெள்ளையது பலந்தான் போடு வுத்தமனே சீரகமும் பலந்தான்கூட்டு, புள்ளியே மயிற்பீலி தானுங்கூட்டுபுனிதமாம் கருவாவின் பட்டைதானும், கள்ளியுட சாறப்பா படிதான்கூட்டு கருவாக வேப்பெண்ணெய் படிதான் கூட்டே. ()

கூட்டிவிடு சிற்றரத்தை வசம்பினோடு குறையாமற் காயமது விராகனஞ்சு, மூட்டுவா யிவையெல்லா மரைத்துப்போட்டு மெழுகுபத மாகையிலே யிறக்கிக்கொள்ளு, நோட்டமாம் வியாதியெல்லாம் தீரும் தீரும் நுணுக்கமா மிந்தமொழி பொய்யாதையா, வாட்டமில்லா சன்னிக்குத் தளமேபோட்டு வகையாக வுள்ளுக்குக் கரண்டிகொள்ளே. ()

கொண்டபின்பு பதினெட்டு சன்னியெல்லாங் குலைகுலைந் தோடிவிடுங் குறிப்பாய்ப்பாரு, மண்டலத்தில் நாடாது சன்னியப்பா வாதமென்ற முடக்கமெல்லாம் வாங்கிப்போகும், கண்டதொரு நோயகலும் கண்ணோய்போகும் கடினமாம் சலதோஷ மகலும்பாரு, விண்டேனு னிந்தயெண்ணெய் மெத்தநன்று விதஞ்சொன்னேன் மைந்தனே விபரந்தானே. (௧0அரு)

## ஐவிரலித் தயிலம்.

விபரமா யின்னமொரு தயிலங்கேளு விதமான ஐவிரலி விரை படிதான்பத்து, தவறாதே நெல்லிவற்றல் படிதானென்று தருவான பசுவின்பால் படிதான்பத்து, உருவான கற்பூரவள்ளிச்சாறு வுத்தமனே சித்தாமணியின் மூலிச்சாறு, கபரான கரிசாலை பலமோபத்து கள்ளியடா மூலமதுச் சமூலம்பத்தே. (௧0அசு)

பத்தடா மிளகுபத மிதுகளெல்லாம் பாங்காக விடித்ததனைத் தூளதாக்கி, பித்தர்களே படிசலத்தை நீரைவிட்டு பேரான ஆல்விறகு யெரித்து நன்றாய், வித்தமாந் தயிலமெல்லா மூன்றிலொன்றாய் விவரமாய்க்குறுகியபின் வடிதான்கொண்டு, சித்திரைநாள் பார்த்துமே செய்யவேணுந் திறமாகப் பின்னுமதைக் குறுக்கிக்கொள்ளே. (௧0அஎ)

கொள்ளப்பா பின்னும்படி சலமும்வார்த்து குறுக்கடா தயிலத்தை யெடுத்துக்கொள்ளு, மெள்ளவே சீரகமு மரைத்துப்போடு மேன்மையாய் வெண்ணெயடா விளாங்காய்மட்டும், அள்ளவே பாலுடனே தேனுங்கூட்டி அப்பனே கைபாகம் பிசகிடாமல், துள்ளவேகாய்ச்சி விடு யிறக்கிக்கொள்ளு சுருதியாய் மெழுகுபோல் பதமுமாமே. ()

ஆகுமடா தயிலத்தை யுள்ளுக்கிய அப்பனே வியாதியடா வகன்றுபோகும், மேவுகிறசித்தனுக்கு வருஷங்கேளு விதமாக முழு கையிலே நரையும்போச்சு, பாகுபோலிருக்கின்ற தேகமப்பா படி கமணி போலவே யிறுகிப் போகும், காகுவென்றலையாதே மைந் தாகேளு கள்ளனென்ற நித்திரையுங் கழன்றுபோமே. (௧0அக)

நித்திரையு மற்றுவிடு மனநோயில்லை நீக்கவே செந்தூரஞ் சொல்லிப்போட்டேன், பித்தனுயிருக்காதே மைந்தாகேளு பிராண னென வாசுவைத்தான் வாங்குமைந்தா, அத்தான பஞ்சபூத நிலையைக் கொண்டு அருளான கபாடவழி யறியவேண்டும், நித்த நித்த மிப் படியே வருதும்போது நீங்குகிற நிலையடா யறியலாமே. (௧0௯0)

அறியலா மனேகநா ளிருக்கலாகும் ஆத்தாளைப் பூசைசெய்தா லெல்லாஞ்சித்தி, மறிவான சக்கரத்தைப் பார்க்கச்சொன்னேன் மைந்தனே கபாலமென்ற வடிவுஞ் சொன்னேன், குறியான தே கத்தின் கூறுஞ்சொன்னேன் கொப்பெனவே தட்சணு விருத்தி சொன்னேன், நுறியான ஆசை விபத்தாலென்ன சொல்லவே நுணுக் கமடா வாசைகொண்டோர் வாழ்வுதானே. (௧0௯௧)

வாழ்வதற்கு யெந்தனுட நூலைப்பார்த்தால் மதியுள்ள மாண் பாப்பா வறிந்து நிற்பார், தாழ்வில்லை தயவில்லை யாசையில்லை தாயில்லை பிள்ளை தந்தை தானுமில்லை, நாளில்லை நரையில்லை நமனு மில்லை நற்குலங்க ளென்றுசொல்லி நடப்பதில்லை, மாளவில்லை மங்கை யின்மே லாசையில்லை மாதாவை வாலையென்று வணங்குவாரே. ()

வணங்குவார் சதாசிவத்தைப் பூசைசெய்வார் வாயாறக் கேட் டதெல்லாம் வரமுமீவார், வணங்கியே சார்ந்து நிற்பாரீசன் பக்கல் வளமாக வெந்நாளும் பொருந்திவாழ்வார், பிணக்கமென்ற கோபத் தைத் தள்ளி நிற்பார் பேசாமல் மவுனமா யிருந்துகொள்வார், தனங் களின்மே லாசைவையார் பரத்துக்கிவார் சத்தியைத்தான் பூசிப் பார் சாற்றுறேனே. (௧0௯௩)

சாற்றுகிறேன் மைந்தனே சொல்லக்கேளு தனியான சிவனை யே தியானஞ்செய்து, போற்றியே யிருந்தவர்க்கு நமன்வந்தாலும் பொரியதுபோ லெரிந்திடுவான் புகழாய் மைந்தா, ஆற்றியே கண பதியின் பூசைமார்க்கம் அருளவேபுஷ்பமொடு தூபதீபம், தோத் தரித்திருப்பவரைத் தவறவொட்டார் சொல்லுகிறேன் சிவசூட்ச சுடர் திரைத்திட்டேனே. (௧0௯௪)

திரைத்திட்டே நன்றாக மைந்தாகேளு செப்புகிறேன் மறப் பையெல்லாந் தெரியச் சொன்னேன், உரைத்திட்டேன் விதிவசத் தை யொருவர் காணரென்று உரைத்தக்கால் சித்தர்மேல் மைந்தா கேளு, குரைத்திடவே சித்தர்கள்தான் வைத்தமார்க்கம் குறையாமல் மூடருக்குக் காட்டவேண்டாம், கரைத்திட்ட முன்பாவந் தள்ளவே ணுங் கருவறிந்து செய்யணுங்காண் கமலத்தோரே. (க0கூ௫)

கமலத்தா ரென்பதெல்லா மறியவேண்டி காட்டினேன் மெய்ஞ் ஞானக் கலையப்பா, நிமலத்தான் சிவகிருபை யறியவேணும் நித மான சாஸ்திரத்தைக் காணவேணும், பவமுடனே காமிகட்கு யீய வேண்டாம் பாவமுடன் கொலைபாவம் யெய்தும்பாரு, தவமுற்றோ னல்லாமற் பின்னைமுத்தி சர்க்குருவை யறிவதில்லை தரணியோரே.()

தரணியென்ற வுலகத்தி விருந்துகொண்டு சர்க்குருவை வணங் குவது பெரிதுயன்ன, மரணமில்லை யுலகத்துப் போவிருக்கலாகும் வாழ் வென்ன மங்கையின்மேலாசை யென்ன, காரணமாம் நால்வேத மாறு சாஸ்திரம் கழறினர் பெரியோர்கள் சித்தர்தாமும், புரணமென்ற நால்வேதம் பார்த்தாலென்ன பொய்மெய்யாய்ப் பாடினேன் பூட்டைத் தானே. (க0கூஎ)

பூட்டரிய வேதாந்தம் பார்க்கவேணும் பொன்னான தாயாரைப் போற்றவேணும், கூட்டகத்துள் கருத்ததனைக் கட்டவேணுங் குல கோடி காமமெல்லாந் தீர்க்கவேணும், தீட்டெனவே சின்மயத்தைப் பார்க்கவேணும் தெளிவானபார்ப்பதியை யறியவேணும், நேட்டமாய்க் கண்ணொளிவு பார்க்கவேணும் நேமமென்ற சிவதவமேநெறியுமாமே.()

## அறிவு மோட்சம்.

நெறியான நேமத்தை மறந்தானாகில் நில்லாது அவனுடல் நிச மாய்ச் சொன்னேன், குறியாக ஆண்டாறு மாசம்பத்து குறையாமல் சிவம்பண்ணிக் குருவைக்காணும், சரியானஞானவழி யறியவேணும் சாட்சாதி பரம்பொருளைக் காணவேணும், பரியான குதிரையப்பா வசமேயாகும் பாடினேனின்னூலைப் பாடினேனே. (க0கூகூ)

பாடினே னென்னூல்போ லொருநூலில்லை பாண்டமென்ற தழியாது பாருபாரு, ஆடினேனறுபத்து நாலுசித்தும் அப்பனே சுந்தரந்தா னறிந்துகொள்வாய், தேடி யர்பாளுட பூசைதன்னை தெளி வைபெற கருணைதனைக் காணவேண்டும், நாடிநீ பூசையிலே வாமபூசை நம்பனுக்கு முறையொன்று நாட்டுங்காணே. (கக00)

நாட்டுகிறேன் பூசையிலே யனேகமுண்டு நாட்டகத் துளிருப்ப வர்க்கு நாற்பத்து முக்கோணம், மூட்டுகிறே னேகமென்ற வெழுத் தையூணி முறையொன்றுந் தப்பாமல் வாலையென்று, தீட்டமுடன் பலநூலைப் பார்த்துமேதான் தீர்க்கமா மயேஸ்வரியைக் காணவேண் டும், கூட்டுவாய் சதாநித்த மவளைப்பூசிக் குறைவில்லை குருநாதனறி யச் சொன்னேன். (௧௧0௧)

சொன்னே ஞனிப்படியே செய்தமார்க்கஞ் சொல்லாதே யொ ருவர்க்குஞ் சூட்சப்பாரு, மின்னுன செய்தமுறை கிருபைமார்க்கம் விள்ளுகிறேன் பலபூசை யெல்லாமப்பா, பொன்னுன பூசைதனைச் செய்யவேண்டும் புகழான கருணைவழி நடக்கவேண்டும், தன்மையாய்க் கண்டபடி வாமபூசை சற்குருவு முபதேசஞ் சாற்றினேனே. ()

சாற்றினேன் கைமுறையா யமூர்தமெல்லாந் தான்பார்த்துச் செய்யணுங்கா ணில்லாவிட்டால், கூற்றனென்ற சாபத்தா லழிந்துபோ குங் குருவினிட கடாட்சமின்றி வேறேயில்லை, நாற்றமென்ற சடல மதை நம்பவேண்டாம் நமனுர்க்கு நம்முயிரே தப்பாதையா, மாற் றறது தப்பாதே வாலைக்கப்பா வகையறிந்து சொல்லிவிட்டேன் வா மந்தானே. (௧௧0௩)

வாமமென்ற பூசையைப்போல் பூசையில்லை வாலையென்ற தா யைப்போல் தெய்வமில்லை, சாமமென்ற சமாதிக்கு அவளே தெய்வம் தானின்றி வேறில்லை தாக்கிப்பாரு, நாமமென்ற ஞானியைப்போ லிரு ப்பாரையா நமனுக்கு தப்புவது திண்ணமில்லை, காமமென்ற விந்துவை நீ கட்டிக்கொள்ளு கலமணிபோ லாணுக்கால் காயஞ்சித்தி. (௧௧0௪)

சித்தித்தாற் காயமடா பிலத்துங்கொள்ளுந் திறமாகச் சொல்லி விட்டேன் செய்துபாரு, பத்திக்கும் வாதமென்ற வித்தையப்பா பார் வதியாள் மூனுவீவாள் பலிதமாகும், ஒத்துமையா லீசர்பதம் பணி ந்துமேதான் உவமையய் நாதாக்காள் செய்தகோலம், முத்திக்கிப்போ வேணுமென்று லின்னுல்வேணு மோசமில்லை தாய்பதத்தை முனி ந்து நில்லே. (௧௧0௫)

## அர்ச்சிக்க மலர் தூபதீபம்.

பாரப்பா மலரேது அர்ச்சனைக்கேயாகில் பாங்கான மலர்போல மலருமில்லை, நேரப்பாதூபமென்ற சாம்பிராணி நினைவின்றி வேறி ல்லை நிசமாய்ச் சொன்னேன், ஆரப்பா யெனைப்போலச் சொல்வா ரப்பா அப்பனே நாமுனக்கு அறைந்தவாறு, கூரப்பா தீபமென்று லேதேயாகில் குருவான வாசுவடா குறித்துச் செய்யே. (௧௧0௬)

செய்யப்பா விப்படியே பூசைமார்க்கஞ் செப்புகிறே னின்னு ரைபோல் பின்னுரையுமில்லை, வையப்பா பச்சரிசி பரத்திக்கொண்டு வளமாக விந்துவிட்டு மவுனந்தாக்கி, துய்யவே வாலிபதம் பணிந்து மேதான் துடியான ஞானவழி யறியவேண்டும், பையவே வஸ்து வடா அதன்மேல் வைத்து பரிவாக விப்படியே பலகாரங் கூட்டே. ()

கூட்டப்பா வடமாலை சரவணையினோடுங் குறையாம லர்ச்சித்துக் குருவைப்பேணு, மூட்டப்பா வாய்வினுட நடனங்காட்டு மூன்று விசை நிறுத்தியதை விழிமேல்நோக்கு, திட்டமுடன் விமலிபதம் தாள்பணிந்து திடமாக பரவழியைக் காணவேணும், நோட்டத்தை மறக்காதே தியானம்பண்ணு நிமலியென்ற பூரணியை நினைத்துக்கொ ள்ளே. (கக0அ)

சதாசிவன் வாடை.

கொள்ளப்பா யிப்படியே பூசைபண்ணக் கொடியான மணிச் சிலம்புவோசை காணும், உள்ளத்தைத் தேற்றிவிடு அஞ்சவேண்டாம் ஒருத்தியடா முன்வருவா ளதற்குப்பின்னே, மெள்ளவே மோட்சவழி யறியவேணும் மேதினியில் மானிடர்தான் காண்பதேது, வள்ளலென்ற சதாசிவனு மங்கேகாணும் வாசமடா முன்காணும் வாடைதானே. ()

வாடையென்று லெதுவெது வென்றுகேளு மருக்கொழுந்து புழு கதுபோல் மணமேவீசும், வாடையிதை நீயறிந்துமே மைந்தாகேளு வாலையுட தியானத்தை மருவிமூட்டு, வாடையிலே மனோன்மணியைப் பணிந்துமேதான் மகத்தான யீஸ்வரியைக் காணவேண்டும், வாடை யில்லை பின்னுமப்பா வெளியிற்காணு மைந்தனேவருஷ மொன்று மாதம்பத்தே. (ககக0)

பத்துவாள் சித்தனென்று கேட்டவர மீவாள் பராபரியாள் தவிற விடாள் பாருபாரு, நத்துவாள் நம்மைவிட்டு அவளும்போகாள் நா னிலத்தி லிருந்திடுவாள் நடனம்பார்ப்பாள், பத்தியுடன் சுயரூபமறி யவேண்டும் பாலகர்களறியார்க ளிந்தமார்க்கம், யெத்திசைக்குப் போ னாலும் வருவாள் தாயார் இரங்குவாள் மகனென்று யிதஞ் சொல் வாளே. (கககக)

சொல்லுவாள் கற்பனைக ளனேகம்பாரு சூட்சாதி சூட்சமுண்டு சுரூபமெத்த, நெல்லுமுனை போலவே தவறுவந்தால் நில்லார்காண கன்றிடுவாள் நினைவாய்ப்பாரு, பல்லுயிர்தான் நோய்கதறிக் கருணை பெற்று பாலித்தார் மாணுக்கர் கோடாகோடி, கொல்லுவா ருயிர்தனை யே கூறுகொண்டு கொடியதொரு தீயாவாள் குமரிதானே. ()

குமரியைத்தான் வணங்கியே நிறுத்திக் கொண்டால் குலகோடி பாவமெல்லாங் கூட்டோடேபோகும், அமுரியிலே வாதமெல்லா மாட லாகும் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரு, கமரிலே வேதாந்தக் கூட்டமப்பா சடுதியாய்க் கூறினார்தட்சணயன், தமரிதுபோ ளவளோ டே கூடவேண்டி சதாநித்தம் பூசையப்பா சாற்றுவாயே. ()

சாத்துநீ யிப்படியே பூசைமார்க்கந் தவருதே சொல்லுகிறேன் தப்பவேண்டாம், ஆத்துமத்துக் குறுதியுண்டு மைந்தாகேளு அன்பான வாதமெல்லா மாடலாகும், சேர்த்துமே மோட்சவழிக் காணவேணும் குசக்கலமென்ற காயத்தை நம்பவேண்டாம், போற்றுவாய் வாலை பதம் போற்றினுக்கால் புகழாகச் சித்தி முத்தி பொருளுண்டாமே. ()

பொருளுண்டா மருளுண்டாங் கிருபையுண்டாம் புகழ்ஞான முண் டாகும் பொருந்திப்பாரு, மருளுண்டா மாய்கை யெல்லாம் விட்டுநீங் கும் மைந்தனே சொல்லுகிறேன் வரிசையாகும், தெருளான சடாட் சர ரூபங்கண்டால் தேறலாம் சிகரவரை ஏறலாகும், அருளுண்டாஞ் சதாசிவத்தை யறியலாகும் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரே()

## பறவை ராஜாளிக்கு நாடிபார்க்க.

பாரப்பா பறவையென்ற ராஜாளிக்குப் பார்க்கின்ற நாடிதனைப் பகரக்கேளு, கூரப்பா யிடதுபுறவிறகில் மைந்தா கூட்டியே மூவிரலால் நாடிபாரு, ஆரப்பா யெனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நாமுன க்குச் சொன்னோம்பாரு, மாரப்பா வாதபித்த வையங்கண்டு மைந் தனே மருந்தையினி வகையைக்கேளே. (ககககூ)

கேளப்பா வதனுடைய நோயேதென்றால் கெடியான மனிதர்க்கு மதுக்குமொன்றே, நாளப்பா குதிரைக்கும் வியாதிரண்டு நாட்டுறே ன் மைந்தனே நன்றாய்க்கேளு, கோளப்பா வாராது யிந்தமார்க்கம் குறைவின்றி செய்திடவே நுணுக்கமாகும், ஏளப்பா நான்கிருப தெட் டேபாகு மிளகாத வியாதியுண்டு பெண்ணிப்பாரே. (கககஎ)

எண்ணிநீ சொல்லுகிறேன் மைந்தாகேளு யிதமான கைமுறையைத் தவிறவேண்டாம், உண்ணவே குழம்புண்டு பூச்சுமுண்டு வுற்ற தோர் கோவுக்கு குழம்புமுண்டு, திண்ணமுடன் யிந்தமுறை பொய் யாதையா தட்சணமூர்த்தியிட வாக்குத்தப்பா, மண்ணிலேயிருக்க வே வகையுமுண்டு மைந்தனே சொல்லுகிறேன் வகையைத்தானே ()

வகையான பறவைக்குப் பேதியப்பா மகிமையாய்ச் சொல்லு கிறேன் கேளுகேளு, துகையான அசாமேகத் துடைக்கறியைச் சுத் தியே இளநீரி லேழுநாளுலர்த்தி, வகையாக யிப்பாகம் பிசகிடாமல் வண்மையாய் செய்திடவே மார்க்கந்தானும், பகையான வூதலுக்கு யிறைச்சியியப் பாங்காகப் பேதியது யேழுமாமே. (ககககூ)

ஏழுகுறி பேதியா மதன்பிறகு யிதமாகச் சுத்தியிலா யிறைச்சி யிய, பாழ்ட்டலுக் கிந்தவழி பண்மையாகும் பாலகனே நாமுனக்குச் சொன்னோம்பாரு, ஆழுலகில் நம்மைப்போல் சொல்வா ருண்டோ அப்பனே தெட்சணாப னுரைத்தோம்பாராய், தாழுமப்பா பேதியுங் கட்டிப்போகுஞ் சாற்றினேன் மைந்தனே தயவாய்த்தானே. (ககஉ0)

## குதிரைக்குப் பேதி.

தயவாகக் குதிரைக்குப் பேதிதான்மைந்தா சாதிக்காய் வெண்கா ரஞ் சாரப்பருப்பு, மயமாகத் தான்பொடித்துக் காய்ந்தநீரில் மைந் தனே தான்கொடுக்க வரிசைகேளு, தயவுடனே கைபாகம் பிசகி டாமல் சாற்றினேன் பொதிகைமுனி வாக்குதப்பா, நயமுடைய மாந் தர்க்கு தட்சணாயன் நாட்டினேன் சர்க்கரையிற் கொடுக்கதானே. ()

## கோவுக்குப் பேதி.

சர்க்கரைதான் கோவுக்குப் பேதியதுகேளு தருவானசெம்மனுட தண்டைவாங்கி, மிக்கவேமேல்த் தோலையெடுத்துப் போட்டு வெள் ளாட்டுக் கோமயத்தில் வெந்தபின்பு, தக்கபடி யளவுகண்டு கொடுப் பீரானால் சாந்தமாம் பேதியது ஆகும்பாரு, பக்குவமாய்ப் பிழிந்துநன் ரு பெடுத்துப்போட்டு பாங்காகப் படிகொடுக்கப் பேதியாம்பாரே.()

பேதியா மூன்றுதா மானபின்பு போரான காரெள்ளுக் கட்டை யிய, மாறிவிடு மைந்தனே சொல்லிப்போட்டேன் மகத்தான யிதற் கெல்லா மருந்தைக்கேளு, தேறிவிடு மிந்தமொழி பொய்யாதையா செப்பினேன் கும்பமுனி யுரைக்கும்வார்த்தை, நீதியொன்றுங்குறை யாமற் செய்யமைந்தா நில்லாதுநோயினுட கூடுதானே. (ககஉங)

கூடான குழம்பொன்று சொல்லக்கேளு கோஷ்டமுடன் பாலாசம் கொளிஞ்சியோடும், நாடான குமரியுடவேருங்கூட்டி நலமாகக் காயமுடன் திப்பிலி மிளகும், காடான செப்பினிடநெருஞ்சி தானும் கடினமாய் பிரமத்தின் பூண்டுதானும், வாடாத மல்லிகைச் சாற்றில் மைந்தா வகையாகத் தானரைத்துக் குழம்புமாக்கே. (௧௧௨௪)

## நாவில் தளம்.

ஆக்கியபின் னக்குழம்பை யெடுத்து மைந்தா அறுகினுட புல்லிலே துவட்டியிய, நாக்காலிவயறாதல் கண்குளிவு மண்டையினில்சலநீரை வாங்கிப்போடும், நோக்கமுடன் கிராணிவகை எல்லாந்தீரும் நுணுக்கமாம்பாண்டு முதலிசிவுபோகும், நாக்கிலே பிரட்டிவிடக் சுழிச்சல்தீரும் நாட்டுகிறேன் குழம்புவகை நாட்டுறேனே. (௧௧௨௫)

நாட்டுறே னின்னமொரு குறியைக்கேளு நலமானயாளிக்கி மாங்கிசத்திலிய, மூட்டான வாயடைப்பு மண்டைவீக்க முத்தமனேயிவையெல்லா மோடிப்போகும், திட்டமா மண்டையிடி பீனிசங்கள் தெளிவாகும் யிந்தவகை மருந்தினாலே, வாட்டமுள்ள பரிதனக்கு நெய்யிற்கொள்ள வாடினதோர் தேகமடா தங்கம்பாரே. (௧௧௨௬)

பாரப்பா யின்னமொரு குழம்புகேளு பாங்கான தழுதாழை பலமோவொன்று, நேரப்பா பாகைதான் பலமோவொன்று நேரான கனகரிவி பலமோவொன்று, சேரப்பா மருந்துவகைப் பிசகிடாமல் செய்பாகம் சரியாகச் செய்தாயானால், கூரப்பா யிவையெல்லாங் காய்ச்சி மைந்தா குழம்பாகத் தானெடுத்து வைத்துக் கொள்ளே. (௧௧௨௭)

கொண்டபின்பு நல்மிளகு சுக்குமைந்தா கொடியான திப்பிலியுங் காயங்கூட்டி, விண்டேனு னிவையெல்லா மரைத்துமைந்தா விபரமாய் மத்தித்து வைத்துக்கொண்டு, குன்றாமல் கைமுறையாய்ச் செய்யவேண்டும் குருவித்தை எந்நாளும் நினைக்கவேண்டும், நன்றாகச் சிமிளிலே யடைத்துமைந்தா நாவிலே தளம்போட நோயைக்கேளே. (௧௧௨௮)

கேளப்பா நாவில்முள் சிறுமல்மாகும் கெடியான கொடிநோவு நீரிழிவுதீரும், தாளப்பா ஆளிக்கி யிறகில்பூசத் தரியாது மூக்கிலுள்ள சளிதானப்பா, கேளப்பா நபைச்சலுடன் வலியுந்தீரும் கெடிதான சயரோக மற்றுப்போகும், நாளப்பா பரிதனக்கு குழம்பையிய நாட்டுகிறேன் மேகமென்றதாறும் போமே. (௧௧௨௯)

## சாரணைவேர்க் குழம்பு.

## குதிரை வலிக்கும் கோவுக்கும்.

போகுமப்பா யின்னமொரு குழம்புகேளு புகழாகச்சாரணைவேர் பிண்டையோடும், நாகுமப்பா நாரத்தை வேருங்கூட்டி நலமாக வுலர்த்தியதைப் பொடியதாக்கி, வேகுடனே பாண்டமதில் போட்டுமேதான் விரும்பியே வெள்ளாட்டுப் பாலும்சேர்த்து, பாகுபோல் காய்ச்சிவிடு காராட்டுநீரில் பாங்காகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. ()

கொள்ளடா திப்பிலி நல்மிள குசுக்கு கோரோசினையுடனே புழுகுங் கூட்டு துள்ளவேயிவையெல்லா மொன்றாய்க்கூட்டி தூளாக்கிமறுபடியு மரைத்துக்கொள்ளு, சொள்ளவே பசும்பாலு நாழியாகும் கொற்றவனே இளநீரு சமனதாகும், யெள்ளெண்ணை யுழக்குவிடு யிதற்கெல்லாந்தான் மிதமாக மத்தித்து யெடுத்துக் கொள்ளே. (ககூக)

எடுத்தபின்பு குதிரைக்கு நசியமீய யிளைப்புவலிகிறுகிறுப்பு யிருமல்போகும், தொடுத்திடவே மூன்றுநாள் புல்பச்சையாகா சொல்லுகிறேன் குளுநீருமாகா தப்பா, தடுத்திடவே யிந்தமுறை பொய்யா பாகம் தவறாதுகொடுத்திடவே நோயகலும்பாரு, கொடுத்துவிடு மூன்றுநாள் நேரமாறு குறையாதே காணுமடா வள்ளமொன்றே. ()

ஒன்றான கோவுக்குக் குளுநீரிலீய யுரைக்கிறேன் தேகத்து யிளைப்புதீரும், நன்றானமோரிலே கொடுத்துக்கொள்ள நலமாகக் கெர்ப்பமுண்டாம் நாட்டக்கேளு, பன்றான விம்மலொடு யிளைதீரும் பாங்கானவிக்கலொடு யிளைப்புதீரும், தின்றான மறுகுமுளை வீக்கமெல்லாந் தீர்ந்துவிடு மெட்டுநாள் கொள்ளத்தானே. (ககூரு)

தானான யாளிக்கி யிறைச்சியிலே கொள்ள தயவாகும் ரோகமடா பிலத்துக்கொள்ளும், ஊனானமதமீறும் வெட்டைதோணும் உரைத்திட்டேன் மைந்தனே யுலகிற்செய்ய, தேனான யிம்மருந்து வேகமெத்த தெளிவாகும் வியாதியறும் மருந்தினாலே, மானானயிறைச்சியிலே கொள்ளும்போது மகத்தான மண்டையிடி வீக்கம்போமே. ()

## கழலைவீக்கத்துக்கு வெலக்குழம்பு.

வீக்கமென்ற கழலைக்குக் குழம்புகேளு வெலக்குடைய பட்டையடா பலமோவொன்று, பாங்கான பூங்குலையோ பலமோவொன்று பரிவான மாவிலிங்கு பலமோவொன்று, தாக்கடா கைபாகம் பிசகிடாமல் தருகவே மருந்தினிட வேகம்பாரு, போக்கடா மேற்போக்கைத் தள்ளிமைந்தா புகழான விவையெல்லாம் பொடிதான் பண்ணே. ()

பண்ணப்பா வதன்பிறகு பெருக்கன்சாறு பாங்காக வுழக்கடா வாங்கிக்கொள்ளு, பெண்மையுள்ள மஞ்சளடா சாறுழக்குப் போரான பெருக்கம்பால் சாறுழக்கு, திண்ணமா மகத்தினுட மூலந்தானும் தெளிமையாம் செம்மையுட மூலிதானும், நண்ணவே யிவையெல் லாங் கூட்டிமைந்தா நலமாகத்தானரைத்து வேப்பெண்ணெய்வாரே.()

வாரப்பா யிவையெல்லா மத்தித்தேதான் வளமாகக் குழம்பாக்கி வைத்துக்கொண்டு, பாரப்பா மடியிலே கழலையானல் பரிவான பூச்சி யுடபஞ்சில்போடு, ஆரப்பாயெனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நாமுனக்குச் சொன்னோம்பாரு, தோப்பா வயிற்றிலே கழலைவந்தால் திறமான கருவேப்பில் கலந்துபோடே. (௧௧௩௭)

போடப்பா குழம்பிலே விரணமானல் புளியிலே தான்குழைத் துப் பூசிப்போடு, மாடப்பா குழம்பிலே விரணமானல் மாதளையி நீரி லே குழைத்துப்போடு, தேடப்பா மூலிவகை சொல்லுதப்பா தீர்க்க மாம் யிடைப்பாகம் பிசகிடாமல், நேடப்பா யிவையெல்லா முலர்ந்து வற்றி நின்றுபோஞ் சொல்லுகிறே னிசந்தான்பாரே. (௧௧௩௮)

அடிவயிற்றுக் கழலைக்கு.

நிசமாக ஆளிக்கு விரணமானல் நெய்யிலே தான்குழைத்துப் பஞ்சில்போடு, வசமான முளைகளுக்கு அண்டநீரு மைந்தனே தான் குழைத்துப் பஞ்சில்போடு, திசையான தசவாயுவு ஏகங்கண்டாய் தெட்சணு மூர்த்தியிட வாக்குபொய்யா, பசையான சீழ்வற்றி யுலர் ந்துபோகும் பாடினேன் மெய்ஞ்ஞானம் விளக்கந்தானே. (௧௧௩௯)

விப்புருதிக்கு சித்திவேர்க் குழம்பு.

விளக்கமா மின்னமொரு குழம்புகேளு மேலான சீந்திவே ரமுக் குறுவும், பளக்கமுள்ள பூட்டப்பா வெள்ளைபூடு பாங்காக விவைமூன் றுந் தயிலமாக்கி, இளக்கமுடன் கைபாகம் பிசகிடாமல் யின்பமுடன் மருந்துவகை செப்பக்கேளும், அளக்கவே படிமூன்றுப் குறுக்கிக் கொண்டு அப்பனே பதனமதா யெடுத்துக்கொள்ளே. (௧௧௪0)

எடுத்துக்கோ வதன்பிறகு கடுகு சுக்கு யேலமுடன் கிராம்புவகை யிதுவுஞ்சேர்த்து, தொடுத்துக்கோ கருங்கோழி முட்டைசேர்த்து சொல்லுகிறேன் வரிகணிபின் சாறுஞ்சேர்த்து, அடுத்துமே தொரா வினுட வேருஞ்சேர்த்து அப்பனே காக்கணத்தின் வேருஞ்சேர்த்து, மடுத்துக்கோ காயமுடன் வசம்புசேர்த்து மைந்தனே யரைத்ததனை மைபோலாக்கே. (௧௧௪௧)

ஆக்கியபின் னுள்ளுக்குக் காண்டிகொள்ளு அடிவயிற்றுக் கழலை யடா வீக்கம்போகும், தாக்குநீ விப்புருதி கெண்டைபோகுந் தப் பாது சொல்லிவிட்டேன் சார்ந்துபாரு, போக்கில்லா யிம்மருந்தினிட வேகத்தாலே பொல்லாத நோயகளும் புகலக்கேளும், நாக்கிலே தளம் போடக் கபமும்போகும் நாட்டினேன் மைந்தனே நன்றாய்க்காணே.()

காணப்பா கோவுக்குக் காடியிலேகொள்ளக் கண்புகைச்சல் நீரி ழிவு கழலைப்போகும், தோணப்பா பரிதனக்கு முதிரையிலேகொள்ள துடைவீக்கி மசையாத சூலைநோயும், நாணப்பா கருமேகந் தடிப்புக் குஷ்டம் நாடாது சில்விஷங்க ளகன்றுபோகும், பேணப்பா புண் புரைக்குப் பஞ்சில்போடப் பிரியாமல் நாள்பத்தி லுலர்ந்துபோமே. ()

உலர்ந்துபோம் ஆளிக்குப் போத்திரைச்சியிலிட வுளக்கழலை சலக்கழிச்ச லோடிப்போகும், மலர்ந்துவிடு மாசனத்து மூலத்துக்கு மைந்தனே யசர்மேக மிறைச்சியாகும், கலர்ந்ததொரு யிறைச்சிவகை நீக்கிடாமல் கழறவே மச்சவகைத் தள்ளவேண்டும், அலைந்துகெட் டுத் தேடாதே மைந்தாகேளு அன்பான குழம்புவகை யதிகந்தானே.()

### கைவேடிப்பு கால்வெடிப்பு குட்டம் இதுகட்கு கோழிஞ்சி குழம்பு.

அதிகமா மின்னமொரு குழம்புகேளு அப்பனே கொடிவேலி பலமோபத்து, பதியான கொழிஞ்சிவேர் பலமோபத்து பாங்கான வில்வவேர் பலமோபத்து, துதியான வில்வத்தின் பத்திரிதானும் துவர்ப்பான மருளினிட பட்டைதானும், மதியானவிளாவேருபலமோ பத்து மைந்தனே யிவையெல்லா முலர்த்திக்கொள்ளே. (கககரு)

கொண்டபின்பு தயிலத்தை வடித்துக்கொண்டு குறியான கெந்த கமோ விராகனென்று, விண்டேனுன் பாஷாணம் விராகனென்று விதமான கல்லுப்பு விராகனென்று, குன்றுமல் கௌரியப்பா விராக னென்று கூறிடவே மிருதாரு சிங்கியப்பா, நன்றாக விவையெல்லாம் பொடியேபண்ணி நலமாகத் தயிலத்திற் புரட்டிக்கொள்ளே. (கககசு)

புரட்டிவிடு கைவெடிப்பு கால்வெடிப்பு பேரான கருங்குட்டம் திரேகத்துள்ளே, உரட்டியே தான்புரட்டி மூன்றுநாளும் உத்தமனே வைத்திருக்கக் கறுப்புமாகும், தெருட்டவே பதங்கண்டு செய்வாயா னால் தீராத விஷயகளும் பாரீர்மக்காள், மருட்டவே வெடிப்பெல்லா மொன்றாய்க்கூடி மைந்தனே புண்ணுலரும் வகையைப்பாரே. ()

வகையாக நாற்காலி புண்புரைகள் வளமாக நாட்டமுள்ள யிசிவு மானல், துகையாகப் பஞ்சிலே குழைத்துப்போடு சொல்லுகிறேன் புழுமாண்டு புண்ணுமாறும், வகையான பில்லமது மாறும்கண்டாய் மக்களே பிரமேகம் போகும்பாராய், தகையாதே ராஜாளி யெங்க ளுக்கு தனிக்குழம்பில் தடவவே யேங்கல்போமே. (கக௪அ)

சொரி சிரங்குக்கு நரிமிரட்டிக் குழம்பு.

ஏங்காதே யின்னமொரு குழம்புகேளு யியல்பான நரிமிரட்டி பலந்தானென்று, தாங்காதே சுண்டைவேர் பலந்தானென்று தரு வான காரியின்வேர் பலந்தானென்று, ஊங்கான சூரிவேர் பலந்தான் பத்து வுத்தமனே நன்னரி பலந்தான்பத்து, நீங்காதே பலாசுவேர் பலந்தானென்று நிதமாக யிவையெல்லா முலர்த்திக்கொள்ளே. ()

கொள்ளவே யதன்பிறகு குழித்தயிலம்வாங்கிக் கூட்டடா கடை மருந்து கூறக்கேளு, கொள்ளுவாய் சாதிக்காய் மாசிக்காயுங் குறை யாமற் சரிநிரையாய்த் தூக்கிக்கொள்ளு, கொள்ளப்பா பாகமுடன் செய்வாயானல் கொப்பெனவே வியாதியெல்லா மகலும்பாரு, கொள் ளப்பா கடுக்காயுந் தான்றிக்காயுங் கூட்டியே பொடிபண்ணிக் குழம் பில்சேர்த்தே. (கக௫0)

சேர்த்துப்பின் னேலமடா பொடியேபண்ணு திடமான நெய் யிலே குழைத்துக்கொள்ளு, ஊத்தடா காடியிலே கொஞ்சங்கூட்டு வுத்தமனே மூன்றுநாள் கொடுக்கக்கேளு, தீர்த்தமாம் காயாதி கற்ப மாகும் தெளிமையாய் திரேகமது மின்னும்பாரு, மாத்திவிடு திரே கத்துச் சொரியும்போகு மைந்தனே பாலுமெத்த வடியும்பாரே. ()

பாரப்பா பாலுமுண்டாங் தேகந்தோறும் பழுதில்லை சொல்லி விட்டேன் பாருபாரு, சேரப்பா ராஜாளிக்கு நீரிற்கொள்ளச் செயல் ரண்டு வெளிச்சமுந் திறமாய்ப்பாயும், ஆரப்பா எனைப்போலச் சொல் வாரப்பா அப்பனே மானிடற்குச் சொன்னேம்பாரு, நேரப்பா பரி தனக்கு நெய்யிற்கொள்ள நீரடைப்பு சதையடைப்பு நீங்கிப்போமே. ()

கோவுக்குக் கெர்ப்பமுண்டாகக் குழம்பு.

நீங்கவே யின்னமொரு தயிலங்கேளு நேரான கொம்பரக்கு நிரையைக்கேளு, தூங்கான பட்சிதனைப் பிடித்துமைந்தா சொல்லு கிறேன் வேகவிட்டுத் தயிலம்வாங்கி, தீங்கில்லா சித்தர்கள் செய்யு மார்க்கம் தெளிந்திடவே மருமத்தை யாருஞ்சொல்லார், பாங்காகத் தானெடுத்து வைத்துக்கொண்டு பரிவாகப் பலாசினுட வேரை வாங்கே. (கக௫௩)

வேரையப்பா யிடித்ததனை பொடிதான்செய்து விலாமிச்சம் வேர தனைச் சமனாய்க்கூட்டு, ஆரையுட சார்விட்டு அரைத்துக்கொண்டு அப் பனே நெய்கூட்டி மத்தித்தேதான், கோரையுடன் புல்லாமணக்கு தன் னினாலே குழுறவே கூட்டியதை செய்துவந்தால், காரையுட யிலை யிலே புரட்டிமைந்தா கருதியே கோவுக்குக் கொடுத்துக்கொள்ளே. ()

கொடுத்திடவே யீனுதை மாட்டுக்கப்பா குறைவில்லை கெர்ப்ப முண்டாங் கூர்ந்துபாரு, தொடுத்திடவே கிறுகிறுப்பு வாய்நீரோட்டந் தொடர்ந்துவருங் கிருமிகளுந் தூரப்போகும், கடுத்துவரும் நோயக லும் மேகம்போகுங் காட்டொணு வியாதியெல்லா மகலும்பாரு, அடுத் திடவே விஷக்கடியுந் தப்புமாறும் அப்பனே சொல்லுகிறே னறிந்து கொள்ளே. (ககடுரு)

அறிந்துநீ பரிதனக்கு முதிரைவைத்து அப்பனே குழம்பதனை யதிலேவிட்டு, மறிந்திடவே தான்கலந்துபரிக்குயீய மகத்தானபாண்டு வகை மாறிப்போகும், துறந்ததொரு வியாதிமுதல் சன்னிபோகும் தோற்றுகின்ற வயிர்கடுப்பு வுழலைதீரும், திறந்திடவே சொல்லிவிட் டேன் மைந்தாகேளு செப்புகிறே னிதுவறிந்து செய்துபாரே. ()

பாரப்பா யின்னமொரு குழம்புகேளு பண்பான கதுவாலி பிடி த்துநெய்வாங்கி, சோரப்பா வுடும்பிலுட சிரசுங்கூட்டு சொல்லுகிறே னதனுடைய விரல்கூட்டு, சேரப்பா கூரெள்ளு கரணந்தானும் சிறப் பாகக் கார்போக வரிசிதானும், ஊரப்பா காரெள்ளு கட்டிகூட்டு வுத்த மனே யிவையெல்லா முலர்த்திக்கொண்டே. (ககடுஎ)

கொண்டபின் னிவையெல்லாம் பொடிதான்செய்து குழையடா நெய்விட்டு வைத்துக்கொள்ளு, நண்டான மேலோடு யிளவறுப்பாய் வறுத்து நலமாகப் பொடிபண்ணியதிலேதூவ, அண்டவொண்ணு பாக மது செய்வாயானால் அப்பனே நோயகலும் அறையக்கேளே, விண் டேனு னிதனுடைய கூத்தைக்கேளு விளம்புகிறே நன்றாக விளம்பிப் பாரே. (ககடுஅ)

பாரப்பா கண்செத்து யிருந்தகோவும் பாங்கான தாய்செத்து யிருந்த கண்ணும், சேரப்பா சொல்லுகிறே னுபாயங்கேளு திற மாகப் பசுதனக்குக் கண்ணைக்கட்டி, பாரப்பா நம்மைப்போ லாருஞ் சொல்லார் பக்குவா பக்குவங் கண்டோர்காண்பார், காரப்பா குமரியிட சாற்றைமைந்தா கொடுக்கவே வயிற்பெருக்குங் குணத்தைக் கேளே.()

கேளப்பா வயிற் பெருத்து படுத்தபின்பு கெடியான கையதனை வயிற்றி விட்டு, தாளப்பா குடலைத்தான் கையிற்றூங்கி தப்பாமற் கண்ணினுட மேலேதேய்த்து, கோளப்பா வாராது யிந்தமார்க்கம் குறையாது தட்சணா மூர்த்திவாக்கு, வாளப்பா பசுவினுட முன்னே விட்டால் மைந்தனே மருக்கமுண்டாஞ் சுரக்கும்பாலே. (கககூ0)

சுரக்குமடா கண்ணதனைப் பேணிக்கொள்ளுஞ் சொல்லுகிறே னொருவருக்கு முரைக்க வேண்டாம், திரக்கமுள்ள குழம்பதனைப் பரிக்குமைந்தா திறமான நாவிலே தளந்தான்போட, உரக்மாங் தள மகலும் முண்மைபாரீர் வுத்தமனே யாருந்தான் விள்ளார்கண்டீர், இருக்குமடா தன்னுயிரைப் போலேபார்த்து யிதஞ்சொன்னே னுத் தமனே யியல்புதானே. (கககூக)

இயலாகப் பின்னுமதை யாளிக்கிய யியம்புவேன் தடிப்பெல்லா மிதமாய்ப்போகும், தயவாகச் சொல்லி விட்டேன் மைந்தாசேளு தவறுவந்து போவதில்லை சாற்றினேனுன், இயலாகக் குழம்பு வற்றி வேகம் இயலாகச் செய்வதற்கு எய்தும்பாரு, மயமாக வின்னமொரு குழம்புகேளு மைந்தனே கட்டையின்வேர் பலந்தான் பத்தே. ()

பத்தடா பலமதைத்தான் தூக்கிக்கொண்டு பாங்காகக் கியாழ மிட்டுத் தயிலம்வாங்கி, வித்தடா சிச்சிலுப்பை பொடியேபண்ணி விதமாகக் கடைமருந்து விளம்பக்கேளு, நத்தடா அமுக்குரு விரா கன்பத்து நலமான கோவையடா விராகனஞ்சு, கொத்தடா பல்லியது காயஞ்சுக்கு கூட்டிவிடு மெழுகுபோ லாட்டிவாங்கே. (தககூ௩)

வாங்கியபின் சாதிக்காய் கிராம்புகூட்டு வளமான கமுகம்பூ அரிசிகூட்டு, தாங்கவே துத்தமடா விராகன்கூட்டு தயவான யெலிமிச் சஞ்சாறுங் கூட்டு, தீங்கில்லா பாகமது செய்வாயானால் திறமாக நோயகலும் பண்பாய்க்கேளீர், பாங்காக விவையெல்லாம் பொடியே பண்ணி பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (கககூச)

கொள்ளப்பா செம்பருத்திப் பஞ்சிலூட்டி குழியான புண் ணுக்கு மேலேபோடு, விள்ளுறே னொளெட்டி லாறிப்போகு மேலெல் லாங் தான்புரட்டில் சிரங்குபோகும், தள்ளவே நீரிழிவு பாய்ச்சல் போகுங் துலையாத காந்தலெல்லா நீங்கிப்போகும், கள்ளவே புண் புரையி னுள்ளேவிட்டால் கருதியே புரையற்றுக் கழன்றுபோமே. ()

கழன்றுபோ மின்னமொரு குழம்புகேளு கருவான முருகினுட முட்டைவாங்கி, இளமான முசுக்கையடா சமூலம்வாங்கி யிதுரண்டு மொன்றாக மத்தித்தேதான், கிளம்பிடவே கைபாகம் பிசகிடாமல் கீர்த்திபெற மருந்துவகை செப்பக்கேளும், தளம்படவே யிலுப்பெண் ணெய் கரண்டிகுத்தி சாலித்துக் கொண்டுவிடு தாக்கிப்பாரே. ()

தாக்கி விட்டேன் பித்தமப்பா அதிகமேறி தனியான வாதத்தை யசைத்துக் கொண்டு, வாக்கிலே சொல்வதெல்லாம் வெறியுமாகும் வகையார்க் கண்விழிக்கப் பயமுங்காணும், நோக்கமுடன் தட்சணா மூர்த்திநாயன் நுணுக்கமா யறைந்ததொரு வாக்குதானும், நாக்கிலே போடவொரு குழம்புமுண்டு நலமாகச் சொல்லுகிறே னுட்டங் கேளே. (௧௧௬௭)

சூலைக்குக் குழம்பு.

கேளப்பா யின்னமொரு குழம்பேதென்றல் கெடியான பேய்ப் புடலுங் கஞ்சாங்கோரை, தாளப்பா கியாழமிட்டுத் தயிலமாக்கித் தயவாக அதிமதுரந் தேவதாரம், கோளப்பா வாராது யிந்தமார்க்கம் குமுறவே செய்துவரக் குறிப்பைக்கேளும், வீளப்பா சாதிக்காய் கிராம்புயேலம் விதமாக யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்தே. ()

சேர்த்தபின் பறைத்ததனை யெடுத்துக்கொண்டு திறமாக வேப் பெண்ணெய்க் கரண்டிகுத்தி, சாற்றிலே மத்தித்துத் தளமேபோடத் தப்பாமற் றூன்முறியுந் தாக்கிப்பாரு, போற்றியே யிந்தமொழி பொய்யாதையா புகலுகிறேன் மாணுக்கன் பிழைக்கவென்று, கூத்த னென்ற பித்தத்தை யடித்துப்போடுங் குணமாகும் வாதமென்ற குறிதாம்பாரே. (௧௧௬௯)

பாரப்பா யின்னமொரு குழம்புகேளு பாங்கான குங்கிலியம் வெள்ளைவாங்கி, சேரப்பா கமுகினுட கனியுங்கூட்டுத் திறமான துருசுடனே துத்தங்கூட்டு, மாரப்பா யெலிமிச்சஞ் சாறுகூட்டு வள மான பாஷாணம் விராகன்கூட்டு, நேரப்பா பூரமது விராகன்ரண்டு நீலையாகத் தான்கூட்டி நிசத்தைப்பாரே. (௧௧௭0)

நிசமாக விவையெல்லா மொன்றாய்க்கூட்டி நிச்சயமாய் மத்தித்து மைபோலாக்கி, வசமாகப் பஞ்சிலே யூட்டிமைந்தா மகத்தான சூலைக் குப் புண்மேற்போடு, திசையானரோகமெல்லா மகலும்பாரு தீட்சை பெறச் செய்வதற்கு சித்தியாகும், தசையான களிம்பெல்லா மறுத் துப்போடுந் தப்பாது சொல்லுகிறேன் றயவாய்ப்பாரே. (௧௧௭௧)

சொல்லுகிறே னறியது வுலர்ந்தபின்பு சூரணந்தா னுள்ளுக்குக் கொடுத்துக்கொள்ளு, விள்ளுகிறேன் புற்றுக்கு யிதுவுமாகும் விதமாகச் சொல்லிவிட்டேன் விரும்பிப்பாரு, புல்லிடவே மூலமது வகலும் பாரு புகலவே மண்டையிடி போகும்பாரு, நல்லதொரு மருவுக்கு மூலைக்குமாகும் நாட்டுகிறேன் சூத்திரத்தை நாட்டக்கேளே. (௧௧௭௨)

நாட்டுகிறே னின்னமொரு குழம்புகேளு நலமான சிற்றகத்தி களச்சிவேரும், மூட்டுகிறேன் ஆல்விழுது நாயுரிஞ்சி முறையாக நிறையொன்றாய்த் தூக்கிமைந்தா, கூட்டுவாய் நெய்தேனிற் கொள்ளலாகும் குறிப்பாக பாகமது பிசகிடாமல், மாட்டுவாய் கியாழமிட்டு பதமாய்வாங்கி மைந்தனே தானெடுத்து வைத்துக் கொள்ளே. ()

கொள்ளவே பூரமது விராகன்கூட்டு குருவான காரமது விராகன்கூட்டு, தெள்ளவே பசுவினெய் யுழக்குகூட்டு திறமாகச் சாலித்துத் திறத்தைப்பாரு, அள்ளிடவே சூரணத்திற் கொள்ளலாகும் அப்பனே தட்சணாமூர்த்திவாக்கு, விள்ளுறேன் செம்பருத்திப் பஞ்சிலூட்டு விதமாக வாறுத புண்ணிற்போடே. (௧௧௭௪)

போட்டபின்பு புண்புரைகள் புழுக்கலூணும் புகழான வண்டுகடி பொருந்திப்போகும், நாட்டமாய்ச் சொல்லிவிட்டேன் மைந்தா கேளு நலமான குழம்பிதுவே நாடிப்பாரு, காட்டொணு துஷ்டருக்கு யிந்தபாகம் கர்மிகள் வேடிக்கையாய் செய்துபார்ப்பார், தேட்டமா யிப்படியே செய்துபார்க்கத் திறஞ்சொன்னேன் னுத்தமர்க்குச் செப்பக்கேளே. (௧௧௭௫)

செப்புகிறே னின்னமொரு குழம்புகேளு திறமான மயிலாஞ்சி வேர் பலந்தான்பத்து, ஒப்புகிறேன் வில்வவேர் பலமோபத்து உத்தமனே விவையெல்லா மொன்றாய்க்கூட்டு, துப்புரவாய் பாண்டமதில் விட்டுக்காய்ச்ச துதிபெறவே சின்மயத்தைப் பணிந்துபோற்றி, அப்புகிறேன் கியாழமிட்டுத் தயிலம்வாங்கி அப்பனே யெடுத்ததனை யிறக்கிக்கொள்ளே. (௧௧௭௬)

கொண்டபின்பு சாரணையின் கொழுந்துகூட்டு குறையாமல் அதினுடைய மூலிதானும், விண்டேனன் தூதுவளை கொழுந்துகூட்டு மேலான களச்சியுட கொழுந்துகூட்டு, உண்டான விராலியுட கொழுந்துகூட்டு வுத்தமனே மயிற்பீலி கொழுந்துகூட்டு, பண்டான மூலியுட கொழுந்துகூட்டு பரிவாகக் கடைமருந்து சொல்லக்கேளே. ()

கேளப்பா வால்மிளகு கடுக்காய் நெல்லி கெடியான லவங்க முடன் யேலங்கூட்டு, தாளப்பா யரைத்து நன்றாய் மெழுகுபோ லாக்கு தப்பாமற் றயிலத்திற் புரட்டிக் கொள்ளு, கோளப்பாவாராமல் யிந்தபாகம் குறிப்பாகச் செய்துவர எல்லாஞ்சித்தி, நாளப்பா செம் பருத்திப் பிஞ்சினூட்டு நலமான பவுரத்தி விட்டுப்போடே. (கள௭அ)

இட்டப்பா வாணியெல்லாம் பிடுங்கிப்போடு மிதமான புண் ணுலரு மிதமாய்ப்பாரு, கட்டுமே வுள்ளுக்குக் கொண்டாயாகில் கழலை விப்புருதியுடன் கலந்துவோடும், அட்டமா சித்திகளும் ஆடும் பாராய் அப்பனே நாமுனக்கு அறைந்தோம்பாராய், திட்டமாய்ச் சொல்லிவிட்டேன் மைந்தாகேளு திருவான குழம்பினுட திறந்தான் பாரே. (கள௭கூ)

பாக்குமுனைக்கு சிணுங்கிவேர்க்குழம்பு.

பாரப்பா யின்னமொரு குழம்புகேளு பரிவான சிணுங்கிவேர் முளக்கொழிஞ்சி, சேரப்பா வனத்துளசி திருகுகள்ளி திறமான வாமணக்கி னிதுகளெல்லாம், ஆரப்பா சீஷருக்குச் சொன்னாரப்பா அப்பனே நாமானு லறைந்தோம்பாரு, மாரப்பா தனையெடுத்துச் சமனாய்த்தூக்கி மைந்தனே கியாழமிட்டு மருந்துகேளே. (ககஅ0)

கேளப்பா நெல்லிக்காய் தான்றிக்காயுங் கிழ்க்காயு மிதுவெல்லாங் கியாழத்திலிட்டு, தாளப்பா படிபத்து நீரைவார்த்து தப்பாமற் படி யொன்று குறுக்கிக்கொள்ளு, நாளப்பா கைபாகம் பிசகிடாமல் நவிலவே செய்துவர முறைதப்பாது, வேளப்பா சொல்லுகிறேன் மருந்துகேளு விதமான சீரகமு மேலந்தானே. (ககஅக)

ஏலமுடன் லவங்கப்பூ பத்திரியுங்கூட்டு யிதமான மிளகுடனே யரத்தைகூட்டு, தாலமென்ற வோமமோ பலந்தான்கூட்டு சதாவே விக் கிழங்கடா பலமுங்கூட்டு, கோலமுடன் நன்னாரி முத்தக்காசு குடிலமாம் சதாவேலி தானும்கூட்டு, காலமென்ற வுதயத்தி லரைத்து மைந்தா கருதியே மெழுகுபோல் பதமுமாக்கே. (ககஅ௨)

ஆக்கியே குழம்பதனை யெடுத்துக்கொண்டு அப்பனே பஞ்சி விட்டு நிறைகள்கேளு, பாக்கதுபோ லெழுந்ததோர் முளைகளெல் லாம் பரிவாக வாங்கிவிடும் பாருபாரு, நோக்கிவிடும் புண்களிலே குழம்புபோடு நுணுக்கமாயாறிவிடும் நுண்மைபாரு, எக்கமற்ற விக் குழம்பு வுள்ளுக்கிய யிதமாக விவையெல்லா மற்றுப்போமே. ()

போகுமப்பா அக்குழம்பை யெடுத்துக்கொண்டு புகழான பரிதனக்கு நெய்யிற்கொள்ள, ஏகுகின்ற பாண்டுடனே வீக்கமெல்லா மேகிவிடுந் தப்பாது விளம்பக்கேளு, பாகுகின்ற சகலவிஷ மருந்தே யாகும் பாடினர் தட்சணாமூர்த்திநாயன், நாகமென்ற விஷத்துக்கு மிது வேயாகும் நாட்டுறேன் மைந்தனே நன்றாய்க்கேளே. (௧௧அ௪)

சன்னிக்கு முருங்கைக்குழம்பு.

கேளப்பா யின்னமொரு குழம்புகேளு கெடியான வனமுருங்கை பட்டை பலம்பத்து, காளப்பா தும்பைவேர் பலமோபத்து கனி யான விளாவேரும் பலமோபத்து, தாளப்பா நிலப்பனை பலமோ பத்து தாக்கான மருதம்வேர் பலமோபத்து, நீளப்பா பனைவேரும் பலந் தான் பத்து நிசமாக விவையெல்லா மொன்றாய்க்கூட்டே. (௧௧அ௫)

கூட்டியபின் னிவையெல்லாந் தூளதாக்கிக் குருகியதோர் பானை யிலே யிட்டுமைந்தா, மூட்டியேதைலத்தை யிறக்கிக் கொண்டு முறை யாக வெடுத்ததனை வைத்துக்கொள்ளு, நோட்டமுடன் அமுக்குராசிங் தில் தானும் நுணுக்கமா மதுரமுடன் கோஷ்டந்தானும் நாட்டுறே னின் னமொரு மருந்துகேளு நலமான சீரகமு மிளகுங் கூட்டே (௧௧அ௬)

மிளகுடனே திப்பிலியும் உள்ளிப்பூடு முதலான காயமுடன் வசம்பு கூட்டு, இளகவே தானரைத்து வைத்துக்கொண்டு யிதமான வா வின்பால் கொஞ்சங்குத்து, பளகமாம்பாகமது பிசகிடாமல் பாலகனே செய்துவர எல்லாஞ்சித்தி, குளம்பாக வயிற்றிலிட மைந்தாகேளு குண முள்ளதவளைநீ சாடிப்போமே. (௧௧அ௭)

சாடிப்போ முள்ளுக்குக் கொள்ளும்போது சன்னியெல்லாமோடி விடுஞ் சாற்றுறேனுன், ஓடிப்போம் புண்புரைக்குப் பஞ்சிற்போட வுத் தமனே சொல்லுகிறே னுலர்ந்துபோகும், நீடியே பிழைக்கவென்று சொல்லிவிட்டேன் நிச்சயமா மிம்மருந்து பிசகாதையா, நாடியே சொல் லிவிட்டேன்மைந்தாகேளு நாட்டி லுள்ள பேர்களுக்குநடனந்தானே. ()

நடமாகுங் குண்டுபட்டுப் பொருந்தக்காயம் நறுக்கினதோர் காய மடாயிதுசள்ரண்டும், யிடமாகவலிமிகுந்து கொண்டதாகில் யிக்குழம் பை பஞ்சிலிட்டு மேலேபோடு, திடமாக நோயகலும் பாராய்மைந்தா துலைந்துபோம் ரோகமெல்லாந் தீர்ந்துபோகும், வடமாக வலிநின்று வுலர்ந்துபோகு மைந்தனே சொல்லுகிறேன் வரிசைகேளே. (௧௧அ௯)

கேளப்பா ஆளிக்கு யிறைச்சியிலீய கெடியான மண்டைவலி யேங்கல் போகும், வேளப்பா மாந்தருக்கு நெய்யிற்கொள்ள விதமான நீரிழிவு மாண்டுபோகும், சோளப்பா நீர்க்கட்டு பிரமியம்போம் குறிப்பான சயரோக மற்றுப்போகும், நாளப்பா யேட்டிலே யிதுகளெல்லாம் நாடாது சொல்லுகிறே னன்மைத னே. (ககக0)

நன்மையா மின்னமொரு குழம்புகேளு நாகதாளி விதையுடன் அழிஞ்சில்வித்தும், வெண்மையுள்ள பயர்வித்தும் நீர்ச்சுள்ளிவித்தும் வேங்கையுட வித்துடனே களர்ச்சிவித்தும், உண்மையாம் நீர்ச்சுழி வித்துதானும் வூக்கமுள்ள மாமல்லிவித்துதானும், வண்மையுட னிவையெல்லாஞ் சமனாய்த்தூக்கி மைந்தனே மண்கலத்தி லிட்டுக்கொள்ளே. ()

இட்டபின்பு குழித்தயில மிறக்கிமைந்தா யிதமாகத்தயிலத்தை யிறக்கிக்கொண்டு, கிட்டாத மருந்தென்று மலைக்கவேண்டாங் கிளிமூக்குக்கிழங்கினுடன் தும்பை கோவை, திட்டமுட னிந்தமொழி பொய்யாதையா தீர்க்கமாம் கைமறிப்பு அனேகமுண்டு, நட்டணையாய் ஞாயிறுநாள் காப்புகட்டி நலமாகத் தூபமிட்டுப் பிடுங்கிக்கொள்ளே. ()

கொள்ளப்பா வதன்பிறகு பலாதிகூட்டு குறையாமல் மிளகு வெள்ளுள்ளி கூட்டு, தெள்ளவே கோரோசினையும் விராகன்கூட்டுத் திறமான சாரப்பருப்பு கொஞ்சங்கூட்டு, அள்ளவே கசகசா தானும்சேரு அப்பனே பூமிசர்க்கரையும் சேரு, மெள்ளவே யிவையெல்லா மரைத்து மைந்தா மேன்மையா யெடுத்ததனைப் பதனம்பண்ணே. (கககூஙு)

பண்ணிவிடு யெலிமிச்சஞ்சாற்றில் மைந்தா பாங்காகத் தான் குழைத்துத் தடமேபோட,மண்ணினு லாசைகொண்டு மாண்டாரப்பா வாங்கிவிடு நாளெட்டில் மைந்தா கேளு, திண்ணமுட னிந்தமுறை பொய்யாதையா செப்பினேன்மானிடர்கள் பிழைக்கவென்று, எண்ணியே யெதிராளி செபித்தானானல் எழிரண்டு நாளையிலே யிறங்கிப்போமே. ()

இரங்கவே சொல்லுகிறேன் கேளு கேளு யிதமான தேகத்தில் தேய்க்கமைந்தா, சிரங்கானபதினெட்டுக்கரப்பனெல்லாந் தீர்ந்துபோம் சொல்லுகிறேன் செப்பக்கேளு, உரமான மாந்தமுட னீளைபோகும் வுத்தமனே தேகமது காந்திமின்னும், மரமான மங்கையர்க்கு வுள்ளுக்குமீய மைந்தனே கெர்ப்பமுண்டாம் வரிசைதானே. (கககூரு)

## பீனிசத்துக்கு கதலிக்குழம்பு.

வரிசையா யின்னமொரு குழம்புகேளு மகத்தான மூலியடா மைந்தாபாரு, உரிசையா யுள்ளதொரு கதலியாகும் உத்தமனே சமூலமதைக் கொண்டுவந்து, அரசையெனும்வித்துடனே சமனுஞ்சேர்த்து அப்பனே தூபமுடன் பூசைமார்க்கம், பிரசாகத் தானறுக்கிப் பானையிலிட்டுப் பிரிவாக யிலைகளெல்லாந் தள்ளிப்போடே. (௧௧௯௬)

போடப்பா தயிலத்தை யெடுத்துக்கொண்டு புகழாக மருந்துண்டு பூட்டுறேன்கேள், மாடப்பா அதிமதுரந் தேவதார மைந்தனேகடல்னுரையு மரத்தைகூட்டு, தேடப்பாகோஷ்டமுடன் சிங்கிதானும் தெளிமையாம் பேராத்தை தானுஞ்சேர்த்து, போடப்பா பொடிபண்ணி யதிலேயிட்டுப் புகழாகச் சொல்லுகிறேன் பூட்டிப்பாரே. (௧௧௯௭)

பாரடா கடுக்காயின் சாறுநாழி பாங்கான வேம்பினுட சாறுநாழி, கூரடா கும்மட்டிச்சாறுநாழி குறையாதே காடியடா நாழிகூட்டு, ஆரடா யெனைப்போலச்சொல்வாரப்பா அப்பனேநாமுனக்குச் சொன்னோம் பாரு, சேரடாயிவையெல்லா மொன்றாய்ச்சேர்த்து திறமாகப் பின்னுமதைக் குறுக்கிக்கொள்ளே. (௧௧௯௮)

குறுக்கியபின் பொடியதனை யதிலேயிட்டுக் குழம்பாகக் காய்ச்சுகையில் வெங்காரங்கூட்டி, இறக்கிவிடு அதையெடுத்து வைத்துக்கொண்டு யிதமான யெலுமிச்சஞ்சாறுகூட்டு, திறக்கமா மானதமாம் பூசைமார்க்கம் தெளிவுறவே செப்பினர் தட்சணுபன், மறக்காதே வாலைக்குப் பூசைபண்ணு மைந்தனே தானெடுத்து வைத்துக்கொள்ளே. ()

கொண்டபின்பு தளம்போட மைந்தாகேளு குறியானபேதனமுங் கூட்டோடேபோம், மண்டையிலே பீனிசமு மிடியும்போகும் வாந்தியுள்ளபித்தமெல்லாம் வுழன்றுபோகும், அண்டான ரோகமெல்லாமகலும் பாராய் அப்பனே தேகமது காந்திவீசும் உண்டான வாந்தியுடன் வாய்நீரோட்ட மோடிவிடுஞ் சொல்லுகிறேனுறுதிதானே. ()

உறுதியாயுள்ளுக்கு நெய்யிற்கொள்ள வுழன்று கிறுகிறுப்புடனே யோடிப்போகும், தறுதமுள்ள கழலைக்கும் பில்லிக்குந்தான் தப்பாது மூட்டடைப்பான் தளர்ந்துபோகும், வருத்தமா மிந்தமுறை பொய்யாதையா வாகான திருமந்திரமென்னசொல்வேன், அரிதப்பா யிக்குழம்பு நமக்குமாகும் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரே. ()

## மண்டையிடி தொண்டைக்கம்மல் காதடைப்பு இதற்கு அறுகங்கிழங்குத்தயிலம்.

அறிந்துபா ரின்னமொரு குழம்புகேளு அறுகினது வேரடா பலந்தானென்று, சறிந்திடவே நரிவிழிவேர் பலந்தானென்று தப்பாது சிச்சிலுப்பை பலந்தானென்று, பிறிந்திடா நரிமிரட்டிப் பலந்தானென்று பேரான சிணுங்கியப்பா பலந்தானென்று, குருந்தினுட வேரடா பலந்தானென்று குறையாமற் றொன்றாக்கித் தயிலமாக்கே.()

ஆக்கியபின் னின்னமொரு மருந்துகேளு அப்பனே யரிசியடா கோதும்பையாகும், தாக்கிவிடு யேலமுடன் சங்குங்கூட்டு தாணிவிடு விளாவிதையுஞ் சாறுங்கூட்டு, யோக்கியமா மிந்தமுறை பொய்யாதையா யொடுக்கமா மெய்ஞ்ஞான மாயிரத்தில், பாக்கியமாய்க் கடுக்காய்ப்பொடி யுழக்குகூட்டு பரிவாக விவையெல்லா மரைக்கநன்றே. ()

நன்றாக விவையெல்லா மரைத்துமைந்தா நலமாகக் குழம்பாக்கி யெடுத்துக்கொண்டு, ஒன்றாகச் சாலித்துப் பதனம்பண்ணு வுத்தமனே யதனுடைய சூத்தைக்கேளு, அன்றான நோயகலும் பாரீர் மக்காள் அப்பனே தட்சணாமூர்த்தி வாக்கு, பண்டாதி காலத்தில் வந்தநோய்கள் பறக்கின்ற விவரத்தைப் பாருபாரே. (கஉ0சு)

பாரப்பா மண்டையிடி தொண்டைக்கம்மல் பரிவான காதடைப்பு வாய்நீரோட்டம், மாரப்பா யிவையெல்லாம் விட்டுப்போகு மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்ப்பாரு, ஆரப்பா பத்தியமோ யிச்சாபத்தியம் அப்பனே அருளினார் தட்சணாயன், சேரப்பா பத்தியங்கள் கடினமுண்டு செப்புகிறே னிதனுடைய திறந்தான்பாரே. (கஉ0ரு)

திறமாகப் பஞ்சிலே யூட்டிமைந்தா சிய்வடியும் ரணத்துக்கு மேலே போட, மறமாகக் கன்றியது வுலர்ந்துபோகு மருகவே வேண்டாங் கேள் வகையைப்பாரு, சிறக்கமுள்ள மானிடற்கு தட்சணாயன் சேர்க்கமாய்த் தானுரைத்தார் கடினமெத்த, உறமான யாளிக்கு வுள்ளுக்கிய வுத்தமனே தூங்கல்நோ யோடிப்போமே. (கஉ0கூ)

ஓடிப்போம் கபிலைக்கு வுள்ளுக்கிய வுடல்நோயுங் கிறுகிறுப்பு மோடிப்போகும், ஆடிவிடும் பல்லசைவு நின்றுபோகும் அப்பனே சொல்லுகிறே னனுபானங்காட்டி, தேடியே யலையாதே யிந்தபாகம் செப்பினார் வேதமுனி சொன்னமார்க்கம், நாடியேசெய்தாக்கா லெல்லாமாகும் நாட்டுறே னிதுவறிந்து நடனந்தானே. (கஉ0எ)

### பாஷாணக்குழம்பு.

நடமாக வின்னமொரு குழம்புகேளு நலமான பாஷாணமிந்துப் போடு, குடமான வூமத்தங் காயினுள்ளே குடைந்ததனை யிதூரண்டு முள்ளேவைத்து, திடமாக சைபாகம் பிசகிடாமல் தெளிவாகச் செய் திடவே வேகமெத்த, அடைமாரணமாக்கியே யடைத்துமைந்தா அன் பாகச் சீலைமண் ரண்டுகட்டே. (கஉ0அ)

கட்டியபின் னுலர்த்தியதை யெடுத்துக்கொண்டு கருதியே குக் குடந்தான் போடுமைந்தா, மட்டியென்ற மருந்திரண்டு வுள்ளேபற்று மைந்தனே யாறவிட் டெடுத்துக்கொண்டு, திட்டினமா மிந்தமுறை தப்பாதையா தீர்க்மாய் தட்சணாமூர்த்தி சொன்னார், எட்டியுட தைலத்தா லரைக்கமைந்தா யிருக்கியபின் னின்னமொரு மருந்து கேளே. (கஉ0கூ)

### ஆணிமுளைக்கு களிம்பு.

சேளப்பா துத்தபது விராகன்ரண்டு செடியான துருசடா விராக னென்று, தாளப்பா யிருள்ளித் தண்டுவேருந் தயவாகத் தானறுக் கிச் சாறுவிட்டு, ஆளப்பாகிச்சிலிச் சாறுகூட்டி அப்பனே சங்கத்தின் சாறுங்கூட்டி, மூளப்பா எலுமிச்சஞ் சாறுகூட்டு முக்கியமா யரைத்த தனைக் குழம்புமாக்கே. (கஉக0)

ஆக்கியே பஞ்சதனி லூட்டிமைந்தா யன்பான பிலத்திலுள்ள புற்றில்போடு, தாக்கிவிடு ஆணியெல்லாம் பிடுங்கிப்போகும் தப்பா மல்மறுபடியுந் தயிலங்கேளு, தீர்க்கமாமிந்தமொழி பொய்யாதையா தெளிமையாம் தட்சணாமூர்த்தி வாக்கு, எர்க்கவே மண்டூக நெய்யை வாங்கி யிதமாக மறுபஞ்சி லூட்டிப்பாரே. (கஉகக)

ஊட்டிடவே யெட்டுநாள் மைந்தாகேளு வுண்மையா யுலர்ந்துவிடு மியம்பினேனான், விட்டுவிட வேண்டாங்கே ளுள்ளுக்கப்பா வித மான சூரணந்தா னெடுத்துக்கொள்ளு, திட்டமா மிந்தமுறை பொய்யா தையா திருமந்திர மொருக்காலும் பொய்யாதையா, இட்டமாயுள்ள நீரு மற்றுப்போகு மிதமாகச் செய்யணுங்கா ணெண்ணிதானே. ()

எண்ணவே யின்னமொரு குழம்புகேளு யிதமான வாலைக்குப் பூசைபண்ணு, நண்டான வினையெல்லா மகன்றுபோகும் நலமாகச் சொல்லிவிட்டே நாடிப்பாரு, திண்ணமுடன் திருமந்திரம் போலே யுண்டோ தெளிவாகும் தட்சணாமூர்த்தி வாக்கு, உண்ணவுமா மித னாலே யெல்லாஞ்சித்தி யுத்தமனே சொல்லுகிறே னுறுதிதானே. ()

## சகலபுண்களுக்கு மரவட்டை.

உறுதியாய்க் குழம்பொன்று கேளுகேளு வுத்தமனே மரவட்டை விரை பலந்தானென்று, திருகான கள்ளிவிரை பலந்தானென்று செப்புகிறே னழிஞ்சில்விரை பலந்தானென்று, பருக்கமுள்ள கழற்சிக்காய் பருப்புதானும் பாங்கான வெள்ளுள்ளி வசம்புதானும், மொருக்கான விரையடா பலந்தானென்று முத்தானகஞ்சாவிரை பலமுமொன்றே. ()

ஒன்றாக விவையெல்லாஞ் சமனாய்த்தூக்கி யுத்தமனே தயிலமடா வடித்துக்கொண்டு, நன்றாக மருந்துண்டு சொல்லக்கேளு நலமான பூர மடா விராகனஞ்சு, குன்றாகச் சிங்கியுடன் சாந்தானுப்பு கூறினே மெவச்சாரஞ் சரியாய்க்கூட்டி, விண்டேனன் காரமடா விராகன் ரண்டு விதமான கடுக்காய்தான் விராகன் கூட்டே. (கஉகரு)

கூட்டியபின் னிவையெல்லா மரைத்துமைந்தா குழம்பாகத் தான் காய்ச்சி யெடுத்துக்கொண்டு, நாட்டுறே னெடுத்துப்புண் புரையானாலும் நாலாறுநாளையிலே யுலர்ந்துபோகும், தீட்டமுடன் வியாதியெல்லாந் தீரும் பாரு தீவிரமாய் பிணிவராது செப்பக்கேளும், மூட்டடா பஞ்சுதா னேதேயாகில் முதலான மாடத்தின் பஞ்சுதானே. (கஉகசு)

பஞ்சான பஞ்சதிலே யூட்டிமைந்தா பாங்கான வெண்ணெயடா கொஞ்சங்கூட்டி, வஞ்சமாஞ் சூலைக்குப் பஞ்சிற்போட மைந்தனே நாடாது வாங்கிப்போகும், தஞ்சமென்ற நோயகலும் பிணிகள் நீங்கும் தப்பாது முனிவருட வாக்குதானும், அஞ்சாம லுலர்ந்துவிடு மப்பா சொன்னேன் ஆறாத புண்ணெல்லா மாறுந்தானே. (கஉகஎ)

## தோஷம் பீனிசம் பாண்டு இதுகட்கு முருங்கைக்குழம்பு.

ஆறவே யின்னமொரு குழம்புகேளு அப்பனே முருங்கையுடச் சாறுநாழி, தேறுவாய் கும்மட்டிக்காய்ச் சாறுநாழி திறமான யெருக்கம் பால் சேர்த்துநாழி, தூற்றமுடன் ஆலம்பால் யிச்சிப்பாலும் துடியான தழுதாழை வேலிதானும், கூறவே யிவையெல்லா மொன்றாய் மைந்தா குழம்பதுபோ லாக்கிவிடு குறியைக்கேளே. (கஉகஅ)

கேளப்பா யதிமதுரந் தேவதாரங் கெடியான யேலமுடன் சீரகமுங்கூட்டு, தாளப்பா யெண்ணெயடா தேங்காய்மட்டுந் தனதாக விவையெல்லா மொன்றாய்க்கூட்டு, நாளப்பா பாகமது பிசகாவண்ணம் நடினமாய் செய்துவர நீங்கும் நோய்தான், கூளப்பா போற்காய்ச்சி வைத்துக்கொண்டு குமுறவே தளம்போடக் குறியைப்பாரே. (கஉகசு)

குறியாக வெட்டுநாள் தளம்போட்டுக் குளிக்கவேணும் குண மாக்கி னித்தநித்தங் கூறுவாய்நீ, மறிவாகப் பத்தியம்நீ தப்பவேண்டா மகத்தான தோஷமுண்டு வகையைச் சொன்னேன், பிரிவாக யிந்த முறை பொய்யாதையா பிசகாது எந்நாளும் பிசகாதையா, அறியாமற் செய்தாக்கால் மாள்வானப்பா அசாத்தியச் செயலென்று அறிந்து கொள்ளே. (கஉஉ0)

கொள்ளவே யித்தயில முழுகும்போது குறைநோயும் பீனிசங் கள் காதிற்சீய்கள், மெள்ளவே யிவையெல்லா மோடிப்போகுமேலான பாண்டுக்கு யிதுவேயாகும், துள்ளவே துஷ்டருக் கீயவேண்டாம் துடி யான காமிகட்கு மீயவேண்டாம், கள்ளருக் கிந்தநூ லீயவேண்டாங் கண்டறிந்து கண்டறிந்து கருவைதாமே. (கஉஉக)

கண்டறிந்து சொல்லுகிறேன் மைந்தாகேளு கருவான குழம் பொன்று கருதிப்பாரு, நன்றாகுஞ் சிப்பியுமண் டுகேத்தோடும் நலமான கருமத்து வித்திேனாடும், பன்றான பூனைக்கால் வித்திேனாடும் பாங் கான எலுமிச்சம் வித்திேனாடும், கொண்டான சயிமிக்கி வித்திேனா டுங் கூட்டியே தயிலமொன்று யிறக்கிக்கொள்ளே. (கஉஉஉ)

கரும்பூனை யெலும்பின் பேதனம்.

கொள்ளப்பா யின்னமொரு கருவைக்கேளு கொடியதொரு பூனை யப்பா கருப்புவாங்கி, துள்ளுருவப் பானையிலே விட்டுமைந்தா துகை யாகப் படிபத்து கள்ளைவார்த்து, அள்ளவே கைபாகம் பிசகிடாமல் அப்பனே செய்துவர பிணிகள்போகும், மெள்ளவே யேழுநாள் விளக்குமேற்றி விபரமாய்த் தூபமிட்டுப் பூசைபண்ணே. (கஉஉங)

பண்ணவே யேழுநாள் பூசைபண்ணிப் பரிவாக மதுவோடு பல காரங்கள், நண்ணவே யெட்டொன்றாய்ப் பலியுமீந்து நலமாக நவக் கிரகந் திசைத்துப்பின்னர், குண்ணமல் செய்முறையும் கைமுறைதப் பாமல் கூறினார்கும்பமுனி யோகிதானும், எண்ணவே யொன்பதிலே யெடுத்துக்கொண்டு யெலும்பை யெல்லாம் பொரைக்கிட்டு யியல்பு பாரே. (கஉஉச)

பாரப்பா நெஞ்சிலே முளைத்தெலும்பும் பாங்காக யளவடா விர விரண்டு, நேரப்பா யவ்வெலும்பு கறுப்புகாணும் நிலையாக வெடுத்துக் கொள் பொடியும்பண்ணு, ஆரப்பா எனைப்போலச் சொல்வாரப்பா அப் பனே நாமுனக்குச் சொன்னோம்பாரு, சேரப்பா குழம்பிலே மத்தித் தேதான் திறமாகத் திலதமிட்டுப் பதனமாமே. (கஉஉரு)

ஆதமடா சொல்லுகிறேன் கேளு சேளு அன்பான குழம்பி னுட வருமைசொன்னார், ஆதமடா வுலகிலே சித்தன் சித்தன் அவன் போலே யாருமில்லை யென்பார்மட்டி, பாகுடனே யிந்தமுறை பொய் யாதையா பக்குவமா மாமுனியும் பகர்ந்தவாறு, ஆதமடா வுலகுக்கு யிஃதில்லாவிட்டால் அவரவர்க ளென்னசொல்வா ரவதந்தானே. ()

அவத்தனாய்ப்போகாதே யென்றால்பார்த்து ஆத்தாளைப் பூசை பண்ணு யெல்லாச்சித்தும், தவத்தாலே பெரிதாகவேணுமென்றால் தாயைவிட்டாற் கெதியுமில்லை தாக்கிப்பாரு, பதத்தையாஞ் சின் மயத்தைப் பணியவேணும் பாங்காகப் பராபரியைப்பணியவேணும், சிவத்தாலே காணலாம் வாலைதன்னைச் செப்புகிறேன் மைந்தனே தெளிந்துகாணே. (கஉஉஎ)

தெளிவாக குருபாத மறக்காதவர்க்குச் சித்தியடா முத்தியுண் டாஞ் செயலுமுண்டாம், ஒளிவான சபடமுள்ள வுள்ளமானால் உற் றுமே யவளறிவா ளுலகமாதா, களிவான மயேஸ்வரியைக் கண்டு தேர்ந்து கடினமாம் பூசைவிதி மார்க்கஞ்சேர்ந்து, வளியான வுள்ள மென்றால் வாக்குமீவாள், வாலையைப்போ லொருவரில்லை வாழத் தானே. (கஉஉஅ)

வாழ்த்தவே தாயைப்போ லொருவரில்லை வராமீய வவளைப் போல் வனுத்தோரில்லை, போற்றுவது யெங்களைப்போ லாருமில்லை பொறுப்பதற்குத் தாயைப்போல் பொறுப்பாரில்லை, கூற்றுவனுக் கிங்கேயொரு வேலையில்லை குறிப்பாக தட்சணாமூர்த்திவாக்கு, காத் திருந்து நித்தமாம் பூசைபண்ணக் காணலாம் சிவகுருவைக் காண லாமே. (கஉஉகூ)

குருவான பெரியோரை வணங்கிக்கொள்ளு கூசாமல் தாய்பதத் தைப் பூசைபண்ணு, மருகாதே வாலைவந்து முன்னேநிற்பாள் மகா மாய மறியார்கள் மைந்தாகேளு, அருகான சடாட்சரத்தைப் பணிய வேணும், அப்பனே நாமுனக்குச் சொன்னோம்பாரு, கருவான தொழிலை யெல்லாங் காட்டித்தந்த கரையேறக் கைகொடுப்பாள் கண்டுகொள்ளே. (கஉஙo)

கண்டுபா ரெப்படியே யென்று மைந்தா கண்மயங்கித் திரியாதே கருவைப்பாரு, நன்றாக வாதத்தில் லட்சங்காப்பு நலமாக வுரைத்தபடி யிதுவஞ்ஞூறு, உண்டானபடி நாயன் ஞானமூர்த்தி வுரைத்தமொழி ஒருபோதுங் குறைவாராது, விண்டாகக் காலாகா வசாமமுண்டு வீணருக்குச் சொல்லாதே விரும்பிப்பாரே. (கஉஙக)

பாரடா வவள்குணத்தைத் தெரியவேண்டிப் பலவிதமாய்ப் பாராட்டிக் கொள்ளுகொள்ளு, தோடாயிதற்கெல்லாம் பொறுத்தானு கில் திரைகடலும் சிகரவரை தாண்டலாகும், கூரடாயிக்குளிகை வேக மெத்த குறிப்பான சித்தர்கள்தான் செய்யுமார்க்கம், மூரடா குறியிலே கொஞ்சமப்பா முக்காலும் மனம்பொறுத்தா லொழிக்கவேண்டாம். ()

ஒழித்தார்கா ளிவனுக்குச் சாபமுண்டு வுள்ளதுவு மொழித்து விடு முறைக்கக்கேளு, அழித்திடுவாள் வாலைபப்பா கருவை யெல்லாம் அன்பாகச் சொல்லிவிட்டே னறிந்துபாரு, அழிப்பான வுலகத்தை மறக்கவேண்டும் அப்பனே தட்சணாமூர்த்திவாக்கு, பழிப்பாகமமைத் திடு முலகுக்கெல்லாம் பராபரியைப் பூசைபண்ணப் பலிதமாமே. ()

## சிப்பிபற்பம்.

பலிதமாம் சிப்பியடா பலந்தானென்று பாங்காகத் தானெடுத் துக் கோவைச்சாற்றில், மலிதமே மூன்றுதரஞ்சுத்திபண்ணி மைந் தனேகருயெருவுங் கலந்துகொட்டி, நலிதமா மிந்தமுறை பொய்யா தையா நாட்டிலே மானிடர்கள் பிழைக்கவென்று, அவியமே புடம் போடு ஆறும்போது அப்பனே யெடுத்ததனை வைத்துக்கொள்ளே. ()

## தாளகபற்பம்.

வைத்துவிடு சிப்பியுட சுன்னந்தன்னை வளமாகத் தானெடுத்து தாளகத்தின்மேலே, தைத்துமேல் பொதிக்குசீலை மண்ணுஞ்செய்து தருவாகக் குக்குடத்தி விட்டுப்பாரு, கைத்துமே தேவதைக்குப் பூசை மார்க்கம் களிப்புடனே செய்துவர மெத்தநன்று, நைத்துமே பற் பம்போ லாகுமப்பா நலமான சுன்னமென்று யெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துபின் பின்னமொரு முறையைக்கேளு யெழிலான வீர மடா பலந்தானென்று, தொடுத்துவிடு நாபியது பலந்தானென்று சொல்லுகிறேன் மைந்தனே சுண்ணமாக்கு, சடுத்தமாஞ் சுண்ணமதை யெடுத்துக்கொண்டு சரிபாககைபாகம் பிசகிடாமல், மடுத்துவிடுஞ் சுன்னத்தை யெடுத்துமைந்தா மஞ்சளிலே தான்கொடுக்கச் சிவக்கும் பாரே. (கஉ௩௬)

சிவக்கவடா சுன்னத்தை யெடுக்குநீதி செப்புகிறேன் மைந்தனே திடமாய்ப்பாரு, இவக்கமுடன் காரமடா விராகன்ரண்டு விதமான சார மடாவிராகன்ரண்டு, பவக்கமுடன் சத்தியென்ற சாரந்தானும் பாங்

காகச்சிங்கியுடன் பூநீர்தானும், தவக்கவேயிதுவெல்லா மரைக்க மைந்தா தண்ணியுண்டு சொல்லுகிறேன் தாக்கிப்பாரே. (கஉ௲எ)

## தாம்பரசுத்தி.

தாக்குறேன் தண்ணியடா யேதேயாகில் தயவாகக் கன்னியுட சாறுமைந்தா, நோக்கடா யிவையெல்லா முச்சாமந்தா னுணுக்கமாய்த் தானரைத்து வில்லைபண்ணி, ஆக்கமுடன் கைபாகம் பிசகாவண்ணம் அப்பனேசெய்துவர கைபாகங்கேள், சேக்கடா நிழலிலே யுலர்ந்த பின்பு திறமாகச் சீலமண் மூன்றுகட்டே. (கஉ௲அ)

கட்டியபின் குக்குடத்திற் புடந்தான்ரண்டு கருதியேதான் போட் டெடுத்துக்கொண்டு, திட்டமாய் நீறியது சுன்னமாச்சு திடமாகச் சொல்லுகிறேன் திடத்தைப்பாரு, பட்டமுடன் சித்தர்கள்தான் சொன்னமார்க்கம் பாங்காக கைமுறைதான் பிசகாதையா, மட்டித்த தாம்பரத்தில் கொடுத்துப்பாரு மகத்தான களிம்பை யெல்லாம் வாங் குந்தானே. (கஉ௲௯)

வாங்குமடா களிம்பதனை வாங்குமானல் மைந்தனே மறுபடியு முருக்கிக்கொள்ளு, நீங்காதே வாலையைத்தான் தியானம்பண்ணி நினை வாகப் பின்னுமப்பா சுன்னமீய, தாங்கியதோ ரிந்தமுறை சித்தர் சொல்வார் தப்பாது திண்ணமா மிந்தபாகம், ஓங்கியே தாளகத்தின் சார மீய வுத்தமனே மாற்றடா மூன்றுமாமே. (கஉசo)

மூன்றான கருவையப்பா யெடுத்துக்கொண்டு முட்டையொரு கருவினுள்ளே செவ்வகத்திச்சாறு, பன்றானசுன்னமு மதிலே கூட்டு பரிவாகச் சீலமண் ணிரண்டுகட்டு குன்றான குருபதத்தைப் பணிந்து போற்றிக் குறிப்பானச் சடாட்சரத்தைப் பணியவேணும், கன்றான க்படமெல்லா மறுத்துத்தள்ளி கருவாகமயிற்புடத்திற் கருதிப்பாரே.()

போடப்பா வதன்பிறகு வாறவிட்டுப் புசழாகத் தானரைக்க வண் ணங்கேளு, நாடப்பா யெட்டறைபாஞ் சொன்னேன் சொன்னேன் நல மாகத்தானெடுத்து வைத்துக்கொள்ளு, கூடப்பாலோகத்து மாந்தற் காக கூறுகின்ற திருமந்திர மிதுவேயாகும், மாடப்பா வேண்டியதோர் பணிதியெல்லாம் வகையாகச் சொல்லிவிட்டேன் வரிசைபாரே. ()

பாரடா யின்னமொரு கருவைக்கேளு பாங்கான பூரமப்பா பலந் தானென்று, நேரடாகாரமே பலந்தானென்று நிலையாகசெந்தியோ பலந்தானென்று, ஆரடாகைபாகம் பிசகிடாமல் அய்யனே செய்துவா கைகூடும்பார், சேரடா யிவையெல்லா மொன்றாய்க் கூட்டு சேர்த்துமே தானரைக்கச் சலந்தான் கேளே. (கஉச௩)

கேளப்பா முன்சொன்ன சுன்னந்தன்னைக் கெடியாகத் தானெடுத்துக் குமரிச்சாற்றில், நாளப்பா சுன்னமிட்டரைக்கும்போது நலமான மெழுகுபோ லாகும்பாரு, கோளப்பா வாராது யிந்தமார்க்கம் குறிப்பாகச் சொல்லிவிட்டேன் தட்சணையன், தாளப்பா வில்லைபண்ணி ரவியில்வைத்து தப்பாமல் மூன்றுநா ளுலர்ந்தபின்பே. (௧௨௪௪)

உலர்ந்தபின் சீலைமண் ரண்டுகெட்டி யுத்தமனே மறுபடியு முலர்த்திக்கொள்ளு, அலைந்திடவே வேண்டாங்கேள் மைந்தாநீயும் அருளாலூற் பொருள்கிடைக்கு மறிந்துபாரு, உலர்ந்திடா சித்தர்களு முனிவர்தாமும் வுத்தமனே செய்முறைதான் செப்பினார்காண், குலைந்திடவே போகாமல் புடமேதீரு கொடியதொரு மயிற்புடத்திற் குழையும்பாரே. (௧௨௪௫)

குழையுமடா வாறவிட் டெடுத்துக்கொள்ளு குமுறவேயதன் மேலே சீலைமண் தான்கட்டி, விழையவே பின்னுமொரு புடமேபோடு மேலான குக்குடத்திற் சுன்னஞ் சுன்னம், பிழைபடா யிந்தபாகம் சொன்னாரையா பேசாது செய்துவிடில் சித்தியாகும், தழையுமடா யின்னமுண்டு சொல்லக்கேளு தப்பாமற் சுன்னத்தை யெடுத்துக்கொள்ளே. (௧௨௪௬)

கொள்ளவே தாம்பரத் துட்டுவாங்கி குமரியுட சாற்றிலே சுத்திசெய்து, மெள்ளவே தழுதாழைச் சாறுநாழி விதமான சாற்றினுட சாறுநாழி, கொள்ளவே விராலியிடச் சாறுநாழி குறிப்பான முசுக்கையுட சாறுநாழி, வள்ளலென்ற சாரப்பா நாழிகூட்டு வளமாக விவையெல்லா மொன்றாய்ச் சேர்த்தே. (௧௨௪௭)

சேர்த்தபின்பு.செந்தலையான் வறுக்கிக்கொள்ளு திறமான காரமப்பா பணவிடைதான்கூட்டு, மாற்றிவிடு வாலைக்குப் பூசைபண்ணு மைந்தனே யேழுதா முருக்கிச்சாய்த்து, போற்றியே மருந்தினிடவேகமப்பா பொல்லாது வெகுசுறுக்கு பாருபாரு, ஏற்றியபின் சுன்னமடா பணவிடைரண்டு யிப்படியே தான்கொடுக்க யின்னங்கேளே. ()

இன்னமடா சொல்லுகிறேன் கேளுகேளு யிதமாகச் சொல்லுகிறே னேற்றம்பாரு, வன்னமடா வொன்பதுதான் மைந்தாகேளு வகையாகப் பூரணத்தில் மறைத்துச்சொன்னேன், வின்னமில்லா சித்தர்கள்தான் செய்யுமார்க்கம் விதமான மானதமாம் பூசைவேண்டும், சொர்னமடா யிதையெடுத்து வைத்துக்கொண்டு சுருதியாய்ப்படித்துக்குத் துடர்ந்து கூட்டே. (௧௨௪௯)

கூட்டடாதானமுடன் அன்னம் சொர்னம் குறையாம வீந்துவிடு ஆசியாதே, காட்டமாய் வாலைதன்னைத் தியானம் பண்ணு நலமான சித்தெல்லாம் விளங்கும்பாரு, திட்டமா மிந்தமொழி பொய்யாதையா தீர்க்கமாய் செய்துவா முறைதப்பாது, மூட்டமா யின்னமொரு முறையைக்கேளு முத்தியுடன் சொல்லுகிறேன் முனிந்துபாரே. (கஉ௫0)

பாரடா மேனியுட சாறுபடியொன்று பாங்கானகொவ்வையுட சாறுபடி யொன்று, சேரடா யழிஞ்சியுடசாறுபடியொன்று திறமான இலுப்பையுடசாறு படியொன்று, கூரடாகாணியின்சாறு படியொன்று குறிப்பானமேனியின்சாறு படியொன்று, மாரடா கடுக்காயின்சாறு படியொன்று மைந்தனே யிவையெல்லாம் வைத்துக்கொள்ளே. (கஉ௫க)

வைத்திடவே பானையிலே யிட்டுமைந்தா வளமாக மேலுமொருவோடுமூடி, தைத்திடவே பூமிக்கு ளேழுநாளுந் தண்மையாய்த் தான் புதைத்துத் தூபமேற்றி, கைத்திடவே கணபதியைப் பணிந்துமே தான் கைலங்கிரிவாசல்பதம் பெறுகவேண்டும், மைத்திடவே யெடுத்த தனை மேலேமைந்தா வரிசையாய்க் கழுதைநீர் படிதான் வாரே. ()

வார்த்தபின் பதையெடுத்து வைத்துக்கொண்டு மைந்தனே யின்னமொரு வரிசைகேளு, மூர்த்ததோர் கள்ளியடா பட்டைபலமொன்று முறையான தழிஞ்சியடா பட்டை பலமொன்று, ஆர்க்கமுடன் தழுதாழைச்சாறு படியொன்று அப்பனே வேலிபிடச்சாறு படியொன்று, சேர்த்துவிடு திருகுகள்ளி பட்டை பலமொன்று திறமாக விவையெல்லா முலர்த்திக் கொள்ளே. (கஉ௫௩)

உலர்ந்தபின் பிதுவெல்லாம் விரலளவாய் நறுக்கி வுத்தமனே யிடாவிவிட்டுக்குழித் தயிலம்வாங்கி, செலத்திலே நாலொன்று சாறுவிட்டு திடமாக யெடுத்ததனைப் பதனம்பண்ணு, சலர்த்தமுடனிந்த முறை பொய்யாதையா சாற்றினர் வேதமுனி தட்சணையன், பிலத்துதடாயித்தயில மொருவர்காணார் பேதனமாம் வாதவித்தை பிரிவைக் கேளே. (கஉ௫௪)

கேளப்பா தாம்பரம் பலந்தானென்று கிருபையாய்ச் சுத்திபண்ணித் தயிலம்விட்டு, நாளப்பா யெட்டுநாள் கழித்தபின்பு நலமாகச் சொல்லுகிறே னெடுத்துக்கொள்ளு, தாளப்பா காரமிட்டு பிசறிக் கொண்டு தப்பாதுகைபாகம் பிசகிடாமல், மேளப்பா குகையில் வைத்தூதும்போது மேலான களிம்பெல்லாம் விட்டுப்போமே. (கஉ௫௫)

## சாரக்கட்டு.

விட்டுப்போ மதன்பிறகு மைந்தாகேளு விதமான சாரமடா சட்டி யிய, பட்டுடனே சிவந்துவிடு மைந்தாகேளு பரிவான சாரத்தின் பலந் தானப்பா, திட்டமுட னிந்தமுறை முனிவர்சொன்னார் தேறினார் நவ கோடி சித்தரப்பா, கட்டியடா சொர்னமுமா மாற்றேறுபத்து கைகண்ட முறைசொன்னேன் கண்டுபாரே. (௧௨௫௬)

கண்டுபார் சாரத்தின் கட்டைக்கேளு கருவான வாகையுட தைலம் வாங்கி,குண்டான சாரத்தைச் சுத்திபண்ணிக் குறையாம லறைமருந்து கூறக்கேளு, தின்றான சரக்குவகை சமனதாக திறமையாய் வரிசை முறை தப்பாமற்றான், நன்றுபார் மூலமடா வரைத்து மைந்தா நலமான சிறுபிஞ்சு தயிலந்தானே. (௧௨௫௭)

தானாகத் தயிலம்விட் டரைத்துமைந்தா தருவான முதுகையுட யிலையுங்கட்டு, தேனான நீர்விட்டு அரைத்துமைந்தா திறமாகச் சாரத் தின் மேலேயப்பு, கானான மயேஸ்வரிக்குப் பூசைமார்க்கம் காட்டியே எட்சணித்துக் கருதவேண்டும், மானுகேள் சீலைமண் ணேழுகட்டு மைந் தனே மயிற்புடத்தில் கட்டிப்போமே. (௧௨௫௮)

கட்டிப்போ மின்னமொரு கருவைக்கேளு கருவாழைக்களச்சிச் சார்.படிதானென்று, முட்டாத வழிஞ்சிச்சார் படிதானென்று முறை யாகத் தானெடுத்துக் குறுக்கிக்கொள்ளு, திட்டமுட னிந்தமுறை தப் பாவண்ணம் தீர்க்கமாம் தேவதைக்குப் பூசைமார்க்கம், பட்டியிலே மூன்றுநாள் புதைத்து மைந்தா பாங்காகத் தீபமிட் டெடுத்துக் கொள்ளே. (௧௨௫௯)

## தாளகக்கட்டு.

எடுத்தபின்பு தாளகந்தான் பலந்தான் வாங்கி யிதமான தயிலத்தி லூறவிட்டு, தொடுத்திடவே செம்முள்ளி யிலையரைத்து திடமாக முன் சொன்ன படிபோல் மைந்தா, கொடுத்திடவே யிந்தமொழி பொய்யா தையா கூறினார் தட்சணாமூர்த்திவாக்கு, மடுத்திடவே சீலைமண் ணேழு சட்டி வகையாகக் குடக்குடத்தில் கட்டியாமே. (௧௨௬0)

கட்டியபா மதன்பிறகு யெடுத்துக்கொண்டு சருவான மூலிபடா சொல்லக்கேளு, பட்டித்த சிற்றகத்திப் பூவில்சாறு வளமாகத் தான் பிழிந்து வைத்துக்கொண்டு, குட்டியே வெள்ளகத்திச் சாறுநாழி குறிப் பாக செவ்வள்ளிச் சாறுநாழி, வெட்டியே செம்பிரம்பு பலமேதாக்கி விதமாகத் தானுருக்கிச் சாற்றிலூற்றே. (௧௨௬௧)

ஊத்தடா யிப்படியே அஞ்சுதரமையா வுருக்கியேதான் கொடுக்க நிறமோவேறு, சோத்தடா தாளசந்தான் மூன்றிலொன்று

திறமாகத் தான்கொடுக்கச் சாறுமூற்ற, ஆத்தாளு மெந்தனுக்குச் சொன்னாள்பாரு அப்பனே நாமுனக்கு மருளினோம்பார், மாத்தடா வாருது மைந்தாகேளு வாலையைத்தான் பூசைபண்ணு வகையாய்த் தானே. (கஉசுஉ)

வகையாகத் தாளகத்தை யெடுத்துக்கொண்டு மகத்தான மூலி யுண்டு யாதென்றாக்கால், அகையுற்ற நீலியுட சாறுவிட்டுச் சொல்லு கிறேன் முச்சாம மரைக்கக்கேளு, பகையான துருசுடனே காசுக்கட்டி பாங்கான மிருதாருசிங்கி யப்பா, மகையான காரமுடன் சீனங்கூட்டி மைந்தனே வில்லைபண்ணி வைத்துக்கொள்ளே. (கஉசுங)

கொள்ளடா மூன்றுநா ளுலர்ந்தபின்பு கொடியான சீலைமண் மூன்றுகட்டு, மெள்ளவே யுலர்ந்தபின்பு மைந்தாகேளு விதமாகக் குக் குடத்தில் கட்டிச்சுன்னம், அள்ளவே மண்டலந்தான் கொண்டாயா னால் அப்பனே திரேகமது சட்டைதள்ளும், துள்ளவே சுன்னத்தை யெடுத்துக்கொண்டு சுருதியுடன் கருவினுட சூட்சம்பாரே. (கஉசுச)

## நாகக்கட்டு.

சூட்சமடா தாளகத்தின் சுன்னமப்பா சொல்லுகிறே னிகேளு சுத்திபாரு, மாச்சுள்ள நாகத்தைக் கட்டுமன்னா வகையுண்டு சொல்லு கிறே னேதென்றாக்கால், சூட்சமா மிந்தமொழி பொய்யாதையா சொல்லுகிறேன் தட்சணா மூர்த்திநாயன், பாச்சாணே வெனதும்பை குப்பைமேனி பரிவான நிமலியின் பட்டை கூட்டே. (கஉசுரு)

கூட்டியே யிவையெல்லாங் குழம்பதாக்கிக் குறையாமல் நாக மடா பலந்தான்வாங்கி, நீட்டியே சிறிதாக முறித்துமைந்தா நிலையான தாமரையும் பயிற்றின்சாறும், தீட்டமுடன் கைபாகம் பிசகிடாமல் சேர்த்துமே மருந்துவகை செப்பக்கேளும், மூட்டியே மூன்று நாளூறப்போட்டு முதலரைத்த மருந்தையுங் கூடச்சேர்த்தே. (கஉசுசு)

சேர்த்துமே யதிலிட்டு வற்றிற்றானால் திறமாக நாகத்தை யெடுத்துக்கொள்ளு, சேர்த்தடா தாளகத்தின் சுன்னமைந்தா திறமாக மேற்பொதிந்து குழம்பு அப்பி, கோர்த்துமே பிசகதுதான் சோரா வண்ணம் குறிப்பான தட்சணா மூர்த்திவாக்கு, சேர்த்துமே சீலைமண் ணாறுகட்டு செப்புகிறேன் மயிற்புடத்தில் சித்தியாச்சே. (கஉசுஎ)

சித்தித்த நாகத்தை யெடுத்துக்கொண்டு தேவிக்குப் பூசைவிதி செப்பக்கேளு, அத்திமுகன் பூசையிடு முன்னேயப்பா ஆத்தாளைத் தியானமிடு யெல்லாமாகும், பத்தியுடன் சிவபதம் பணிந்துமேதான் பாங்காக தூபமுடன் தீபங்காட்டு, முத்திபெற மூலத்தைத் தியானம் பண்ண முறையொன்றுந் தப்பாது முடிக்கலாமே. (கஉசுஅ)

முடிக்கலாந் தாம்பரத்தில் வைத்தாயானல் முறையாக வண்ண மடா யெட்டே முக்கால், அடிக்கலா முடையாது களிம்புமில்லை அப் பனே யழிவில்லை பழியுமில்லை, துடிக்கவே காயாதி கற்பந்தானும் துப்புரவாய் சொரூபத்தைப் பணியவேண்டும், பிடிக்கலாந் தாளகத்து சுன்னத்தாலே பேசாதே சொல்லுகிறேன் பேறுதானே. (௧௨௬௬)

போகு மூராகும் பிழைப்புமாகும் பேச்சியென வாச்சியுட கிரு பையாலே, ஆறுகும் பதமா யிரமுமாகும் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரு, கூறுன நூல்களு மனந்தலட்சம் குறிப்பான சில்லரைக் கோடாகோடி நாறுகும் வாதவித்தை காப்போலட்சம் நுணுக்கமடா சிக்காமல் கெட்டார்பாரே. (௧௨௭0)

கெட்டாலுந் தாழ்வில்லை யழிவேயில்லை கிருபையாய்த் தாய் பதத்தைப் பூசைபண்ண, முட்டாமல் தானிருந்து ரட்சித்தப்பா முறையான வாதவித்தை நத்திக்கொள்வாய், திட்டமுடன் தட்சணு மூர்த்திநாயன் தெளிவாகச் செப்பினர் மாந்தற்காக, பட்டாலும் பல மில்லை யென்றுசொன்னல் பாதகனே யிவனென்று பழிப்பார் பாரே. (௧௨௭௧)

பழிப்பவர்க்குச் சொல்லாதே ஞானக்கட்டை பார்க்கவே வெளி யாகும் பரிவாய் மன்ன, அழிப்பார்க ளனேகம்போது வயதுகாணர் அற்பமென்பார் ஞானத்தை யழிவுசொல்வார், வழிவில்லா நூல்களுந் தான் பிசகாதப்பா வண்மையாய் சித்தர்கள்தான் செய்யுமார்க்கம், கழித்தாலுங் கழியாதே சொன்னேன் மைந்தா கருவாலே வித்தை யெல்லாங் கண்டுபாரே. (௧௨௭௨)

கண்டுபா ரின்னமொரு கருவைக்கேளு கடலான நாவுரிஞ்சிவேர் பலமதொன்று, தெண்டான கருவிஞ்சி பலந்தானென்று திறமாகச் சிறு பூளைப் பலமுமொன்று, உண்டான மருந்துவகை யெல்லாஞ்சித்தி வுத் தமனே முறையோடே செய்துபாரு, பண்டான சிற்றகத்திப் பலமு மொன்று பரிவாகத் தூக்கியிவை யெடுத்துக்கொள்ளே. (௧௨௭௩)

தூக்கியே மிடாவிலிட்டுத் தயிலம் வாங்கிச் சுருதியாய்ப்பொற் றலையான் சாறுகூட்டு, தாக்கியே மெழுகுபோல் வற்றவைத்து தரு வான பீதுக்சலத்தி விட்டுமைந்தா, ஊக்கமுடன் செய்துவர சித்தியா கும் வுத்தமனே பிராணய மயமுந்தோன்றும், பாக்களவு தானெடுத்து வைத்துக்கொண்டு பாஷாணக் கட்டையொன்று வாங்கிக்கொள்ளே. ()

## பாஷாணக்கட்டு.

கட்டையொன்று தான்வாங்கி மைந்தாகேளு சுசக்கடா பூக மென்ற சாறுமைந்தா, முட்டையொன் றுடைத்தூற்றிச் சுத்தியாக்கி முறையாகச் சிப்பியுட சுன்னம்பூசு, அட்டமா சித்துகளு மாகும்பாரு அப்பனே தட்சணா மூர்த்திவாக்கு, திட்டமாய் முன்தயில மேலே யப்பி திறமாகச் சீலைமண் ரண்டுகேட்டே. (கஉஎரு)

கட்டிவைத்து ரவியிலே யுலர்ந்தபின்பு கைமுறையாய்க் குக்குடமே தீர்த்தாயாகில், முட்டறவே பாஷாணக் கட்டுமாகு முறை சொன்னேனேன் மைந்தனே யெடுத்துக்கொளளு, திட்டமுடன் செய்த வர்க்கு எல்லாஞ்சித்தி சீர்பெறவே சின்மயத்தை தேடவேண்டும், கட்டான கட்டியடா குளிர்ந்துநீறுங் கைம்முறையாய்ப் பூசைபண்ணி யெடுத்துக்கொள்ளே. (கஉஎசு)

கொள்ளப்பா தாம்பரத் தட்டுவாங்கிக் குமுறவே கோமயத்தில் சுத்திசெய்து, விள்ளுகிறேன் குகைபண்ணித் தாம்பரம் வைத்து விதமாக வுருகிவிடு முன்தயிலம்வாரு, புள்ளுகின்ற மருந்துவகை செப்பக் கேளு புகலான தட்சணா மூர்த்திவாக்கு, துள்ளுகின்ற பாஷாணம் நாலிலொன்று சுருக்கிடவேவெள்ளியும் தொடர்ந்து கூட்டே. (கஉஎஎ)

கூட்டப்பா மறுபடியு முருக்கிக் கொள்ளு குருவான மூலியுண்டு யேதென்றுக்கால், தேட்டப்பா சிவன்வேம்பில் சிறிதே கண்ணி திடமாகத் தானெடுத்து நறுக்குமைந்தா, ஆட்டப்பா யிந்தவித்தை யதீதப்போக்கு அப்பனே நாமுனக்கு அறைந்தவாறு, மாட்டப்பா வுமிநீருமச்சாறுங்கூட்டு மைந்தனே பாஷாணமதிலுங் கூட்டே. (கஉஎஅ)

கூட்டப்பா பாஷாண முகத்திலீயக் குருவான சாறுடனே முகத்திலூத, கூட்டப்பா யிதுபோலே யெங்குமில்லை குருவான தீயானைக் கூட்டவேண்டாம், நோட்டமுட னிந்தமுறை பொய்யாதையா நுணுக்கமாம் தட்சணா மூர்த்திவாக்கு, மாட்டப்பா சரிகையது வெள்ளியாகு மறைவில்லை குருவினுட கடாட்சந்தானே. (கஉஎகூ)

## சவ்வீரக்கட்டு.

குருவாக யின்னமொரு கருவைக்கேளு கூறுகிறேன் மைந்தனே கொடுத்துப்பாரு, திருவான அத்தியுட வித்துமைந்தா திறமாகக் கட்டி யொன்று வாங்கிக்கொள்ளு, மருகாதே சொல்லுகிறேன் மைந்தாகேளு வால்மீகர் செய்தவகை யிதுவுமாகும், தருவான வொன்றுவகை மூலி யப்பா சாற்றுகிறேன் சாம்பிராணித் தயிலம் வாங்கே. (கஉஅ0)

வாங்கியே யழிஞ்சியுட விதைபடிதானென்று மைந்தனே தாழை விதை படிதானென்று, பாங்கான கிச்சிலிப்பை படிதானென்று பரி வானவிதையெல்லா மொன்றாய்க்கூட்டி, தீங்கில்லாதைபாகம் பிசகிடா மல் தீர்க்கமாய் செய்துவர எல்லாஞ்சித்தி, தாங்காதே குழித்தயில மிறக்கிமைந்தா சாம்பிராணித் தயிலமுங் கலந்துகொள்ளே. (௧௨௮௧)

## வீரசுத்தி.

கொள்ளவே வீரமதுபலந்தான் வாங்கிக் கூராகப் பசுவினுடநீரில் மைந்தா, விள்ளவே மூன்றுதரஞ் சுத்திபண்ணி விதமாகச் சாரத்தை யெடுத்துக்கொண்டு, அள்ளவே யிப்பாகம் பிசகிடாது அப்பனே தட் சணு மூர்த்திவாக்கு, எள்ளடா தயிலம்விட் டரைத்துமைந்தா விதமாக வீரத்தின் மேலேபூசே. (௧௨௮௨)

பூசியே ரவியிலே யுலர்ந்தபின்பு புசழாசச் சீலைபண் ரண்டுசுட்டு, மாசிலாக்குக்குடத்தில் சட்டிப்போகு மைந்தனே சொல்லுகிறேன் வரிசைகேளு, வாசிபோல்யிந்நூலு மருத்துவமெத்த மகாகோடி சங் கமிதுக்குள்ளேயுண்டு, காசில்லையென்றுசொல்லியலைய வேண்டாங் கைகண்ட முறையுண்டு கண்டபாரே. (௧௨௮௩)

பாரடாவீரத்தையெடுத்துக்கொண்டு பாங்கான தாம்பரத்தைச் சுத்தியாக்கி, சேரடாகுகைபண்ணிக்குகையில் வைத்துதிறமாக வுரு கையிலேபத்திலொன்று, தூரடாயிம்மருந்து வேகமெத்த தூர்மார்க் கற் கிந்தாலே மோசம்மோசம், கூரடாவீரத்தைக் கொடுத்தபின்பு குறிஞ்சான சாறப்பா கொஞ்சங்குத்தே. (௧௨௮௪)

குத்தியபின் னுறவிட் டெடுத்துக்கொள்ளு குறியடா பதினெண் பேர் சித்தரைத்தான், பத்தியாய்த் தொழுதுவிடு மைந்தாகேளு பார் வதிக்குப்பூசையிடு பலிதமாகு, சித்தியாய் ஞானத்தை யறியவேண் டும் சீர்பெறவே சின்மயத்தைப் பணியவேண்டும், முத்தியாமேதென் ருல் வாதவித்தை முடிக்கலாஞ் சொல்லுகிறேன் முறையிற்றனே. ()

முறையாகத் தாம்பரத்தி லிந்தாயாளுல் முன்சொன்னவர்ன மடா முயன்றுகாணும், விரையாதே விரைத்தாக்கா லெல்லாம்போச்சு வெளியாகப் பாடிவிட்டேன் மைந்தாகேளு, துறையாக சைபாகம் பிச கிடாமல் துடியாக செய்தாக்கால் எல்லாஞ்சித்தி, முறையாக பின்ன மொரு கருவைக்கேளு மூர்க்கமுள்ள தழுதாழைவேர் பலந்தான் பத்தே. (௧௨௮௬)

தாளப்பா சிறுதாணிவேர் பலந்தான் பத்து தனியாகக் குப்பி வேர் பலந்தான் பத்து, கேளப்பா வாடுதொடா மூலிவேர் பலம்பத்து செடியான முருங்கைவேர் பலமோபத்து, வாளப்பா சாரத்தின் பருப் புங்கூட்டு வாகாசப்பூனைக்கால் வித்துஞ்சேரு, நாளப்பா வெட்டுநா ளுலர்த்திக்கொண்டு நறுக்கடா விரல்நீளம் நன்றாய்த்தானே. (கஉஅஎ)

நன்றாகவிவைவெல்லாம் நறுக்கிக்கொண்டு நலமாக மறுபடியுமுலர்த்துமைந்தா, ஒன்றாகத்தான்போட்டுக் குழித்தயிலம் வாங்கி யுத்தமனே தயிலத்தை யெடுத்துக்கொண்டு, பன்றாக மண்டலந்தான் முழுகிவந்தால் பாங்காக வியாதியெல்லாம் நீங்கும் நீங்கும், விண்டேனினி ன்னமொன்று சொல்லக்கேளு விபரமாயறிந்துநீ செய்துகொள்ளே. ()

கொள்ளடா துத்தமொரு பலந்தானென்று குறையாமல் தான் வாங்கி யெடுத்துக்கொள்ளு, விள்ளுகிறேன் முலைப்பாலில் சுத்தி பண்ணி விதமாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு, புள்ளியுட மூலியப்பா சஞ்சிமூலி புனிதமாம் கையானின் மூலிதானும், கள்ளியடா வேருடனே குப்பைமேனி கருதியே தானெடுத்துத் தயிலம்விட்டே. ()

விட்டபின்பு தானரைத்து துத்தத்தின்மேல் விதமாகத் தானப் பிப் பூசிப்போடு, திட்டமாய் ரவியிலே யுலர்த்திக்கொள்ளு சீலைமண் மூன்றுகட்டு திறமாய்ப்பாரு, வட்டமுடனிந்தமுறை பிசகா வண்ணம் வாகாகச் செய்திடவே எல்லாஞ்சித்தி, கட்டிபடாதானீறு மயிற்புடத்தில் கருவாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (கஉகூ0)

வைத்தபின் பதைபெடுத்து வைத்துக்கொண்டு வளமாகச்சொல்லுகிறேன் வரிசைகேளு, பொற்றலையான் சார்விட்டு மைந்தாகேளு புகழாகக் காரமுடன் சாரங்கூட்டு, முத்திபெற வயித்தியமும் பொய்யில்லாமல் முக்கியமுடன் மருந்துவகை செப்பக்கேளும், பத்தியாயண்டத்திரேடுங்கூட்டு பரிவாகவில்லைபண்ணி ரவியில் வையே. (கஉகூக)

ரவியிலே வைத்துநன்றா யுலர்ந்ததானால் நலமாகச் சீலைமண் மூன்று கட்டி, வலியானபேர்களுக்குக் காட்டவேண்டா மைந்தனே குக்குடத்தில் மாண்டுபோகும், பலியான மானதமாம் பூசைமார்க்கம் பக்குவமாய்செய்துவர வசியமாவாள், நவியான வாலைக்குப்பூசைபண்ணு நன்றான சுன்னமுமாம் நன்றாய்த்தானே. (கஉகூஉ)

நன்ருகச் சுன்னத்தை யெடுத்துமைந்தா நலமாக வெள்ளையிலே பத்திலொன்று, விண்டேனுனீந்துவிடு வன்னங்கேளு வெள்ளையடா நாலாகும் விதமாய்ச் சொன்னேன், தொண்டுசெய்து யிந்நூல் வாங்கு வாங்ரு துதிபெறவே சின்மயத்தைப் போற்று போற்றுசண்டாயோ யிதையெடுத்து வைத்துக்கொண்டு களிப்பறவே யின்னமொன்று கருவைக்கேளே. (௧௨௯௩)

கேளப்பா துத்தத்தின் சுன்னத்தோடே கெடியான வீரமாங்கட் டுங்கூட, வாளப்பா வர்னமது பத்துகாணு மைந்தனே சொல்லு கிறேன் வரிசைசேளு, கோளப்பாவாரர்து எப்போதுந்தான் குடிலயா மிந்தமொழி பொய்யாதையா, தாளப்பா வாலைக்குப்பூசைபண்ணு தவ ருதேசொல்லுகிறேன் தாக்கிப்பாரே. (௧௨௯௪)

## நாய்ப்பாகல் தயிலம்

பாரடா யின்னமொரு கருவைக்கேளு பாங்கான நாய்ப்பாகல் களச்சிவித்து, சேரடா சீந்தியுடவித்துகூட்டு திறமான பருத்தியுட வித்துங்கூட்டு, கூரடாவேம்பினிட வித்துங்கூட்டு கூரான காக்கணத் தின் வித்துங்கூட்டு, மாரடா தாமரையின் வித்துங்கூட்டு மைந்தனே நிரையொன்ருய்த் தூக்கிக்கொள்ளே. (௧௨௯௫)

தூக்கிநிறை யொன்ருகத் தூக்கிமைந்தா சொல்லுகிறேன் ரவி யிலே யுலர்த்திக்கொள்ளு, பாக்கியமாய்க் குழித்தயிலம் வடித்துக் கொண்டு பரிவாக வாலைக்குப்பூசைபண்ணு, தாக்கியே மயேஸ்பரி யைப் பணிந்துமேதான் தப்பாமல் அட்சரத்தை யோதிக்கொண்டு, வாக்கொன்றும்பேசாதே மைந்தாகேளு வரிசையாய்ச் சொல்லு கிறேன் மவுனம்பாரே. (௧௨௯௬)

மவுனமாய்த் தயிலத்தை யெடுத்துக்கொண்டு வளமாக சின்னி யொடுநாயுருஞ்சி, தவனத்தைத் தானடக்குங் கமுகம்பூவுந் தானுக விவையெல்லாம் தயிலம்விட்டாட்டி, கவனமுடன் பிரயோகஞ் செய்தா யானுல் தைலாசபரதிக் கேறலாகும், பவனத்தில் வைத்துவிடுமைந்தா சொன்னேன் பலருக்குங் காட்டாதே பலியாதென்றே. (௧௨௯௭)

பலிதமாய்த் துருசதனை வாங்கிமைந்தா பாங்கான அரைமருந்து மேலேபூசி, எலிதான யிலையரைத்து அதன்மேற்பூசி யெள்ளடா தா னரைத்து அதன்மேற்பூசி, அலராமல் எழுசீலை செய்துமேதான் அப் பனே ரவிதனிலேகாயவைத்து, கிலராத சீலைமண்ரண்டுகட்டு செப்பு கிறேன் ரவியிலே யுலர்த்திக்கொள்ளே. (௧௨௯௮)

உலர்த்தவே மூன்றுநா ளுலர்ந்தபின்பு உத்தமனே மயிற்புடத்தி லற்றுப்போகும், பிலக்கவே யிதையெடுத்து மைந்தாபாரு பேசாதே சுன்னமடா பிலத்துக்கொள்ளும், பலக்கவே தேகத்திற்காதி யாகும் பார்க்கவொண்ணு மருந்தினிட வேகமெத்த, ஜலத்திலே மஞ்சளிட்டுக் கலக்கிக்கொண்டு தீர்க்கமா யிச்சுன்ன மிடச்சிவக்கும்பாரே. (கஉகூகூ)

சிவந்தபின்பு சுன்னத்தை யெடுத்துக்கொள்ளு திறமாகச்சொல் லுகிறேன் செய்யக்கேளு, தவமான தாம்பரத்தில் கொடுத்தாயாகில் தப்பாது வர்னமடா பத்தேகாலாம், நவமான லோகங்களில் கொடுத் தாயாகில் நவிலவே எட்டறைதா னுணிக்கொவ்வும், பவமான வெள் ளியிலே கொடுத்தாயாகில் பரிவாக வதன்முக்கா லேறும்பாரே. ()

ஏறுமடா யிதற்கெல்லாம் தெய்வம் வாலையிவளைவிட்டால் கெதி யில்லை யெல்லாம் வாய்க்கும், கூறுவாள் நம்மனுக்கு குருவே தெய் வம் கூப்பிட்டா லேனென்பாள் கொடுஞ்சிபப்பா, தூறுவாள் ஒரு காலம் வசியமாகாள் சொன்னபடி தூபமிட்டு அழைக்கவேணும், மாறு வாள் மாராட்டங் கண்டாளாகில் வாங்கிடுவாள் பொல்லாத வல்லிதா னே. (கங0க)

வல்லினமா யின்னமொரு கருவைக்கேளு மகத்தான மண்டை யுட வோடுமைந்தா, கல்லிலே தானிடித்துத் தூளதாக்கிக் கள்ளியுட பாலிலே குழைத்துக்கொண்டு, புல்லிலே மத்தங்காய் தானுங்கூட்டி புகழாக கருவினிட ஆட்டம்பாரு, சல்லியென்னும் சிப்பியிலே யடை த்துமைந்தா தப்பாது செய்துவரச் சித்திமைந்தா. (கங0உ)

மைந்தனே மூலியுண்டு சொல்லக்கேளு வகையான வமுக்குரு சிறிதேபாகும், உந்தனிட வுமிநீருசாறு வூற்றிவிடு யிற்புறமுமடைத் துப்போடு, எந்தவித நூலிலும் யிந்தமார்க்கம் எடுத்துரைப்பாராரு மில்லை சித்தர்தாமும், தந்திரமாய்ச் சீலைமண் மஞ்சுகட்டு தவறாதே யயிற்புடத்தில் ரண்டுதீரே. (கங0ங)

தீரப்பா புடமிரண்டு தீர்த்தாயாகில் திறமாக வாறவிட் டெடுத் துக்கொள்ளு, ஊரப்பா மறுபடிதான் காரங்கூட்டி வுருக்கிவிடு வெள் ளியது ஆகுமப்பா, ஓரப்பா மாற்றதுவு மென்னசொல்வேன் வுத்த மனே நாமுனக்கு அறைந்தோம்பாரு, சேரப்பா யிதுபோல வித்தை யில்லை செப்புகிறேன் வாதத்தில் தெளிவுதானே. (கங0ச)

தெளிவாக யின்னமொரு சேதிகேளு தேகத்தைப் பேணுங்கா ணில்லாவிட்டால், அளிவாகப் போய்விடுஞ் சொன்னேன் சொன் னேன் அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரு, தெளிவாசயிந்தநூல் சொல்லுமப்பா தேட்டையாய் நாமெடுத்துரைத்தவாய்வு, வளியாகக் கற்பங்களுண்டு மைந்தா வகையாகச் சொல்லுகிறேன் வண்மை தானே. (௧௬0௫)

தானென்ற வாசையெல்லாம் விட்டுத்தள்ளி சமுசார மாய்கை யிலே தயங்கவேண்டாம், ஊனமாய்க் கெடுக்காதே திரேசந்தன்னை வுறுதியாய்ச் சொல்லுகிறே னுண்மை மைந்தா, நானென்ற வியாதி யெல்லாம் நீங்கும்நீங்கும் நாடினுர் சதுர்முகச் சித்தரப்பா, தேனுன வமுர்தமுண்ணுந் தாயைப்பூசி சித்திக்கக் கற்பமுண்டு செப்பு றேனே. (௧௬0௬)

செப்புகிறேன் கொடிவேலி பசுவின்வெண்ணெய்த் திறமாகச் சமன்கலந்து மழித்துவுண்ணு, ஒப்புகிறேன் குன்றிநன்ருய்க் கவஞ்சி மட்டு முத்தமனே யதன்பிறகு சொல்லக்கேளு, தப்பில்லா யிந்த முறை பொய்யாதையா சாற்றுகிறேன் தட்சணுமூர்த்திநாயன், அப் புகிறேன் பாஷாணம் வருஷமுண்ணு அப்பனே யதன்பிறகு சொல் லக்கேளே. (௧௬0௭)

கேளப்பா செந்தியொரு வருஷமுண்ணு செ்டியாகச் சாமமது வருஷமுண்ணு, தாளப்பா காயமது சித்தியாகுந் தன்மையில் வாத மென்ற கர்மமர்ச்சு, கோளப்பா வாராது ஒருக்காலுந்தான் கொற்ற வனே மும்மூர்த்தி வுரைத்தவாக்கு, வாளப்பா வமுரியைநீ தள்ள வேண்டாம் வாதியென்ற தொழிலுக்குக் குருவுமாகும். (௧௬0௮)

ஆமப்பா அயத்திலே சொல்லக்கேளு அருளான தும்பையினல் சாறுசேர்த்து, காமப்பா வமுரியைத்தா னதிலமுக்கி கைமுறையாய்க் காய்ச்சிவிடு பகுப்புமாகும், ஏமப்பா சக்கலாதேவிபூசை எழிலான சின்மயத்தின் பூசைவேண்டும், நாமப்பா குறையாது தேவிபூசை நல மாகச் சொன்னேனு நாட்டில்தானே. (௧௬0௯)

நாட்டிலே யிருக்கலா மனேககாலம் நல்லவகை யிக்சற்ப முண் டாயாகில், கூட்டங்கே ளறிவில்லை மைந்தா சொன்னேன் குறித்திட் டேன் குவலயத்தி லிருக்கவேண்டி தீட்டமுட னிந்தமுறை பொய் யாதையா தெட்சணுமூர்த்தியிட வாக்குபொய்யா, பாட்டிலே சொல் லார்கள் யிந்தபாகம் பரிவாகச் சொல்லுகிறேன் பாருபாரே. (௧௬௧0)

பாரடா யிப்படியே நின்றாயாகில் பாரபரியை யென்றைக்கும் பார்க்கலாகும், கூரடா சிகரவரை காணலாகும் குறிப்பான சடாட்சரத்தை யறியலாகும், நேரடா யிந்தவித்தை யதீதப்போக்குத் தெளிவாகுஞ் சித்தர்கள்செய்யுமார்க்கம், சோடா சிவபதவி சேர்ந்துநில்லு சிக்குமடா சித்திமுத்தி குளிகைதானே. (கஙகக)

குளிகையா மிவையெல்லாந் தியானம்வேண்டுங் கோபமென்ற மூலையடா யறுக்கவேண்டும், அழியாத பதவியடா வாங்கவேண்டும் ஆத்தாள்தன் திருமூலைப்பா லுண்ணவேண்டும், சுழியான நிலைதனிலே நிற்கவேண்டும் சூட்சாதி பொருளெல்லா மறியவேண்டும், கழியாத நாலையுமே கட்டவேண்டுங் கைலாச பரவெளியைக் காணுந்தானே. (கஙகஉ)

காணுமடா அண்டமொன்று பிண்டமொன்று கண்ணாலே காணலாங் கருதிக்கொள்ளு, ஊணுமடா புத்திவைத்தா னென்றாய்க்கொண்டு வுருகவே தியானமெல்லா முருண்டுகாணும் தோணுமடா கடைக்காண்டம் வெளியாய்த்தோன்றுஞ் செப்பரிது வித்தையிது யாருஞ்சொல்லார், ஆணுவத்தை யெண்ணாதே மைந்தாகேளு அருளோடு பொருளோடு பறிந்துபாரே. (கஙகங)

பொருளாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு பூவான கமலத்தை மனதிலுண்ணு, இருளான யிருளெல்லாம் வெளியேகாணு மிருதயத்தில் நினைத்ததெல்லா மெடுக்கலாகும், பொருளான பொருளெல்லாங் காணலாகும் பூவுலகில் இந்தவித்தை பெரிதுகண்டீர், மருளான குருபதத்தை நாடிநின்றால் வாழலா மைந்தனே வகையாய்ப்பாரே. (கஙகச)

## ஏககட்டுவகைசரக்கு.

பாரடா யின்னமொரு வகையைக்கேளு பாங்கான நாபியொரு பலந்தானென்று, நேரடா பாஷாணம் பலந்தானென்று நிதமாகுங் கெந்தியொரு பலந்தானென்று, சேரடா வெள்வங்கம் பலந்தானென்று சிறப்பான சூதமடா பலந்தானென்று, கூர்டா நாகமது பலந்தானென்று, கூட்டுவா யதன்பிறகு சொல்லக்கேளே. (கஙகரு)

சொல்லுகிறேன் சூதமடா பலந்தானென்று சுருதியுள்ள காரமடா பலந்தானென்று, விள்ளுகிறேன் துத்தமொரு பலந்தானென்று விதமான துருசடா பலந்தானென்று, புல்லமொரு சவுக்காரம் வழலைதானும் பூட்டவே யெச்சரக்குஞ் சுத்தியாச்சு, நல்லதொரு சாதிக்காய் பலந்தானென்று நலமாக வீரமொரு பூரம்ரண்டே. (கஙகசா)

பூரமுடன் சினமடா பலந்தான்ரண்டு பொருந்தியே சரியாக யெல்லாம்நீக்கி, வாரடா நாருதான் மைந்தாசேளு வகையாகத் தான ரைக்க வஸ்துவிட்டு, ஆரடா எனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நாமுனக்குச் சொன்னேனும்பாரு, பேரடா மூன்றுநா ளரைக்கச்சேளு பின்னுமந்த சாறுவகை பேணிப்பாரே. (௧௩௪௭)

பேணிப்பா ரமுக்குருச் சாறுநாழி பேரான துளசிச்சார்நாழியா கும் தோணியப்பா தும்பையுடச் சாறுநாழி சொல்லுகிறேன் விழு தலையின் சாறுநாழி, காணிமுறை பிசகாமல் சேர்த்துக்கொண்டால் கட்டினமு முருக்கினமு மிதற்குள்ளாகும், ஊனிப்பா ரிதுவெல்லாம் விட்டுமைந்தா வுத்தமனே வற்றவற்ற அரைத்துக்கொள்ளே. (௧௩௪௮)

அரைத்தபின்பு பின்னுமதை வில்லைபண்ணி அப்பனே ரவியிலே யுலர்ந்தபின்பு, உரைத்திட்டேன் சிலைமண்ரண்டுசட்டி வுத்தமனே யுலர்ந்தபின் பெடுத்துக்கொள்ளு, கிரைத்திடவே சிலைபது வலுவாய்ச் செய்து தீர்க்கமாய் ரவிதனிலே காயவைத்து, குரைத்திட்ட புடமென் றால் கெஜமேபோடு குறையாதே யிவையெல்லாங் கட்டிப்போமே. ()

கட்டினதோர் கட்டியைத்தா னெடுத்துக்கொண்டு கடலையுட சாறுடனே தாமரையின்சாறு, மட்டித்து யிதுரண்டுங் கூழதாக்கி வால் மிளகு கற்கண்டு அதிலேயிட்டு திட்டமுட னிந்தமுறை தப்பா வண் ணந் தெளிவுபெறச் செய்துவர எல்லாஞ்சித்தி, கெட்டியாய்த் தானெ டுத்து வைத்துக்கொண்டு கிருபையாய்ப் பூசையிடு செணித்துக் கொள்ளே. (௧௩௨௦)

வேதை

கொள்ளப்பா தாம்பரத்தில் கொடுத்துமைந்தா குழம்பையடா முகத்திலிட வெள்ளியாகும், துள்ளவே சூதத்தில் கொடுத்தாயாகில் சொல்லுகிறேன் சூதமது கட்டிப்போகும், கொள்ளவே கொள்ளை யடா யிந்தவேலை குவலயத்தில் விள்ளார்கள் குமாரர்மக்காள், வெள் ளவே யிக்குழம்பு வாடாதோடை வேலியுட சாறடா விபரந்தானே. ()

விபரமாய் வெள்ளியிலே கொடுத்தாயாகில் மேலான சொர்ன மடா குழம்புவொன்று, தவறுதே வாலையுட பூசைபண்ணு தப்பாதே யுபதேசஞ் சார்ந்துநில்லு, சிகாரமதை மனதிலே யூன்றிப்பாரு தெளி வாகுங் கைலாசம் பிசகிடாது, இகாரத்தைச் சொல்லிவிட்டேன் மைந்தாசேளு ஈஸ்வரியாள் துணையிருப்பா ளெண்ணுதெண்ணே. ()

இருவேலிக்குழம்பு.

எண்ணுதே குழம்புண்டு பேதையாகில் இருவேலி வேரடா பலந் தானென்று, பெண்ணுன குமரிவேர் பலந்தானென்று பேய்ப்பீர்க்கன் வேரடா பலந்தானென்று, கண்ணுன மூலிபடா பலந்தானென்று

சழறினர் சித்தர்கள்தா னறையுமார்க்கம், விண்ணான மண்டையோடு பலந்தாளென்று, விபரமாய்த் தானெடுத்துத் தயிலம் வாங்கே. ()

வாங்கியபின் தாய்தன்னைப் பூசைபண்ணி மகத்தான தியானத்தை யுருக்கிமைந்தா பாங்காக வுருகியது ஆடும்போது பரிவாக முன்சொன்ன மருந்தையீந்து, தீங்கில்லா யிம்மருந்து புகழோ மெத்த செப்பரிது நாதாக்கள் செய்துபார்ப்பார், நீங்காமல் தயிலத்தை முகத்தில் குத்தி நிலையாகத் தானெடுக்கச் சொர்ணமாமே. (க௲உச)

## நாகத்தாம்பர சலாகை.

சொன்னமா மின்னமொரு கருவைக்கேளு சொல்லுகிறேன் மைந்தனே சுருதியாக, வின்னமில்லாச் சாவலொன்று கறுப்புவாங்கி விதமாகக் கூவுமுன்னே கட்டில்போடு, கன்னான ரதமுடனே மாண்டு போகும் கட்டழகா சித்தர்தாமும் சழறினர்பார், பொன்னான நாகமடா பிடித்துமைந்தா புகழாகத் தாம்பரக் கம்பியேற்றே. (க௲உரு)

ஏற்றியபின் சிறிதாக நறுக்கிக்கொண்டு யிதமாகக் கோதும்பை யரிசிகூட்டி, வாற்றியே காய்ந்தபின்பு மைந்தாகேளு வகையாகத்தான் கொடுக்கச் சத்துமாகும், தூற்றுகின்ற தூபமுடன் பூசைவேண்டும் துடியான ஏக்கலாபூசைவேண்டும், போற்றியே வஸ்துவைத்தான் கொடுக்கக்கேளு புசழான கஷ்டமெல்லாம் வாங்கிக்கொள்ளே. ()

கொண்டபின்பு குகையிலே வைத்துமைந்தா கூட்டியே யுருக்கிவிடு களிம்புபோகும், நன்றாகக் கட்டினதோர் பெட்டிலொன்று நலமாகத்தான்கொடுக்க மாற்றாறாகும், பண்டான செம்புமது பழுத்துப் போகும் பாங்குடனே யிந்தமுறை போலேயுண்டோ, உண்டான படிசொன்னேன் மைந்தாகேளு, வுறுதியாய்ச் செய்துவிடு வுரைத்திட்டேனே. (க௲உஎ)

உரைத்திட்டே னின்னூல்போ லொருவர்சொல்லார் உத்தமனே வுள்ளத்தில் கண்டுபாரு, மறைத்துவைத்த கருவையெல்லாம் வெளியிற் சொன்னேன் வகையறிந்து செய்தாக்கா லெல்லாமாகும், திரைகடலுந் திரிந்தாலு மிந்தமார்க்கம் தேசத்தில் கிடையாது மெத்த நேர்மை, குறைத்திட்டே னில்லாதே பூசைமார்க்கங் குருவைத்தான் மறக்காதே கூடிநில்லே. (க௲உஅ)

நில்லப்பா சொல்லுகிறே னறிவினாலே நிமலிமைபத்தான் றியானமிடு நினைவாய்ப்பாரு, சொல்லாதே யொருவர்க்குஞ் சூட்சமப்பா தொடாருவார் மானிடவர் மதியில்லார்கள், புல்லான பொருளப்பா யாருஞ்சொல்லார் பூதலத்தில் மிகவரிது என்னசொல்வோம் கல்லிலே புல்முளைத்த கதையைப்போலே காய்ச்சிவிடு அணுகவே வொட்டாதென்றே. (க௲உகூ)

ஒட்டினால் பகராது ஆசைகொள்ளும் உண்மையாய் மூடருக் குரைக்கவேண்டாம், மாட்டினா லாகாது சொல்லக்கேளு வாசுவட

ன்கருவுமே வொன்றுபோகும், தீட்டமுடன் வாசியைத்தான் ஒடுக்க வேண்டும் தெளிவுபெற சின்மயத்தைக் காணவேண்டும், எட்டான வெழுத்தினிலு மொன்றைப்பார்த்து யிருக்கணுங்காண் தியான மென்ற சுடரைத்தானே. (௧௩௩0)

சுடரானசுடரொளியைக் காணவேணுஞ் சூட்சமுள்ளக் கருவை யெல்லா மறியவேணும், இடறவேயாகாது சொன்னேனைந்தா யிறந் தவன்போ லிருக்கணுங்கா ணில்லாவிட்டால், தடைாவே யோகத்தை நடத்தவேண்டும் தோற்பானவழிதனிலே செல்லலாகா, தடமான விடங்காண நானேறவெல்லும் சர்க்குருவுரைத்தபடி சாற்றுறேனே.()

சாற்றுகிறேன் வைப்பினுட முறையைக்கேளு சதாநித்தமனேன் மணியைத் தாக்கிப்பாரு, போற்றுவாய் மனங்கொண்டு அறிவினாலே புலத்தியரைப் போலல்லோ விருக்கவேணும், தூற்றியே மனவழியில் நின்றுமேதான் துதிபெறவே யட்சரத்தை யறியவேண்டும், காத் திருந்து வாலைபதம்வணங்கினுக்கால் கைகண்டவைப்பெல்லாங் காட்டு வாளே. (௧௩௩௨)

## தாளகவைப்பு.

காட்டுவாள் தாளகத்தின் வைப்புகேளு கடலாடிவேரடா பலந்தா னென்று, மூட்டுவாய்கஸ்தூரி மஞ்சள்பலமொன்று முறையாகச் சீன முடன் மூன்றுங்கூட்டி, பாட்டுடனே கைபாகம் பிசகிடாமல் பாங் காகக்கியாழத்தை எரிக்கவேண்டும், நாட்டுவாய் கியாழமிட்டுயிறுத்து மைந்தா நலமாகப்பாகதுபோல் சேர்த்துக்கொள்ளே. (௧௩௩௩)

சேர்த்தபின் னின்னமுண்டு சொல்லக்கேளு திறமானசாரமடா நாவிலொன்று, வார்த்துவிடு யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி மைந் தனேதானரைத்து மைபோலாக்கு, கோர்த்துமே பாண்டமதில் விட் டுக்காய்ச்சி குறிப்பாக சிவந்தபத மிறக்கிக்கொண்டு, பாத்திரத்தி லடைத்துநீ சீலைமண்செய்து பாங்காகமயிற்புடத்தில் பரிந்துபோடே.()

போடப்பா பின்னுமொரு புடமேபோடு புகழாகக் கட்டியாந் தாளகமப்பா, வாட்டமில்லாத் தாழைப்பூச் சாறும்வாங்கி மறுபடியு மூறவிட் டெடுத்துக்கொண்டு, நோட்டமுட னிந்தமொழி தப்பா வண்ணம் நுணுக்கமாய் செய்துவா எல்லாஞ்சித்தி, பூட்டுவாய்சீலை மண்மூன்றுகட்டி போடப்பா குக்குடத்தில் கட்டையாமே. (௧௩௩௫)

## கெந்தகவைப்பு.

ஆமடாயின்னமொரு வைப்புகேளு அன்பானமஞ்சளடா பலந் தான்பத்து, ஓமடா அருகனிதான் வேர்பலமொன்று உத்தமனேவெள் ளெருக்கின் வேர்பலந்தான் மூன்று, ஆமடாகாட்டாமணக்குச் சாறு நாழி அப்பனேகாராட்டுப் பாலுநாழி, தாமடாயிவையெல்லாங் காச் சிக்கொண்டு தான்குருதி பாகுபோல் சேர்த்துக்கொள்ளே. (௧௩௬)

கொள்ளடா வெடியுப்பு பலந்தான்ரண்டு குறையாமற்றான்கூட்டி யரைத்துக்கொண்டு, மெள்ளவே யுருட்டியதை வைத்துக்கொண்டு வீரனவெயிலிலே யுலர்த்திக்கொள்ளு, கொள்ளவேயில்லையதுசெய்து மேதான் குறிப்பாகஅகல்தனிலே வைத்துமூடி, தெள்ளவேசீலைமண் ரண்டுகட்டி திடமாகப்புடம்போடு சிவக்கும்பாரே. (௧௩௭)

சிவந்தபின்பு தானெடுத்து வைத்துக்கொண்டு திறமாக பின்னு மதை யரைத்துக்கேளு, உவர்திடவே கொடிவேலி வேருமைந்தா வுத் தமனே சீனமடா பலந்தான்கூட்டு, நகர்ந்திட்ட தாரமது சரியாய்க் கூட்டி நவிலவேமுறைதப்பா வண்ணஞ்செய்தால், பகர்ந்திடவேதான ரைத்து வுலர்த்திக்கொள்ளு பாகமாய்சீலைமண் ணேழுகட்டே. ()

ஏளடா கட்டியதை யுலர்த்திக்கொண்டு யிதமாக மயிற்புடத்தி விட்டுமைந்தா, நாளடாநாழிகைதான்மூன்றுக்குள்ளே நலமாகப்பிரிந்து விடு நிறமோமஞ்சள், காளடாயிந்தமுறை பொய்யாதையா காட்டினார் சித்தர்களு முனிவர்தாமும், தாளடாவாலைக்குப் பூசைசெய்து சாற்று கிறேன் கெந்தகத்தை வாங்கிக்கொள்ளே. (௧௩௯)

வாங்கப்பாயின்னமொரு வைப்புகேளு மலைதாங்கிவேரடா பலந் தான்பத்து, தாங்குவாய் கல்மதமோ பலந்தான்பத்து தப்பாதே சங் கம்வேர் பலந்தான்பத்து, தீங்கில்லாசங்கன்வேர் பலமோபத்து தெளி வானவிராலிவேர் பலமோபத்து, ஓங்குவாய் கிழங்குதான் பலமோ பத்து வுத்தமனேயிவையெல்லா மொன்றாய்க்கூட்டே. (௧௪0)

கூட்டியேயரைத்துவிடு மூன்றுநாளுங் குறுகவேவுருட்டியதைப் பாத்திரத்திட்டு, மூட்டுவாய் சீலைமண்ணாறுகட்டு முறையாகவுலர்த்தி யதைப் புடமேதிரு, நாட்டமுடனிந்தமுறை பொய்யாதையா நவிலு வோம் காசினியில் மாந்தற்காக, மாட்டவே வாய்புடத்தில் நிறமோ கேளு மைந்தனேகோமளம்போல் நிறமுமாமே. (௧௪௧)

நிறமாகு மதன்பிறகு யெடுத்துக்கொண்டு நிலையாகச் சாறுடனே காரங்கூட்டி, மறமான திப்பிலியின் சாறுங்கூட்டி மைந்தனே முச்சாம மரைத்துநன்றாய், திரமாககைபாகம்பிசகிடாமல் செப்பவேசெய்துவர எல்லாஞ்சித்தி, இரவியிலேயுலர்ந்தபின் சீலைமண்செய்து ஆட்டினு லெருவிலேபுடமேபோடு. (௧௬௪௨)

சவர்க்காரவைப்பு.

போட்டதனை யெடுத்துவிடு சொன்னேனப்பா புகழானவீரமடா சாதியாகும், கூட்டப்பாகுருவடா நாலிலொன்று கொடுத்துவிட்டுப் புடம்போடு கொள்கையாகும், நாட்டமுட னிந்தமுறை பொய்யா தையா நவிலுவோம் தேசத்தில் அரிதேயாகும், தேட்டென்ன யிது போலே தேட்டுமுண்டோசித்தனுக்குவைத்தமுறை செப்பினேனே.()

செப்புகிறே னின்னமொரு வைப்புகேளு திறமானவாடுதின்னுப் பாளைவேரும், ஒப்புகிறேன் கருங்குன்றி யமுக்குறாவும் உருவான செம்முள்ளி யாடாதோடை, தப்பாதேயிந்தமுறை செய்துபார்த்தால் தாக்கலா மனேககோடி வித்தையாகும், அப்புகிறேன் கூவிளத்தின் வேருங்கூட்டு அப்பனே பலம்பத்தாய்த் தூக்கிக்கொள்ளே. (௧௬௪௪)

தூக்கிவிடு சமனாக யெடுத்துக் கொண்டு சுகமான தயிலத்தை வாங்கி மைந்தா, வாக்கிறேன் விழுகிற சலத்தை மைந்தா வையடா பாத்திரத்தில் பிடித்துக் கொள்ளு, நேத்தியாய் நாமுமிந்த பாகந்தப்பா நேர்மையாய் மானிடர்க்கு வுரைத்தவாறு, பாக்களவு பாஷாண மதிலே யிட்டுப் பரிவாகத் தானரைத்துக் கூட்டிக் கொள்ளே. (௧௬௪௫)

கூட்டிவிடு கற்பூரம் பலந்தான் கூட்டே குறையாமல் பூநீறுங் கொஞ்சங்கூட்டு, ஆட்டிவிடு கோட்டமடா பலந்தான் கூட்டு அப்பனே கடல்நுரைதான் பலமுங் கூட்டு, பூட்டகமா மிந்தமொழி பொய்யா தையா புகலவே கைபாகம் பிசகிடாது, வாட்டமில்லை யரைத்துவிடு மெழுகுபோலா மகத்தான வில்லைபண்ணி ரவியில்வையே. (௧௬௪௬)

வைத்தபின் புலர்த்தியே யெடுத்துக்கொள்ளு மைந்தனே சீலை மண்ரண்டுகெட்டு, கைத்திடவே ரவியிலே யுலர்ந்தபின்பு கருவெடுத்து மயிற்புடத்தில் போடுமைந்தா, சித்திரமா யாறவிட் டெடுத்துப்பாரு திர்க்கமா யுடைத்துப்பார் வில்லைதன்னை, பத்தியுள்ள வாலையுட கடாட்சத்தாலே பரிவாக சவர்க்காரம் பலிதமாச்சே. (௧௬௪௭)

## நவாச்சாரவைப்பு.

ஆச்சடா யின்னமொரு வைப்புகேளு அப்பனே வமுரியுப் பெடுத்துக்கொள்ளு, வாச்சடா பனிதாங்கி சமூலம் வாங்கி மகத்தானமேனி படா சமூலம் வாங்கு, காச்சிடவே யிந்தமொழி பொய்யாதையா காசினியில் லோபிகள்தான் செய்யமாட்டார், பாச்சிடா கரிசாலைச் சமூலம் வாங்கு பரிவாக விவையெல்லாம் பலமதாக்கே. (௧௩௪அ)

ஆக்கப்பா கியாழமிட் டெடுத்துக்கொண்டு அப்படியே தான் குறுக்கு ப்பாகுசேர்த்து, மூர்க்கமுள்ள சீனமோ பலமுங்கூட்டு முறையாகப் பூரமடா பலமுங்கூட்டு, தீர்க்கமாய் கைபாகம் பிசகிடாமல் தெளிவான சின்மயத்தைப் பணிந்துபோற்றி, தாக்கிவிடு சவ்வாதுடன் புழுகுகூட்டு தப்பாதே யிவையெல்லா மரைத்துக்கொள்ளே.()

கொண்டபின்பு சீலைமண் ணண்டுகட்டு குறியாக வெயிலிலே யுலர்த்திக் கொள்ளு, நன்றாகக் குக்குடத்தில் புடமேபோடு நலமான நவாச்சாரங் கட்டியாகும், குன்றாத யிந்தமொழி தவறாதையா குறிப்பாக செய்தவற்கு எல்லாஞ் சித்தி, உண்டான படிசொன்னேன் மைந்தா கேளு வுறுதியாய்த் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (௧௩௫௰)

வைத்துக்கொள் அதன்பிறகு வைப்புகேளு வகையாகச் சொல்லுகிறேன் மைந்தாபாரு, பொற்றலையான் சாரடா பலந்தானொன்று புகழாகப் பலம்பத்து வாங்கிக்கொள்ளு, நைத்திடவே யிடைபாகம் பிசகிடாமல் நாட்டிலே மானிடர்க்கு வுரைத்தவாறு, தைத்திடவே கருமணல்தான் பலந்தான் பத்து தணிவாகச் சாற்றிலே யூறப்போடே. ()

## காரோடு.

போடப்பா மூன்றுநாள் கழிந்தபின்பு புகழாக வின்னமொரு மருந்துகேளு, மாடப்பா சிறுதாழை பலந்தானென்று வளமான கற்றாழை பலந்தா னென்று, கூடப்பா தழுதாழைப் பலமோ வொன்று குறிப்பான செங்கழனி பலமோபத்து, தேடப்பா சிறுசின்னி பலந்தானென்று திறமான கருங்கோழி யெலும்புபல மொன்றே. (௧௩௫உ)

ஒன்றாக விவையெல்லா முலர்த்தி மைந்தா வுறுதியாய்ப் பொடி பண்ணித் தயிலம் வாங்கி, நன்றாகக் கருமணலுங் கரிசாலையோடு நலமாகத் தான்கலந்து பெடுத்துக்கொண்டு, குன்றாக யிந்தமொழி தப்பாவண்ணம் கூறினர் வேதமுனி யறைந்தவாறு, பன்றான வளையலடா கறுப்பு வாங்கிப் பரிவாகப் பொடிபண்ணி யிதிற்கலந்தே. (௧௩௫௩)

கலந்துவிடு சீலைமண் மூன்றுகட்டி கருதியே யுலையிலிடு யெருவும் போட்டு, செலம்பெறவே யூதியடா நாழியாலஞ்சு திறமாக மூட்டி விடு செய்யக்கேளு, நலமான யிந்தமொழி பொய்யாதையா நாட்டிலே எவர்களுந்தா னுரைக்கமாட்டார், பலமாகுங் கட்டியடா தீராவண்ணம் பாங்கான காரோடு கட்டியாமே. (கசுடுச)

கட்டியாம் பின்னுமதை யெடுத்துக்கொண்டு கருதியே வெள்வங் கம் பலந்தான்போடு, திட்டமா யுருகியது வெள்ளோடாகுந் திறஞ் சொன்னேன் மைந்தனே செப்பக்கேளு, பட்டமாய்நீயப்பா பரிவாய்க் கேளு பரிவாக வொருவர்க்குஞ் சொல்லவேண்டாம், நட்டமாயின்ன மொரு வைப்புகேளு நலமாகச் சொல்லுகிறே நாடிப்பாரே. (கசுடுடு)

## காயம்வைப்பு.

காரப்பா பெருங்காய வைப்புகேளு கனமாக வொருவர்க்குஞ் சொல்லவேண்டாம், நேரப்பா கருப்பான நாயைவாங்கி நிலையாக மூன்றுநாள் கட்டில்போட்டு, கூரப்பாபொசிப்பொன்று மில்லாக்காலங் கொல்லடா வதன்பிறகு சொல்லக்கேளு, சேரப்பா வசம்புடனே வெள்ளுள்ளிகொஞ்சந் திறமாகவயிற்றிலிடு செப்பக்கேளே. (கசுடுசு)

## பாஷாணவைப்பு.

செப்புகிறேன் பானையப்பா புதுசில்மைந்தா தீர்க்கமாய்த் தான் போடு வோடுமூடி, ஒப்புகிறே னேழுநாள் கழிந்தபின்பு வுத்தமனே தானதை யெடுத்துக்கொள்ளு, நெப்பமாய் எண்ணுதே யிந்தமார்க்கம் நேராகும் சித்தர்தான் செய்தவேலை, தப்பாம லிதுரண்டு மிஞ்சிச்சாற் றில் தானரைக்கப் பெருங்காயஞ் சாதியாமே. (கசுடுஎ)

சாதியா யின்னமொரு வைப்புகேளு தருவான கொடிவேலி பல ந்தானென்று, நீதியா யாடுதொடா மூலிவேலிவேரும் நிதமாகத்தான் பாரு சமனுய்த்தூக்கி, ஆதியந்த முதலாகச் சேர்க்கவேண்டும் அப் பனே கைமுறைதான் பிசகாவண்ணம், வாதிகட்குத்தெரியாது மைந்தா கேளு வகையாக கருமுறையைக் கட்டாதென்றே. (கசுடுஅ)

## கஸ்தூரிவைப்பு.

முறையாக விதுவப்பா யெடுத்துக்கொண்டு மூத்ததோர் திருகு கள்ளிப் பாலும்நாழி, குறையாம லண்டமப்பா வெண்கருநாழி கூட் டியே யரைத்துவிடு சாமம்மூன்று, திரையாக கருவொன்றும் முப்பூ வொன்றும் தீர்க்கமாம் ஐங்கோலங் கூட்டிசேர்த்து, நிரையாகக் குரு வப்பா விராகன்போடு நேராகக்காந்திக்கு நாகஞ்சேர்த்தே. (கசுடுகூ)

சேர்த்துப்பின் னிதுவெல்லா மொன்றாய்க் கூட்டி திறமாகப் பின்னுமதை யரைத்துவாங்கு, மாற்றிவிடு வாலைக்குப் பூசைபண்ணு மைந்தனே ரவியிலே யுலர்த்திக்கொள்ளு, தூற்றியே ரவிதனிலேகாய வைத்து சுருக்கமாய்ச் செய்துவரப் பாகங்கேளு, பார்த்தடா சீலைமண் ணாறுகேளு பரிவாகச் சுன்னமதில் சீலையில்தேயே. (கஙசூ0)

தேயாட்டால் காரமடா குறைந்துபோகுஞ் செப்புகிறேனுலர்ந்த பின்பு திறமாய்மைந்தா, பாயவே குக்குடத்தி விட்டுக்கொள்ளு பரி வாகத் தானெடுக்கப் பாஷாணமாச்சு, மாயகமா மிந்தமொழி தப்பா வண்ணம் மானிடற்கு வுரைத்தமொழி யிதுவேயாகும், தாயகமாய்ச் சொல்லிவிட்டேன்கேளுகேளு தவறுவந்துபோகாமல்தாக்கிப்பாரே.()

ரசகேந்தவைப்பு.

தாக்கிப்பா ரின்னமொரு வைப்புகேளு தனித்துநின்ற தோரடா வேங்கையப்பா, பாக்கிய மாறுநாள் காப்புகட்டி பாங்காக வடபுறத்தில் வெட்டிக்கொள்ள, ஊக்கமுட னிந்தமுறை பொய்யாதையா வுத்த மனே நாமுனக்கு வுரைத்தவாறு, காக்கையுட விறைச்சியடா யெடுத்து மைந்தா கருதியே தானுலர்த்திப் பொடிதான்பண்ணே. (கஙசூஉ)

பண்ணியபின் கிளாவேரும் பலந்தான்பத்து பாங்கான தூவை வேர் பலந்தான் பத்து, உண்ணியதோர் தேற்றான்வேர் பலந்தான் பத்து உறுதியாய் நெல்லிவேர் பலந்தான்பத்து, திண்ணமுட னிந்த பாகம் பிசகாதையா திறந்துவிட்டேன் தட்சணாமூர்த்திவாக்கு, கன்னி யுடவேரடா பலந்தான்பத்து கருதியே யிவையெல்லா முலர்த்திக் கொள்ளே. (கஙசூங)

கொண்டபின்பு குழித்தயில மிறக்கிமைந்தா கூட்டியே வேங்கை யுட பாலுஞ்சேரு, நன்றாக முன்சொன்ன மருந்தையெல்லாம் நலமாகத் தானரைத்துக் கொண்டுமேதான், குன்றாம விந்தமுறைக் குறிப்பாய்ச் செய்தால் கூடிவரும் எந்தவழி யெய்தும்பாரு, கண்டாயோ குருவடர் விராகன் ரண்டு கலந்துவிடு கஸ்தூரி சாதியாமே. (கஙசூச)

சாதிக்காய் தயிலம் விராகனிடைநாலு தான்கூட்டு யிதுபோலே யில்லை மைந்தா, வேதிக்க வியாதியொன்று மில்லையையா வேதாந்தமறி வார்க்கு மிகவுநன்று, சோதிக்க வேதாந்த மறிந்தபேர்க்கு சொரூ பத்தை யென்னாளும் துதிக்கவேண்டும், ஆதியிலே செய்தமுறை யிது தனப்பா அன்புடனே தான்பார்த்து அறிந்துகொள்ளே. (கஙசூரு)

கொள்ளவே யின்னமொரு வைப்புகேளு கூரான வாகைவிதை படிதான்பத்து, துள்ளவே தூதுவளை காயம் படியோபத்து சொல்லரிய முருக்கின் விதைப்புசேர்த்து, அள்ளவே கஞ்சாவிரைப் பலமோபத்து அப்பனே பேய்ப்பீர்க்கன் பலமோபத்து, விள்ளுறேன் தாளிவிதை படியோபத்து விதமாக விவையெல்லா மொன்றாய்க்கூட்டே. ()

கூட்டப்பா குழித்தயில மிறக்கிக்கொண்டு கூராகத் தானெடுத்து வைத்துக்கொள்ளு, மூட்டப்பா யின்னமொரு மருந்துகேளு முறையாகத் தானுமொருமூலியுண்டு, நீட்டப்பா மலைதோறும் சஞ்சீவியுண்டு நேரான கருமூலி மனேகமுண்டு, ஆட்டப்பா யொன்றதனை வாங்கி மைந்தா அன்பாகப் பொங்கலுக்கு அரிசிகேளே. (கருசூஎ)

கேளப்பா கோதும்பை யரிசிமைந்தா செடியான தேங்காயுங் கதலியோடு, நாளப்பா வாரமதுவெள்ளியாகும் நலமாகச் செடியானால் வெள்ளைக்குன்றி, கோளப்பா வாராமல் சாமம்நீக்கி குறிப்பாக காப்புகட்டி மூலிக்கப்பா, வாளப்பா சமூலமதைப் பிடுங்கிக்கொட்டு வரியாகத் தானறுக்கி யுலர்த்திக் கொள்ளே. (கருசூஅ)

கொண்டபின்பு தயிலத்தை வாங்கிமைந்தா கூட்டுகிற முறையுண்டு யேதேயாகில், நன்றான விரையடா மருளுமத்து நலமானசிறுபயறு காயப்போடு, குன்றாமல் யிந்தமுறை தப்பாவண்ணம் கூறினார் கும்பமுனி குருவாக்கையா, ஒன்றாகத் தான்கூட்டித் தயிலம்வாங்கி வுறுதியாய்த் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (கருசூகூ)

வைத்தபின்பு காரமடா பலந்தானென்று வளமான கெந்தியொரு பலந்தானென்று, சித்தியதோர் தங்கமடா பலந்தானென்று திறமாகத் தான்கூட்டி யெடுத்துக்கொள்ளு, பத்தியுட னிந்தமொழி பொய்யாதையா புகலுகிறேன் தட்சணாமூர்த்தி வாக்கு, மத்தியடா யிதுரண்டுந் தயிலங்கூட்டு வளமாகத் தானரைத்து வில்லைபண்ணே. (கருஎ0)

## தாம்பரலிங்கவைப்பு.

பண்ணியபின் சீலைமண் ரண்டுகட்டு பரிவாக ரவியிலே யுலர்ந்தபின்பு, உண்ணிவிடு குக்குடத்தில் புடமேதீரு வுறுதியா யாறவிட்டெடுத்துக்கொள்ளு, திண்ணமுட னிந்தவழி பொய்யாமார்க்கம் தெளிமையாம் தட்சணா மூர்த்திவாக்கு, கண்ணியுட நீரிலே யரைக்கமைந்தா கடைசரக்கைச் சொல்லுகிறேன் கண்டுகொள்ளே. (கருஎக)

கண்டுகொள்ளு பூரமடா பலந்தான்கூட்டு கைமுறையா யரைத்துவிடு கருவுங்கட்டும், வண்டருக்கு யிந்தமுறை யீயவேண்டாம் வகை

யறியார் மைந்தனே வரிசைகேளு, அண்டர்தொழு மானிடர்கள் அனேகம் பேர்கள் அறைந்திடவே வேதமுனி வாக்குதப்பா, தெண்ட னிட்டுக் கொண்டாலுங் கபடுசெய்வார் திறமாகச் சொல்லுகிறேன் தெளிவுதானே. (கஙளஉ)

தெளிவாகப் பன்னீர் பிடித்துமைந்தா சிறப்பாக விண்ணினுட முகிலும் வாங்கி, வளியாகத் தானரைத்து வுலர்த்திக்கொள்ளு மகத் தான சீலைமண் ரண்டுகட்டி, தளியாக சித்தர்கள்தான் செய்யுமார்க்கம் தாக்கான வழியிதுகாண் முறைமையாகும், வெளியாகத் தான்பாரு ரசகெந்தமாச்சு வேறுண்டு சொல்லுகிறேன் விபரந்தானே. (கஙளங)

விபரமா யின்னமொரு வைப்புகேளு மேலான ஆலம்விழுதுபலந் தான்பத்து, இபராத யரசினுட பட்டைபலம்பத்து யிதமாகப் புண் ணியவிருட்சம் விழுது பலம்பத்து, சிகாரமடா யிந்தமொழி தப்பா வண்ணம் சிறப்பான தட்சணா மூர்த்திவாக்கு, உகாரமடா மூலியின் வேர் பலமோபத்து வுத்தமனே சிறிதாக நறுக்கிக்கொள்ளே.(கஙளச)

நறுக்கிவிட்டு ரவியிலே யுலர்ந்தபின்பு நலமாகத் தானெடுத்துப் பானையிலிட்டு, குறுக்கிவிடு தீயிலத்தை யெடுத்துக்கொண்டு கொம்ப ரக்கு பலமடா ரண்டுகூட்டு, தருக்கமா மிந்தபாகம் பிசகாதையா தாக் கான மனோன்மணியா ளுரைத்தவாக்கு, உருக்கிவிடு யிதுவெல்லா மொன்றாய்ச்சேர்த்து வுத்தமனே முச்சாம மரைக்கக்கேளே.(கஙளரு)

கேளப்பா யின்னமதைச் சொல்லக்கேளு கிருபையாய்த் தாம்பர மரையேயாக்கி, தாளப்பா யெட்டிலொன் றதுவுங்கூட்டி தப்பாதே குருவடா காற்பலமுங்கூட்டி, கோளப்பாவாராமல் குறிப்பாய்ச்செய்து கொற்றவனே செய்துவர எல்லாஞ்சித்தி, நாளப்பா யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்து நலமாகத் தானரைக்க வுண்டைபண்ணே. ()

உண்டையடா பண்ணியபின் ரவியில்வைத்து வுலர்ந்தபின்பு சீலை மண் ரண்டுகட்டு, விண்டேனன் பின்னுமதை யுலர்ந்தபின்பு மேலு மொரு மண்கட்டு புடமேபோடு, அண்டர்பிரா னுரைத்தமொழி தப்பா தையா அப்பனே தட்சணா மூர்த்திவாக்கு, கண்டாயோ யொரு வைப்பா பதினாறும் கருதியே யெடுத்துவிடு லிங்கமாமே. (கஙளஎ)

சாம்பிராணிவைப்பு.

ஆமப்பா யின்னமொரு வைப்புகேளு அப்பனே சொல்லுகிறே னறிந்து பாரு, ஓமப்பா தேக்கின்வேர் பலந்தான் பத்து வுத்த

மனேவில்வவேர் பலந்தான்பத்து, தாமப்பா அகிலதுதான் பலந்தான் பத்து சந்தனத்தின் வேரதுதான் பலந்தான்பத்து, நாமப்பா யிவை யெல்லா மொன்றுய்க்கூட்டி நலமாகநறுக்கியதையுலர்த்திக்கொள்ளே. ()

கொள்ளப்பாகுழித்தயிலமிறக்கிமைந்தா குறைபாமல்கருப்படா குங்கிலியம்வாங்கி, இள்ளவேதயிலம்விட்டரைத்துமைந்தா யிதமாகக் குருவடாபலமுங்கூட்டி, மெள்ளவேயிப்படிதான்செய்வாராகில் மேன்மையாய்சகலசித்து மாடும்பாரு, மள்ளவே யரைத்துவிடு வுண்டை பண்ணு மைந்தனேரவியிலே யுலர்த்திக்கொள்ளே. (கூஎகூ)

கொள்ளப்பா வுலர்ந்தபின் பெடுத்துக்கொண்டு குருவையடா தியானமிட்டுச்சிலமண்தான்சேளு, தெள்ளவேயஞ்சுகட்டி யுலர்த்திக் கொள்ளு திறமாகக்கவுதாரிப் புடமேபோடு, அள்ளவே யிந்தபாகம் தப்பாதையா அப்பனேநாமுனக்குச் சொன்னேம்பாரு, விள்ளுறேன் சாம்பிராணிக்கட்டுமாச்சு விதமாகச்செய்துவிடுவிபரந்தானே. (கூஅ0)

விபரமாய்ச் சொல்லிவிட்டேன் மறைப்போயில்லை வேதாந்தி யனேகமுண்டு அறியமாட்டார், தவறுதேசொல்லுகிறேன் வாமபூசை தான்செய்யவாலையவள் தளரவொட்டாள், நகரவேயிந்தமொழிதப்பாதையா நாட்டிலேயாருந்தான் சொல்லமாட்டார், பகரவேயின்னமுண்டு வைப்புகேளு பாடுகின்றேன்வெளியாகப் பாடுறேனே. (கூஅக)

## கற்பூரவைப்பு.

பாடுறே னின்னமொரு வைப்பேதென்றல் பாங்கான கற்பூரஞ் சொல்லக்கேளு, நாடுவாய்கோதும்பையரிசிபலமொன்று நலமாகவெடியுப்புபலந்தானென்று, தேடுவாய்கஸ்தூரி வராகனுலு தெளிமையாம் பூநீறுவராகனுலு, கூடுவாய்புழுகடாவிராகனுலு கொடியதோர்கற்பூரம் பலமுமொன்றே. (கூஅ௨)

ஒன்றுகவிவையெல்லாங் கூட்டிமைந்தா வுத்தமனே தானெடுத்து அரைக்கக்கேளு, நன்றாகச்சாமமதுவரைத்துவாங்கு நலமாகவுண்டை பண்ணியுலர்த்திக்கொள்ளு, கொண்டதோர்ரவிதனிலே காயவைத்து குறிப்பாகசெய்துவர எல்லாஞ்சித்தி, விண்டேதான் சிலமண் ணஞ்சு கட்டு விபரமாய்க்காண்டையொடு புடமும்போடே. (கூஅ௩)

போட்டபின்புமறுபடியு மெடுத்துக்கொண்டு புகழாசத்தானரைக் கச்சாறுகேளு, நாட்டமுடன்கற்பூரவள்ளிச்சாறு நலமானதுளசியுடச் சாறுங்கூட்டு, நீட்டமுடன்பாகமதுபிசகிடாமல் நெடிதாகசெய்துவர எல்லாஞ்சித்தி, மூட்டுவா யரைத்துவிடு சீலைமண்கட்டு முறையாக வுலர்ந்தபின்பு காடைபுடத்திலாக்கே. (கரு-அச)

ஆக்கியபின்னெடுத்துப்பார் மல்லிகைப்பூப்போலாம் அப்பனே சொல்லிவிட்டேன் மைந்தாகேளு, ஆக்கியபின் மருந்துக்கு தீட்சை யோதி அப்பனேதூபதீபம்கொடுத்துவாநீ, சூக்கமுடன்சின்மயத்தைப் பணிந்துபோற்றிக் குருவையல்லோ தியானமிட வெல்லாங்கூடும், ஆக்கவேயறியாமற் செய்யவேண்டாம் அப்பனேயறிந்துவிடு மதிக மாமே. (கரு-அரு)

அதிகமடாதொட்டதொட்டகருவுமாகும் அறியாதபேர்களைப்போ லிருந்துகொள்ளு, சதிகாரமெத்தவுண்டுசீஷனென்பார் தான்சொன்னே னவரோடேசொல்லவாகா, பதியானவீடுவிட்டுப் பதியவேணும் பாங் கானதீட்சையது ஓதவேண்டும், விதியானவசமப்பா யென்றுசொல்லி விற்றிருந்துசெய்தவனே விவேகிதானே. (கரு-அசு)

விவேகியாய்வருகிறசீஷனுண்டு மேலாகவந்துவுன்னை வணங்கிக் கொள்வான், தவயோகிமார்களுச்குவொளிக்கவேண்டாஞ் சரியைக்குங் கிரியைக்குமீயவேண்டாம், நவயோகியானுக்கால்எல்லாஞ்சித்தி நாட்டு கிறேன்மாணுக்கன் பிழைக்கவென்று, அவயோகிமார்களைத்தானடுக்க வேண்டாம் அப்பனேசொல்லிவிட்டே னறிந்துக்கொள்ளே. (கரு-அள)

அபின்வைப்பு.

அறிவாகயின்னமொரு வைப்புகேளு அப்பனே காஞ்சிரத்தின் வித்தைவாங்கி, குறியாசப்படிபத்து அளந்துவிட்டுக் கூட்டுகிறவகை கேளுகுறித்துப்பாரு, நெறியாகயிந்தமுறை பொய்யாதையா நேர்மை யாய்மனோன்மணியா ளுரைத்தவாக்கு, உரியதோர் கஞ்சாக்கோல் கொண்டுவந்து வுத்தமனேயுலர்த்தியதைக் கட்டிப்போடே. (கரு-அஅ)

கட்டியபின்பானைக்குத்தமருமாக்கிக் கருவாகக்குழித்தயிலமிறக்கி மைந்தா, பட்டித்ததயிலமது இறக்கவேண்டி வகையாகக் கசிப்பாகா வாடையாகா, அட்டியில்லாபாகமது செய்வாராகில் அப்பனேசித்திக் கும்வாறுகண்டாய், எட்டியுடபதந்தப்பிக் கொண்டுதானால் எண்ணெ யைப்போல் வாடைபடாயிருக்குந்தானே. (கரு-அகூ)

வாடைவந்துசூழாமல்பதமேசேளு மைந்தனேபானையதுகுறுகும் போது, நாடியேயெடுத்துவிடு தயிலமப்பா நலமான வெல்லத்தின் பாகுபோலாம், நேடியேயிந்தமொழி பொய்யாதையா நுணுக்கமாம் கைபாகம் பிசகிடாமல், கூடியேகசகசா சாதிக்காயுங் குருவானகற்பூரம் பலங்கால்கூட்டே. (௧௬௯0)

பவளவைப்பு.

கூட்டப்பா யின்னமொரு வைப்புசேளு கொடியான செங்கொடி தான் பலமோபத்து, கூட்டப்பாபனிதாங்கி சமூலம்பத்து கோழியா மஞ்சாடி சமூலம்பத்து, கூட்டப்பா கைபாகம் பிசகாமற்றுன் குமு றவேயிந்தமுறை செய்துபாரு, கூட்டப்பாயிவையெல்லா முலர்த்திக் கொண்டு குறியாகதயிலமடாவாங்கிக்கொள்ளே. (௧௬௯௧)

வாங்கியபின்தயிலத்தை யெடுத்துக்கொண்டு வளமாகப்பதனமே பண்ணிமைந்தா, பாங்கானமண்ணடா செங்களியுமாகும் பரிவாகக் கொண்டுவந்து பாகமாக்கி, தீங்கில்லாபாகமது எவர்தான்சொல்வார் தீர்க்கமாமிந்தமொழி குருவின்வாக்கு, தாங்காதேயரைத்துவிடு சாம மூன்று தப்பில்லைசொல்லுகிறேன் றாணியோர்க்கே. (௧௬௯௨)

தப்பில்லையரைக்கயித்தயிலம்விட்டு கருகாதேதிப்பிலிபோல்சுண் டைக்காய்போல், ஒப்பிதமாய்த்தானுருட்டி யுலரப்போடு வுத்தமனே தயிலத்தில் தோய்த்துமைந்தா, செப்பமுடன் னிந்தமொழி தப்பா தையா சீர்பெறவேசின்மயத்தைக் காணவேண்டும், இப்படியேயேழு தரந்தோய்த்துமூக்க யிதமாகத்தானுலர்த்திெபடுத்துக்கொள்ளே. ()

எடுத்துக்தொளதன்பிறகு வொன்றுய்ச்சேர்த்து யிதமாகச்சீலை மண்ரண்டுகட்டு, கொடுத்துவிடுமயிற்புடத்தில் நீறிப்போகுங் கூறு கிறேன்பவளமடா சூட்சம்பாரு, தடுத்திடாதிந்தமுறை ஒருக்காலும் பொய்யா தாக்கானகுருபதத்தைமனதிலுன்னு, கொடுத்துவிடு விலைக் கியந்துபிழைத்துக்கொள்ளு குருவினுடபூசைபண்ணுகூடத்தானே. ()

சிவப்புசவ்வீரவைப்பு.

கூடவேயின்னமொருவைப்புசேளு கூரானவீரமடா சிவப்புபாரு, தேடுவாய் வெடியுப்பு பலமோவொன்று திறமானசாரமடா பலமோ வொன்று, நீடவேபூநீறு பலமோவொன்று நிச்சயமாய் வழலையுடச் சுன்னந்தானும் மாடுவாய்காரமடா பலந்தானென்று மைந்தனேவீர மடாபலந்தானென்றே. (௧௬௯௫)

ஒன்றாகவிவையெல்லாஞ்சேர்த்துமைந்தா வுறுதியாய்த்தானரைக் கச்சாறுகேளு, முண்டானயிலைச்சாறுவிட்டுஆட்டி முக்கியமாயுண்டை பண்ணிரவியில்வைத்து, திண்டானக்கருணைபெறவழியைத்தேடதுரை ராசச்சுந்தரனும் வெளியாய்ச்சொன்னார், விண்டேனான்சீலைமண்ரண்டு கட்டி வீறாகக்கவுதாரிப்புடந்தான்போடே. (கரு௯௬)

போட்டபின்பு வீரமடா நிறந்தானென்று புகழான சாதியிலு முசத்திமைந்தா, வாட்டமில்லைசொல்லிவிட்டேன் மைந்தாகேளு மரு காதேயித்வெடுத்துவைத்துக்கொள்ளு, நீட்டமில்லா சித்தர்கள்தான் செய்யுமார்க்கம் நேரானசின்மயத்தைப் பணியவேண்டும், மூட்டடா வாலைக்குப்பூசைபண்ணு முறையாகத்தியானமிடு முயன்றுகேளே. ()

வீரவைப்பு.

கேளப்பாயின்னமொருவைப்புகேளு கெடியானகாரமடாபலந்தா னென்று, தாளப்பாவெடியுப்பு பலந்தானென்று தருவானநாகமோ பலந்தானென்று, கோளப்பாவாராதுயிந்தமார்க்கம் குடிலமாம்தட்சணா மூர்த்திவாக்கு, வேளப்பாயிவையெல்லா மெடுத்துக்கொண்டு விபர மாய்ச்சொல்லுகிறேன் விரும்பிப்பாரே. (கரு௯அ)

நாகவைப்பு.

பாரடாயின்னமொருமருந்துகேளு பரிவானஆடொட்டிவேர்பலந் தானென்று, கூரடாமேனிவேர்பலந்தானென்று கூட்டிவிடுவமுக்குரு பலந்தானென்று, ஆரடாஎனைப்போலச் சொல்வாரப்பா அப்பனே நாமுனக்குஅறைந்தவாறு, சேரடாசிச்சிலுப்பைபலந்தானென்று திர மாகயிவையெல்லாமின்னங்கேளே. (கரு௯௯)

இன்னமுண்டேதென்றால்கேளுமைந்தா யிதமானவெண்தும்பை குத்துப்பீர்க்கு, சொன்னதெல்லா மொருநிறையாகவப்பா சூட்சமா யாவற்றுநிறுத்துக்கொண்டு, அன்னமெனுந் தாயெனக்கு அருளினாள் பார் அப்பனேநாமுனச்குஅறைந்தவாறு, வின்னமில்லாப் பானையிலே யிட்டுக்கொண்டு விதமாகக்குழித்தயில மிறக்கிக்கொள்ளே. (கச00)

இறக்கியபின் தயிலத்தை யெடுத்துக்கொண்டு யிதமாகமுன் மருந்தையரைக்கமைந்தா, குறுக்கினதோர் தயிலத்தை விட்டுவிட்டுக் குறையாமல்முச்சாமமரைக்கக்கேளு, தருக்கமில்லாமிப்பாகம் கைம் மாரன்றி தாக்குமேவெகுகோடிவேதையாகும், மருக்காயசதுரமதாய் வில்லைபண்ணி மைந்தனேரவியிலே யுலர்த்திக்கொள்ளே. (கச0க)

உலர்த்தியபின்சீலைமண்ரண்டுகட்டு வுத்தமனேபுடந்தீருக்குடந்தா னப்பா, பிலத்துக்கோபிதுபோலேநாகமில்லை பேரானநாகமடாவாதத் துக்கு, கலத்திறமாயாமுனக்குஅரைந்தவாறு காட்டினூர்சித்தர்முதல் முனிவர்தாமும், செலத்தியிலேயின்னமொருவைப்புமுண்டு திறமாகச் சொல்லுகிறேன்செப்பக்கேளே. (௧௪0௨)

செப்புகிறேனமுக்குரு பலந்தான்பத்து திறமான தான்றிவேர் பலந்தான்பத்து, ஒப்புகிறேன் வேளையடா குழம்போபத்து வுறுதி யாய்க்கட்டையகில் பலந்தான்பத்து, மெய்ப்புடனேசல்லிவேர் பலந் தான்பத்து மேலான கருங்குன்றி பலமோபத்து, தப்பாதேஆடா தோடைவேர் பலந்தான்பத்து தருவாகவிவையெல்லாம் நிரையாய்த் தூக்கே. (௧௪0௩)

இரசவைப்பு.

தூக்கடாயின்னமொன்று சொல்லக்கேளு துடியானவித்தடாபடி தானென்று, தாக்கடாதாழைவித்துபலந்தானென்று தருவானகொழி ஞ்சிவிதைபலந்தானென்று, வாக்குமேதப்பாமல்தேவிபூசை மனேன் மணியையெப்போதுந் தியானஞ்செய்து, ஏர்க்கவே யிவையெல்லா மிடித்துத்தூளா யிதமாகச்சொல்லுகிறேன் தயிலம்வாங்கே. (௧௪0௪)

வாங்கடாமுன்சொன்னவேரையெல்லாம் வகையாகத்தான்றூக்கி யுலர்த்திக்கொண்டு, பாங்கானகுழித்தயிலமிறக்கிமைந்தா பரிவாகயித் தயிலமுமிரண்டும்வாங்கி, தீங்கில்லாயிந்தமுறைபொய்யாதையா செப் பினூர்தட்சணாமூர்த்திவாக்கு, மூங்கில்மேல் பனிநீரும் பிடித்துக்கொ ண்டு முறையாகயின்னமுண்டுசொல்லக்கேளே. (௧௪0௫)

கேளப்பாவங்கமதுபலந்தானென்று கெடியானகாரமுடன்சாரங் கூட்டு, தாளப்பாவீரமதுவிராகனெட்டு தருவாகவிவையெல்லாமொன் றாய்க்கூட்டி, கோளப்பாவாராமல்கல்வமிட்டு குழையவே அரைத்து மிகப்பூஜித்தேதான், நாளப்பாமுச்சாம மரைத்துவாங்கி நலமாகப்பாகு விட்டுவில்லைபண்ணே. (௧௪0௬)

பண்ணப்பாசீலைமண்ரண்டுகட்டு பரிவானரவியிலேயுலர்ந்தபின்பு, எண்ணூவேகுக்குடத்திலிட்டுப்பாருயிதமானகட்டியாமிதமாய்ச்சொன் னேன், திண்ணமுடன் கைபாகம் பிசகாவண்ணம் செப்பினூர்வேத முனிதட்சணையன், முன்னமேசொன்னதொரு வங்கம்வாங்கி முறை யாகப்பலம்பத்தெடுத்துக்கொள்ளே. (௧௪0௭)

எடுத்ததனைபரப்பொடியாயெடுத்துக்கொண்டு யிதமானநீரிவிட்டு மைந்தாகேளு, கொடுத்துவிடுபுடத்திட்டால்காரமப்பா குறையாமற் பலமொன்றுகூட்டுவாங்கு, தடுத்திடாதிந்தமுறைபிசகாதையா தார ணியில்மாந்தருக்குவுரைத்தவாறு, மடுத்திடவேரவியிலேமூன்றுநாளும் வகையாகவைத்திடவேசூதமாமே. (கச0அ)

சூதமடாயிதுபோலேசூதமில்லை சொல்லிவிட்டேன் மைந்தனே சுருக்குபாரு, மாதமுடன்கிழமையுண்டு யிதற்குமைந்தா வகையாகச் சொல்லிவிட்டேன் மருவிப்பாரு, போதமா யிம்மருந்து போலே யுண்டோ பூட்டினார்நாதாக்கள்சுளுக்குமெத்த, நாதமென்றவிந்துவைநீ கட்டிப்போடு நலமானகுருவெல்லாம் நடக்குந்தானே. (கச0கூ)

## நாதவிந்துகட்டகரு.

நாதமென்றவிந்துகட்டக்கருவேதென்றால் நம்மளுடமெய்ஞ்ஞான நடனர்பாரு, மாதமடாமாசியமாவாரங்கேளு மகத்தானஞாயிறுப் நட் சத்திரங்கேளு, காதமடாமுன்பிறக்கும் பரணிதன்னில் கருவுடனே யிந்தமுறை செய்துகொள்ளு. வீதமென்ற பூசமடா சொன்னேன் சொன்னேன் விபரமாய்தானறிந்து விரும்பிச்செய்யே. (கசக0)

செய்யப்பாசொல்லுகிறேன்கெந்தியானால்சீக்கிரமாய் விந்துவைத் தான் கட்டிப்போடும், உப்பவேயிப்படியே வருஷமுண்டால் உத்த மனேகாயமெல்லாஞ் சித்தியாகும், பொய்யாதுதட்சணாமூர்த்திவாக்கு பூதலத்தில்மானிடர்கள்நம்பவேண்டும், வையப்பாயின்னமொருவைப் பேதென்றால் வகையாகச்சொல்லுகிறேன் மருவக்கேளே. (கசகக)

## பாலசர்க்கரை.

மருவியதோர்பசுவின்பால் படிதான்பத்து வகையாகச்சொல்லு கிறேன் மைந்தாகேளு, மருகவேபானையிலே யிட்டுமைந்தா வகை யாகக்கற்கண்டுபலமுமிட்டு, பெருகவே சரக்குவகை பிசகாவண்ணம் பேணியிடில்கைபாகம் சரியாய்ப்போகும், மருகவேகாச்சடாகற்றுளி கோலில் மைந்தனேகுறுகையில் சர்க்கரைபோலாமே. (கசகஉ)

ஆமப்பாயிதற்கெல்லாம் பூசைவேணும் அன்பானதிருவடியைக் காணவேணும், காமப்பாதியானத்தை மறக்கலாகா கருவானகுருநீதி தப்பலாகா, ஓமப்பாவுத்தமனேநம்மைப்போல உரைக்கரிதுலோகமதி லுரைப்பதுண்டோ, ஓமப்பாயிப்படியேயிருந்தாயாகில் வுத்தமனே வித்தையெல்லா முறுதிதானே. (கசகங)

உறுதியாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு யுத்தமியை மறந்தாக்காலொன்றுமாகா, அறுதியாஞ்சதாநித்தம்பூசைவேணுஞ் செப்புகிறேன்மைந்தனே யில்லாவிட்டால், பருதியாம் மனோன்மணியைப் பணியவேண்டும் பராபரிதாள்பதாம்புயத்தைநம்பவேண்டும், சுருதியாமிந்தமொழி தப்பாதையா சூட்டினார்வேதமுனி சொன்னார்பாரே. ()

சொன்னாக்கால்வாருமோடாசித்திமுத்தி சுணங்கரேயாசைகொண்ட சூட்சங்கேளீர், முன்னாண்டபேர்களடா யார்தான்வாழ்ந்தார் மிகுதியாயாசைகொண்டு மாண்டுபோனார், பைங்நாளும் சித்தர்கள்தான் சொன்னமார்க்கம் பாவிக்கும்அதிதவித்தைபலிதமாகும், என்னைப்போவிருக்கவேவேண்டுமானால் எதேதுஆசையென்ற யிழுக்குத்தானே. ()

இழுக்காகவந்ததினால்மைந்தாகேளு யிறப்பார்கள்பொய்யென்பாரெழுநரகில்வீழ்வார், அழுக்கானதற்றதென்பா ரவுரிசொல்வார் அப்படியேயாசைகொள்வாரகந்தைவாமி, ஒழுக்கமுடன்நிற்பார்கள்பிசகாதையா உத்தமனேநாமுனக்குஅறைந்தவாறு, பழுப்பானவித்தைத்தான்பதறிச்செய்வார் பாவிகட்குச்கைமுறையைக்காட்டாதென்றே.()

காட்டினால்கருவை யெல்லா மறிந்துகொண்டு கருவிலேகுருவை யல்லோதூஷிப்பார்கள், நாட்டிலேயிருந்தாக்கால்நன்மைதானே நாடவொட்டார்கொடுமைசொல்வார் நலமாய்ச்சொன்னேன், பாட்டிலேயிந்நூல்போல்பநுவலுண்டோ பாடினார்சித்தர்களும்முனிவர்தாமும், வட்டிலேயிருப்பதுவைக்கூட்டிவைத்து யிருப்பதுவேநல்லதென்று யியம்பினேனே. (௧௪௧௭)

இயம்பினேன் மைந்தனே வாலைக்கப்பா யிதமாகப் பூசைசெய்ய வேளைகேளு, மயம்பெறவே பிரதமையில் பூசைமார்க்கம் வஃகயாகச் செய்யணுங்காண் சொன்னேன்பாரு, நயம்படவே நாதாக்கள்சொன்ன மார்க்கம் நாட்டிலேகாண்பரிதுஎவர்க்குமுண்டோ,நியம்பெறவேதுணையென்று பக்கல்வைத்து நிசமாகவாமமென்றபூசைபண்ணே. (௧௪௧௮)

பண்ணையிலேபுத்தியொன்றுநவிலலாகா பாங்கானவுபதேசமறக்கலாகா, எண்ணவேசின்மயத்தை நம்பவேண்டும் யீசருட கவனத்தை தவறலாகா, குண்ணுமலிச்சைவைத்து செய்வீராகில் கூடிவரும்சகல சித்துமாடும்பாரு, கண்ணிலேமேல்நோக்கும்கெவுனமாகா காட்டியே பூசையிடுகருவுகாணே. (௧௪௧௯)

காணுமடாசொல்லிவிட்டோமறைப்பெல்லாநீக்கி கருகண்டுகுரு கண்டுகருதிச்செய்ய, ஆணுவத்தைவிட்டுவிடு தாயைப்பூசி யப்பனே சொல்லுகிறேனறிந்துகொள்ளு, தோணுமடாதட்சணாமூர்த்திவாக்கு துன்மார்க்கற்கிந்தாலேபாவமாகும், பானுவென்றபாத்திரமோயிதற்குப் பூசை பாடினேன்மெய்ஞ்ஞானநடனந்தானே. (கசஉ0)

தானேகேள்அப்பிரகம்ஓமம்கெந்தி தன்னோடுதிருகுகள்ளிப்பாலை வார்த்து, மானேகேள் அரைத்திட்டுப் பொதிந்துசீலை மண்மூன்று செய்துலர்த்தித்தாயைப்பூசி, பேணக்கேள்சட்டிதனில் கள்ளும்விட்டு பிலத்ததோர்க் கவசத்தை நடுவேவைத்து, தோணக்கேள் மறுபடியும் சுண்ணும்பிலிட்டுத் துலங்கவே கமலமதாய் சாமம்ரெண்டே. (கசஉக)

சாமமதுரெண்டல்லோவன்னிமூட்டு சண்முகற்கும்வடுகனுக்கும் வாமபூசை, சாமமதுகணபதிக்குப் பூசைபண்ணு சண்டாளனானாலும் வெள்ளைகட்டும், நாமமதுசொல்லுகிறேன் வெள்ளியம்பரப்பி நலமான வெருளைகண்ட யிடைக்குரெட்டி, தாமதுவேரசஞ்சேருவெள்ளியெட் டுத் தான்சேர்த்துயெருக்கலம்பால் தன்னாலாட்டே. (கசஉஉ)

ஆட்டியே வில்லைசெய்து காய்ந்தபின்பு அழகான சுண்ணும்பி லெரித்துவாங்கு, தாட்டிகமாய் கடிகையினல் வன்னிமூட்டி தவளமாய் நீறுமது யென்னசொல்வேன், நீட்டிப்பார் நவலோகந் தன்னிலப்பா நிசமானகைலாசங்கொள்ளலாச்சு, நாட்டிலுள்ளவாதிகளேவெளியாய்ச் சொன்னேன் நன்றாச்சுக்கூகூ வாதிகாணார், காட்டியே ஒளித்தார்க ளிந்தநூலை காரப்பாசித்தரிடம் பெரியோர்கேளே. (கசஉங)

கேளப்பா யொருவற்கு எய்வதுதானரிது கெடியானலோகத்தில் கிட்டார் கிட்டார், வாளப்பா பூரணபூசை யிந்தாவென்பான் வாகான தில்லையப்பா செந்தூரங் கொண்டால், நாளப்பா தொழிலின்முறை சொவ்லாதேயப்பா நலமானதேவிபாஞ் சத்தியாகும், மாளாதேஜங் கோலத்தைலத்துப்பு கண்டுகொள்ளுமிதில்சொல்லக்கனகமாமே. ()

கனகமாஞ்செந்தூரம்நின்றால்வேதை காயசித்தி கனைகண்டாலவ னும்பாரு, கனகமாஞ் செந்தூரந் தொந்தங்கோடி கரைகாணுந் துரை கோடிகவர்கள்கோடி, கனகமாங் களங்கமுதல் செயநீர்கோடி கட்டான துறைகோடி பற்பங்கோடி, கனகமாஞ் செந்தூரங் கோடாகோடி காட் டுமே தூபங்கோடி கண்டிலேனே. (கசஉரு)

கண்டிலேன்பரிசவேதைகளங்கங்கோடி காட்டாதேஓருத்தருக்கு
மின்னங்கேளு, விண்டிடவேநவச்சாரம்சினக்காரம் வெடியுப்புவெண்
காரஞ்சூடன்நாலு, கொண்டிடவேபழம்புளியினுப்புநாலுகுளம்வாழுஞ்
சிப்பினத்தை சதைகள்ரண்டு, அண்டிடவே மறுசட்டி தனிலிறுத்து
அடுப்பேற்றியெரித்துசிவனுப்பதாக்கே. (௧௪௨௫)

## பாஷாணக் கட்டு.

உப்பாகும்வெயில்தனிலே வீரங்கூட்டி உமிநீராலச்சிறுநீரால்த
வேதான், தப்பானசெய்தியல்லஅரைத்துவைத்துத் தான்வெள்ளைப்
பாஷாணஞ்சாராயத்தால், கைப்பாகமறவாதேபனம்பாலுங்கூட்டிக்கல்
ச்சுன்னம்நடுவில்சுழிமுனையில் கண்ணேட்டம்பாரு, மப்பானசித்தி
யடாசிலவுமில்லை மகாமுனிவர்ஒளித்தார்கள்சித்தர்தாமே. (௧௪௨௭)

## பாஷாண சுத்தி.

சித்தாகவேணுமென்றால் கற்பஞ்சொல்வேன் சிவாயநமாவென்று
கையான்சமூலம்வாங்கி, முத்தாகசூரணித்துமிளகுங்கூட்டி முக்கிய
மாய்மண்டலங்கொள்தேகம்பொன்னும், கத்தாககவிபாடும்வசியமாகும்
கலையானவேதங்கள்துலங்கிப்போகும், பெத்ததாயாகுமென்றுபெண்
ணைத்தள்ளு பலமாகயெந்தனுடகற்பம்பாரே. (௧௪௨௮)

## சுழிமுனைப்பிரகாசமானால் வயித்தியஞ்சித்தி.

பாரப்பாகுருக்குவழியொன்றுசொல்வேன் பரிவானஆதியென்ற
வழலைசுண்ணம், சேரப்பாயிதினோடுகாரசாரம் சினம்வெடியுப்புசெந்தி
லிங்கமானை, யாரப்பாவீரமனோ சிலைதான்பூரம் மதினோடுதாருசிபதி
னென்றுமிக்க, வாரப்பாபழச்சாற்றைவிட்டுஆட்டி மைந்தனேவில்லை
செய்துவெயிலில்காய்ந்தே. (௧௪௨௯)

## கையாந்தகரை கற்பம் செந்தூரம்.

காய்ந்தபின்புமணலிட்டுயெரிப்பாய்சாமம் கண்கொள்ளாச்செந்தூ
ரங்குப்பிக்கேத்தி, ஆய்ந்தபரையீஸ்வரிக்குப்பூசைபண்ணு அழகான
செந்தூரமாகும்பாரு, வாய்ந்தபொருள்செந்தூரந்தன்னைக்கண்டு மகி
ழாதேநிருவாணிசோதிப்பாள்பாரு, யெந்தாயேபூரணியேஅம்மாவெ
ன்று யேத்தினால்பிள்ளையென்றுஅருள்செய்வாங்கே. (௧௪௩௰)

## கண்டமாலைக்கு நெய்.

வாங்கியேமால்தேவிகெந்திரண்டு வகைவிதங்களஞ்சினாலரைத்து
ப்போட்டு, தாங்கியேஅடுப்பேற்றிப்பதமாகத்தான் வடித்துநெய்யத
னில்கள்ளிப்பால்கூட்டி, யேங்கியேதிரியாதேநோய்கள்கொண்டு யிய
ல்பாகவமுதுண்டுநெய்யைக்கொள்ளத், தூங்கியேதுடிபடாகண்டமாலை
சூலைகுட்டம்காப்பனோடுதீருந்தானே. (௧௪௩௧)

திருமேமுன்சொன்னகுருவைக்கூட்டு செயமாகசீரகமுஞ்சேர்த்தாயானால், நாறுமேமண்டைநீர் விஷங்கள்தீரும் நாட்டிலுள்ளோர்க்கின்னூலைநல்கவேண்டாம், பாருநீபுலத்தியனேசுறுக்காம் நோய்தான்பாடவில்லையின்னூல்போல்பதினெண்பேரும், தேறுமேவயித்தியற்குயின்னூல்தாரனும் செப்பினேன்சித்தரெல்லாமெச்சினாரே. (கசஙஉ)

மெச்சியேசித்தரெல்லாம்பேசிக்கொண்டுவெளிவிட்டுவயித்தியத்தைப்பாடினாரென்று, வாச்சுதேயென்றுசொல்லி குகைக்குள்ளாக்கிவாதமொடுவயித்தியமுஞ்சொன்னாரய்யோ, யேச்சப்பாபொருள்தேடக்காணமாட்டான் யிந்தனூல்எய்வதுதான்அரிதரிதுவப்பா, நிச்சயமாம்வாதிக்காம்வயித்தியற்குமாகும் நிலையானவாதமதுகிட்டிப்போச்சே. ()

போச்சென்றுயெண்ணாதேமகிழ்ந்திடாதே பூசைக்கும்பெரியோர்க்கும்பாதேசிக்கிவாய், மோட்சமென்றுகிட்டேவேகளஞ்சிரெண்டு உண்ணுமப்பாகறுகறுத்துவொடுங்கிச்சாகும், சீட்சையாம்வண்டமதில்வைப்பதற்குச் சிறப்பானமால்தேவிக்கவசங்கேளு, காட்சியாம்நவாச்சாரப்படிக்கிசூடன் தன்னோடுவெடியுப்புவெங்காரங்கூட்டே. (கசஙச)

அரிதாரக்கவசங்கட்ட.

கூட்டியேயெருக்கம்பால்விட்டுஆட்டி கொண்டபின்புகள்ளிப்பால்குமரிச்சார்விட்டு, ஆட்டியேஊமத்தஞ்சாருவிட்டு அரைத்துநீபொதிந்துயுண்டையுள்ளேவைத்து, சேட்டியல்போல்திரியாதேசிலைமண் செய்து தேவிக்குபூசைபண்ணிமுழப்புடந்தான்போடு, தாட்டிகமாய்களங்காகுஞ்செந்தூரமாகுந் தரணியுள்ளோர்க்கித்தொழிலைக்காண்பியாதே.

அரையாப்புக்கெண்ணை.

காண்பியாதின்னமொருசேதிசொல்வேன் கதிரவன்தானுதிக்குமுன்பேதியானஞ்செய்து, சோம்பலாய்த்திரியாதேநத்தைச்சூரி சுயம்பானவேருமொருபிடிதான்கொண்டு, மேன்பாடுயென்னசொல்வேன் தைவேளையுள்ளி விரும்பியேமூன்றுமொன்றாயிடித்துவாங்கி, தோணவேநல்லெண்ணெய் படியரையில்விட்டு சூரியன்தன்முகங்காணக் கிண்டிவையே. (கசஙசா)

வைத்தெண்ணெயிருபொழுதுகொண்டாயானால் வலுவானஅரையாப்புதெறித்துப்போகும், முத்தானபுகைகளவுநீருஞ்சூலை முக்கிய முள்ளவயித்தியரேசுருக்கம்பாரு, பத்தியமாய்கொண்டுவிடும் மொன்றுமாகா பாருலகில்விள்ளாதேயின்னஞ்சொல்வேன், எத்தானமேகங்கள் பவுத்திரங்கள் எழுந்தபித்தநீரிழிவுகாந்தல்போமே. (கசஙஎ)

அனுபானம் மேகம் பவுத்திரம் நீரிழிவுபோம் காந்தல்.

போமென்றவெள்ளீயபற்பந்தன்னை புகலாதேசசடருக்குச்சொஞ்சமாகும், நாமென்றஆணுவத்தாலிந்தனாலே நாட்டிஉள்ளோர்க்கியாதே நசிந்துபோவாய், மெமென்றபூரணமாம்லாடபீடம் விரிந்துநின்றவிட்டெழுத்தாம்அகாரந்தானே, தாமென்றமகாரமதில்உகாரங்கூடில் சதாசிவனரிடந்தரித்தவாலையாமே. (கசருஅ)

அரிதாரக்கட்டு.

வாலையென்றமூன்றெழுத்தில் றீங்காரஞ்சேரில் மசக்தானவாதமெல்லாஞ்சித்தியாச்சு, ஆலயங்கள்சுத்தியேதிரிவதென்ன ஆத்தானைக்காணுதஅசட்டுவாதி, பாலையாமமுர்தமுண்டுபூரணத்தைநாடி பார்பாருபிருகண்ணால்பிரகாசம்வீசும், சிவாலயமிதுதானேதெய்வமென்றுசித்தரொடுரிஷிகோடிதெரிசித்தாரே. (கசருகூ)

தெரிசித்தாருத்திரனும்வாசனுந்தானும் தேவாதிதேவகின்னர்புருடர்தானும், தெரிசித்தரர்பிர்மாவுப்உமையாள்தானும் தேசத்திலிப்புதுமைசெப்பாதேநீ, வரிசையாய்ச்சொல்லிவிட்டேன்பூரணத்தில் வாழுகின்றதெய்வமடாவாலைப்பெண்தாள், அறிவானமகாரமென மகாரபீடம் மலைகடலில்பள்ளிகொண்ட அரியுமடாவறிந்துகாணே. (கசசும)

{ க்ஷயமீளை யிருமல் குட்டம் அரையாப்புக்கனுபான மறிந்து கொடுக்கப்போம். }

காணவேசெற்பனேய் தீருதற்கு கடுகுமஞ்சள் ரிவைாரைகடுச்சாபிந்து, தோணவேதைவேளைவிழியுள்ளி சுகமானவெண்கரசம்ஆமணக்கிலைதான், பேணவேவகையொன்றுபலமூன்றுசப் போனயோரண்டக்தெண்ணைநாழி, வேணவேபடுப்பேத்திமெழுகுபோல வெந்தயெண்ணைகரண்டிநிறையளவாய்க்கொள்ளே. (கசசுக)

கொள்ளவேவாய்வேதுகிருமியேதா கூட்டிடுவாய்சள்ளிச்சார்குருபற்பந்தான், யெள்ளளவுசேர்த்துவிடுசணபதிக்கு யேத்திடுவாய்தோத்திரங்கள்சோடசவுபசாரங்கள், தவ்ளியேமாதளிடையானநாளில் தப்பாதுஉலகத்தில்பெண்மலடோயில்லை,கொள்ளியென்றபசகளுக்கு யெண்ணைகொஞ்சம் கூறுதேயின்னமொன்றுசொல்லுவேனே. (கசசுஉ)

கேற்பத்துக்குயெண்ணை மேகத்துக்கு வெள்ளீயபற்பம்.

சொல்லுவேன்மேகமதுதீருதற்குச் சுறுக்சப்பாவெள்ளியப்பற்பஞ்சொல்வேன், வல்லானைவீரமுடன்குமரிச்சாற்றை வார்த்தரைத்துவில்லைதட்டிகாயவைத்து, யெல்லாருங்காணுகின்றசாபவேளை பிடித்துநீர்விட்டரைத்துவில்லைசெய்து, கல்லாலுல்ஞெச்சியிலைகுமரிச்சாருங்கனகமிட்டுபுடமிடவேபற்பமாமே. (கசசுங)

பற்பமதுபணவிடைதான்யெடுத்துக்கொண்டு பாச்சதிலேஅனுபானஞ்சொல்லக்கேளு, அற்பமென்றுநினையாதேஆவின்பாலில் அதிம

தூரம்நீண்டபூகைவிளங்கச்சொல்வேன், காக்கின்றவயித்தியரே யிந்த னூலின் கைமுறையைக் காட்டாதே னூல்கொடாதே, போக்கறிந்து பெரியோர்களுக்கெய்துமின்னூல் புகழவேயின்னமொருசேதிகேளே.

{ படர்தாமரை தழுதளையுஞ் சூலை சிரங்கு சிலவிஷம் குட்டம்போகமருந்து. }

கேளப்பாமருதோணிநாகவல்லி கெந்தகத்தோடெருக்கலம்வேர் வச்சிரவல்லி, சூளப்பாகரியசிரகமும்யேலம் சூடனொடுசிறுநீராலாட்டி மைப்போல், வாளப்பாமுன்சொன்னசெந்தூரம்போட்டு வளர்ந்தபடர் தாமரையும்தழுதளையும்சூலை, தேளப்பாசிலவிஷங்கள்சிரங்குகுஷ்டம் தீருமேசாய்ங்காலந்தீர்த்தமாடே. (கசசரு)

அரிதாரவெள்ளை.

ஆடவேயின்னமொருசூட்சங்கேளு அரிதாரம் வேண்டியதோர் கல்வத்திட்டு,சாடவேஅரைத்திடுவாய்மெழுகுபோலாஞ் சாறணையாஞ் சாறுவிட்டுவில்லைசட்டி, போடவேகருவாலிப்புடத்தில்நீறுஞ் புத்தோட்டில்வைத்துமறுவோடுமூடி, வாடவேவேண்டாங்காண்ராசவாதிமரசற்ற திருநீறுபோலாமென்னே. (கசசசு)

என்னவேவாதமிதில்சவர்கள்கோடி லெக்கில்லைவனுபானங் கண்டறிந்து, வுண்ணவேசயமீளாபிரும்பல்குட்டம் ஓடுமேசெந்தூரமனைத்துங்கொள்ளத், திண்ணமென்றஅரையாப்புக்கனுபானங்கேள் சேர்ந்த பொடுதலையரைத்துநல்லெண்ணைகுத்தி, அன்னமேதவிடுதனில் பிரட்டியேதான் அப்பனேகொடுப்பதுவு மிகநன்றுமே. (கசசஎ)

நீலகண்டக்குரு சகலத்துக்கும்போடு.

ஆமப்பாஆதியென்றவழலைதொட்டுஅறையுறேன்முதல்க்குருவாய்சகலத்துக்கும், நாமப்பாநீலகண்டசெந்தூரத்தை நாட்டுறேன்உவச்சாரங்கல்வத்திட்டு, தாமப்பாவுரைத்திடவேசாமம்ரெண்டு தாளிச்சார்விட்டாட்டிவில்லைசெய்து, வேமப்பாகருவாலிப்புடமிட்டேதான் விளங்கவேபுடமஞ்சில் வெண்மைகாணே. (கசசஅ)

வெண்மையென்றபூனீறுகொடியசுண்ணம் மெய்ஞ்ஞானவடுகனுக்குபூசைபண்ணு, தண்மையென்றவயித்தியரேதருசுநோய்த் தான் சேர்த்து அரைத்திடுவாய்த் தாளிச்சாற்றால், கன்மங்கள் நினையாதே வாமம்வைத்துக் கருணைதரவேணுமென்றுதாயைப்பூசி, நன்மையாய்ச் செந்தூரமருனன்போலாம் நாட்டகத்தேஆட்டுகிறகுருவிதாமே. ()

குருவிலேபணவிடைதானெடுத்துக்கொண்டு குளிகைக்குதயிலங்கள்பற்பத்துக்கும், பருகுமிச்சூரணகியாழத்துக்கும் பரிவானசெந்தூரமிதுகட்கெல்லாம், மருவியேவாதிகளேசுருக்கம்பாரு மாட்டிடவே செந்தூரம்நோய்கள்திரும், கருவாகத்துரைகோடிதொந்தங்கோடி காட்டிதுகாட்டதுவுமுலகத்தோர்க்கே. (கசரு௦)

சாத்திரந்தா னாறுகண்டம் விரித்துசொன்னேன் தனைக்குறுக்கி மூன்றுகண்டம்சொன்னோம்பாரு, சூத்திரந்தான்மூன்றுரைத்தேன்கற்பம்நூறுந்தோஷமில்லைமோசமில்லைசொல்வேன்கேளு, சேத்திரந்தான் னாற்பதுக்குள்வழலைமார்க்கம் திறந்தப்பாபாடினார் செஉநூலெல்லாங், கோத்திரந்தான்மூலகுருசிஷவர்க்கம் கூறினேன்போகரொடுகணேசன் காப்பே. (கசடுக)

கணபதியின்பதம்போற்றிஅந்தம்போற்றி கயிலாசசட்டைமுனி பதமேபோற்றி, கணபதிக்குமேல்நின்றஐவர்போற்றிகருணைதரு மணித்தாயின்கழலேபோற்றி, கணபதியுமாத்தாளுங்கூடும்போது காசினியின்பூரணத்தின் களையேபோற்றி, கணபதியை மூலத்திலறிந்து போற்றிக் கனலெழும்பக்குண்டலிக்குள்நந்தியாச்சே. (கசடுஉ)

ஆச்சப்பாநந்திசொல்ஞானமார்க்கம் அறிவோடேகூடிநின்றுமேல்க்கொண்டேறி, போச்சப்பாயென்னசொல்வேன்பூரணந்தான் புருவமையத்தமர்திறந்து சிலம்பொலியைப்போற்றி, வாச்சப்பாபோச்சுதென்றுயிருந்தேனந்த மதியிருந்தப்பட்டணத்துக்கப்பால்சென்றேன், போச்சப்பாலகிரிகொண்டுதிரும்பிவந்தேன் போரானபூரணத்திற்சிக்கினேனே. (கசடுங)

பூரணமாய்நின்றதொருமனத்தின்வீதி புகழானசூரியன்தன் பிரபைக்குள்ளாய், காரணத்தின்வெளிபோலேவெளியாய்நின்ற கதிரொளியேவாசியினாற்கண்டுதேறு, சீரணமாய்ப்போகாமல் செப்பக்கேளு திறமாகச்சொல்லுகிறேன் தீட்சைமார்க்கம், பாரணத்தின்மூன்றுபத்தோடிரண்டுஞ்சொன்னேன் பரிவாகஅறுபதுக்குள்பரிந்துகாணே. ()

காணப்பா தீட்சைபெற்றவழலைமார்க்கங் கைமுறையாச்சொல்லுகிறேன்கவடுநீக்கி, ஊணப்பாமுப்பூவில்எண்ணைவிட்டமார்க்கமுறையாய்ச்சொன்னேன்னொன்பதுக்குள், தோணப்பாசட்டைமுனிமறைத்தசூத்திரம் சுந்தரனைபாடிவித்தார்யிருபத்தஞ்சில், நாணப்பாபதினெண்பேர்பாடலெல்லாம் நலம்போலப்பாடினார்சலங்கண்டாரே. (கசடுரு)

## இந்துவுடபிறவி.

கண்டதொருநூலெல்லாம்பார்த்துமேதான் கைமுறையைப்பாராமல்சுடுவார்கோடி, விண்டதொருமுப்பூவின்முடியைக்கேளு விதமானமுப்பூவின்பேரைக்கேளு, உண்டதொருவிந்தென்றும் நாதமென்றும் உப்புறைந்தசமுத்திரன்நாதமென்றும், பண்டையிலேகயிலாசமூர்த்தி சொன்னேன் பணமுப்பூத்திட்சைவிதிகிழித்திட்டாரே. (கசடுசு)

கிழித்திட்டமூலகுருயிருனூறும்வாங்கி கெடியாகபின்புநான்தெண்டன்பண்ணி, அளித்திட்டார் அடக்கமாய் பாடச்சொல்லி அப்போது

காற்பது சூத்திரத்தில்சொன்னேன், ஒளித்திட்டார் நவகோடிசித்த ரெல்லாம் ஓகோகோகொங்கணவர்வெளியிற்போட்டாரென்று, பழித் திட்டார்யிப்படிதான் வழலைமார்க்கம் பரிபாஷையில்லாமல் படித்திட் டாரே. (கசருஎ)

படிப்பதிலேயிதினுடையபிறவிகேளு பாரதனில்பூக்கல்ச்சுட்ட தென்றுனுதம், மடிப்பதிலேமண்ணென்றும்மாற்றானென்றும் மாதிவ ருந்திரமென்றும்சுரோணிதந்தான், குடிப்பதிலேயிணங்கியுரக் கூட்டி யென்றும் சொல்லுதற்குசத்தியென்றுமிதற்குப்பேரு, வெடிப்பதிலே காரியென்றும்விஷமியென்றும் வேதாந்தவண்ணாத்திக் கதிரின்மேலே.

ரவியினுட பிறவி.

மேலாகரவியினுடபேரேதென்றால் விளம்புவேன்முடியென்றும் விண்ணென்றும்பேர்தானாகும், பாலானவித்தென்றும்சிவமென்றும் பேர்படுபாவிவழலையுப்புபடைத்தளிக்கும்,சேலானமதயானைக் கல்லுப் பென்றும்சிசுசாலமாடுகிற உப்பிதென்றும்,காலானகாலனென்றுஞ் சவு காரனென்றுங் காட்டுகிறவித்தையிந்தகளைகொள்ளாதே. (கசருகூ)

கொள்ளாதகாமியென்றும்குசவனென்றும் குடிகெடுத்தவுவசார மாக்கியென்றும், விள்ளாதேகொள்ளியென்றும் வெட்டவெளியென் றும் யிருந்தவிடம்பூசநீயென்றுபேரு, கள்ளாகிசெறிந்ததொரு உப்பி தென்றுங் கட்டாகவழலைசெய்தேஎண்ணைவார்க்க, ஒள்ளியதோர்கறுப் பனென்றும் உவருப்பென்றும் வுரைத்தோமேமிதன்பேரு கல்லுப் பாமே. (கசசூய)

கல்லுப்பின் பேர்.

கல்லுப்பின்வகைசொல்லக்கேளுமப்பா கருணைபெருமகத்தீசர் கடல்நீருண்ட, வல்லதொருசத்தியுப்புசமுத்திரமாச்சுவளமானஞானியு ப்புசித்தம்போதம், வெல்லுகின்றநீருப்புானமேயென்றும் மேலென் றும்வாய்விதென்றும்மாதியென்றும், சொல்லுவேன்பாறையுப்பு யிதி னோடுமூன்றுஞ் சுத்தசெங்கைகமுதற்சுத்தியென்றுபேரே. (கசசூக)

ஒன்றானதிட்சைவிட்டுவூசிநீரிற் உத்தமனேரவிமுகத்திலுரவிருப் பாய்,சென்றாலேபஞ்சசெணதிட்சைவிட்டு தேசியிலேசிறந்தவுப்பு பூநீ ரென்றும், நன்றாகஉப்பெடுக்கயெழுபிறப்புமாச்சு நந்தியரையவ்ட்ட கறம்கும்பிடானை, என்றதன்னிநவக்கிரகந்தான் பாண்டத்திலூரியிசை ந்தஉப்பிலேயிருக்கும்வாங்கே. (கசசூஉ)

வாங்கியிந்தஉப்பெடுத்துத்திட்சைக்குள்ளே வளமானவிந்துவிட ஞதம்நீராம், வோங்கியதோர்செயநீருஅறுநீர்சொல்வேன் உற்றதொ ருபாறையுப்பு பலந்தானென்று, தாங்கியதோர் வெடியுப்புபலந்தான்

ரெண்டுதனக்குரியசினமிருமுப்பில்கூட்டி, காங்கிஷையாமிந்துப்புபலந் தானென்று கடியதொருசாரமொன்றுகூட்டனென்றே. (கசகூங)

ஒன்றுனபலவிதமரைப்புகேளு வுணர்வெருக்கம்பால்சேர யண்டம்பத்து, நன்றுகநீராகும்மச்சைசேரை ஞானுக்கொன்றுய்நாலு சாமமாட்டு, சென்றுடியுறவிருந்தச்செத்துபோகும் திடமாகரவிமுகத்திற் பக்கங்காய, அன்றுடமரைப்பாய்சாமமொன்று அப்பனேபொடித்துளாமதுதான்பாரே. (கசகூச)

பாருநீர்அறுசரக்கை சொல்லார்சொல்லார் பரிபாஷைபூசியாய்மறைத்துவைத்தார், தேருநீர்பனியில்வைக்கச்சிலமதாகும். செப்பார்கள் சத்திக்குஏகதீட்சை, காருநீர்சிவத்துக்குநீரைச்சொல்வேன் காட்டார்கள்கருமறைப்பைச் சொல்லக்கேளு, சாருகின்றமுதற்றிட்சை பூமிநாதஞ் சமனுகநவச்சாரந்தாக்கியாட்டே. (கசகூரு)

ஆட்டையிலேகெட்டெழும்பும்அடங்கவேதான் அரைத்திடுவாய் ஞாற்சாமம்மடங்கநீராம், மாட்டையிலேதினமொன்று சாமமொன்றுவாகாகபொடித்துளாம் பக்கமொன்றில், கேட்டையிலேயின்னீராம் சிவத்துக்கொப்பாய்கெடியாகரவிமுகத்திலிருந்துவத்தி, கேட்டையிலே வடமுகத்திலிருந்தசொர்க்கங் குபேரனுடதனமெல்லாங் கொள்ளையாச்சே. (கசகூசு)

கொள்ளையிட்டால்வாதமெல்லாங்கூகூ அய்யோ குபேரனென்ன கயிலையென்னயிவர்க்கிடுண்டோ, தள்ளையென்பார்பிள்ளைகள்தான்கோடிகோடி தருவானயோககதிர்தீட்டையாச்சு, வெள்ளையென்றபாறையுப்புயெழுபிறப்புமானுல் வெள்ளமன்றிருசிநீர்விருதாமொன்றில், எள்ளளவுந்தப்பில்லாதுறந்தேனெட்டும் யெளிதல்லதேசியுடயிதையநீரே.

நீராலேநலமாச்சுதீட்சைமார்க்கம் நெறியாகசாராயம் பத்தேசகண்டோம், பாராதேமுப்பூவும்முடித்தாயானுல் பாழாகும்வாதமெல்லாம் குளிகைகையில், வாராதுஞானமங்கேமனம்பேபாகும் வாய்வாதத்திருடருடன் வாய்பேசாதே, யோராதே யிணங்கனுக்கு நேராய்ப்பாதியிசைந்துபழம்புளிகூட்டியோட்டியாட்டே. (கசகூஅ)

ஆட்டியேதீக்கொளுத்தி வெந்தசுன்னம் அஞ்சுதரங்காச்சிவிட உப்புசுன்னம், மாட்டியேபுரியட்டம்பூவையற்கு வளமானபூரணத்தினேட்டம்பாரு, காட்டியேகளினுலும்தின்னுற்கேளு கைமுறையில்வெண்கருவாஞ்சுக்கிலந்தான், பாட்டிலேசொல்லார்கள்விந்துவாலே பகலவன்றன்முகத்திலனைத்திடுவர்தாமே. (கசகூகூ)

ஆமப்பாவில்லைசெய்துகாயப்போட்டு ஆறுதினமானபின்புகூடனுக்கு, காயப்பாநித்தமோருக்காலேகுத்தி சட்டாகக்காற்றுடாமூலைக்

குள்ளே, தாமப்பாகூடுகொண்டுகூடனுக்குந்தருவானதலைதெறிக்கப்பக்
கந்தன்னில், வேமப்பாநெற்கனியின்சாற்றினாலே விளம்புவேன்சாம
மதுவரைத்துகூட்டே. (௧௪௭௰)

அரைத்ததனைவில்லைசெய்துகாய்ந்தபின்பு அஞ்சுசுன்னக்குகைக்
குள்ளேவைத்துமூடி, திரைத்தநொருசுன்னக்கல்நடுவேவைத்து நே
ராதூவஞ்செருவில்ப்புடத்தைப்போட்டு, பரைக்காக கணேசனுக்குப்
பூசைபண்ணுபாங்காகஆறினபின்னெடுத்துப்பாரு, துரைக்காகுஞ்சுக்கி
லத்தையுண்டகூடன் துடியானநீருமொருபலத்தைவாங்கே. (௧௪௭௧)

வாங்குவாயிந்திடைக்குபாறைஉப்பு வளமானசிவமப்பா கண்டி
டைக்குத், தாங்குவாய்நீர்முலைப்பால்தன்னாலாட்டி சார்வாகரவிமுகத்
திற்காய்ந்தபின்பு, பாங்காகஆறுதினமானபின்பு பகருவேனின்னமொ
ருபணிகொள்பிண்டம், ஓங்குவாய்பெண்ணடியைக்கலசத்திட்டு யுற்ப
னமாய்யரணமுடியையதின்மேல்வையே. (௧௪௭௨)

வைத்ததின்மேல்முந்தினபெண்ணடியைவைத்து வளமாகச்சிலை
யிட்டுசெவுக்காரஞ்சேர், சித்தரெல்லாம்வூனென்றஎண்ணைகழற்றி வூதை
யிலேசுன்னமாமெடுத்துக்கொண்டு, வானென்றகடுங்காரமதின்மேலே
த்தி மகத்தானவழலைதன்னை கடுஞ்சுன்னமாக்கி, யேனென்றகுளிகை
செய்வார்உபாசந் தாக்கியிதமாகசாரணையுந்திருவாரே. (௧௪௭௩)

வாரமுள்ளஉபாசந்தான்ரெண்டுபத்தோடாறும் வளமாகசேர்த்து
மேதங்கமோடு, வீரமுடன்கெந்தியிட்டுசெந்தூரஞ்செய்து வெவ்வே
றேதின்றிடுவார்தேகசித்தி, சாரமுள்ளவழலைதொட்டார்கோடாகோடி
சாத்திரமுஞ்சூத்திரமும்நிகண்டுசெய்தார், சோாதனம்பாடினார் சூத்திர
மெல்லாம் சுட்டலைந்துதேடுறதாய்சூட்டினாரே. (௧௪௭௪)

சூட்டியதோர்வழலைக்குக்கைமுறையேசெய்யிற் சோம்பலாயனு
வளவுதப்பித்தானால், தாட்டீகமோபோராதுசாரமில்லை தாடிகளைவளை
த்திருக்கும்சடையர்போலாம், எட்டிலேயெழுதிவைத்தபாடலெல்லாம்
யிகத்திலேபொய்யாகு மென்மேல்தோஷம், சாட்டினால்யானேது
செய்வேனப்பா சலிப்பினால்வாதமடிதலைப்பட்டாரே. (௧௪௭௫)

கடுங்காரச்செயநீர்.

தலையோடேகாலறிந்து முடிக்கவேணும் தவறுமல்ரவிமுகத்தே
காயவேணும், மலையாதேதீட்சையெல்லாம் முறவாய்க்காணும் வா
சமிடுங்கற்பூர மருவத்தோணும், குலையானைசேர்ந்தகொரு பஞ்சபூதங்

கொடியதொரு புரியவ்ஷ்டம் பாள்முன்ருென்றுங், கலையாதே சோட சத்தை மறவாதேநீ கடுங்காரச் செயநீரை ரவியில்வைவயே. (கசளஎ)

இரவியிலே யுலர்ந்தஉப்பு பூவுமொன்று ஞட்டியதோர் கற்பூர மொன்றுங்கூட்டி, செவியிலே யிருந்தவொரு குருவுமொன்று திறமாக ஞல்மருந்துங் சழஞ்சுயேழும், புவியிலே யிருந்தபெண்ணுள் புருடன் வாழ்க்கை புணர்ச்சியில்லா மாதவிடை போதம்வாங்கி, தவியிலே வீரமொரு சழஞ்சுகூட்டி க்ஷணத்திலே நீராகும் படிதான்ரெண்டே.()

இரண்டுபடி நீருக்கும் சோடசமாம்பூரம் நேராகப் பலவிதம் போடுபோடு, கண்டதொரு நீருண்ண ரவியிற்போடு கல்ங்காதே திங்க ளொன்று காய்ந்தபின்பு, விண்டதொரு யேழுசுன்னக் குகையில் வைத்து விதமாக மேல்மூடிச் சீலைசெய்து, பண்டையிலே கற்சுன்னங் கீழ்மேலிட்டுப் பாங்காகச் சாமமொன்று யெரித்திடாயே. (கசளஅ)

எரித்திடவே நாற்பத்து முக்கோணசத்தி யினமுறப் பூசை பண்ணு நந்திபூசை, பெருத்தசிதம் பரபூசை செய்யவேண்டும் பிலக் கவே கணபதிக்குப் பூசைபண்ணு, பெருத்திடவே பதினெட்டு சித்த ருள்ளம் பூரிக்க உன்னதமாய்த் தியானம்பண்ணு, தரித்திரம்போஞ் ஞானமாம் சண்டாளம்போம் சாற்றினேன் முப்பூவின் வழலைதானே.()

மறவாதே கடுங்காரச் ஜெயநீர்சொல்வேன் மகத்தான அண்ட மது நூறுவாங்கி, உறவாகப் பீங்கானில் வெண்கருவைவாரு உத்த மனே யெருக்கம்பால் சேரைவாரு, அறமான சொற்கம்பால் சேரை வாரு அப்பனே தில்லைப்பால் சேரைவாரு, துகையான கொடிக்கள்ளி படர்ந்தகள்ளி சற்ருன ஞகங்கள்ளிப் பாலோடாறே. (கசஅ0)

ஆருேடு இலைக்கள்ளி வெள்ளெருக்கு அப்பனே யெட்டுமொன் ருய்ச் சேரவாரு, கூருன கவடம்ரெண்டு திட்டுவாரு கொழுத்தசெங் கொட்டை தயிலமாறுகாசு, காருன விடாதயிலம் பாலெல்லாஞ்சேரு கெருகோர்த்து விடுமருந்து சொல்வேன்பாரு, பேருன சுத்தரசம் வீரம்பூரம் பெருத்ததொரு மூதண்ட சுன்னமஞ்சே. (கசஅக)

அஞ்சோடு அஞ்சுசுன்ன அண்டச்சுன்னம் அதனேடு முன்திட் கைக்ஷ பூமிஞதம், நஞ்சான கருவியுடன் கௌரிவெள்ளை நவக்ஷாரம் பொரிகாரம் சினக்காரம், துஞ்சுகின்ற சூடனெடு வளையலுப்பு தூர வான யெவக்ஷாரம் பூாறையுப்பு, மிஞ்சியதோர் வெடியுப்பு தீயினுப்பு மேலான யிந்துப்புக் காதுநஞ்சே. (கசஅஉ)

காதிலுறை பிசினோடு கோழிக்காரம் கழுதைநீருப்பு அமரியுப்பு மலவுப்பு, நீதிபெறும் புழுகோடு யிருபத்தாறு நிசமாக வகைக்குரெண்டு காசுதூக்கு, வாதியா ளுருவியுப்பு பேதியுப்பு வாழையுப்பு யமுரியுப்பு சித்திரமூலஉப்பு, சோதியென்று முப்புதனை பாந்தற்காக சூட்டினார் கமலமுனி சூக்ஷம்பாரே. (கச அ௩)

ஆட்டியபின் முன்மருந்தோ டொக்கச்சேர்த்து அப்பனே சுன்னநீர் விட்டுஆட்டி, தாட்டிகமாய் சாமமொன்று அரைத்துப்பின்பு சாதகமாய் வெண்கருப்பா லுள்ளேஊற்றி, பூட்டியதோர் பூட்டெல்லா மிதுவேபூட்டு பேராக்கன்றிக் கடுங்கார மறைத்துப்போட்டார், காட்டியதோர் கடுங்காரம் முள்ளபடிசொன்னேன் கைகண்ட வாதமெல்லா மிதினாற்காணே. (கச அச)

காணப்பா ஜெயனீராம் லைாம்னைளிற் கடுங்காரி ஆங்காரி யென்றேநாமம், தோணப்பா சுன்னமெல்லாம் யிதினால்வேதை தொடுகின்ற வித்தையெல்லா மிதற்குள்ளாச்சு, பூணப்பா பதினெண்பேர் சொன்ன நூலில் போகரப்பா யிதனுடைய போக்கும்பாரு, வீணப்பா சொல்லவில்லை நீருண்டானால் விடமான குருவண்டின் அரிசிபோடே. (கச அ௫)

போடப்பா நூறரிசி பொடித்துத்தூவு புகழான சுக்கிலமே துட்டிடைதான்வாரு, ஆடப்பா யிதுகொண்டு அண்டமெல்லாமாகு மம்மம்மா அண்டமொரு போட்டால்நீரும், சாடப்பா நவலோகங் கண்டால்நீறுஞ் சரக்கோடு உபரசங்கள் யெல்லாம்நீறும், பாடப்பா வென்றுக்கால் பனைபோலேயில்லை பார்த்ததொரு நீறுலே தொந்தமாமே. ()

தொந்தமென்றால் கறைகாணு தப்பாகேளு தொடுகுறிபோ வழலையின்மேல் தோணியேறி, அந்தமென்றே ஆதியென்றே ஆடப்போறோம் ஹரஹரா சிவனமம் முடிவுகாணார், யிந்தவகைக் கடுங்காரமாருஞ்சொல்லார் யிதைவிட்டுக் கடுங்காரம் வெவ்வேறென்பார், சிந்தையிலே ஞானவெளி கூடும்போது திருமூல நாயனென்னை மெச்சிட்டாரே. (கச அ௭)

மெச்சிட்டார் சட்டைமுனி யென்றனும் மேலான போகருமே யென்னைப்பெற்றார், மெச்சிட்டார் மச்சைமுனி கருவூராரும் வெளியிலே போட்டாரே வாதமெல்லாம், மெச்சிட்டார் கட்டியதோர் உப்பைக்கொண்டு விண்ணெழும்புங் குளிகைமணி யென்பாரய்யா, மெச்சிட்டார் சிவயோகம் ஞானமார்க்கம் வேதாந்த சாத்திரத்தில் விளம்பிடாரே. (கச அஅ)

விளம்பாதே சாத்திரத்தைப் பார்த்தாலேது விடியமட்டும் பொழுதுமட்டும் படித்தாலென்ன, விளம்பாதே வேதத்தி லுள்ளபடி சொல்லார் வியாசர்மேற் குற்றமில்லை சிவனுத்தாரம், உளம்பாதே போனதென்ன வுலகம்பேயாம் உலகினில் சமுசார வாழ்க்கையில்லை, விளம்பாதே போனதுவு மெத்தநன்று விஞ்சையொத்த சஞ்சீவி யிந்த நூலே. (௧௪அ௯)

இந்தநூல் பாராட்டால் வாதமேது யெடுத்ததொரு கைமுறையிற் றவறுண்ணுது, இந்தநூல் பாராட்டால் முப்பூவேது யெழு சபையுங் காணுதற்குக் குளிகையேது, இந்தநூல் பாராட்டால் தீட்சையேது யென்மக்காள் ஞானமொடு அறிவங்கேது, இந்தநூல் நாற்பதுகாண் சித்தர்கட்கு யியம்பினேன் சாத்திரத்துக் கிதுதான் முத்தே. (௧௪௯0)

அகத்தியசுவாமிகள் வேதாந்த நவசித்தாதிக் குழம்பு சுத்திவகை.

காசினியில் மானிடற்கு பிணியேநீங்க கருத்துடைய அகஸ்தியனூர் பாடல்செய்த, வேசினியில் நவசித்தர் குழம்புதன்னை வேதாந்தம் பாடிவிட்டேன் சுத்தியாக, ஆசினிய சித்தாந்த மடக்கிப்போட்டேன் அறியார்கள் சுத்திசெய்து ஆடமாட்டார், மோசினிய சாபங்கள் நிவர்த்திசெய்து முன்கொடுக்கும் தாம்பூல மாதிசொன்னேன். (௧௪௯௧)

ஆதியென்ற வாயுவினுல் வந்ததோஷம் அதன்மேலே வன்னியினுல் வந்ததோஷம், வீதியென்ற அப்புவினுல் வந்ததோஷம் விஷமேறி மூன்றுமொன்ருய் கூடுங்காலே, பேதியாய்ப் படுத்திடவே புலத்துவேளை பிரேதமென்பார் பெற்றவர்கள் தெரியத்தானே, நீதியுற்ற வயித்தியனூர் பார்த்துசொன்ன நிச்சயமும் மூன்றெழுந்த தோஷம் பாரே. (௧௪௯௨)

பரப்பா பண்டிதத்தைக் கண்டிதமாய்ப்பாரு பராமுகமாய் திரிந்தாக்கால் தோஷமீறும், நேரப்பா உள்ளபடி ரோகந்தீர்ந்தால் நிச்சயமாய்க் கண்டாலும் பேசார் பேசார், தாரப்பா பொருளாசை பட்டமாண்பர் தன்னிடத்திற் செல்லாதே கண்பாராதே, கோரப்பா வந்தடைந்து சாபமீறி கொண்டலைவார் வயித்தியனூர் சாபந்தானே. ()

தானென்ற வயித்தியனே யெல்லாம்பார்த்து தப்பாம லொருமருந்து விட்டாயானுல், பேரண்ட பூமியிலே உள்ளரோகம் போகாது ஒருக்காலுந் தீராதப்பா, வேரென்ற மருந்துகள்தான் கிட்டாவிட்டால் வேந்தனுக்குந் தனையெடுத்து கூடப்போட்டு, யேரண்ட அபிஷேகமெமக்குமுன்னே யேகுமடா னேய்களெல்லாம் பாடினேமே. ()

பாடினேம் கருவான குருவும்வாழி பாருலகில் நாதாக்கள் பாடல் தானும், தேடியதோர் தேவர்களும் ரிஷிகள்வாழி செப்புகிறேன் மெய்ஞ்ஞானந் தெளியவாழி, கூடியே நாதாக்கள் தானும்வாழி குடில மாம் சித்தர்கள் தானும்வாழி, ஆடினதோர் சித்தர்கள் பதினெண்பே ரும் அருளாக மிகவாழி யருமைதானே. (கசகூ௫)

அருமைப்பாய்ப் பூலோக வசுரர்வாழி ஆதிசிவன் கிருபையின வியானும் வாழி, குருவாழி குலம்வாழி குமாரர்வாழி குறிப்பான வஷ்டாங்க சித்திவாழி, திருவாழி தேராசர் தானும்வாழி தேர்வேந்தர் முடிமன்னர் தானும்வாழி, மருவாழி வாலையுட கடாட்சத்தாலே மானி டர்கள் மிகவாழி வரிசையாமே. (கசகூசு)

வரிசையா யாதியந்தம் வாழிவாழி வாலைபர மேஸ்வரியா ளுதவி யாலே, கரிமுகனுஞ் சுப்பிரமணியர் மயிலும்வாழி காரணமாந் தேவ ரொடு ரிஷிகள்வாழி, சரியான கயிலாசர் முனிவர்வாழி சதுர்முகனும் கோடியுகந் தானும்வாழி, பெரியதொரு நாதாக்கள் பதமும்வாழி பேர் வாழி யூர்வாழி பெருமைதானே. (கசகூ௭)

பெருமையாஞ் சித்திமுத்தி குருவும்வாழி பேரானமலைவாழி குகையும்வாழி, உரிமையுள்ள வூர்வாழி தேசம்வாழி வுற்றுணர்ந்த பெரியோர்க ளெல்லாம்வாழி, பெருமையாய் ஞானி பொய்ஞ்ஞானி வாழி பூதலத்தோர் தேவர்கணம் தானும்வாழி, அருமையுள்ள சுந்த ரமு மனிவர்வாழி அருளான வெட்டெழுத் தஞ்செழுத்தும்வாழி. ()

கூறுமே தட்சணா மூர்த்திவாக்கு குறையாது மண்டலத்திலார் சொல்வாரோ, தேறுமே சித்தர்களும் முனிவர்தாமும் திரட்டினார் மாந்தர்கள் பிழைக்கவென்று, மீறினார் மெய்ஞ்ஞான மார்க்கமாகும் மேதினியில் காண்பரிது யாராலாகும், ஆறுபோல் வெகுவோட்ட மிந்தநூலாம் அப்பனே திருமந்திர முற்றதாமே. (கசகூகூ)

அஞ்செழுத்து மூன்றெழுத்து மயனும்வாழி ஆனந்த மூர்த்தி யுட வருளும்வாழி, பிஞ்செழுத்தும் காயெழுத்தும் பூவெழுத்தும் வாழி பேரான கருவிதொண்ணூற் றாறும்வாழி, நெஞ்சான தேகத் தின் வாய்வும்வாழி நிலையான சுவாசகலை நிதமும்வாழி, தஞ்ச மெனுந் தட்சணா மூர்த்திவாழி தருவானவாயிரத் தைஞ்ஞூறு வாழி முற்றே. (க௫00)

தட்சணாமூர்த்தி மெய்ஞ்ஞானம் திருமந்திரம்-௧௫00

முற்றிற்று.